

# பெரியாரும் சமதர்மமும்

நெ.து.சுந்தரவடிவேலு

# பெரியாரும் சமதர்மமும்


நெ. து. சுந்தரவடிவேலு
முன்னாள் துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்

மக்கள் நெஞ்சம்
4 (11), சி.என்.கே. சந்து,
சேப்பாக்கம், சென்னை-600 005.

புதுவாழ்வுப் பதிப்பகம்
23. நான்காவது முதன்மைச் சாலை,
கஸ்தூரிபா நகர், அடையாறு
சென்னை—600 020

## நூற் குறிப்புகள்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பெரியாரும் சமதர்மமும் |
| ஆசிரியர் | : | நெ.து. சுந்தரவடிவேலு |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| பதிப்பு ஆண்டு | : | டிசம்பர் 1987 |
| விலை | : | ரூ. 25/- |
| அச்சிட்டவர் | : | கவிஞர். நாரா நாச்சியப்பன்<br>நாவல் ஆர்ட் அச்சகம்<br>137. ஜானி ஜான் கான் தெரு<br>சென்னை—600 014. |
| முகப்போவியம் | : | ஸ்டெனி |
| வெளியீடு | : | புதுவாழ்வுப் பதிப்பகம்<br>23. நான்காவது முதன்மைச் சாலை<br>கஸ்தூரிபா நகர், அடையாறு<br>சென்னை—600 020 |
| பொருள் | : | பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின்<br>சமதர்மத் தொண்டு பற்றியது. |



தந்தை பெரியாருடன் தோழர் நெ. து. சுந்தரவடிவேலு

# சமதர்மம் என்றால் என்ன?

"புதியதும் சிறப்பானதுமான ஒரு சமுதாயத்தை அமைக்க நாம் விரும்புகிறோம, புதியதும சிறப்பானதுமான அந்தச் சமுதாயத்தில் ஏழைகளும இருக்கக் கூடாது, பணக்காரர்களும இருக்கக் கூடாது. எல்லோரும் உழைக்க வேண்டும். விரல்விட்டு எண்ணத்தக்க பணக்காரர்கள் மட்டுமல்லாது உழைக்கும் மக்கள் அனைவரும் தங்களுடைய பொது உழைபபின் பலனைக் கட்டாயம் அனுபவிக்க வேண்டும், எல்லோருடைய உழைப்பையும் எளிதாகும்படிச் செய்யவே இயந்திரங்களும் பிற வளர்ச்சிகளும் பயன் பட வேண்டும், கோடிக்கணக்கான மக்களின் உழைப்பில் சிலர் மட்டுமே பணக்காரர்களாவதற்கு அவை பயன்படக் கூடாது. புதியதும் சிறப்பானதுமான இந்தச் சமுதாயமே சமதர்மச் சமுதாயம எனப்படும். இபபடிப்பட்ட சமுதாயத்தைப் பற்றிச் சொல்லித்தரும் பாடமே சமதர்மம் ஆகும்."

—லெனின்

(V. I Lenin — A Short Biography, 1969, Page 46)

# பதிப்புரை

''கம்யூனிசம் ஒன்றுதான் உலக அமைதிக்கே, உலக மேம்பாட்டிற்கே உற்ற சாதனமாகும்.''

''உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்து வருகிறது. அதென்னவென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயந்தான் முக்கியமாய்க் கருதப் படுகிறது. அதாவது, முதலாளி (பணக்காரன்)—வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல்சாதியார், கீழ்ச்சாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால், அது பணக்காரன்—ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகின்றது.''

— பெரியார் ஈ.வெ.ரா.

புதுவாழ்வுப் பதிப்பகத்தின் முதல் வெளியீடான, கலசம் மொழிபெயர்த்த—ஆந்திர நாட்டு நாத்திகச் செம்மல் கோரா அவர்களின் 'நாங்கள் நாத்திகரானோம்' என்னும் தமிழாக்க நூலினை வரவேற்றுப் பரவச் செய்த தமிழ்மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேடைப் பேச்சு, நாள்—கிழமை—மாத ஏடுகள் என இவைகளுக்கு அடுத்த நிலையில் கொள்கை பரப்பும் பணியைச் செய்து கொண்டிருப்பவை நூல்களே ஆகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தோழர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் 'அறிவுவழி' மாத ஏட்டில் 1979 சூன் முதல் 1983 பிப்ரவரி வரை 'பெரியாரும் சமதர்மமும்' என்னும் தலைப்பில் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கித் தமிழ் மக்களிடையே உலவச் செய்வது சமதர்மக் கொள்கையைப் பரப்புவதற்கும் பெரியார் ஒரு சமதர்மக்காரர் என்பதை இளந்தலைமுறையினர் அறிவதற்கும் உதவியாக அமையும் என்று கருதினோம். அக்கருத்தின் விளைவே இந்நூல்.

தோழர் நெ.து.சு. அவர்கள், பெரியாரின் பேச்சுகளை நேரில் கேட்டறிந்தவர்; அவருடைய எழுத்துகளைப் படித்தறிந்தவர்; அவருடைய செயல்முறைகளைத் தொடர்ச்சியாக உற்று நோக்கிய வர். சுருங்கச் சொன்னால் தந்தை பெரியாரை நன்கு புரிந்து கொண்டவர்; அதே வேளையில் சமதர்மக் கொள்கையையும் நன்கு புரிந்து கொண்டவர். எளிமைக்கும் தோழமைக்கும் உரியவராக வாழ்ந்துவரும் அவர் உலக நாடுகள் பலவற்றிற்கும் சுற்றுப்பயணம் செய்துள்ளார். ஏழு முறை சோவியத் நாட்டுக்குச் சென்று சமதர்ம வாழ்க்கை முறையினை நேரில் அறிந்து வந்துள்ளார்.

குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து இருபதாம் நூற்றாண்டின் 'மனு'வாகச் செயல்பட்ட பார்ப்பன இராஜாஜி யின் சூது நிறைந்த திட்டத்தை முறியடித்து, காமராசரும் பெரி யாரும் தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியை நடத்திய நாள்களில் அரசுப் பணியில் கல்வித்துறை இயக்குநராக இருந்து நெ.து.சு. அவர்கள் உழைத்த உழைப்பு குறிப்பிடத் தக்கதாகும். அந்த உழைப்பு அத்தலைவர்களின் சிந்தனை செயலாக்கம் பெறத் துணை செய்தது.

நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் சமகாலத்தவர் என்னும் நிலையில் இருந்துகொண்டு அவர் கடந்த அறுபதாண்டுகளாகத் தமிழ் நாட்டில் நிலவிய சமுதாய—அரசியல் பின்னணியினையும் ஆங்காங்கே நமக்குப் புரியும்படி எடுத்துச் சொல்கிறார்.

கடந்த அறுபதாண்டுகளில் தமிழ்நாட்டு அரசியலில் நீதிக் கட்சி-சுயமரியாதை இயக்கம்-காங்கிரசு-பொதுவுடைமைக் கட்சி ஆகிய கட்சிகளுக்கிடையே நிலவிய உறவுகளையும், அவைகளுக் கிடையே வெளிப்பட்ட மோதல்களையும் இந்நூலைப் படிப்போர் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

நண்பர் ஸ்டெனி இந்நூலுக்கு மேலட்டையினை அழகுற வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்நூலுக்குத் தமிழ் மக்கள் தங்களுடைய பேராதரவினை வழங்கி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

# நூலைப் பற்றியும்...
# நூலாசிரியரைப் பற்றியும்...

**பெரியார் ஈ.வெ.ரா. யார்?**

கடவுள் மறுப்பாளர்; பார்ப்பனீய வெறுப்பாளர்; சாதி—மதம்—சாத்திரங்களை ஒழிக்கப் போராடிய புரட்சியாளர்; வகுப்புரிமையைப் பெற்றுத் தந்தவர்; தமிழனுக்குச் சுயமரியாதை ஊட்டியவர். பொதுமக்கள் பலரிடமிருந்தும் பெரியாரைப் பற்றிக் கிடைக்கும் மதிப்பீடுகள் இவையாகும்.

ஆனால் இந்தச் சொற்களுக்குள் அடக்கிவிட முடியாத வகையில் பெரியாரின் சிந்தனைப் போக்கும் செயலோட்டமும் அமைந்திருந்தன, அது என்ன? தம்முடைய பொது வாழ்வின் தொடக்கக் காலம் தொட்டு இறுதி மூச்சு வரை அவர் சமதர்மக்காரராகவே வாழ்ந்தார்; செயல்பட்டார். இந்த உண்மையைச் செய்திகளாக நன்கு அறிந்தவர்கள் அவருடைய சமகாலத்தவர்கள். பிற்காலத்தவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்றால் இவையே வரலாறாக வடிவமைக்கப்பட வேண்டும். பெரியாரின் எழுத்தும்-பேச்சும்-செயல்பாடும்-சமதர்மச் சமுதாயம் அமைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அவர் சமதர்மத்துக்காகப் பாடுபட்ட செய்திகளை வரலாறாகவே எழுதியுள்ளார் தோழர் நெ து. சுந்தரவடிவேலு அவர்கள்.

**தோழர் நெ.து. சுந்தரவடிவேலு என்பவர் யார்?**

1912-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டம், நெய்யாடு பாக்கம் கிராமத்தில் நெ.ச. துரைசாமி—சாரதாம்பாள் வாழ்க்கைத் துணைவர்களுக்குப் பிறந்தவர். 1929-ஆம் ஆண்டில் செங்கற்பட்டில் பெரியார் நடத்திய முதலாவது சுயமரியாதை மாநாட்டுக்கு நேரில் சென்று கண்டு-கேட்டு உணர்வு பெற்றவர். சுயமரியாதை இயக்கத்துடன் அன்று நெ.து.சு. அவர்கள் தொடங்கிய பயணம் இன்றும் தொடர்கிறது. இடைப்பட்ட காலத்தில் ..கல்லூரிக் கல்வியை ஒழுங்காக முடித்து எம்.ஏ.,எல்.டி பட்டங்களைப் பெற்றார். அரசுப் பணியில் சேர்ந்தார். கலப்புத்

திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினார். சுய மரியாதைச் சமதர்மக்காரராக வாழ்ந்து கொண்டே அரசுப் பணிகளில் உயர் பதவிகளைப் பெற்றார்.

தமிழ்நாடு பொதுக் கல்வி—பொது நூலக இயக்குநராக, தமிழ்நாட்டின் இணை கல்வி ஆலோசகராக, தமிழ்நாட்டின் தலைமைக் கல்வி ஆலோசகராகவும் கூடுதல் செயலாளராகவும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக,இவ்வாறாகப் பல பெரிய பொறுப்புகளில் இருந்து பணியாற்றினார். இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற இவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளது.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும்—இன்றும்—தம் 75-ஆம் வயதிலும் சுய மரியாதை-சமதர்மக் கொள்கை பரப்பலுக்கு நாள்தோறும் எழுதியும் பேசியும் தொண்டாற்றி வருகிறார்.முதலாவது சுயமரியாதை மாநாட்டில் கலந்துகொண்ட நெ.து.சு. அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் சமகாலத்தவராகிறார். பெரியார் சமதர்மத்துக்காகப் பட்ட பாட்டினை விளக்கித் தாம் எழுதியுள்ள நூலுக்கு இவர் ''பெரியாரும் சமதர்மமும்'' எனப் பெயரிட்டுள்ளார். நேரில் உரையாடுவது போன்ற உணர்ச்சி நெ.து.சு. அவர்களுடைய எழுத்தில் காணப்படும் தனிச் சிறப்பு படிப்போர்க்குச் சோர்வூட்டாமல் கதையோட்டம்போல் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி இவர் இந்நூலினை எழுதியுள்ளார்.

இராஜாஜி புகுத்திய கட்டாய இந்தி—குலக் கல்வித்திட்டம்... திராவிடர்கழகத்திலிருந்து அண்ணாபிரிந்தது ..தமிழகக் கம்யூனிஸ்டு கட்சியும் பெரியாரும்...ஆகிய செய்திகள் குறித்து இவர் இந்நூலில் கூறும் ஆராய்ச்சி நோக்குடைய கருத்துகள் பொது வாழ்வில் உள்ள திறனாய்வுக்காரர்கள்—கட்டுரையாளர்கள்—பேச்சாளர்கள் ஆகியோர் முழுதும் அறிந்து கொள்ள வேண்டியனவாகும்.

இந்தியச் சூழலுக்கேற்பப் புரட்சி இங்கே மலர வேண்டும் என்ற சிந்தனையும், செயலும் கொண்டவர்கள் ஒவ்வொருவரின் கையிலும் இருக்க வேண்டிய நூல் ''பெரியாரும் சமதர்மமும்''.

பெரியார் அன்பர்களின் ''வீட்டுநூலகத்தில்'' இடம்பெறும் தகுதியும்—சிறப்பும் தேவையும் கொண்டநூல் ''பெரியாரும் சமதர்மமும்''.

—கலசம்

# நூலாசிரியரின் முன்னுரை

உலகில் பிறந்தோர் கணக்கில் அடங்கார்; இருப்பவர் நானூறு கோடிக்கு மேல். அவர்களில் காலத்தின் பொன்னேடுகளில் ஒளிர்வோர் சிலரே.

அச்சிலரில் ஒருவர் நம்மிடையே பிறந்தார்; நம்மிடையே வாழ்ந்தார்; நமக்காகப் பாடுபட்டார்; நமக்காகத் துன்பப்பட்டார்; நம் நிலை கண்டு பதறினார்; கதறினார். நம் நிலை என்ன? அரசியலில் அடிமை; சமுதாயத்தில் கீழோர்; பொருளியலில் வறியோர். இவற்றை மாற்றி, நம்மை மனிதர்களாக—ஒரு நிலை மனிதர்களாக, தன் உழைப்பில் வாழும் மானம் உடைய மனிதர்களாக—உருவாக்க அயராது உழைத்தார். தன் வீட்டுச் சோற்றை உண்டு—தன் பணத்தைச் செல விட்டு - தன் உடலை வாட்டி—தன் உள்ளத்தை வைர மாக்கி—துறவிகளுக்கெல்லாம் துறவியாகப் புரட்சிப் பணியாற்றினார். அத்தகைய புரட்சியாளர் எவரோ?

அவர் பெரியார் ஈ.வெ. ராமசாமி ஆவார். அவர் இயல்பாகவே, படிப்படியாகவே முழுப் புரட்சியாளர் ஆனார். அவர் வயதில் பெரியார்; அறிவில் பெரியார்; சிந்தனையில் பெரியார்; செயலில் பெரியார்; சாதனை யில் பெரியார்; நாணயத்தில் பெரியார்.

பெரியாரைப் போன்று தொண்ணூற்று அய்ந்து வயது வாழ்ந்தவர் எங்கோ ஒருவரே. அவ்வயதில் ஊர் ஊராகச் சூறாவளிப் பயணம் செய்து கருத்து மழை பொழிந்த பெரியாருக்கு ஈடு அவரே.

'அரசியலில், மக்கள் பெயரில் ஆட்சி நடப்பது மட்டும் போதாது. அது மக்களுக்காகவே நடக்க வேண்டும்' என்று இடித்துரைத்தவர் பெரியார். மக்கள் விழிப்பாக இராவிட்டால் அவர்கள் பெயரில் படித்தவர் களும் பணக்காரர்களும் தங்களுக்காக ஆட்சி செய்து கொள்ளும் நிலை உருவாகி விடும் என்று நம்மை முதலில் எச்சரித்தவர் பெரியார்.

'எல்லோரும் ஓர் குலம். ஆகவே அனைவரும் சேர்ந்து சமைக்கட்டும; இணைந்து பரிமாறட்டும்; ஒரே பந்தியில் இருந்து உண்போம்' என்னும் சமத்துவக் கொள்கையை பொது மக்களிடையே நடைமுறைப்படுத்திக் காட்டிய வெற்றி வீரர் பெரியார் ஆவார்.

'வாழலாம்; எல்லோரும் வாழலாம்; அடிப்படைத் தேவைகள் நிறைவுபெற வாழலாம்; வாயடியும் கையடியும் மிகுந்த பேர்கள், இயற்கை வளத்தை தேவைக்குமேல் முடக்கிப் போட்டுக் கொள்ளாவிட்டால்' இக்கருத்தைப் பயிரிட்டதில் பெரியாரின் பங்கு பெரிது; மிகப் பெரிது; ஆழமானது.

பெரியாரின் தொண்டு நீண்டது; பன்முகங் கொண்டது; புரட்சிகரமானது; பயன் கருதாதது; சோர்வு அறியாதது; எதிர் நீச்சல் தன்மையது.

அறுபதாண்டு காலம், பொதுத்தொண்டில் பலபக்க புரட்சிகரமான தொண்டில் தந்தை பெரியார் ராமசாமியைப் போல் வெற்றிகரமாக தாக்குப் பிடித்தவர் எவரே உளர்.

பெரியார் ராமசாமியை தீவிர காங்கிரசுவாதியாக அறிந்தவர்கள் அநேகமாக மறைந்து விட்டார்கள் எனலாம். காந்தியடிகளின் தலைமையில் கதரைப் பரப்பிய ராமசாமி வரலாற்று நாயகராகி விட்டார். கள்ளுக்கடை மறியலை முதலில் தொடங்கிய பெருமைக் குரியவர் ராமசாமி என்பதும் அவரது மனைவி நாகம்மையும் தங்கை கண்ணம்மாவும் அம்மறியலில் பங்கு கொண்ட முதல் பெண்கள் என்பதும் சிலருக்கே நினைவுக்கு வரலாம் தீண்டாமை ஒழிப்புப் பணியின் ஒரு கூறாக கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில் பெரியார் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டதும் இருமுறை சிறைக் கொடுமைக்கு ஆளானதும் அதிலும் நாகம்மையும் கண்ணம்மாவும் பங்கு பெற்றதும் வரலாற் றின் ஒளி விளக்குகள் ஆகும். சாதிக் கலைப்பிற்கு வழி யாக, கலப்பு மணங்களை ஊக்குவித்த பெரியாரைக் காண்போர் பலராவர்.

வெண்தாடி வேந்தராகக் காட்சியளித்த தந்தை பெரியார் பகுத்தறிவுப் பகலவன்; உயர் எண்ணங்கள் மலர்ந்த சோலை; பண்பின் உறைவிடம்; தன்மான உணர்வின் பேருருவம்; புரட்சியின் வற்றாத ஊற்று; தொண்டு செய்து பழுத்த பழம்; அச்சம் அறியா அரிமா; எவர்க்கும் எத்தீங்கும் விளைவிக்காத மனிதாபிமானத்தின் பேராறு.

தந்தை பெரியார், இந்திய தேசிய காங்கிரசைத் தமிழ்நாட்டில் பரப்பிய நால்வரில் ஒருவர் என்பது ஒரு நிலை. அப்பணியைத் திட்டமிட்டு மறைத்தும் குறைத்தும் வந்தவர் ஒரு சாரார். அவரைத் தேசத் துரோகியாகக் காட்ட முயல்கின்றனர். சாதியொழிப்பு, தன்மானப் பயிர், தமிழ் உணர்வு, தமிழர் என்ற நினைப்பு ஆகியவற்றை வளாத்தவர் என்பது அடுத்த நிலை. பழைய இலக்கியங்கள், சமய நூல்கள் ஆகியவற்றைக் களையெடுத்து, பசுந்தாள் உரமாக்கியது அந்நிலையின் கூறாகும்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பணியினை திரித்துக் கூறி வருவோர் மற்றொரு சாரார். அவர்கள் பெரியாரை அழிவு வேலைக்காரர் என்று தூற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். ஏழைகளற்ற சமுதாயத்தை உருவாக்குவது அழிவு வேலையா? கொடுமைகளுக்கு ஆளாகி வரும் பெண்ணினத்திற்கு உரிமை கேட்பது மனிதாபிமானம் அல்லவா?

அரசியல் உரிமை பெற்றாலும் சாதி வேற்றுமைகள் ஒழிந்தாலும் வகுப்புரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் எல்லோருக்கும் வேலையும் மனித வாழ்வும் வந்துவிடாது என்பதை உணர்ந்த பெரியார், சமதர்மத்தின் தேவையை எடுத்துக் காட்டினார். அக்கோட்பாடு 1930இல் ஈரோட்டில் அரும்பிற்று; இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில் அரும்பிற்று. 1931இல் விருது நகரில் போதாயிற்று; மூன்றாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில் போதாயிற்று; சோவியத் ஒன்றியப் பயணம் அதை மலரச் செய்தது. சுயமரியாதை சமதர்மத் திட்டமாகக் காய்த்தது.

சுயமரியாதை இயக்கம், சமதர்ம இயக்கமாகவும் இயங்கிற்று பகுத்தறிவுப் பணி, எல்லோரையும் வாழ்விக்கும் பணியாகச் செயல்பட்டது. திராவிடர் இயக்கத் தொண்டு பாட்டாளிகளின் தொண்டாக விளைந்தது.

பெரியாரைச் சமதர்ம ஞாயிறாகக் காண்பது நம் கடமை. அவர் பரப்பிய சமதர்ம ஒளியை மக்களிடம் காட்டுவது நம் பொறுப்பு. வழியிலே வந்த நெருக்கடிகள் சில. அவை திசை திருப்பிகள். நெடுந்தூரம் திசை தவறிப் போதல் ஆகாது.

பகுத்தறிவு இயக்கத்தின் விளைவு சமதர்ம இயக்கம். தன்மான வாழ்விற்கு உறுதியான கடைக்கால், சமதர்ம வாழ்க்கை முறையாகும். இத்திசையில் பெரியார் ஆற்றி வந்த அரிய தொண்டினை இந்நூலில் காணலாம். அத்தொண்டு இனித்தான் கனிய வேண்டும். எனவே பகுத்தறிவுவாதிகளாகிய நமக்கு, சாதி வேற்றுமைகள் பாராத நமக்கு சமதர்மச் சிந்தனையில் மறுமலர்ச்சி தேவை. அதில் முழு ஈடுபாடு தேவை.

தந்தை பெரியாரின் சமதர்மத் தொண்டினை மறந்து போவோமோ என்கிற அச்சம் பிறந்தது. அவரை வெறும் கடவுள் மறுப்பாளராக மட்டும் காணும் நிலை வந்து விடுமோ என்ற அய்யப்பாடு தோன்றிற்று. வகுப்புரிமையின் தனிநாயகராக மட்டும் காட்டுவது முழு உண்மையாகாது. பெரியாரின் பெருந்தொண்டால், முழு

மனிதனான எவராவது, அவரது முழு உருவையும் காட்டுவார்களென்று சமுதாயம் எதிர்பார்த்தது. அடுத்தடுத்துப் பெருக்கெடுத்து வரும் புதுப்புதுப் பொது விவகார வெள்ளத்தில் சமதர்மத் தொண்டு மூழ்கி விடுமோ என்று பலரும் அஞ்சினர்.

அந்நிலையில் பகுத்தறிவு சமதர்ம இயக்கத்தின் சார்பில், தோழர் கே. பஞ்சாட்சரம் அவர்களால் சென்னை அரும்பாக்கத்தில் இருந்து வெளியிடப்படும் ''அறிவுவழி'' என்னும் திங்கள் இதழில் 'பெரியாரும் சமதர்மமும்' என்னும் தலைப்பில் எழுதும்படி, அவர் அன்புக் கட்டளை இட்டார். காலத்தின் கட்டளையாக ஏற்றுக் கொண்டேன். ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் அப்படி எழுதினேன். இத்தோழருக்கு நம் நன்றி உரிய தாகும்.

1976 ஜூன் திங்கள் 26ஆம் நாள் தோழர் கலச. இராமலிங்கமும் தோழியர் கோவிராமலிங்கமும் என் தலைமையில் சீர்திருத்த முறையில் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்கள். அப்போது எம்.ஏ. பட்ட வகுப்புத் தேர்வு எழுதி முடித்திருந்த கோவிராமலிங்கம், அதில் வெற்றி பெற்றதோடு, பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டமும் பெறுள்ளார்; வழக்குரைஞ ராகத் தொழில் செய்து வருகிறார். இவர்கள் இந்நூலை வெளியிட துணிந்து முன்வந்தது தனி மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இச்சீரிய தொண்டு நம் சிந்தனையைத் தூண்டுவதாக, வளர்ப்பதாக உள்ளது. இந்நூலை வெளியிடும் புதுவாழ்வுப் பதிப்பகத்தாருக்கு நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நெ. து. சுந்தரவடிவேலு**
7-11-1987

32, கிழக்குப் பூங்கா சாலை
செனாய் நகர்,
சென்னை — 600030

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இவர்தான் பெரியார் | 1 |
| 2. | காங்கிரசில் பெரியார் | 5 |
| 3. | சுயமரியாதை இயக்கம் தோன்றியது | 8 |
| 4. | முதல் சுயமரியாதை மாநாடு | 12 |
| 5. | இந்தியச் சூழலில் பாட்டாளிகள் யார்? | 19 |
| 6. | கோயில் சொத்துக்களும் ஊதிய உச்சவரம்பும் | 23 |
| 7. | சமதர்மத்தை நோக்கியே சுயமரியாதை இயக்கம் | 28 |
| 8. | பகத்சிங்கும் பெரியாரும் | 34 |
| 9. | கம்யூனிஸ்டு அறிக்கையும் சோவியத் புரட்சியும் | 39 |
| 10. | கம்யூனிஸ்டு அறிக்கையைத் தமிழில் வெளியிட்டார் | 45 |
| 11. | சுயமரியாதை சமதர்மக் கட்சி தோற்றம் | 50 |
| 12. | சுயமரியாதை—சமதர்ம வேலைத் திட்டம் | 53 |
| 13. | மீரத் சதிவழக்கு : பெரியாரின் கண்டனம் | 57 |
| 14. | குடிஅரசு ஏடு அடக்குமுறைக்கு ஆளானது | 61 |
| 15. | சிவகங்கையில் சுயமரியாதை மாநாடு | 65 |
| 16. | "புரட்சி" ஏட்டின் தலையங்கம் | 74 |
| 17. | பெரியாரும் அவர் தங்கையும் சிறைப்பட்டனர் | 78 |
| 18. | 'புரட்சி' ஏட்டில் சமதர்ம முழக்கம் | 85 |
| 19. | சமதர்மத்திட்டம் : நீதிக்கட்சி ஏற்றது—காங்கிரசு மறுத்தது | 93 |
| 20. | அரசின் அடக்குமுறை : "புரட்சி" ஏடு நின்றது "பகுத்தறிவு" ஏட்டின் பணி தொடங்கியது | 102 |
| 21. | சுயமரியாதைப் பணியா? சமதர்மப் பணியா? | 106 |
| 22. | கட்டாய இந்தியைப் புகுத்தி இராஜாஜி திசை திருப்பினார் | 110 |

23. இந்தி எதிர்ப்பு முதன்மை பெற்றது 115

24. தமிழ்நாடா? திராவிட நாடா? 123

25. திராவிடநாடு கோரிக்கை : ஆங்கில அரசு புறக்கணித்தது 131

26. தேர்தலில் நிற்காதீர்கள்! பட்டம் பதவிகளைக் கை விடுங்கள்! 136

27. இந்திய விடுதலை : பெரியாரின் கணிப்பு 142

28. இடைக்கால இந்திய அரசும் கம்யூனிஸ்டுகள் மீது அடக்குமுறையும் 148

29. கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப்பட்டனர் பெரியார் அடைக்கலம் தந்தார் 156

30. சேலம் சிறைக்கொடுமைகள் 164

31. குலக்கல்வித் திட்டத்தைப் புகுத்தி இராஜாஜி மீண்டும் திசை திருப்பினார் 168

32. காமராசர் முதலமைச்சரானார் 177

33. கல்விப் புரட்சியில் காமராசரும் பெரியாரும் 182

34. பெரியாரின் இறுதி இலட்சியம் சமதர்மமே! 191

# 1. இவர்தான் பெரியார்

இமயமலை; இதன் பொருள் என்ன? பனிமலை என்று பொருள். பனிமலை ஒன்றா? இல்லை, சில. இருப்பினும் இந்தியாவின் வடக்கெல்லையாக உயர்ந்து நிற்கும் மலைத் தொடரையே பனிமலை—இமயமலை என்றழைக்கிறோம்.

அதேபோல் உலகில் பெருஞ் சிந்தனையாளர்கள் சிலர்; பெருஞ் சாதனையாளர்கள் சிலர். இவர்களுள் 'பெரியார்' என்றால் பெரியார் ஈ. வெ. ராமசாமியைத்தான் குறிக்கும்.

இமயம் எதை நினைவு படுத்துகிறது? உயரத்தை—நீளத்தை—அகலத்தை. அப்புறம்? எண்ணற்ற பேராறுகளின் சுரப்பை. அதே போன்று பெரியார் என்னும் சொல் எதை நினைவுக்குக் கொண்டு வருகிறது?

நீண்ட பொதுத் தொண்டை; இணையற்ற பொதுத் தொண்டை. அது நீண்டது மட்டுமா? உயர்ந்ததும் ஆகும்.

பெரியார் தன் சாதிக்காகப் பாடுபடவில்லை. தன் மாவட்டத் திற்காகப் பாடுபடவில்லை. மக்கள் இனத் தொண்டாக அது உயர்ந்து நின்றது. அரசியல் தொண்டு, சமுதாயத் தொண்டு, பொருளியல் புரட்சித் தொண்டு என அது அகன்று விளங்கியது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக—பரந்த நிலப்பரப்பை வளப் படுத்துவது, இமயம் வழங்கும் ஆறுகள். மக்கள் இனத்தில் அநீதியை எதிர்க்க, சுரண்டலை ஒழிக்க, மக்கள் ஒருமைப்பாட்டை வளர்க்க, கவைக்குதவாத கற்பனைகளிலிருந்து விடுபட, சமத் துவத்தை—சமதர்மத்தைப் பயிரிட வைக்க உதவுவது பெரியாரின் சீரிய கருத்துகள்.

பெரியாரின் தொண்டு எங்கே—எப்படித் தொடங்கிற்று? எப்படிப் பாய்ந்தது? என்னென்ன செய்தது?

ஈரோட்டில் தொடங்கியது. ஈரோடு நகராட்சித் தலைவராக முளைத்தது. மேலும் இருபத்தெட்டுக் கிளைகளாகக் கிளைத்தது. எல்லாவற்றிலும் ஈ. வெ. ராமசாமி தன்னுடைய தனி முத்திரையைப் பொறித்தார்.

ஈரோட்டுக்குக் காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை நிறைவேற்றிய பெருமை ஈ. வெ. ராவுக்குரியதாகும். ஈரோட்டுக் கடைத் தெருவில், பல கடைக்காரர்கள், பொது நிலத்தை ஆக்கிரமித்து இருந்தார்கள். வேண்டியவர்களாயிற்றே என்று தயங்காமல், பகை வளருமே என்று அஞ்சாமல் உறுதியாக நின்று ஆக்கிரமிப்புகளை எடுக்கவைத்து தெருவை அகலப்படுத்திய அரிமா ஈ. வெ. ராமசாமி ஆவார்.

ஈரோட்டுச் சிங்கம்—ஈ. வெ. ராவின் தனிச்சிறப்புகள் சில. அவையாவன: உரிமைக்காகப் போராடும் தன்மை; பொதுநலப் போராட்டங்களுக்காக எதையும் தியாகஞ் செய்ய முனையும் போக்கு, சலிப்பின்மை, இடையறாத உழைப்பு, அஞ்சாமை, இத்தனைக்கும் மணிமுடியாக—எல்லோரையும் மதிக்கும் பண்பு ஆகியவை.

உரிமைவேட்கை, பெரியாரோடு பிறந்தது. சமத்துவ உணர்வும் உடன் பிறந்ததே. இவ்விரண்டு நல்லுணர்வுகளும் ஈ. வெ. ரா. வுக்குப் புதிய புரட்சிகரமான கண்ணோட்டத்தைத் தந்தன. சிறுவனாக இருந்தபோதே சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள். பெரியவர்கள் கட்டளைக்கு மாறாக, எல்லாச் சாதியார் வீடுகளிலும் நீர் அருந்தவும் உணவு உண்ணவும் தலைப்பட்டார்.

உரிமைவேட்கை, ஈ. வெ. ராமசாமியைக் காங்கிரசில் சேர்த்தது. அப்போதையக் காங்கிரசு, காந்தியார் தலைமையில் இயங்கிற்று. அவர் தலைமையில்தான் அவ்வியக்கம் மக்கள் இயக்க மாகத் தழைக்கத் தொடங்கியது.

ஈ. வெ. ராமசாமி ஏற்றுக்கொண்ட கொள்கைக்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துவிடும் இயல்பினர். அவர் காங்கிரசுக் காரராக காந்தியத்தை ஏற்றுக்கொண்டார். உண்மையான காந்தியவாதியாக விளங்கினார்.

காந்தியார் காட்டிய ஒத்துழையாமையை விழிப்பாகக் கடைப் பிடித்தார். வழக்கு மன்றஞ் செல்ல மறுத்தார். கடன் பத்திரங் கள் மூலம் வரவேண்டிய ஐம்பதாயிரம் ரூபாய்களை இழக்க நேரிடு வதைப் பற்றியும் பொருட்படுத்தாது, வழக்காட மறுத்தார்.

மதுவிலக்கு காந்தியத் திட்டங்களில் ஒன்று. அதுவரையிலும் அதற்குப் பிறகும் மது அருந்தாதவர் ஈ. வெ. ராமசாமி. பெண்கள் கள்ளுக்கடை மறியலுக்கு வந்தது முதன் முதலாக ஈரோட்டில் தான் நிகழ்ந்தது.

ஈ. வெ. ராமசாமியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாவும் கள்ளுக்கடை மறியலுக்குச் சென்றார்கள். ஈரோட்டில் செல்வாக்கு மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த இரு அம்மையார்கள் முன்வந்தது எண்ணற்ற பெண்களுக்கு எழுச்சி யூட்டிற்று. ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள்.

அதிகாரவர்க்கம் இதை எதிர்பார்க்கவில்லை. ஓர் ஊரில் மட்டும் ஆயிரக்கணக்கான பெண்களைக் கைது செய்யக்கூடிய கல் நெஞ்சம் அன்றைய அதிகாரிகளுக்கு இல்லை. எனவே சென்னை யிலுள்ள மேல் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார்கள்.

முன் அனுமதி பெற்று ஈரோட்டில் போட்டிருந்த தடை ஆணையை எடுத்துவிட்டார்கள். இதற்குமுன் 144 தடை ஆணையை காலம் முடிவதற்குள் எங்கும் எடுத்ததில்லை. அந்தப் புரட்சியைக் கண்டவர் ஈ. வெ. ராமசாமி.

தனி வாழ்க்கையில் சிக்கனக்காரராகிய ஈ. வெ. ராமசாமி, பொதுத் தொண்டைப் பொறுத்தமட்டில் தாராளமான தியாகி. அவருடைய தென்னந்தோப்பில் கள் இறக்கும் உரிமை ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

இழப்பு ஈடு பெற்றுக்கொண்டு குத்தகையைக் கைவிடும்படி ஈ. வெ. ராமசாமி சொன்னார். அதிகாரிகள் நேர்மாறாக வற்புறுத்தினார்கள். எனவே குத்தகைக்காரர் ஈ. வெ. ராமசாமி யின் பேச்சைக் கேட்கவில்லை.

இந்நெருக்கடியை அவர் எப்படிச் சமாளித்தார்? இரவோடு இரவாக அய்நூறு தென்னை மரங்களை வெட்டிச் சாய்க்கச் செய் தார். நாற்பது ஆண்டுகள் பலன் தரக்கூடிய மரங்களை வெட்ட வைத்தார். என்னே அவருடைய தியாகம் !

கதரை உற்பத்தி செய்தல், அணிதல் காந்தியத் திட்டங்களில் ஒன்று. இதிலும் அவர் மெய்மறந்து ஈடுபட்டார். சீமான் வீட்டுப் பிள்ளையாகிய அவர் கதர் அணிந்தார். வீட்டிலுள்ள அனைவரை யும் அணிய வைத்தார். தன் தாயார் —எண்பது வயது மூதாட்டி, சின்னத்தாயம்மாளை அணிய வைத்தார்.

அவரே கதர் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு பட்டி தொட்டி தோறும் சென்று விற்பனை செய்தார். அதனால் மக்களிடையே

கதர் அணிதல் பெருகியது. உற்பத்தியும் வளர்ந்தது. தமிழ் நாட்டில் கதரைப் பரப்பியதில், வளர்த்ததில் அவருடைய பங்கு மிகப் பெரியது.

தீண்டாமை, இந்தியாவின் தனி நோய்; பொல்லாத நோய்; ஈராயிரம் ஆண்டுகளாகத் தொடரும் நோய். கோடிக்கணக்கான வர்களை விலங்குகளைப் போல் நடத்தும் கொடுமை, அவர்களுக்கு அடிப்படை உரிமைகளை மறுத்துவிட்ட தவறான முறை, வாய்ப்புகளே கொடாத சுரண்டல் முறையின் கோர உருவம்.

இருக்க இருக்கைகளை மறுத்துவிட்டதோடு குளிக்க—குடிகக நீரும் கொடாத, வன்முறை தீண்டாமையாகும். அதன் அடிமரம் சாதி வேற்றுமை என்னும் முள் மரமாகும்.

இந்திய நாடு தழுவிய இக்கொடுமையைப் புத்தருக்குப்பின் ஒழிக்க முயன்ற பெருந்தலைவர் இல்லை. ஒழிக்க முயன்ற பேரியக்கம் இல்லை.

சுரண்ட வந்த ஆங்கிலேயரையும் மிரட்டி இந்நாட்டின் மரபு களில், பழக்க வழக்கங்களில் அவர்கள் தலையிடுவதில்லை என்னும் வாக்குறுதியை இந்திய நாட்டின் மேட்டுக்குடியினர் பெற்று விட்டார்கள்.

எனவே சாதி ஏற்றத்தாழ்வுக் கொடுமைகளும், தீண்டாமை, நெருங்காமை, உடனிருந்து உண்ணாமை, கலவாமை ஆகிய தீய மரபுகளும் கொடி கட்டிப் பறந்தன. இத்தீமை செத்தாலும் விடுவதில்லை. சுடுகாட்டிலும் இடுகாட்டிலும் சாதிப்பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனி சுடுகாடுகள், இடுகாடுகள் இருந்தன; இருக்கின்றன.

மதம் மாறினாலும் இந்நோய் விடுவதில்லை. கிறித்தவர் களானாலும் 'சாதி இழிவு' ஒட்டிக் கொண்டிருக்கும்.

தொழுகைக் கூடங்களில் ஆதிதிராவிடக் கிறித்தவர்களுக்குத் தனியிடமும் மற்றவர்களுக்கு வேறு இடமும் இருந்தன. இன்றும் அத்தகைய கிறித்துவக் கோயில்கள் உள்ளன.

இந்த நோயை அடியோடு ஒழிக்கப் பாடுபட்டவர் ஈ. வெ. ராமசாமி ஆவார். மாணவப் பருவத்திலேயே சாதி வேர்களை உடைத்தெறிந்த பெரியார், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகவும் அத்தொண்டாற்ற வாய்ப்புப் பெற்றார்.

# 2. காங்கிரசில் பெரியார்

சாதி ஏற்றத்தாழ்வு பல்வேறு உருவங்களில் மக்களை வாட்டியது. சமுதாய ஏணியின் கீழ்ப்படிக்கட்டுகளில் உள்ளவர்கள் கோயிலுக்குள் நுழையக் கூடாது; பொதுத் தெருக்களில் நடமாட முடியாது; பொதுக் கிணறுகள், குளங்களைப் பயன்படுத்த முடியாது. ஆறுகளில் தனித்தனிப் படித்துறைகள். இப்படிப் பல்வேறு வகையாக மக்களை வதைத்தது.

கேரளத்தைச் சேர்ந்த வைக்கம் என்னும் ஊரில் போராட்டமொன்று தொடங்கப் பட்டது. என்ன போராட்டம்? கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர் சமுதாயத்தார் நடக்க உரிமை கோரி போராட்டம் தொடங்கப்பட்டது. இது 1924-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது.

அப்பக்கத்து முற்போக்கு வாதிகள் சிலர் மறியல் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். சில நாள்கள் வரை மறியல் செய்த தொண்டர்கள் மட்டும் கைது செய்யப்பட்டார்கள். பிறகு மறியல் குழுவைச் சேர்ந்த பதின்மூன்று பேர்கள் மொத்தமாகக் கைது செய்யப்பட்டார்கள்.

மறியல் நின்று போகக்கூடிய நெருக்கடி ஏற்பட்டது. போராட்டத் தலைவர் கிரூர் நீலகண்ட நம்பூதிரிபாத் ஈ. வெ. ராமசாமிக்கு அழைப்பு அனுப்பினார். ஈ. வெ. ரா. அப்போது தமிழ்நாட்டில் காங்கிரசின் தலைவர். வைக்கம் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி அதை நடத்துமாறு ஈ. வெ. ரா.வுக்கு அழைப்பு வந்தது.

பெரியார் வந்துபொறுப்பேற்காவிட்டால் மறியல்தோற்றுவிடுமென்று தந்தி மேல் தந்தி வந்தன. பெரியார் வைக்கம்சென்றார்.

வைக்கம் திருவிதாங்கூர் அரசைச் சேர்ந்தது. திருவிதாங்கூர் அரசர் ஈ. வெ. ராமசாமிக்கு நண்பர்; மிகவும் வேண்டியவர். பொதுத்தொண்டில் நட்பு குறுக்கிடும்படி விடலாமா? கூடாது. தனிப்பாசம் திசைதிருப்ப விடலாமா? ஆகாது.

ஈ. வெ. ராமசாமி, அரசரின் அன்பிற்குத் தாட்சண்யப்படவில்லை. வைக்கம் போராட்டத்திற்குப் பொறுப்பேற்றார்.

மறியலைத் தொடர்ந்துநடத்தினார்; சிறைப்பட்டார். ஒரு திங்கள் சிறை வாழ்க்கைக்குப் பின் வெளி வந்தார்.

இதற்கிடையில் ஈ. வெ. ராவின் ஆலோசனைப்படி திருமதி நாகம்மையாரும், திருமதி கண்ணம்மாவும் ஈரோட்டிலிருந்து வைக்கம் வந்தடைந்தார்கள்; மறியலை நடத்தினார்கள். போராட்டம் சூடு பிடித்தது.

விடுதலையான ஈ. வெ. ராமசாமி சிறிது இடைவெளிக்குப் பின் மீண்டும் மறியல் செய்தார். இம்முறை ஆறு திங்கள் சிறை வாசம் கிடைத்தது.

வைதீகர்கள் யாகத்திடம் அடைக்கலம் புகுந்தார்கள். 'சத்துரு சங்கார யாகம்' நடத்தினார்கள். யாகம் முடிவதற்குள் திருவிதாங்கூர் அரசர் மறைந்தார். மக்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். காந்தியாரின் தலையீட்டை நாடினார்கள். ஒரு தெருவை யாவது 'ஈழவர் நடக்கக் கூடாத தெருவாக' வைக்க முயன்றனர்.

ஈ. வெ. ராமசாமி உறுதியாக நின்றார். போராட்டம் வெற்றி பெற்றது.

எல்லா ஊர்களிலும் எல்லாப் பொதுத் தெருக்களிலும் எல்லாச் சாதியாரும் நடக்கலாம் என்று அரசு அறிவித்தது. ஈ. வெ. ரா. வெற்றிவாகை சூடி 'வைக்கம் வீரராக' தமிழகம் திரும்பினார்.

ஈ. வெ. ராமசாமி எதை எடுத்துக்கொண்டாலும் அதைப் பற்றியே முழு நேரமும் சிந்திப்பார்; திட்டம் தீட்டுவார்; பேசுவார்;எழுதுவார்.

இந்தியா விடுதலை பெறவேண்டும், ஆம், விரைந்து விடுதலை அடையவேண்டும். அதற்கு என்ன தேவை? அன்னிய ஆட்சிக்கு எதிர்ப்பு தேவை. வெள்ளம் போன்ற எதிர்ப்புதேவை. ஒருமித்த எதிர்ப்பு தேவை.

எல்லாச் சாதியினரும் ஏராளமாகக் கூடி எதிர்த்தால் அன்னிய ஆட்சி கால்கொள்ள முடியாது. ஆகவே பொதுமக்களின் பேராதரவைத் திரட்ட வேண்டும். அதற்குத் தடைக்கற்களாக இருப்பவை எவை? அச்சம், அவநம்பிக்கை.

எது பற்றி அச்சம்? சமுதாயத்தின் பெரும்பாலோரை மேல்மட்ட மக்கள் தொடர்ந்து அடக்கி ஒடுக்கி வருவார்கள் என்று

பொதுமக்கள் அஞ்சினார்கள். வேலைவாய்ப்புகளை மேட்டுக் குடியினரே மடக்கிவைத்துக்கொள்வார்களென்று அஞ்சினார்கள்.

முன்னர் அப்படித்தான் இருந்தது. அது சிறுபான்மையினரான மேல்சாதிக்காரர் மேல், பொதுமக்களுக்கு அவநம்பிக்கையை வளர்த்தது. 'சாதிகள் உள்ளவரை பதவிகளில் வகுப்பு உரிமை வழங்கும் கொள்கையை ஒப்புக் கொண்டால் விடுதலை இயக்கத் திற்கு ஆதரவு வெள்ளமெனப் பெருகும். விடுதலை விரைந்து கிட்டும்' இப்படி ஈ. வே. ராவின் சிந்தனை சென்றது. வகுப்புரிமை இன்றியமையாதது என்னும் முடிவுக்கு வந்தார். அப்புறம்?

காங்கிரசில் வகுப்புரிமைக்கு ஆதரவு திரட்ட முயன்றார். காங்கிரசுக் கூட்டங்களில் இதற்கு ஆதரவாகப் பேசினார்.

1920ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தமிழ் நாடு காங்கிரசு மாநாடுகளில் வகுப்புரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அய்ந்து முறை பேச்சோடு நின்றது. தீர்மானம் நிறைவேறவில்லை. ஆறாம்முறை அத்தகைய தீர்மானத்தை முன்மொழியவும் விட வில்லை.

1925 நவம்பரில் காஞ்சிபுரத்தில் நடந்த மாகாண மாநாட்டில் இப்படி நிகழ்ந்தது. ஈ. வெ. ராமசாமி தான் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரசை விட்டு வெளியேறினார்.

அக்காலகட்டத்தில் ஈ. வெ. ராமசாமி காங்கிரசு இயக்கத்தின் பெருந்தலைவர்களில் ஒருவர். புகழும் செல்வாக்கும் மிகுந்த தலைவர். காங்கிரசுக் கட்சியிலேயே இருந்திருந்தால் காலநீளத்தில் அனைத்திந்தியத் தலைவர்களில் ஒருவராகவும் உயர்ந்திருப்பார். இத்தகைய எதிர்கால வாய்ப்பு ஈ. வெ. ராவுக்குப் புரியாததல்ல. இருப்பினும் மற்றோர் தியாகத்தைத் தயங்காது மேற்கொண்டார்.

மாளிகை வாழ்க்கையைத் துறந்த சித்தார்த்தர் கடுந்தவமும் பயனற்றது என்று கண்டபோது அதையும் விட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். அது அவருக்குத் தெளிவைத்தந்து புத்தராக்கியது.

அதேபோல் வசதியான வாழ்வை விட்டுவிட்டு காந்தீயக் கடுந்தவம் புரிந்ததும் நாட்டு மக்களுக்குப் பயன்படாதென்பதை உணர்ந்த ஈ. வெ. ரா. காங்கிரசு இயக்கத்தைவிட்டு வெளியேறி, பரந்த சமுதாயத் தொண்டில் குதித்தார்,

# 3. சுயமரியாதை இயக்கம் தோன்றியது

ஈ. வெ. ராமசாமி காங்கிரசை விட்டு விலகியது அவருடைய பொதுத் தொண்டில் வரலாற்றுத் திருப்புமுனையாகும். காங்கிரசைவிட்டு வெளியேறிய அவர் சலிப்புற்று வீட்டில்போய் உட்காரவில்லை. ஆண்டுக்கு இருபதாயிரம் ரூபாய்களை லாபமாகத் தந்த வாணிகத்தையே மூடினாரே, அதைப்பற்றியும் மீண்டும் சிந்திக்கவில்லை. மாறாக சூறாவளியெனச் சுற்றுப் பயணஞ் செய்தார். தன்மான இயக்கத்தை வளர்த்தார்.

அவ்வியக்கத்தின் கொள்கைகள் என்னென்ன?

எல்லா மனிதர்களும் வாழ வேண்டும். மனித வாழ்வு வாழ வேண்டும். ஒருநிலை மனிதர்களாக வாழவேண்டும். பிறப்பால் சிலர் உயர்ந்தவர்கள்; பலர் தாழ்ந்தவர்கள் என்பது தவறு இக்கொடுமை இந்தியாவில் மட்டும் பரவியுள்ள ஒன்று. இதை ஒழித்தால்தான் சமத்துவம் ஏற்படும். சாதிச்சுவர்களை ஒழிக்க கலப்பு மணங்கள் பெருகவேண்டும். இத்தகைய சமத்துவக் கொள்கைகளைப் பெரியாரும் அவரைச் சார்ந்தவர்களும் பட்டி தொட்டியெல்லாம் பரப்பி வந்தார்கள்.

பழமைப் பாதுகாவலர்கள் சும்மா இருப்பார்களா? நெடுங்கால மரபு என்னும் வாதத்தை மேற்கொண்டார்கள். இது அபத்த மானது. எப்படி?

கொசுவும் மூட்டைப்பூச்சியும் அனாதிகாலமாக வருவது. அதற்காக அவற்றைக் காப்பாற்றி, அவற்றின் தொல்லைகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமா?

அதேபோல் வைசூரி நோய் கணக்குத் தெரியாத காலத்திலிருந்து நம் நாட்டில் பரவி ஆண்டுக்கு ஆண்டு பல லட்சம் உயிர்களைப் பலி கொண்டு வந்தது. தொன்மையானது என்பதற்காக அந்நோயைத் தடுக்காமல் விட்டுவைத்தோமா?

குழந்தைப் பருவத்தே ஊசி போட்டுத் தடுத்துவிடவில்லையா? நெடுங்காலமாகத் தொடர்வன என்பதாலேயே தொல்லைகளைத் தாங்கிக்கொண்டிருக்கத் தேவையில்லை. இதைத் தன்மான இயக்கம் தெளிவு படுத்தியது.

மருண்ட மதவாதிகள், 'சாதி என்பது பிறவிப்பயன். ஒருவர் மேல்சாதியாகப் பிறப்பது அவர் முற்பிறவியில் செய்த நல்வினைப் பயன்; கீழ்ச்சாதியாகப் பிறப்பது போன பிறவியில் செய்த தீவினை களின் பயன். இப்பிறவியில் பார்ப்பனர்களுக்குத் தொண்டு செய்வதின் வழியாக அடுத்த பிறவியில் மேல்சாதிக்கு உயர முயலவேண்டும்' என்று உளறினார்கள்.

ஞாயிறு சுடுவதும் வெண்ணிலா குளிர்விப்பதும் உலகம் முழுமைக்குமே பொது விதி. கோடைக்காற்றில் வரட்சியும், வாடைக் காற்றில் ஈரமும் கலந்திருப்பது பொது விதி.

முன்னை வினைப் பயன் என்பது பொது விதியானால் இந்தியாவில் மட்டும் செயல்பட்டு மேல்சாதி கீழ்ச்சாதிகளை உருவாக்குவானேன்? பிறநாடுகளில் இவ்விதி செயலற்றுக் கிடப்பானேன்?

இது இந்து சமயப் பற்றாளர்களிடம் மட்டுமே வேலை செய்யும் என்றால் அச்சமயத்தில் இருந்து கொண்டு இழிமக்களாக இருப்பதைவிட அதற்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு விடுதலை பெற்றால் என்ன? இப்படிப்பட்ட கேள்விகள் எழுந்தன.

பழமை விரும்பிகளும் பண்டிதர்களும் பழைய இதிகாசங் களையும், புராணங்களையும் கொண்டுவந்து நிறுத்தி சாதி அமைப்பிற்கு மேல்கீழ்ச் சாதிமுறைக்கு முட்டுக்கொடுத்து நிறுத்த முயன்றார்கள். எனவே அவற்றை ஆய்வு செய்து பார்க்கும் நிலைக்குத் தன்மான இயக்கம் தள்ளப்பட்டது.

'தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்தில் நெறி கட்டியது' என்றால் வீழ்ந்து வீழ்ந்து சிரிப்போம். சம்பூகன் என்னும் சூத்திரச் சிறுவன் தவம் புரிந்த குற்றத்திற்காக எங்கோ ஒரு பார்ப்பான் இறந்துவிட்டான் என்று சொல்லும் இராமாயணக் கதையைக் கேட்டுச் சிரிக்காமல் இருக்க முடியுமா? சம்பூகன் தலையை வெட்டியதை நீதி என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

இப்படிப்பட்ட கதைகளைப் புனிதமாகக் கொள்ள முடியுமா? என்று மடக்கிக் கேட்டு, பொதுமக்களைச் சிந்திக்க வைத்தது தன்மான இயக்கம்.

எவரோ சொன்னார், எப்போதோ சொன்னார், எவ்வளவு காலமாகவோ சொல்லி வருகிறார்கள், எண்ணற்ற மக்கள் கூறுகிறார்கள் என்பதற்காகச் சும்மா இராமல் மேலும் மேலும் ஆய்ந்து உண்மைகளை, தன்மைகளை வெளிப்படுத்துதல் விஞ்ஞானப் போக்கு.

அவ்விஞ்ஞானப் போக்கு எத்தனைச் சாதனைகளுக்குக் காரணமாகியுள்ளது. பொத்தானை அழுத்தியதும் எரியும் மின் விளக்கு என்ன! இறகு பேனாவிற்குப் பதில் ஊற்றுப் பேனா, பால்பாய்ண்ட் என்னும் எழுதும் மைக்குச்சி, புகைவண்டி, கப்பல், வானவூர்தி ஆகிய அத்தனையும் விஞ்ஞானிகளின் புதிய, புரட்சிகரமான சிந்தனைகளின் பலன்களாகும்.

'முன்னே வாழ்ந்த மகான்களுக்கு' மேதைகளுக்குத் தெரியாதது நமக்குத் தெரியாது, என்று விஞ்ஞானிகள் அஞ்சிக் கிடந்திருந்தால் இத்தனை புதுமைகளைக் கண்டிருக்க மாட்டோம்.

மேற்கூறிய விஞ்ஞான சிந்தனையையும் போக்கையும் பொது மக்களிடையே வளர்க்கப் பெரியார் பாடுபட்டார். புனிதமானது, தொன்மையானது என்பதற்காக எந்த அமைப்பையோ, வாழ்க்கை முறையையோ ஏற்றுக் கொள்ளாதீர்! நன்மையானது, எல்லாருக்கும் நன்மையானது; தேவையானது, காலத்திற்கு ஏற்றது என்னும் அளவுகோல்களால் அளந்து பார்த்து ஏற்றுக் கொள்ளுங்கள். எத்தனை முறை அடியோடு இறைத்தாலும் மீண்டும் நச்சு நீரே சுரக்கும் கிணற்றைத் தூர்த்து மூடிவிடுவதே அறிவுடைமை. அதைப்போல் ஏழ்மைக்கும் கீழ்மைக்கும் ஊற்றாக உள்ள மதக் கிணற்றைத் தூர்த்து மூடிவிட வேண்டுமென்று பெரியார் தெளிவு படுத்தினார்.

இந்து சாத்திரங்களும், புராணங்களும், சடங்குகளும் மக்கள் இனத்தின் சுயசிந்தனையை, துணிச்சலான முயற்சியை, தன்னம்பிக்கையை, தோழமை உணர்வை, சமத்துவப் போக்கை முளையிலே நசுக்கி அழித்து வருவதை, பெரியாரைப் போன்று எவரும் அம்பலப் படுத்தவில்லை.

மூன்றாண்டு காலம் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் பகுத்தறிவுச்சுடரை ஏற்றித் தன்மானப் பொத்தானைப் பொருத்தி விட்ட பெரியார், இயக்கத்தின் சார்பில் மாநாடுகளைக் கூட்டத் தலைப்பட்டார்.

முதல் மாகாண சுயமரியாதை மாநாடு 1929 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் செங்கற்பட்டில் கூட்டப்பட்டது. அது சமுதாயப் புரட்சிக்கு வித்தாக அமைந்தது. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு எல்லாச் சாதியினரும் சேர்ந்து உண்ணும் சமபந்தி உணவு என்பது நடைமுறையில் இல்லை. அதைப்பற்றிச் சிலரே பேசத் துணிந்தவர்கள். அவர்களும் அதைப் பொது நடவடிக்கையாக்க இயலவில்லை. ஈ. வெ. ராவோ அதை முதல் சுயமரியாதை மாநாட்டின் இன்றியமையாத பகுதியாக்கி விட்டார். முதன்முறையாக பல சாதிகளைச் சேர்ந்த ஏறத்தாழ ஆறாயிரம் பேர்கள் ஒன்றாக அமர்ந்து உண்ட புரட்சியைக் கண்டேன். அன்று கல்லூரி மாணவனாகிய நானும் பங்கு கொண்டேன்.

# 4. முதல் சுயமரியாதை மாநாடு

முதல் சுயமரியாதை மாநாட்டில் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த சமையல்காரர்கள் (விருது நகர நாடார்) உணவு சமைப் பார்கள். பல சாதியார் பரிமாறுவார்கள். அதை மாநாட்டு பிரதி நிதிகள் பல சாதியரோடும் அமர்ந்து உண்ண உடன்படவேண்டும் என்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்டது. அக்காலத்தில் அது பெரும் புரட்சி.

உயர்வாகக் கருதப்பட்ட சமுதாயத்தினர் (அய்யர்கள்) சமைப்பதை உண்ணவும் சமபந்திக்கு உடன்படுவோர் அன்று அருமை. சமுதாயத்தின் அநீதிகளுக்கு ஆளான (நாடார்) சமூகத் தினர் சமைப்பதை உண்பது என்பது அன்று அநேகருக்கு அதிர்ச்சி தரும். வேறு எந்த மக்கள் இயக்கமும் செய்யத் துணியாத இந்த அதிர்ச்சி மருத்துவத்தைப் பெரியாரின் தன்மான இயக்கம் தொடக்கத்திலேயே வெற்றிகரமாகச் செய்துகாட்டியது. ஆறாயிரம் தமிழர்கள் ஒன்றாக உட்கார்ந்து உண்ட புரட்சி பெரிது. ஆம்; வரலாற்றுச் சிறப்புடையது ஆகும்.

முதல் சுயமரியாதை மாநாடு—சாதி யொழிப்பு, வழிபாட்டில் தரகர் ஒழிப்பு, ஆண் பெண் சமத்துவம் பற்றி முற்போக்கான முடிவுகள் எடுத்தது. அவற்றைப் பார்ப்போம்,

'மக்கள் பிறவியினால் உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கையை இம்மாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கும் மதம், வேதம், சாத்திரம், புராணங்களையெல்லாம் பொது மக்கள் பின்பற்றக்கூடாதென்றும்,

'வருணாசிரமமென்ற கொடுமையான கட்டுப்பாட்டையும் சமுதாய முறையில் காணப்படும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் முதலிய ஆட்சேபகரமான பிரிவுகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும்,

'மனித நாகரீகத்திற்கும் தேசமுன்னேற்றத்திற்கும் தடையான தீண்டாமை என்பதை ஒழித்து எல்லாப் பொதுத் தெருக்கள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள் தண்ணீர்ப்

பந்தல்கள் முதலிய பொது நிறுவனங்களைத் தட்டுத் தடங்கலின்றி அனுபவிக்கச் சகல மக்களுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது.

அறுபது ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட இம்முடிவில் எந்தப் பகுதி தேவையற்றது? எந்தப் பகுதி காலத்துக்கு முந்தியது? எந்தப் பகுதி தீங்கானது? எதுவும் தேவை யற்றது அல்ல; எதுவும் அவசரப்பட்டு பிறந்து விடவில்லை. நெடுங்காலம் பொறுத்துக் கொண்டிருந்த பிறகே இப்போர்க்குரல் ஒலித்தது.

சமுதாய ஏணியின் உச்சியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு மட்டுமே தீங்கானதாகத் தோன்றக்கூடிய இப்புரட்சிமுரசு சமுதாயத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களின் தூக்கக் கலைப்பிற்கு உதவியது. சமத்துவ நிலைக்குத் துணையானது.

அறுபது ஆண்டுகளாக இப்போர்முரசு கொட்டியும் அரசியல் சட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு விதியைச் சேர்த்திருந்தும் இன்றும் படித்துறையில், சுடுகாட்டில், இடுகாட்டில் வேற்றுமை அடியோடு ஒழிந்தபாடில்லை. இங்கும் அங்கும் ஒட்டிக்கொண்டுதான் தமிழகத்தில் இருக்கிறது.

பெரியாரின் தன்மான இயக்கம் தமிழகத்தில் தோன்றிப் போராடியிராவிட்டால் இன்றும் எண்ணற்ற வடமாநில ஊர்களில் நடப்பது போல் தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய சாதிகளைச் சேர்ந்தோர் பெரியசாதித் தெருக்களில் நடக்கும்போது செருப்புப் போட்டுக் கொண்டோ, சட்டை அணிந்தோ நடக்கக் கூடாது என்னும் காட்டுமிராண்டிக் காலத்துக் கொடுமை இங்கும் கொடி கட்டிப் பறந்திருக்கும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டின் சிற்றுண்டி, உணவுச்சாலைகளில் பல சாதியினர் நுழையக் கூடாது. நுழைய உரிமையுடையவர்களிலும் பார்ப்பனருக்குத் தனியிடம் மற்றவர் களுக்குத் தனியிடம் என்னும் இழிவுப்பாடு பின்பற்றப்பட்டது.

இது தனியார் உணவுச் சாலைகளில் பின்பற்றப்பட்டது போன்றே வெள்ளைக்காரக் கம்பெனிகள் நடத்திய இரயில்வே சிற்றுண்டிச் சாலைகளிலும் கடைபிடிக்கப்பட்டது. அம்முறைக்கு எதிரான முடிவுகளும் முதல் சுயமரியாதை மாநாட்டையொட்டிய இளைஞர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டன.

'வகுப்பு பேதம் காண்பிக்கப்படுகிற எல்லா ஓட்டல்களையும் காப்பி கிளப்புகளையும் இந்த மாநாடு கண்டிப்பதுடன், இவ்வித விஷமத்தனமான பேதங்களுள்ள ஓட்டல்களுக்கும் காப்பி கிளப்புகளுக்கும் அவ்விடத்திலுள்ள அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கக்கூடாதென்றும் கேட்டுக்கொள்கிறது. இது தனியார் நடத்தும் உணவுச்சாலைகளைப் பற்றியது.

அடுத்து 'இரயில்வே அதிகாரிகள் தங்கள் வசத்திலும் மேற்பார்வையிலும் உள்ள சாப்பாட்டுச் சாலைகளிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் சாதி, மதம், வகுப்பு, நிறம் முதலியவற்றைப் பொருத்து எவ்வகையிலும் வேற்றுமையாகப் பிரயாணிகளைப் பாராட்டாமலிருப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனே கைக்கொள்ளுமாறும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது என்னும் ஓர் முடிவும் செய்யப்பட்டது.

தென் ஆப்பிரிக்காவில், அமெரிக்காவில் பின்பற்றப்படும் நிற ஒதுக்கல் முறையைப் போலவே இந்தியாவில் பின்பற்றப்படும் 'வருண ஒதுக்கல்' முறையும் கல்லியெறியப்பட வேண்டிய அநீதியாகும். இதற்காகப் பாடுபட்டது பெரியாரின் தன்மான இயக்கமே என்பது மிகையல்ல.

'மக்கள் தங்கள் பெயர்களோடு சாதி அல்லது வகுப்பைக் காட்டுவதற்காகச் சேர்க்கப்படும் பட்டங்களை விட்டுவிடவேண்டுமென்று இம்மாநாடு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது' என்பது மற்றோர் முடிவாகும். இப்புதுமையான முடிவைக் கேட்டு மிரண்டவர்கள் பலர் ஆவார். இதற்கு எதிராக முணுமுணுத்துக் கொண்டிருந்தவர்களும் ஏராளம். ஆயினும் இக்கோட்பாடு வெற்றி பெற்று வருவதைக் காண்கிறோம்.

ஈசன், சந்தானம், சிவசைலம், அருணாசலம், ராமசாமி, இராமகிருஷ்ணன், சௌந்தரராசன், கிருஷ்ணசாமி, தாமோதரம் என்று சாதிக்குறியை விட்டுவிட்டுச் சொல்லுவது பெரிய இடத்து மரபாகி விட்டது.

பெரியாரைக் கிண்டல் செய்தவர்களின் பிள்ளைகளே இப்படி இருப்பதைக் காணும் தன்மான இயக்கத்தவர் உள்ளங்கள் உவகை கொள்ளாமல் இருக்க முடியுமா? இது பொதுமக்கள் முறையாகத் தழைக்க வேண்டும். சாதிப் பெயர் ஒட்டடைகள் எங்குமில்லாது துடைக்கப்பட வேண்டும். ஆகவே பகுத்தறிவு இயக்கத்திற்கு இன்னும் தேவையிருக்கிறது.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத மேல்சாதி—கீழ்ச்சாதி முறையைக் காக்கும் கோட்டைகளாக விளங்குபவை இந்துக் கோயில்களே. அவற்றுள் நுழைய உரிமையுடையவர்களில் பெரும் பாலோர் எட்டி நின்று கும்பிட மட்டுமே உரிமையுடையவர்கள்.

அரசியல் தலைவர்களை அதிகாரிகளை அணுகுவதற்குத் தரகர்கள் தேவை என்பது நம்முடைய முறையாகும்.

கடவுள் நம்பிக்கையாளர்கள் என்ன சொல்லுகிறார்கள்? நாம் அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகள் என்று பறைசாற்றுகிறார் கள். ஆண்டவன் எல்லாமறிந்தவன்; எல்லாம் வல்லவன் என்று முரசு கொட்டுகிறார்கள். அப்படியானால், பல்லாயிரம் ஆண்டு களாகத் தம் பிள்ளைகளிற் பெரும்பாலோரைத் தாழ்த்தி வைத்திருப்பது தெரிந்திருக்க வேண்டுமே!

அக்கொடுமையை நொடியில் அழித்திருக்க வேண்டுமே! ஏன் பொறுமை என்று கேட்டால் ஆத்திகர்கள் ஆத்திரப்படுவார்கள். அது கிடக்கட்டும். இப்போது கோயில் வழிபாடு பற்றி முதல் மாகாண சுயமரியாதை மாநாடு மேற்கொண்ட முடிவைக் கவனிப்போம்.

'கடவுள் என்பதின் பேரால் கோயில்களிலாவது அல்லது வேறு இடங்களிலாவது ஒரு பைசாவாவது, ஒரு பைசா பெரும்படியான சாமானாவது செலவழிக்கக் கூடாதென்றும் வணங்குகிறவனுக்கும் வணங்கப்படுவதற்கும் மத்தியில் தரகனாவது, வடமொழியாவது இருக்கக்கூடாதென்றும் இம்மாநாடு கருதுகிறது.

'இனிமேல் கோயில்கள் புதிதாய்க் கட்டக்கூடாதென்றும் இப் போதிருக்கிற கோயில், மடம், சத்திரம், வேதபாடசாலை முதலியவைக்காக விட்டிருக்கும் சொத்துக்களைக் கைத்தொழில் வியாபாரம், ஆராய்ச்சி முதலிய கல்விகளுக்காகவும் கைத் தொழிலுக்காகவும் செலவழிக்க முயற்சி செய்ய வேண்டுமாய் பொதுமக்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது'.

'கோயில்களில் உற்சவங்கள் முதலியவை கொண்டாடுவதை நிறுத்திக் கொண்டு அவற்றிற்குப் பதிலாகப் பொதுமக்களுக்கு அறிவு வளர்ச்சி, உடல்நல வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி முதலியன சம்பந்தமான பொருட்காட்சிகளை நடத்தி மக்களுக்கு அறிவும் செல்வமும் ஏற்படச் செய்யவேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது'.

தன்மான இயக்கம் முளைவிட்டபோது கடவுள் மறுப்பு இயக்க மாகத் தலைகாட்டவில்லை என்பது வெளிப்படை. கடவுள் பெயரைச் சொல்லி சோம்பேறிக் கூட்டத்தின் சுரண்டல் முறைக்குக் காரணமாகவும் ஆதரவாகவும் இருந்துவந்த நடை முறையை மட்டுமே மாற்றியமைக்க முளைத்தது. தரகு முறையை ஒழிக்க முயன்றது. வழிபாட்டு நேரத்தைக் கூட தமிழையும் தமிழர் களையும் இழிவுபடுத்தும் வாய்ப்பாகப் பயன்படுத்தியதை மாற்ற முன்வந்தது.

'உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தையும், மொழிகள் அனைத்தையும் படைத்தவர் ஒருவரே' என்று சொல்லிவிட்டு அந்த ஒருவரைத் தமிழால் பாடினால் அவருக்குப் புரியாது; அதோடு அவர் தீட்டாகி விடுவார் என்பது எவ்வளவு முரண்பாடு! இம்முரண்பாட்டை விலை கொடுத்து வாங்கும் இழிவை மான முள்ளவர்கள், அறிவுடையோர் போக்கவேண்டாமா?

தமிழர் பல தலைமுறையாக ஏற்றுக் கொண்டிருந்த இம் முரண்பாட்டை - இழிவைப் போக்க தன்மான இயக்கம் துணிந்து போராட முன்வந்தது. தமிழர்கள் மெய்யான தமிழ்ப் பற்றுள்ளவர்களாக இருந்திருப்பின் தன்மான இயக்கத்தின் இம் முடிவையாகிலும் உரத்த குரலில் ஆதரித்திருப்பார்கள். வழிபாடு தாய்த்தமிழில் நடக்கும்படி செய்திருப்பார்கள்.

இந்தியாவில் கோயில்கள் தனியுடைமைக் கொடுமையின் செறிவாக உள்ளன. நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தமான நிலமும் சொத்தும் தனியார் உடைமையானதைப் போன்றே கொடுமையானவை, தீங்கானவை கோயிற் சொத்துக்கள். அவை அர்ச்சகர்க்கு, பூக்கட்டுவோர்க்கு, நாயனம் வாசிப்போர்க்கு பிழைக்க வழி செய்கின்றன என்று சொல்லி அத்தகைய பாழடிப்பை நியாயப்படுத்த முடியாது.

அண்ணல் காந்தியடிகள் கோயில்கள், விபச்சார விடுதிகள் என்று ஒரு முறை கடுமையாகக் கூறினார். ஏன்?

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு 'தாசி' இல்லாத கோயில் கோயிலாக மதிக்கப்படுவதில்லை. தாசிகள் திருமணஞ் செய்து கொள்ளக்கூடாது. தேவர்க்கு அடியாள்களாக பொட்டு கட்டிக் கொண்டு கோயில் திருவிழாக்களில் சதுர் ஆடவேண்டும். பாட்டுப் பாடவேண்டும். இப்படி வாழ்கின்ற கன்னிகளை பணம் கொழுத் தவர் சும்மா விட்டுவைப்பார்களா?

கூடா ஒழுக்கமும் பரத்தையர் இல்லம் போதலும் தழைத்தது பக்தனை இறைவனே பரத்தையர் இல்லத்திற்கு அழைத்துப் போனதாகக் கதை கட்டி அதையே வெட்கமின்றிக் காலட்சேபஞ் செய்யும் சமுதாயத்தில் விபசாரம் பெருகிற்று. அதன் வேடந்தாங்கலாகக் கோயில்கள் இருந்தன.

அதனால்தான் காந்தியார் கோயில்களை 'விபசாரவிடுதிகள்' என்று சொல்ல நேர்ந்தது. தேவர் அடியார்களுக்கும் மான்யம் உண்டு. இத்தகைய சொத்தை எப்படி நியாயப்படுத்துவது? மொத்தத்தில் சொத்து என்பதே பலவிதத் தகாத செயல்களுக்குக் கொடுக்கப்படும் இலஞ்சமே.

கோயில் சொத்துக்களில் கணிசமானவை அவற்றிலுள்ள நகைகள் ஆகும். இந்துக் கோயில்களில் காசுமாலைகளாக, வைர முடிகளாக, மூக்குத்திகளாக, முடங்கிப் பாழாகிக் கிடக்கும் சொத் தின் மொத்த மதிப்பு சில கோடியல்ல, பல கோடியல்ல, அதற்கும் மேலே; பல கோடி கோடியாகும். இவற்றைப் பணமாக்கி தொழில்களைத் தொடங்கினால் எல்லார்க்கும் வேலைகொடுக்க முடியும்.

பழங்குடி மக்கள் எங்கெங்கே ஓட்டை போட முடியுமோ, அங்கெல்லாம் ஓட்டைபோட்டு, எதையாவது மாட்டிக்கொள்ளு வார்கள். இரு கைகளிலும் கால்களிலும் எலும்பு வளையல்களை யும் காப்புகளையும் மாட்டிக்கொண்டு திண்டாடுவார்கள். நாகரீகம் முதிர முதிர நகைகளின் எண்ணிக்கை குறையும்; எடை குறையும்.

இங்குள்ள புல்லுருவிக் கூட்டமோ ஒரு கோடி மதிப்பில் ஏற்கனவே முடங்கிக் கிடக்கும் வைரமுடி போதாதென்று மற்றோர் வைரமுடி அதே மதிப்பில் செய்ய முயல்கிறது. இந்தக் காட்டுமிராண்டி காலத்துஆடம்பரத்தைக் கண்டிக்க ஆள் இல்லை.

கோயிலுக்குத் தங்கக் கூரை வேய்வதும் தங்கத்தேர் செய் வதும் அருவருப்பான ஆடம்பரச் செயல்கள்.

டாடாவுக்குப் பணம் குவிந்திருப்பதால், அவர் தங்கக் காரில் பவனி வந்தால் எப்படி மதிப்பிடுவீர்கள்? அந்த 'ஆடம்பரம் அரு வருப்பாக இராதா? 'பீரோ' நிறைய பட்டுப்புடவைகளை அடுக்கி வைத்திருக்கும் சீமாட்டியைக் கிண்டல் செய்யாத எழுத்தாளன் உண்டா?

—2—

பல சிலைகளுக்கு இரண்டு மூன்று தங்கப் பூணூல்கள்; ஒன்றுக்கு மேற்பட்ட முடிகள்; மாற்று அணிகள். கடவுள் நம்பிக்கையாளர்களைப் பணிவோடு கேட்கிறேன். இவை நம்பிக்கையின் அடையாளங்களா? வழிபாட்டிற்கு இவை தேவையா? இவை இன்றைக்கு நாணமூட்டக்கூடிய பகட்டு அல்லவா?

இறைவன் ஒருருவம் ஒரு நாமம் இல்லான் - பிச்சாண்டி என் றெல்லாம் சொல்வது உண்மையா? பாமரர்களை ஏமாற்றவா? உண்மையானால் கோயில் நகைகளில், பலவற்றைக் கொண்டு அறிவு வளர்ச்சிக்கு, துப்புரவுப் பெருக்கத்திற்கு, மக்களை இழி விலிருந்து விடுவிப்பதற்குச் செலவிடுதல் எப்படிக் குற்றமாகும்? இதை அறுபது ஆண்டுகளுக்கு முன்பே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். கேளாக்காதர்களாகத் தொடரலாமா?

இந்திய அரசியல் விடுதலைக்குப்பின் நம் சமுதாயத்தில் மந்தைப் போக்கையே அதிகம் வளர்த்துள்ளோம். அப்போக்கு கடவுள்களின் பேரால் முன்னர் பாழாக்கியதிலும் பலமடங்கு அதிகமான சொத்தை முடக்கவும், பாழாக்கவும் பெருந்துணையாக நிற்கிறது.

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி தோற்றுவித்த தன்மான இயக்கம், சாதி ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்து, எல்லாரையும் ஒரு நிலை மக்களாக்கும் குறிக்கோளோடு தொடங்கியது. தன்மான இயக்கத்தின் பார்வை குறுகியது அல்ல; விரிந்தது. வாழ்க்கையின் எல்லா நோய்களுக்கும் மருந்துகளைக் காட்டியது.

# 5. இந்தியச் சூழலில் பாட்டாளிகள் யார்?

உலகில் இந்தியா நீங்கிய வேறெந்த நாட்டிலும் இல்லாத கொடுமை, சாதியேற்றத் தாழ்வாகும். கீழ்ச்சாதி மக்கள் என்று கருதப்படுவோர்களும் தொழிலாளர்களும் ஒரே கூட்டத்திற்கு இரு பெயர்களாகும். சமதூரத்தில் ஓடும் இருப்புப் பாதைபோல இந்தியாவில் 'சின்ன சாதிகள்' என்று அழைக்கப்படுபவையும் 'தொழிலாளர்' என்று அழைக்கப்படுவோர்களும் இருப்பதைக் காணலாம்.

உடலை வாட்டி, வதைத்துச் செய்ய வேண்டிய தொழில்களைச் செய்வோர் தொழிலாளிகள் ஆவார். நம் இந்தியச் சூழ்நிலையில் சேற்றிலே இறங்கி உழுவோர் யார்? அத்தொழிலாளர்கள், கீழ்ச்சாதி என்று காலகாலமாகக் கருதப்பட்டு வருகிறார்கள். வண்டியோட்டும் வண்டியிழுக்கும் பாட்டாளி யார்? மரபுப்படி கீழ்ச்சாதி. மூட்டை தூக்கிகள், சமுதாய ஏணிப்படிக்கட்டுகளில் கீழே இருப்பவர்கள், துணி நெய்வோர் யார்? அத்தொழிலாளிகளும் கீழ்ச்சாதி மக்கள் என்று கருதப்படுகிறார்கள். குப்பை வாருவோர் யார்? கடைநிலைச் 'சாதி'.

துப்புரவு (தோட்டி) வேலை செய்யும் மேல் 'சாதி' இல்லை. குப்பை வாரும் பெரிய 'சாதி' இல்லை. நெய்தலும், உழுதலும் செய்யும் மேட்டுச் சாதிகள் இல்லை. எனவே, தன்மான இயக்கம், தொழிலாளர் நலத்தில், இயற்கையான அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்தது.

1929இல் செங்கற்பட்டில் நடந்த முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டில், தொழிலாளர் நலன்பற்றி, ஒரு குறிப்பிடத்தக்க முடிவினை மேற்கொண்டார்கள். அது நாட்டு நலனுக்குத் தொழிலாளர் நலன் தேவையென்று சுட்டிக்காட்டியது; சுக வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் வேண்டுமென்பதை வற்புறுத்திற்று. தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்றது. இன்றைக்கும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படாத ஆனால் நாகரிக சமுதாயத்தில்

நிலவ வேண்டிய முற்போக்குக் கொள்கைகளை, அறுபது ஆண்டு களுக்கு முன்பே, பெரியதோர் மாநாட்டில் வைத்து. ஒப்புதல் பெற்ற பெருமை, சுயமரியாதை இயக்கத்திற்கு உரியதாகும். தொழிலாளர் நலன் பற்றிய மாநாட்டு முடிவு இதோ:

'நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர் களுடைய முன்னேற்றம் அவசியமானபடியால் அவரவர்களின் வேலைக்குத் தகுந்தபடியும் அவர்கள் சுகமாக வாழ்வதற்கு வேண் டிய அளவு கூலி கொடுக்கவும் ஒவ்வொரு தொழிலிலும் கிடைக்கும் இலாபத்தில் அந்தத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான பங்கு கொடுக்க வேண்டுமென்றும் இம்மாநாடு தீர் மானிக்கிறது.

இலாபத்தில் பங்கு கொடுக்கும் திட்டத்தை ஈ.வெ.ரா., பொது வாழ்க்கைக்கு வருவதற்கு முன்னரே, ஈரோட்டுப் பெரு வணிகராக இருந்த காலத்திலேயே நடைமுறைப் படுத்தினார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே முரண் பாடுகள் இருப்பது இயற்கை. அவை சிற்சில வேளை, போராட்டங் களாக உருவெடுப்பதும் உண்டு. அவை தனியுடைமை அமைப்பின் நோய்களாகும். அத்தகைய போராட்டங்கள் வெடிக்கும் போது அரசு நடுநிலைமை வகிக்க வேண்டும்; சட்டம், அமைதி காக்கிற சாக்கில் இருக்கும் சுரண்டல் நிலைக்குத் துணை நிற்பது சரியல்ல. சிலவேளை வேலைநிறுத்தத்தை உடைக்க, பலவித சூழ்ச்சிகளில், தொழிலதிபர்கள் முனைவதுண்டு. அந்தச் சமயங்களில் சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய ஆட்சி, செல்வமும் செல்வாக்கும் மிகுந்த தொழிலதிபர்களுக்கு ஆதரவாகவும் வாழ்க்கைப் போராட் டத்தில் தவிக்கும் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவும் நடந்து கொள்ளக்கூடாது; நடுநிலைமையில் இருத்தல் வேண்டும். இதுவே சரியான நடைமுறை; நீதியான நடைமுறை.இதைச் செங்கற்பட்டு மாநாடு—அரை நூற்றாண்டுக்கு முந்திய மாநாடு—வரையறுத்துச் சொல்லுகிறது.

அம் மாநாட்டுக்கு முந்திய இரண்டு ஆண்டுகளில், ஆங்கிலே யருடைய சொத்தாக இருந்த தென்னிந்திய இரயில்வேக்கும் அதில் வேலை செய்த தொழிலாளர்களுக்குமிடையில் கடுமையான கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. இரயில்வே தொழிலாளர் பொது வேலைநிறுத்தத்தில் இறங்க வேண்டிய நிலையை—

நெருக்கடியை—உருவாக்கியது கம்பெனி நிர்வாகம். அவ் வேலை நிறுத்தங்களின்போது தொழிற்சங்கத் தலைவர்களான தோழர்கள் முகுந்தலால் சர்க்கார், மா. சிங்காரவேலு மட்டுமின்றி, தொழிலாளர்களுக்கு ஆதரவு தந்த ஈ. வெ. ராமசாமியும் சிறைப்பட்டார் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

முதல் மாகாண சுயமரியாதை மாநாடு நடக்கும்போது, இந்தியாவை ஆண்டவர்கள் ஆங்கிலேயர். தென்னிந்திய இரயில்வே ஆங்கிலேயருடையது. 'ஆங்கில ஆட்சிக்கு ஆதரவானவர்கள்' என்று பொய்யாகக் குற்றஞ் சாட்டப்பட்ட சுயமரியாதைக் காரர்களின் முடிவை ஆழ்ந்து கவனியுங்கள். இதோ அம் முடிவு :

'தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில், அரசாங்கத்தார் நடுநிலைமை வகிக்காததற்காக, அவர்களைக் கண்டிப்பதுடன், அநியாயமாய்த் துன்பப்பட்ட தொழிலாளர்களிடம் இம்மாநாடு அனுதாபம் காட்டுகிறது'.

செங்கற்பட்டின் சுயமரியாதை மாநாட்டின் முடிவுகள், தமிழகமெங்கும் எதிரொலித்தன. சாதிப் பெயர்களைப் பற்பலர் விட்டு விட்டனர். கோயிலுக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டோர் பலர்.

'கும்பிட்ட கைக்கொரு செம்புக் காசேனும் தராத தெய்வத்தை நம்பாதே' என்று அறிவுறுத்தும் பாட்டுக்கூட மேடைகளில் முழங்கியது. பெரும்பான்மையோரான நம்பிக்கையாளர் மனம் புண்படும் என்று காரணம் காட்டி கடவுள் மறுப்புப் பாடலைத் தடை செய்ய எவரும் முன்வரவில்லை. அந்தக் கால கட்டத்தில் வசந்தகால மரமாகத் தழைத்தது, சுயமரியாதை இயக்கம்.

அதன் இரண்டாவது மாகாண மாநாடு 1930 மே திங்களில் ஈரோட்டில் பெரியாரின் நேரடி ஏற்பாட்டில் கூடியது; பம்பாயைச் சேர்ந்த பிரபல அறிஞரும் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவருமான எம். ஆர். ஜெயகர் அவர்கள் தலைமையில் கூடிற்று.

இரண்டாவது மாநாட்டிலும் வருணாசிரம மறுப்பு, சாதி ஏற்றத்தாழ்வுக்கு உடன்படாமை, சாதிப் பட்டங்களை விடுதல், தீண்டாமை யொழிப்பு முதலானவை பற்றி ஏற்கனவே மேற்கொண்ட முடிவுகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டன.

'வருணாசிரமக் கொள்கையும், சாதிப் பிரிவினையுமே இந்திய சமூகக் கேடுகளுக்கு மூலகாரணமென்று இம்மாநாடு கருதுகிறது'.

அறுபது ஆண்டுகளாக இக்கருத்து பரவி வருகிறது. இதை எதிர்ப்போர் குறைந்து வருகிறார்கள். இருப்பினும் சாதி முறை சாகவில்லை. இன்னும் உயிரோடு இருக்கிறது எதனால்?

'கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி, நாட்டத்தில் கொள்ளாரடி!' என்று பாரதியார் நம்மை இடித்துரைக்கிறார். வழுக்கி ஓடிவிடும் இந்த இயல்பே, சாதி வேற்றுமைகளை இன்றும் உயிரோடு வைத்திருக்கிறது. இளைஞர்கள் சூளுரைத்துக்கொள்ள வேண்டும். பிறவி முதலாளித்துவத்தை விரைந்து முறியடிப்ப தென்று இளைஞர்கள் சூளுரைத்துக் கொள்வார்களாக!

'பிறவியினால் ஏற்றத்தாழ்வு ஏற்படும் என்னும் கொள்கையை இம்மாநாடு மறுப்பதுடன் அக்கொள்கையை வெளியிடும் வேத புராணங்களின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமெனத் தீர்மானிக் கிறது'.

வேத புராணங்கள், சாதிப் புற்றுநோய்க்கு மூலங்கள் ஆகும் மூலங்கள் தொலைந்தால் அதிலிருந்து வளர்ந்த சாதி ஏற்றத் தாழ்வுகள் நிலைக்காது. இதனால்தான் நம் மக்களுடைய நல்வாழ்வுக்கு, சமத்துவ வாழ்வுக்கு, நம் சமய நம்பிக்கை, அதைத் தாங்கி நிற்கும் வேத புராண ஆதிக்கம் தொலைய வேண்டும்.

தீண்டாமை என்னும் கொடுமை மனித தர்மத்திற்கு விரோத மென்று ஈரோட்டு மாநாடு முடிவு செய்தது. பொதுச் சாலைகள், குளங்கள், கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள், கோயில்கள், சத்திரங் கள் முதலிய இடங்களில் சகலருக்கும் சமஉரிமை வழங்க வேண்டு மென்று அம்மாநாடு முடிவு எடுத்தது.

கோடைக் காலத்தில் வாடிக்கிடக்கும் அருகம்புல்லைப்போல, தீண்டாமைக் கொடுமை தமிழகத்தில் தழைக்காமல் வாடி வதங்கிக் கிடப்பதற்குக் காரணம், தன்மான இயக்கத்தின் இடை விடாத, தீவிரப் பணியாகும்.

வட மாநிலங்களில் இத்தகையச் சமத்துவ இயக்கம் பரவாமை யால், மறைந்துவிட்ட சம்பூரணானந்த் என்பவரின் சிலையை அன்றைய இந்திய அமைச்சர் தோழர் ஜகஜீவன்ராம் திறந்து வைத்ததால், அச்சிலை தீட்டுப்பட்டு விட்டது என்று சொல்லி, அதன்மேல் கங்கை நீரை ஊற்றி, தீட்டைத் துடைக்கும் இறுமாப்பைச் சில ஆண்டுகளுக்கு முன்பு கண்டோம்,

# 6. கோயில் சொத்துக்களும் ஊதிய உச்சவரம்பும்

'செங்கோலுக்கு முன்னே சங்கீதமா?' என்பது நாட்டு வழக்கு. இதன் பொருள் என்ன? சட்டத்திற்கு முன்னே, எந்தப் பாட்டும் செல்லாது என்பதாகும். சமுதாயத்தில், நாட்டில் நடக்க வேண்டிய அடிப்படை மாற்றங்கள், சட்ட வலிமையால் மட்டுமே நடக்கும். வெறும் அறிவுரைகளும் அருளுரைகளும் போதிய பயனைக் கொடுக்காது.

குழந்தைமணம் கூடாது என்று எத்தனையோ முற்போக் காளர்கள் உணர்ந்தார்கள்; அவர்களில் துணிச்சலுடையோர் ஊரறிய உரைத்தார்கள்; ஆனால் கேட்டு நடந்தவர்களோ சிலர். இப்படிப் பல்லாண்டுகள் கழிந்தபின் குழந்தைமணங்களைத் தடுக்கும் 'சாரதா சட்டம்' என்ற பெயரில் ஓர் சட்டம் 1930இல் இயற்றப்பட்டது. அப்போது பெண்களுக்குக் குறைந்த அளவு திருமண வயது, பதினான்காக இருக்க வேண்டுமென்று சட்டம் கூறிற்று. அதைக்கூட மீறுவோர், இந்தியாவின் பல மாநிலங்களில் பலர் ஆவார். இன்றையத் தமிழ்நாட்டில் அத்தகையோர் இல்லை என்றே சொல்லிவிடலாம். தமிழ்ச் சமுதாயத்திற்கு அந்த அளவு அறிவு வரக் காரணமாயிருந்தவர் எவர்? தந்தை பெரியாரும் அவர் தோற்றுவித்த தன்மான இயக்கமுமே. பெரியாரைப் போன்ற புரட்சியாளரையும், தன்மான இயக்கத்தைப் போன்ற புரட்சி இயக்கத்தையும் பெறாததால், பல மாநிலங்கள் இன்னும் இருட்டறையில் உள்ளன. இதிலிருந்து என்ன தெரிகிறது? பரவலான, பயனுள்ள, நிலையான, தலைகீழ் மாற்றங்களை உருவாக்க, மக்கள் மனங்களை மாற்றும் இடைவிடாத பிரசாரமும் அதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் சட்டங்களும் தேவை என்பது தெரிகிறது. இதை, ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்பே, தன்மான இயக்கத்தவர்கள் உணர்ந்தார்கள். அதன் விளைவு?

'பிறப்பின் பேரால் ஏற்பட்ட சமூகக் கொடுமையையும் வேற்றுமையையும் அடியோடு ஒழிப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள், பெரிதும் அவைகளைக் காப்பாற்ற ஏற்பட்டவர்களின்

தீவிர முயற்சிகளால் வெற்றி பெறாத நிலையில் இருப்பதால், பொதுமக்கள் முன்னேற்றத்தைக் கருதி, அவைகளைச் சட்டத்தின் மூலம் ஒழிக்க வேண்டுமென்று இம்மாநாடு கருதுகிறது.' —இம் முடிவு, ஈரோட்டில் நடந்த இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டின் முடிவுகளில் ஒன்றாகும்.

சட்டத்தின் வலிமை சேர்ந்ததால் அல்லவா பிற்காலத்தில் கோயில் நுழைவு தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உரிமையாயிற்று! தீண்டாமையை எந்த வடிவத்திலும் அனுசரிப்பதைத் தடை செய்யும் அரசியல் சட்டம் இருப்பதாலன்றோ வெளியே நிறுத்தி கொட்டாங்குச்சியில் தேனீர் ஊற்றுவதைக் குற்றமாக்கித் தண்டிக்க முடிகிறது? சட்ட ஆதரவு இல்லாத எந்தச் சீர்திருத்தமும் மணல்வீடு கட்டியதற்கு ஒப்பாகும். சட்ட ஆதரவு இல்லாத நிலையில், தனிப்பட்ட முற்போக்காளர்கள் சிலரோ பலரோ வாழ்க்கைமுறையாக்கிக் கொண்ட சமூக சமத்துவமோ, பொருள் களைப் பகுத்துண்ணுதலோ, பரந்த சமுதாய வாழ்க்கைமுறை யாகி விடாது

செல்வர்கள், தாங்களாகவே அறங்காவலர்களாகி, சமுதாயத் தைத் தாங்கிக் கொள்வார்கள் என்னும் கற்பனையில் மதிமயங்கி இந்தியா நாற்பது ஆண்டு தன்னாட்சியை வீணாக்கி விட்டது. சட்டபூர்வமாக நில உச்சவரம்பு வந்ததால், பெரிய புள்ளிகள், தந்திரமாகத் தப்பித்துக்கொண்டாலும், எண்ணற் றோரிடமிருந்த நிலக்குவியல்கள் குறைந்தன. செல்வர்கள், அறங்காவலர்கள் ஆகிவிடுவார்கள் என்று நெருப்புக் கோழியின் மனப்போக்கை மேற்கொள்ளாதிருந்தால் என்ன செய்திருப்போம்? பிறவகையான சொத்துக்களை நாட்டுடைமையாக்காவிட்டாலும் அவற்றிற்கும் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்திருப்போம். நடக்க முடியாத அற்புதங்கள் நடக்குமென்று நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டேவந்ததால், 'பெருந்தொழில்களா சிறு தொழில்களா?' என்னும் வெட்டி மன்ற வாதங்களில் இத்தனை ஆண்டுகளைப் பாழாக்கிவிட்டோம்.

ஈரோட்டு மாநாட்டுக்குத் திரும்புவோம்.

'பூசாரிகளுக்குத் தற்காலம் விடப்பட்டிருக்கும் மானியங்களை ரத்து செய்ய வேண்டுமென்பது' அம்மாநாட்டின் மற்றோர் முடிவு ஆகும். இது பூசாரிகள் மேல் உள்ள வயிற்றெரிச்சலால் செய்யப் பட்ட முடிவு அல்ல, பின் எதனால்? வணங்குவோருக்கும் வணங்கப் படுவதற்கும் மத்தியில் தரகரையோ, பூசாரியையோ ஏற்

படுத்துவது சுயமரியாதைக்கு விரோதமென்றும் தெய்வ வணக்கத்திற்குப் பணச்செலவு அனாவசியமென்றும் அம்மாநாடு கருதிற்று. கடவுள் நம்பிக்கையுடையவர்களும் காய்தல் உவத்தல் அற்ற அறிவு நிலையில் நின்று சிந்திப்பார்களானால், தந்தைக்கும் பிள்ளைகளுக்குமிடையில் கூலிக்காரனுக்கு வேலையில்லை என்னும் முடிவுக்கே வருவார்கள்.

நம் இந்தியாவில் தனியுடைமை முறையின் கீழ், தனிப்பட்ட மனிதர்களின் ஒட்டுமொத்த உறிஞ்சலைவிட அதிகப்படியானது நம்முடைய கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் ஆகியவற்றின் கூட்டு உறிஞ்சல் ஆகும். இவற்றால் பாழாகும் பணம் கணக்கில் அடங்கா. இவற்றைக் காப்போராகக் கருதப்படுவோர், விழுங்கும் பணம் கொஞ்சமல்ல. இது உலகறிந்த உண்மை. ஆனாலும் கோயிற் பூனைகளுக்கு, அறங்காவலர்களாகத் திரியும் பல காட்டுப் பூனைகளுக்கு மணி கட்டுவது யார்? தன்மான இயக்கம் இன்றியமையாத அப்பணியை மேற்கொண்டது ஈரோட்டு மாநாட்டிலேயே.

கோயில்கள், மடங்கள் ஆகியவைகளின் வருமானங்களை— படிப்பு, சுகாதாரம் ஆகிய அபிவிருத்திக்காகச் செலவிடுவதுதான் மேலென்றும், புதிதாக மடங்களும், வேத பாடசாலைகளும், அன்ன சத்திரங்களும் கட்டுவது அனாவசியமென்றும் முடிவு செய்யப்பட்டது. இம்முடிவின் முற்பகுதி ஓரளவு செயல்படுவது பகுத்தறிவாளர்களின் தொடர்ந்த தொண்டால். பிந்திய பகுதி செயலுக்கு வரவேயில்லை என்றால் மிகையல்ல. இது, முடிவில் உள்ள குறைபாட்டால் அல்ல; தமிழர்களுக்கே தனியுடைமையாக உள்ள முனைப்பான விதண்டாவாதத்தால்; ஏட்டிக்குப் போட்டிப் போக்கால் என்பவை வெளிப்படை.

ஈரோட்டு மாநாட்டின்போதே அதாவது 1930லேயே தன்மான இயக்கத்தில் சமதர்மக் கோட்பாடு இழையோடிற்று. இதோ ஓர் எடுத்துக்காட்டு. சுயமரியாதை இளைஞர் மாநாட்டின் முடிவுகளில் ஒன்று என்ன சொல்லுகிறது தெரியுமா?

அரசாங்கத்திலுள்ள எந்த உத்தியோகத்திற்கும் மாதம் ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் ஏற்படுத்தாதிருக்கும்படி அரசாங்கத்திற்கும், அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இம் மாநாடு தெரிவித்துக் கொள்ளுகிறது.

எதை எதையோ சொல்லி ஆட்சியைப் பிடித்தவர்கள் ஊதிய உச்சவரம்புக் கொள்கையையாவது, விடுதலை பெற்ற இந்தியாவில் நடைமுறைப்படுத்தியிருந்தால், நம் மக்களில் வறியவர்கள் எண்ணிக்கையும் விழுக்காடும் இப்போது பெருகியிருப்பதுபோல் பெருகியிராது. அகவிலை நஞ்சும் இன்றைய அளவிற்கு ஏறியிராது.

எங்கோ பத்தாயிரம் கிலோமீட்டர் தூரத்திலிருந்து வந்தவர்கள் ஆங்கிலேய அதிகாரிகள். அவர்கள் இவ்வளவு தூரம் கடந்து வந்து, வெய்யிலைத் தாங்கிக்கொண்டு, பதவி வகித்து, கூடிய மட்டில் சுரண்டிக்கொண்டு போகவே, அந்நோக்கத்திற்கேற்ப ஊதியங்களை உயர்வாக வைத்துக்கொண்டார்கள். இதை மன்னிக்காவிட்டாலும் புரிந்துகொள்ளலாம்.

தன்னாட்சி பெற்றதும் சொந்தநாட்டு அலுவலர்களுக்கு மக்கள் வருவாய் நிலைக்கு ஏற்ப ஊதியங்களைக் குறைத்திருக்க வேண்டும். பத்தாயிரம் கிலோமீட்டர் தூரம், அப்போதைக் கப்போது போய் வரவேண்டியவர்களுக்கு ஆகும் செலவு பெரிது. சென்னையிலிருந்து இருநூறு கிலோமீட்டர் தூரத்திற்கும் குறைவாக உள்ள வளவனூருக்குப் போய்வர ஆகக் கூடிய செலவு முந்தியதோடு ஒப்பிட்டால் குண்டுமணி அளவு. தன்மான இயக்கம் முதன் முதல் காட்டிய- அனைத்திந்திய காங்கிரசு மாநாட்டில் பின்னர் முடிவு செய்த, ஊதிய உச்சவரம்புக் கொள்கையைக்கூட நம்முடைய தன்னாட்சி அரசுகள் நடைமுறைப் படுத்தவில்லை. விளைவு? வெள்ளைக்காரன் பீராய்ந்த அளவு நம்மவர்களும் பீராய்ந்து கொண்டு வருகிறார்கள். இல்லை; மெல்ல, மெல்ல இந்தச்சலுகை, அந்த வசதி என்று மொத்த ஊதியப் பெருக்கத்தில் வெற்றி பெற்றபடியே இருக்கிறார்கள். இப்போது நம்முடைய அதிகார வர்க்கம், சுரண்டுவதில் முதலாளி வர்க்கத்தோடு போட்டி போடுகிறது என்னும் கசப்பான உண்மையைச் சுட்டிக் காட்டுவது கடமை.

ஏன் ஊதிய உச்சவரம்பு கொண்டுவர வில்லை? குழப்பம். என்ன குழப்பம்? சமதர்மப் பொருளியல் முறையே எல்லார்க்கும் வேலையும், கல்வியும், வாழ்வும் அளிக்கும் என்னும் உண்மை ஒரு பக்கம் மின்னிற்று. அதே நேரத்தில், ஆயிரம் ஆண்டுகளாக மங்கிய ஒளியில் கிடந்த செல்வர்கள் அறங்காவலர்கள் ஆகியோரது குருதியில் 'ஈவது விலக்கேல்' என்பது கலந்தது. அவர்களாகவே வலிய வந்து வறியரை வாழ்விப்பார்கள்' என்னும் மாயைக்கு இருந்த

அளவிற்கு மீறிய மரியாதை அதன் புது ஒளியிலேயே வளர்ந்துவிட்ட 'மகான்கள்' 'சான்றோர்கள்' ஆகியவர்களைப் பகைத்துக் கொண்டால், தங்கள் நிலை கவிழ்ந்துவிடுமோவென்ற அச்சம். இந்த இரண்டு ஆடுகளில் ஊட்டிய குட்டிகளாக நம் அரசியல் தலைவர்கள் இருந்துவிட்டார்கள்.

ஆகவே, காற்றடித்த பக்கம் பறந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் காலம் நன்றாக ஓடிற்று. ஆனால் பொதுமக்கள் நிலையோ, பாம்புகள் நிறைந்த பாழுங்கிணற்றில் தள்ளப் பட்டவர்கள் நிலைக்கு ஒப்பாக இருக்கிறது.

இன்று ஏறத்தாழ இரண்டு கோடி படித்த இளைஞர்கள், வேலை தேடும் நிலையங்களில் பெயர்களைப் பதிந்துவிட்டு, வழிமேல் விழிவைத்து ஏங்குகிறார்கள். பூசாரி 'சொர்க்கத்திற்கு அனுப்புவதாகக் கூறுவதுபோல், பொதுத் தேர்தலின்போது இந்திய அரசியல் புரோகிதர்கள் 'வேலையில்லாத் திண்டாட் டதைத் தீர்த்துவிடுவதாக உளமாரப் பொய் சொல்லுகிறார்கள். நாம் பின்பற்றும் தனியுடைமைப் பொருளியல் முறையில், வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட்ட நாடே இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்; தெரிந்தும் எதையோ சொல்லி வைக்கிறார்கள். எவரும் இதற்குப் பரிகாரம் காண வில்லை ஏன்? இன்றையப் பொருளியல் முறை தலைகீழாக மாற்றப்பட்டாலொழிய, வேலை வாய்ப்புகள் போதிய அளவு பெருகா.

இதை அறுபது ஆண்டுகளுக்கு முன்பே தந்தை பெரியார் உணர்ந்தார்; ஊரறிய, உலகறிய உரைத்தார். நாம் கூடி நின்று ஆதரித்தோம். போராட வேண்டிய அளவுக்குப் போராடி னோமா? கேள்விக்குறி.

# 7. சமதர்மத்தை நோக்கியே சுயமரியாதை இயக்கம்

மாம்பிஞ்சு முற்றிய காயாகிறது; முற்றிய காய் செங்காயாகிறது; செங்காய் கனியாக மாறுகிறது.

அரசியல் விடுதலை இயக்கத்தின் வாயிலாக, ஈ. வெ. ராமசாமி பொதுத் தொண்டிற்கு வந்தார். முழுநேரத் தொண்டாகத் தியாகஞ் செறிந்த தொண்டாக அது வளர்ந்தது. அதற்காக வாணிகத்தை மூடிவிட்டார். ஆண்டுக்கு இருபதாயிரம் ரூபாய் வருமானத்தைக் கொடுத்த தொழிலை விட்டுவிட்டார்.

பம்பரம்போல் மூலைமுடுக்கெல்லாம் சுற்றிச் சுற்றி விடுதலை உணர்வைச் சுரக்க வைத்தார். காந்தியடிகளின் கட்டளையைக் கடைப்பிடித்தார். வழக்குமன்றங்களுக்குப் போகக்கூடாது என்ற காந்தியத் திட்டத்தைப் பின்பற்றியதால் அய்ம்பதாயிரம் ரூபாய்களை இழந்தார்.

அமைப்பினை வளர்ப்பதிலும், போராட்டங்களை நடத்துவதிலும் வெற்றிவாகை சூடிவந்த ஈ.வெ. ராமசாமி தியாகங்களை அடுக்கிக்கொண்டிருந்த தலைவர் புகழ் ஒளியில் மயங்கிவிடவில்லை அடுத்துச் செய்ய வேண்டியனவற்றைப் பற்றிச் சிந்தித்தவாறே இருந்தார்.

இந்திய தேசிய காங்கிரசின் பார்வை அரசியல் விடுதலைக்கு அப்பால் விரியவில்லை. சமுதாய மாற்றம் பற்றி அதற்குப் போதிய அளவு முற்போக்குக் கண்ணோட்டம் இல்லை என்பது ஈ. வெ.ராமசாமிக்குப் புலனாயிற்று.

சாதிகளாகப் பிரிந்து கிடக்கும் சமுதாயத்தில் ‘வகுப்புவாரி உரிமை’ அடிப்படை நீதி என்று தமிழ்நாட்டுக் காங்கிரசாரின் மனதில் பதியவைக்க முயன்றார். அது செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று.

பசுங்காயாக முற்றிவந்த ஈ. வெ. ராமசாமி செங்காயாக மாறினார் எனலாம். காங்கிரசு இயக்கத்தைவிட்டு வெளியேறி

னார். தன்மான இயக்கத்தைக் கண்டார். மக்கள் சமத்துவத்திற்குப் போராடினார். மக்களிடையே ஏற்றத்தாழ்வு உணர்ச்சியினைப் பயிரிட்டு வந்த கடவுள் நம்பிக்கைமுதல் சாத்திரங்கள், இலக்கியங்கள், நடைமுறைகள் ஈறாக அத்தனையையும் சாடிச் சாடி மக்களைத் தட்டி எழுப்பினார்; வகுப்புரிமைக்கும் தொடர்ந்து வாதாடினார்.

விழிப்புற்ற, மான உணர்வு பெற்ற மக்கள் முதலில் 1929இல் செங்கற்பட்டில் மாகாண மாநாட்டில் கூடினார்கள். அடுத்த ஆண்டு ஈரோட்டு மாகாண மாநாட்டில் கூடினார்கள்.

இதற்கிடையில் ஈ. வெ. ரா. வின் சிந்தனை மேலும் மேலும் விரிந்து கொண்டே இருந்தது. வகுப்புரிமை என்பதும் இடைக்கால நிவாரணமே; அது தேவையானதாயினும் நீண்ட காலச் சமூக நலனுக்குப் போதாது என்பது அவருக்குத் தெளிவாயிற்று. பின் எது தேவை? இக்கேள்விக்கும் பதிலைக் கண்டுபிடித்து விட்டார் புரட்சிச் சிந்தனையாளராகிய ஈ. வெ. ராமசாமி. அதை ஈரோட்டு மாநாட்டின் முடிவில் நன்றியுரை கூறியபோது ஈ.வெ.ரா வெளிப்படுத்தினார்.

1916இல் நீதிக்கட்சி தொடங்கிய போது பொதுஉடைமைக் கொள்கையின் சமதர்மக் கோட்பாடும் கருத்து மண்டலத்தோடு நின்றிருந்தது.

1917 அக்டோபரில் உலகைக் குலுக்கிய புரட்சி நடந்தது. அதன் விளைவாக உலகத்தின் முதல் சமதர்ம பாட்டாளி ஆட்சி உருவாயிற்று. சில நாட்களில் தொடங்கிய எதிர்ப் புரட்சியும் பின்னர் மூண்ட பதினான்கு வல்லரசுகளின் தாக்குதல்களும் புதிய ஆட்சியை அலைக் கழித்தது. அவை தோற்று, அமைதி நிலவி, சோவியத் ஒன்றியம் உருவாக சில காலமாயிற்று.

எனவே, தமிழ்நாட்டு முற்போக்காளர்கள் 'இந்நாட்டு நோய்க்கு உள்நாட்டு மருந்தாகிய வகுப்புரிமை ஒன்றிலேயே நாட்டமாயிருந்தார்கள். செங்காய் நிலையாகிய அதையும் தாண்டி சமதர்ம வழியில் சிந்தனையைச் செலுத்திய முன்னோடிகளில் ஒருவர் ஈ. வெ. ராமசாமி ஆவார்.

சிலரே படித்தவர்களாக, அரசு ஊழியத்தை நாடுபவர்களாக நிலைமை இருக்கும் வரை, வகுப்புரிமைக் கொள்கையின் நடைமுறையே போதும். அது முழு வளர்ச்சியல்லவே! அது சமத்துவ நிலையாகாதே!

கடைக்கோடியில் இருப்பவரும் எல்லாம் பெறும் நிலையல்லவா முதிர்ந்த சமத்துவ நிலை? அந்நிலையொன்றே எல்லோரையும் வாழவைக்கும் என்பதை 1930இன் தொடக்கத்திலேயே ஈ. வெ. ராமசாமி உணர்ந்தார்; உலகறிய உரைத்தார்.

ஈரோட்டு மாநாட்டு நன்றியுரையில் புரட்சியாளர் ஈ. வெ. ராமசாமி கூறியதைப் பார்ப்போம்:

'இந்த (தன்மான) இயக்கமானது இன்றைய தினம் பார்ப்பனரையும், மதத்தையும், சாமியையும், பண்டிதர்களையும் கண்டித்துக் கொண்டு, மூடப்பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டிக் கொண்டு, மூட மக்களைப் பரிகாசம் செய்துகொண் டிருப்பது போலவே, என்றைக்கும் இருக்குமென்றோ அல்லது இவைகள் ஒழிந்தவுடன் இயக்கத்திற்கு வேலையில்லாமல் போய் விடுமென்றோ யாரும் கருதிவிடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'மேற்சொன்னவைகளின் ஆதிக்கங்கள் ஒழிவதோடு, ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுவது என்கிற தன்மை இருக்கிறவரையிலும், ஒருவன் தினம் ஒரு வேளைக் கஞ்சிக்கு மார்க்கமில்லாமல் பட்டினி கிடந்து சாவதும் மற்றொருவன் தினம் அய்ந்து வேளை சாப்பிட்டுவிட்டுச் சாயுமான நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வயிற்றைத் தடவிக் கொண்டிருக்கிறதுமான தன்மை இருக்கிறவரையிலும், ஒருவன் இடுப்புக்கு வேட்டி யில்லாமல் திண்டாடுவதும் மற்றொருவன் மூன்று வேட்டி போட்டுக் கொண்டு உல்லாசமாகத் திரிவதுமான தன்மை இருக்கிற வரையிலும், பணக்காரர்கள் எல்லாம் தங்கள் செல்வம் முழுவதை யும்தங்களது சுக வாழ்வுக்கே ஏற்பட்டது என்று கருதிக் கொண் டிருக்கிற தன்மை இருக்கிறவரையிலும் சுயமரியாதை இயக்கம் இருந்தேதான் தீரும்' என்று அறிவித்தார். இந்த அறிவிப்பின் வழி யாக சுயமரியாதை இயக்கம் சென்றடைய வேண்டிய கோட்டையும் அன்றைக்கே சுட்டிக் காட்டினார்,

ஈ. வெ. ராமசாமி தன்னேரிலாத சிந்தனையாளர், பேச்சாளர் எழுத்தாளர் ஆவார். மேடையேறியதும் மின்னும் கருத்தைச் சொல்லிவிட்டுப் பாராட்டுக்குக் காத்திருப்பவர் அல்லர் அவர். சொல்லுகிற கருத்தின் ஆழத்தையும் பரப்பையும் உணர்ந்தே சொல்லுவார். சமதர்ம இயக்கம் பற்றி ஈ. வெ. ராமசாமி கொண்டிருந்த கருத்து ஆழமானது.

இதோ அவரது சொற்களிலேயே படிப்போம்:

'சமதர்ம இயக்கம், உலக மக்கள் எல்லோரையும் பொருத்த இயக்கம்; சாதி, மதம், வருணம், தேசம் என்கிற கற்பனை நிலைகளை எல்லாம் தாண்டிய இயக்கம். பிராமணன், சத்திரியன், சூத்திரன், அரிசனன் என்கிற வருணங்களை ஒழித்து, எல்லோரும் எப்பொழுதும் மனிதரே என்று கூவும் இயக்கம்,

'ஏழை என்றும் பணக்காரன் என்றும் முதலாளி என்றும் தொழிலாளி என்றும் எசமான் என்றும் கூலி என்றும் ஜமீந்தார் என்றும் குடியானவன் என்றும் உள்ள சகல வகுப்புகளையும் வேறு பாடுகளையும் நிர்மூலமாக்கித் தரைமட்டமாக்கும் இயக்கம், என்று ஈ. வெ. ராமசாமி விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது:

'மற்றும் குரு என்றும் சிஷ்யன் என்றும் பாதிரி என்றும் முல்லா என்றும், முன்ஜென்மம், பின்ஜென்மம், கர்மபலன் என்றும் அடிமையையும் எஜமானனையும் மேல்சாதிக்காரனையும் முதலாளியையும் தொழிலாளியையும் ஏழையையும் பணக்காரனையும் மகாத்மாவையும் சாதாரண ஆத்மாவையும் அவனுடைய முன்ஜென்ம கர்மத்தின்படி அல்லது ஈசுவரன் தன் கடாட்சப்படி உண்டாக்கினான் என்று சொல்லப்படும் அயோக்கியத்தனமான சுயநலங்கொண்ட சோம்பேறிகளின் கற்பனைகளையெல்லாம் வெட்டித் தகர்த்துச் சாம்பலாக்கி, எல்லோர்க்கும் எல்லாம் சமம், எல்லாம் பொது என்ற நிலைமையை உண்டாக்கும் இயக்கம்.

'சாதி, சமய, தேசச் சண்டையற்று, உலக மக்கள் யாவரும் தோழர்கள் என்று சாந்தியும் ஒற்றுமையும் அளிக்கும் இயக்கம்; இன்று உலகமெங்கும் தோன்றித் தாண்டவமாடும் இயக்கம்' என்று தமிழ்நாட்டின் பொதுமக்களுக்குத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினார்.

தன்மான இயக்கத் தந்தை ஈ. வெ. ரா. காட்டிய புது வழியில் பெரு வழியில் இயக்கம் வீறுநடை போடத் தொடங்கியது.

இயக்க மேடைகளிலும் எழுத்துகளிலும் சாதியொழிப்பு, சாதிகளுக்கு ஆணிவேரான கடவுள் மறுப்பு, சமய மறுப்பு இடம் பெற்றது போன்றே ஏழைப் பணக்காரத் தன்மை ஒழிப்பும் இடம் பெற்றது. பெரியாரே சமதர்மப் பிரச்சாரத்தைச் சேர்த்துக் கொண்டார்.

கடவுள் மறுப்பு இல்லாமல், செல்வ ஏற்றத் தாழ்வு எதிர்ப்பை நியாயப்படுத்த முடியாது.

எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல, எல்லாரையும் படைத்த ஒருவன் என்கிற கற்பனையை ஏற்றுக்கொண்டால், அவன்தான் ஆயிரம்பேர்களைக் கோடீசுவரர்களாகப் படைத்தான்; அறுபது கோடி மக்களை ஏழைகளாகப் படைத்தான் என்று புரோகிதர் புளுகுவதையும் ஏற்றுக்கொண்டுதானே ஆகவேண்டும்.

அப்படியானால் அடுத்து கையிலுள்ள நாலு காசையும் அர்ச்சகருக்கு அழுதுவிட்டு, அடுத்த பிறவியில் இலட்சுமி கடாட்சம் பெறலாம் என்று நம்பிக்கிடக்க வேண்டியதுதானே! 'தலைவிதி முன்னை வினைப்பயன்' என்பது மனநோய். அதன் வெளிப்பாடு ஏழ்மையை ஏற்றல்; உயர்சாதித் தன்மைக்கு உடன்படல்.

பிறவியால் ஏற்படுவதாகச் சொல்லப்படும் சாதி உயர்வு தாழ்வு, சட்டத்தால் வளர்த்துக் காப்பாற்றப்படும் பணக்கரார் ஏழைத்தன்மையும் நச்சுமரங்களுக்கு ஒப்பானவை. அவற்றின் ஆணி வேர்களாவன: சமயநம்பிக்கை, முன்வினைப் பயன், தலை விதி என்பவை. அவை உயிர்த்துடிப்போடும் வீறோடும் இருக்கும் வரை சாதி ஏற்றத்தாழ்விலிருந்து விடுபட்டுக் கரையேறுவது இயலாது; எல்லார்க்கும் எல்லாம் கிடைப்பதான நல்ல சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முடியாது.

அந்நம்பிக்கையை அடியோடு புரட்டித் தள்ளிவிட்டால், அவற்றின் கிளைகளும் கொப்புகளும் எளிதில் ஒடிந்து சாம்பலாகிவிடும்.

எனவே, சுயமரியாதை இயக்கம் மேலெழுந்தவாரியாகப் பேசி விட்டும் எழுதிவிட்டும் காலந்தள்ளவில்லை. நுனிப்புல் பேச்சுக் களாலும் எழுத்துக்களாலும் கிடைக்கும் செல்வாக்கில் திளைத்துக் கிடக்கவில்லை. ஈராயிரம் ஆண்டுகளாக ஆழப் பதிந்துள்ள சமய நம்பிக்கைகள் கோதானம், கன்னிகாதானம் முதலிய மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைச் சாடும் பணியும் தேவையான அடிப் படைப் பணியாயிற்று.

நம் சிந்தனையில் இணைந்துவிட்ட மூட நம்பிக்கைகளை நீக்கித் துப்புரவாக்குவதைக் காட்டிலும் இளமைப் பருவத்தில் அவை சேராதபடி தடுத்தல் பெரும் பயன் விளைக்கும். இதை உணர்ந்த சுயமரியாதைக்காரர்கள் 1930 மே திங்கள் ஈரோட்டில்

கூடிய இளைஞர் மாநாட்டில் இதுபற்றி ஓர் முடிவுக்கு வந்தார்கள். பதின்மூன்றாம் எண்ணுடைய அம்முடிவு என்ன சொல்லுகிறது? அது இதோ :

(அ) பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மத விஷயங்களைப் போதிக்காதிருக்கும்படியும், மூடப் பழக்க வழக்கங்களைப் போதிக்கும் புத்தகங்களைப் பாடமாக வைக்காதிருக்கும்படியும் பள்ளிக்கூட அதிகாரிகளையும்,

(ஆ) மத விஷயங்களைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு உதவி செய்யாதிருக்கும்படி அரசாங்கத்தையும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

ஈரோட்டு மாநாட்டின் முடிவில், நன்றியுரையில் ஈ. வெ. ராமசாமி, தன்மான இயக்கத்தின் எதிர்காலப் பணியைத் தெளிவாகவே காட்டிவிட்டார். அதுமுதல், இயக்கக் கொள்கை பரப்புப் பணியில் சமதர்மக் கோட்பாடு இடம் பெற்று வளர்ந்து வந்தது.

இயக்கத் தலைவருடைய—அதன் முன்னணித் தொண்டர் களுடைய கருத்தாக முழங்கின சமதர்மம், இயக்கத்தின் கொள்கை யாகவே விரைவில் உருப்பெற்றது. அது எப்போது? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தொன்றில். அவ்வாண்டு விருதுநகரில் மூன்றாவது மாகாண சுயமரியாதை மாநாடு நடந்தது. பொது மாநாட்டிற்கு திரு. ஆர். கே. சண்முகம் தலைமை தாங்கினார்.

பொது மாநாட்டில் நிறைவேறிய முதல் முடிவை இப்போது கவனிப்போம் :

'மனிதத் தன்மையைத் தடைப்படுத்துவதற்கு மதங்களின் பேரால் ஏற்பட்டுள்ள பழக்க வழக்கங்களே காரணமாயிருப்பதால், அப்படிப்பட்ட எல்லா மதங்களும் மறைந்து போக வேண்டு மென்றும், மதங்கள் ஒழியும்வரை மனிதர்களுக்குள் சகோதரத்துவம் வளராதென்றும் இம்மாநாடு அபிப்பிராயப்படுகிறது.'

# 8. பகத்சிங்கும் பெரியாரும்

1930 ஆம் ஆண்டு மே திங்கள் ஈரோட்டில் நடந்த இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் ஈ.வெ.ரா. இயக்கத்தின் இலட்சியம் சமதர்மம் என்பதைச் சுட்டிக் காட்டினார். பெரியாரின் கருத்து இயக்கக் கருத்தாக ஒலித்தது. ஓராண்டுக் காலம் அப்படி ஒலித்துப் பரவிய பிறகு அது இயக்கத்தின் கொள்கையாக விருதுநகரில் நடந்த வாலிபர் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இதற்கிடையில் வரலாற்று அதிர்ச்சியுடைய நிகழ்ச்சியொன்று நடந்தது. பகத்சிங், இராஜகுரு, சுகதேவ் ஆகிய மூவர் லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார்கள்.

இம்மூவர் பேரில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு என்ன? சதிக்குற்றம். என்ன சதி? ஆங்கில ஆட்சியை ஒழிக்கச் சதி செய்தார்களாம்.

அதன் புற வெளிப்பாடு என்ன

லாகூரில் துணை சூப்பிரெண்டாக இருந்த சாண்டர்ஸ் என்ற ஆங்கிலேயர்மேல் வெடிகுண்டு வீசிக் கொன்றார்கள்.

'இக்கொலைக்கு மூவரும் உடந்தை; இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலை'—இப்படிக் குற்றஞ்சாட்டி வழக்கு தொடரப்பட்டது. வழக்குமன்றத்தின் முடிவு என்ன? குற்றங்கள் மெய்ப்பிக்கப்பட்டனவென்று முடிவு செய்தார்கள். எனவே தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. அது நிறைவேற்றப் பட்டது. இளம் உயிர்கள் மூன்று பலியாயின.

எதற்கு? இந்திய விடுதலைக்கு, அரசியல் விடுதலைக்கு மட்டுமா? இல்லை; பொருளாதார விடுதலைக்கும்; அறிவின் விடுதலைக்கும்.

பகத்சிங், நாட்டுப்பற்றுக்கு ஆழமான பொருள் கொண்டிருந்தவர். அவர் பக்தர் அல்லர்; அவருக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. எனவே, பாரதத்தை வழிபடும் 'பூமாதேவி'யாகக் கருதவில்லை. பின் எப்படிக் கருதினார்?

விடுதலை பெறவேண்டிய நிலப்பரப்பு; அவ்விடுதலையைப் பயன்படுத்தி அத்தனை மக்களுக்கும் நல்வாழ்வு, முழுவாழ்வு கொடுக்க வேண்டிய நாடு. அதற்கான இயற்கை வளங்களைப் பெற்றுள்ள இந்தியா, மக்கள் சிந்தனை வளத்தையும் பெற வேண்டும்; பழைய அறிவுக் கட்டுகளிலிருந்து விடுபட வேண்டும்; தனியுடைமைப் பற்றிலிருந்து விடுபட வேண்டும்.

சுருங்கச் சொன்னால், சமதர்மத் தத்துவம் பகத்சிங்கின் இலட்சியம். பொது உடைமை அவர் ஏற்றுக்கொண்ட நடைமுறை.

விலை மதிப்பிட முடியாத பகத்சிங்கின் தியாகம் இந்தியப் பொது வாழ்க்கையிலிருந்து, தெளிவுள்ள முற்போக்குவாதியை, உறுதியான உண்மையான தொண்டனை இளமையிலேயே தட்டிப் பறித்துவிட்டது. சமதர்ம இயக்கத்திற்கும் பகுத்தறிவு இயக்கத்திற்கும், அது பேரிழப்பாகும்.

அப்பேரிழப்பு, எண்ணற்றவர்களின் உள்ளங்களை உலுக்கிற்று. புரட்சியாளர் பெரியார், நாத்திகவாதி பெரியார், இவ்விரு கொள்கைகளுக்காகவும் உயிர்விட்ட இளம் பெரியார் பகத்சிங்கை இனம் கண்டு, துணிவோடு உலகறியப் பாராட்டினார்.

தந்தை பெரியாரின் புரட்சி இதழாக விளங்கிய 'குடியரசில்' 29-3-1931 வெளியீட்டில் அவர் எழுதிய தலையங்கத்தைப் பார்ப்போம்.

'இந்தியாவுக்குப் பகத்சிங் கொள்கைதான் உண்மையாக வேண்டியது என்பதுநமது பலமான அபிப்பிராயம் ஆகும். இப்படித் திட்டவட்டமாக அறிவிக்கிறது அத்தலையங்கம். அப்புறம்?

'அவர் (பகத்சிங்) தனது கொள்கையை நிறைவேற்றக் கைக்கொண்ட முறைகளில் சிறிது தவறு நேர்ந்துவிட்டது என்பதாக நம் புத்திக்குத் தோன்றிய போதிலும் அவருடைய கொள்கை குற்றமுடையது என்று சொல்ல நாம் ஒருக்காலும் துணியவே மாட்டோம். அதுவேதான் உலகத்தின் சாந்த நிலைக் கொள்கையும் ஆகும். நாம் அவரை (பகத்சிங்கை) உண்மையான மனிதர் என்று சொல்லுவோம்' என்று ஒப்புதல் முத்திரையைப் பதிப்பித்தார்.

மிகச் சிக்கலான கோட்பாடுகளை, எவர்க்கும் எளிதில் புரியும் வண்ணம் எடுத்துக்காட்டுவதில் ஈ. வெ. ராமசாமிக்கு இணை அவரே தான். பகத்சிங் ஏற்றுக்கொண்ட பொது உடைமைக் கொள்கையை ஏன் ஆதரிக்க வேண்டும்? பெரியாரின் சொற்களாலேயே தெளிவு பெறுவோம். பெரியார் கூற்று இதோ:

'நாம் தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொல்லுவதில் என்ன தத்துவம் அடங்கியிருக்கிறதோ அதுதான் மக்களின் ஏழ்மைத் தன்மையை ஒழிக்க வேண்டுமென்பதிலும் அடங்கி இருக்கின்றது.

தீண்டாமை ஒழிவதாயிருந்தால் எப்படி மேல்சாதி கீழ்ச்சாதி தத்துவம் ஒழிந்துதான் ஆக வேண்டுமென்கிறோமோ அது போலவேதான் ஏழ்மைத்தன்மை ஒழிவதாயிருந்தால் முதலாளித் தன்மை, கூலிக்காரத்தன்மை ஒழிந்துதான் ஆகவேண்டும் என்கிறோம். இந்தத் தன்மைகள் மறைபடுவதுதான் சமதர்மத் தன்மை, பொதுஉடைமைத் தன்மை என்பவைகளே ஒழிய வேறில்லை,

சமதர்மப்—பொதுஉடைமை பற்றி நம் சூழ்நிலைக்கேற்ப விளக்கம் தந்த பெரியார், பகத்சிங்கின் உயிர்த்தியாகத்தை எப்படிப் பாராட்டினார் என்று பார்ப்போம்.

'பகத்சிங் இந்திய மக்களுக்கு, ஏன் உலக மக்களுக்கே உண்மையான சமத்துவமும், சாந்தியும் அளிக்கத் தக்க பாதையைக் காட்டுவதற்குப் பயன்படத் தக்கதாக தனது உயிரை விடநேர்ந்தது.

'சாதாரணத்தில் வேறு எவரும் அடைய முடியாத பெரும் பேறு என்று சொல்லி, பகத்சிங்கை மனமார, வாயார, கையாரப் பாராட்டுகின்றோம்! பாராட்டுகின்றோம்! பாராட்டுகின்றோம்!' என்று குடியரசுத் தலையங்கத்தில் எழுதினார்.

சோவியத் நாட்டில் சுற்றுப்பயணஞ் செய்துவிட்டு வரும் முன்பே பெரியார் சமதர்மக் கொள்கையில் எவ்வளவு தெளிவும் உறுதியும் கொண்டிருந்தார் என்பதை இத்தலையங்கம் எடுத்துக் காட்டுகிறது.

அதுமட்டுமா? பகத்சிங்கின் நடைமுறை 'வன்முறை' என்று சாக்குச் சொல்லி, பலர் நழுவப் பார்த்த வேளையில்,

ஈ. வெ. ராமசாமி தமக்கே உரிய தனித்துணிவோடு பகத்சிங்கைப் போற்றினார். அத்துணிவு வெளிப்படை. மற்றோர் நுட்பத்தையும் இத்தலையங்கம் வெளிப்படுத்துகிறது. அது என்ன?

கொள்கைக்கே முதலிடம் என்பதாகும். அது சீரியதாக, உயர்ந்ததாக, தேவையானதாக இருந்துவிட்டால் அதற்காக உண்மையாகப் பாடுபடுவோர் கைக்கொண்ட நடைமுறை, குறையென்று தென்பட்டாலும் அதைச் சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிடாது, கொள்கைக்காகச்செய்த தியாகத்தைப் பாராட்டும் பெரியாரின் நல்ல இயல்பும் அத்தலையங்கத்தால் விளங்குகிறது.

பகத்சிங், பெரியாரின் கொள்கைக்காரர் அல்லர்; இயக்கத்தைச் சேர்ந்தவரும் அல்லர். இருப்பினும் அவருடைய தியாகத்தை உரிய தாராளத்தோடு போற்றினார். இப்போக்கு பெரியாரோடு உடன்பிறந்தது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பாடத்தினைப் பெரியாரிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். கொள்கை உடன்பாடு உடையோர் நடைமுறை பற்றிக் கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும் உரியபோது, உரிய பொது இயக்கங்களுக்கு அத்தகையோரின் துணையையும் சேர்த்துக் கொண்டு வெற்றிவாகை சூடும் திறத்தைப் பெரியாரிடமிருந்து கற்றுக் கொள்ளுதல் நல்லது.

இப்போது சமதர்மக் கொள்கையின் பரப்புதலைக் கவனிப்போம்.

பெரியாரின் சுயமரியாதை இயக்கம் சாதியொழிப்பில் தொடங்கி சமய, கடவுள் நம்பிக்கைகளை, பழக்க வழக்கங்களைச் சுட்டுப் பொசுக்கும் காட்டுத் தீயாகப் பரவிற்று. ‘சூத்திரனென்றால் ஆத்திரங் கொண்டடி’ என்னும் முழக்கம் பல இடங்களில் கேட்டது.

சமுதாயத்தின் மேல்மட்டத்திலும் செல்வக்குவியலின் கொடுமுடியிலும் இருந்தோர் அச்சங் கொண்டனர். தங்கள் மேலான நிலைக்குக் கேடு வருமென்று அவர்கள் அஞ்சினார்கள். இது இயற்கை. அச்சம் உந்த, புராணீகர்களையும் முதிராத நாட்டுப் பற்றாளர்களையும் பிடித்து, தன்மான இயக்கத்தின்மேல் ஏவி விட்டார்கள்.

‘அபசாரம்! அபசாரம்! என்று தூற்றுவதாலும் ‘ஆபத்து! ஆன்மீகத்திற்கு ஆபத்து! மறுமைக்கு ஆபத்து! சீலத்துக்கு

ஆபத்து!' என்று கதறுவதாலும் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரவாதபடி அணைத்துவிடலாமென்று மனப்பால் குடித்தார்கள். அது பலிக்காது போனபோது சாபமிட்டுப் பார்த்தார்கள்.

அதை எவரும் பொருட்படுத்தாததைக் கண்டு, 'தேசபக்தி'ப் போர்வையில் பதுங்கினார்கள். பிஞ்சு தேசபக்தர்களைக் கொண்டு மேடைதோறும் தன்மான இயக்கத்தவர்களை, 'தேசத்துரோகி'கள் என்றும் வகுப்புவாதிகள் என்றும் ஓயாது பழித்தார்கள்; புதுப்புது அவதூறுகளைப் பொய்களைப் புனைந்து பரப்பி அலுத்தார்கள். திட்டமிட்டு முடுக்கிவிடப்பட்ட பழியையும் தூற்றலையும் தாங்கிக் கொண்டு தன்மான இயக்கம் உயிரோடு இருந்தது; இருக்கிறது. அவ்வுயிர்ச் சக்தியின் இரகசியம் என்ன?

மூவாயிரம் ஆண்டுகளாகப் பாடுபடும் மக்கள் தாழ்த்தப்படும் தன்மையையும் ஏழ்மைப் படுத்தப்படும் தன்மையையும் விரட்டும் விடிவெள்ளி தேவைப்பட்டது. அவ் விடிவெள்ளியாகத் தன்மான இயக்கம் முளைத்தது.

அது குறைப்பிரசவம் அல்ல; முதிர்ந்து பிறந்த இயக்கம்; கோடிகோடி மக்களை நிமிர வைத்த இயக்கம்; மானமூட்டிய இயக்கம்; எதிர்காலம் பற்றிய நம்பிக்கையூட்டிய இயக்கம். தாழ்த்தப்படுதல், வறுமையில் தள்ளப்படுதல் ஆகிய இரு கொடுமைகளையும் தகர்த்தெறியப் புறப்பட்ட இயக்கமாகத் தன்மான இயக்கம் செயல்பட்டு வருகிறது.

# 9. கம்யூனிஸ்ட் அறிக்கையும் சோவியத் புரட்சியும்

இடம் எண்ணங்களை விளைவிக்கிறது. காலக் கருவில் கருத்துகள் பிறக்கின்றன. நிலைமைகள் நினைப்புகளை மலரச் செய்கின்றன.

உலகில் எங்கும் இல்லாத, ஒட்டுவார் ஒட்டியாக, மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் தீண்டாமை போன்ற சாதிக் கொடுமை தந்தை பெரியாரின் சிந்தனையைக் கிளறிற்று; தன்மான இயக்கத்தைத் தொடங்க வைத்தது. ஏச்சுக்கும் பேச்சுக் கும் இடையே போராடி இதை வளர்க்க வைத்தது. ஏராள மானோரின் சிந்தனை விடுதலையும் கொள்கைப் பிடிப்பும் குறிக் கோளுக்காக இடர்ப்படும் துணிவும் தன்மான இயக்கத்தைப் பசுமையாகக் காத்துவருகின்றன.

நடக்கத் தெரிந்த குழந்தை முதலில் வீட்டுக்குள் நடக்கும்; பின்னர் தெருவில் காலெடுத்து வைக்கும். உரிமையைக் கட்டுப் படுத்தாவிட்டால் அக்கம்பக்கத்தையும் சுற்றி வரும். இது சிந்தனைப் பழக்கத்திற்கும் பொருந்தும்.

சிந்திக்கத் தொடங்கியபோதே, மாந்தர் இனம் பிறந்தது. மனிதக்குரங்கிலிருந்து பிறந்தது; சிந்திக்கும் அளவிற்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. மனிதக்குரங்கின் விலங்குத் தன்மையிலிருந்து சிறுகச்சிறுக விடுபட்டு முழு மனித நிலை நோக்கி நகர்கிறது. பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதும் மாமனித நிலைக்குப் போக வேண்டும்.

இந்தியச் சூழலில் வளரத் தொடங்கிய தமிழ் இனம் நெடுங் காலம், 'தொன்மையானவை; புனிதமானவை' என்னும் மரபு களால் செய்யப்பட்ட சாத்திரத் தொட்டில்களில் படுத்துக் கிடந்தது. அந்நிலைக்கு மேலே வளரத் தொடங்கியபோது சிந்திக்கத் துணிந்தோம்; சாத்திரங்களுக்குள் சிக்காமல் சிந்திக்கத் துணிந்தோம். எதிர்கால நாகரிகத்தின் 'தலை' தென்பட்டது.

சிறிது நேரம் நம் கடைக்கண் பார்வையை மக்கள் வரலாற்றின் மேல் செலுத்துவோம்.

கண்டதைத் தின்று உயிர்வாழ்ந்த நிலை முதல்நிலை; அவல நிலை. மாந்தர் மூளை வேளை செய்யத் தொடங்கியது. மரத்திலிருந்து பழம் வீழ்ந்த இடத்தில் செடி முளைப்பதைக் கண்டார்கள்; வியந்தார்கள்; பயந்தவர்களும் உண்டு. இருப்பினும் சிலருடைய சிந்தனை தொடர்ந்து வளர்ந்தது; சோதனையாக வளர்ந்தது. விதையைப் போட்டு முளைத்த செடியை வளர்த்துப் பயிராக்கும் பரிசோதனையாகத் தொடர்ந்தது. இயற்கையைப் பயன்படுத்தக் கற்றார்கள். தங்கள் தேவைகளுக்கேற்ப நிலத்தைப் பண்படுத்தும் நுட்பத்தைத் தெரிந்து கொண்டார்கள்.

பயிரிடும் கலையை மானுடம் கற்றது.

தொடக்கத்தில், பயிர் ஒரு பருவத்தில் விளையும்; மூன்று பருவங்கள் சாவியாகும். 'இறைவன் இட்டது இவ்வளவே' என்னும் அறியாமைப் பாறை அழுத்திக்கொண்டிருந்த வரையில் பயிர்த்தொழில் சூதாட்டமாகவே இருந்தது; 'பட்டா பாக்கிய மாகவே' தொடர்ந்தது. பயிர்த்தொழிலையும் கால்நடை வளர்ப்புத் தொழிலையும் நம்பியிருந்தபோது நிலஉடைமைச் சமுதாயம் உருவாயிற்று. இது பல நூறு ஆண்டுகள் நீடித்தது.

மானுடம் பயிர்த் தொழிலோடு நிற்கவில்லை. கைவினைகளில் ஈடுபட்டது. ஒலைகளை முடைந்து தட்டிகள் செய்யக் கற்றது. அவற்றை முட்டவைத்துக் குடிசையாக்கிற்று.

கைவினைகள் தொழில்களாயின. பின்னர் சிக்கலான தொழில்கள் ஆயின. பழமையிலிருந்து விடுபட விடுபட புதுமையைக் காண முடிந்தது. அத்தகைய கண்டுபிடிப்புகளில் ஒன்று நீராவி இயந்திரம். புரட்சிகரமான அக்கண்டுபிடிப்பு பெருந்தொழில்களை வளர்த்தன. அதனால் பெரிய நூற்பாலைகள், நெசவாலைகள் எழும்பின. இயந்திரங்கள் செய்யும் தொழிற்கூடங்கள் தோன்றின. சிறுசிறு பட்டறைகளில் தறிகளில் பொருள்கள் உருவாக்கப்பட்டது மாறி, பெரும் ஆலைகளில் மலைமலையாகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

அம்மாற்றத்திற்குப் பெயர் தொழிற்புரட்சி.

தொழிற்புரட்சி பெருஞ் சந்தைகளைத் தேட வைத்தது. உள்நாட்டுச் சந்தைகள் போதாத நிலை ஏற்பட்டது. பிறநாட்டுச்

சந்தைகளைத் தேடிச் செல்ல நேர்ந்தது. தரை வழியாகவும் கடல் வழியாகவும் போக்கு வரவுகள் பெருகின. தொழிற்புரட்சியில் முன்னணியில் இருந்த நாடுகளுக்கிடையில் சந்தைப் போட்டி வலுத்தது. அது நாடு பிடிக்கும் போட்டியாக ஊதிற்று. விளைவு? பிற நாடுகளைப் பிடித்தாளும் ஏகாதிபத்தியங்கள் உருவாயின.

பெருந்தொழில்கள் புதிய சமுதாயப் பிரிவுகளை உருவாக்கின உடலுழைப்பை மட்டும் சொத்தாகக் கொண்ட கூட்டம் தொழிலாளிகளாயினர். காசு பணம் முதலீடு செய்யக்கூடியவர்கள் முதலாளிகள் ஆயினர். இரு பிரிவினுடைய நோக்கங்களும் வேறானவை; ஒன்றுக்கு ஒன்று முரணானவை.

முதலாளிகள் நோக்கம் என்ன? இலாபம்; இன்னும் பெரிய இலாபம்; வளர்ந்துகொண்டே இருக்கும் இலாபம். இலாபம் எப்படிக் கிடைக்கும்? மேலும் மேலும் அதிகமாகும் இலாபத்தைப் பெறுவது எப்படி?

உற்பத்திப் பொருட்களுக்கு பொதுமக்களை அடிமைப் படுத்தல்; அப்பொருட்கள் இன்றி வாழ முடியாத உணர்வை பொதுமக்களிடம் உருவாக்குதல். அப்புறம்? விலைகளை விருப்பப் படி ஏற்றி விற்றல். பொதுமக்களைச் சுரண்டுவதால் மட்டுமா இலாபம் பெருகுகிறது? இடையறாது வளர்கிறது?

தொழிற்கூடங்களில், ஆலைகளில், பிற இயந்திரச் சாலை களில் உழைப்போரிடம் மிக அதிகமான வேலை வாங்குதல்; மிகக் குறைவான ஊதியம் அளித்தல்; மிகக் குறைவான வசதிகளைச் செய்து கொடுத்தல்; இவற்றாலும் இலாபஞ் சம்பாதித்தார்கள்

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் அநீதி பொது மக்களை உறிஞ்சிற்று; உழைப்பாளர்களை உறிஞ்சிற்று.

பொதுமக்கள்—ஒட்டாத ஆற்று மணல்கள். பாட்டாளிகள் அப்படியல்ல. மெல்லமெல்ல களிமண்ணைப் போன்று ஒன்றுபட்டு இயங்கக் கற்றார்கள். தங்களுக்கு வசதிகள் வேண்டுமெனக் கோரி னார்கள். வேலைப் பளுக்குறைப்புக்குக் குரல் கொடுத்தார்கள். ஊதிய உயர்வுக்குக் கிளர்ச்சி செய்தார்கள். முற்காலத்தில் இவை பல வேளை பலிக்காவிட்டாலும் சில வேளை பலித்தன.

இருப்பினும் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற் குப் பரிகாரம் கிடைக்கவில்லை. பொதுமக்கள் சுரண்டப்படுவது நிற்கவில்லை,

அறிஞர்களில் சிலர், புது வழிகளில் சிந்தனையைச் செலுத்தினார்கள். அக்காலத்தில் உலகளாவியிருந்த தனியுடைமை முறையைப் பற்றிச் சிந்தித்தார்கள். அதன் தீய விளைவுகளை இனம் கண்டுகொண்டார்கள்.

தனியுடைமை, முதலாளித்துவம் மானுடத்தின் வளர்ச்சியில் சில நிலைகள் அவ்வளவே! இவையே முடிவான நிலைகள் அல்ல. இந்நிலையைத் தாண்டி மானுடம் வளர வேண்டும்.

எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும் நிலை, வெறும் அவாவல்ல. மனிதஇன ஆற்றலுக்குட்பட்டதே. இந்நிலையைப் பெறுவதற்குத் தேவையான இயற்கை வளம் உண்டு. அதை முழுமையாகப் பயன் படுத்தப் போதுமான உழைக்கும் கரங்கள் உள்ளன. அதற்கேற்ற அறிவுப் பெருக்கத்திற்குக் குறைவில்லை; நுட்பத்திறனும் பெற முடியும். அடிப்படைத் தேவை ஒன்றே ஒன்று. அது என்ன? மாற்று முறை.

தனித்தனிக் கணக்குகளில் வைத்துக் காக்கும் பல்வகைச் சொத்துக்களைப் பொதுக்கணக்கில் கொண்டுவந்து விடல்; பொதுவாகக் காத்தல்; நிர்வகித்தல்; எல்லோரும் பங்கு போட்டுக் கொண்டு உழைத்தல்; எல்லோரும் பங்கு போட்டுக்கொண்டு துய்த்தல். இம்மாற்று முறைக்குப் பெயர் பொதுஉடைமை.

பொது உடைமைச் சமுதாயத்தை எல்லோரும் சேர்ந்து நிர்வகிப்பார்கள். அங்கே உயர்ந்தோர் இரார்; தாழ்ந்தோர் இரார்; குபேரர் இரார்; அன்னக்காவடிகள் இரார்; அறிஞர்கள் இருப்பர்; ஆனால் தற்குறிகள் இரார். அத்தகைய புதிய பொது உடைமைச் சமுதாயம் சில அறிஞர்களின் அறிவில் புலப்பட்டது. அதோடு நின்றதா? இல்லை. பொது உடைமை அறிக்கையாக உருவாயிற்று.

1847இல் இலண்டனில் பொதுஉடைமை வாதிகள் சிலர் கூடினார்கள்; கலந்து பேசினார்கள். அறிக்கையொன்றை உருவாக்கினார்கள். அதன் பெயர் என்ன? 'கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ' பொதுவுடைமை (அறிக்கை) என்பதாகும்.

காரல்மார்க்சும், எங்கல்சும், மற்றும் சில அறிஞர்களும் இவ்வறிக்கையை வெளியிட்டபோது உலகம் விழிப்படைய வில்லை, கோடிக்கணக்கானோர் அதைப் பொருட்படுத்தவே

யில்லை. அறிவாளிகள் பலர் நுனிப்புல் மேய்ந்தார்கள். 'நல்ல கற்பனை' என்று இதை ஒதுக்கிவிட்டார்கள்.

புதிய ஏற்பாடு எவர்களுக்கு எட்டவேண்டுமோ அவர்களுடைய காதுகளுக்கு எட்டத் தொடங்கியது. தனியுடைமைக் கேடுகளிலிருந்து மக்கள் இனத்தை விடுவிக்கக்கூடிய சமதர்ம முறை பற்றி உழைக்கும் தொழிலாளி வர்க்கம் கேள்விப்பட்டது. பல நாட்டுப் பாட்டாளிகள் கேள்விப்பட்டார்கள். எல்லோரும் இல்லாவிட்டாலும் பல பாட்டாளிகள் இதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்கள்.

கடலெனப் பெருகிவரும் உலக மக்களுக்குத் தனியான சமுதாயக் கடமையொன்று இருப்பதை உணரத் தலைப்பட்டார்கள், ஊதியத்திற்காகப் போராடுவது குழுக் கடமை. அவ்வளவே! அதற்கு மேற்பட்ட தனிக்கடமை பாட்டாளிகளின் தோள்களில் இருக்கிறது. அது என்ன?

பொதுச் சமுதாயம் முழுவதற்குமான நல்வாழ்வுக்காகப் போராடுதல். அப்போராட்டத்தின் முன்னணியில் நிற்கவேண்டியவர்கள் உழைக்கும் மக்களே, சமதர்மத்தைப் பெற்றெடுப்பதில் மற்றவர்களுக்கு இல்லாத பெரும் பொறுப்பு உழைக்கும் மக்களுக்கு உண்டு. இவற்றை உணர்ந்த பாட்டாளிகளின், குடியானவர்களின் துணையோடு பின்பற்றுதலோடு, மாமேதை லெனின் உலகப் புகழ் பெற்ற அக்டோபர்ப் புரட்சியை வெற்றிகரமாக நடத்திக்காட்டினார். அதுவரை உலகம் கண்டிராத சமதர்ம ஆட்சியை—அதுவும் பாட்டாளிகளால் நடத்தப்படும் ஆட்சியை நிறுவினார். இரஷ்யப் பெருநாட்டில் பல்வேறு பக்கங்களிலும் தூண்டிவிடப்பட்ட உள்நாட்டுப் போர்களையும் பதினான்கு வல்லரசுகளின் படையெடுப்புகளையும் சமாளித்து முறியடித்தார்.

'பாட்டாளி ஆட்சி புல் அல்ல; சமதர்ம ஆட்சி நாணல் அல்ல; இரண்டும் காலத்தின் தேவை; உயிர்த் துடிப்பும் எல்லையற்ற வலிமையும் கொண்டவை; எதையும் வெல்லும் ஆற்றல் மிக்கவை' என்று மெய்ப்பித்துக் காட்டினார் மாவீரர் லெனின்.

புரட்சியென்ற சொல்லைக் கேட்டாலே நடுங்குவோர் கோடி கோடி. அவர்களுக்கு ஒரு விளக்கம் :

உலகைக் குலுக்கிய அக்டோபர்ப் புரட்சி பத்து நாள்கள் நடந்தன. அப்பத்து நாள்களில் இருதரப்பிலுமாக இழந்த உயிர்கள்

ஒன்பதே. நாள்தோறும் சாலை விபத்துக்களில் பலநூறு ஒன்பது உயிர்களை நாம் இழக்கவில்லையா? சற்று சிந்தித்துப் பாருங்கள்

ஆனால், நாடு தழுவிய எதிர்ப்புரட்சிகளும் வெளிநாடுகளின் படையெடுப்புகளும் நான்காண்டு தொடர்ந்தபோதே அந்நாடு இலட்சக்கணக்கான உயிர்ப்பலி கொடுக்க நேர்ந்தது. புரட்சி யென்றால் உயிர்க்கொலை, இரத்த ஆறு முதலியவற்றை இணைத்துக் கொண்டு மிரளுவோர் இதைச் சிந்திக்கட்டும்.

1930க்குள் சோவியத் சமதர்ம ஆட்சி பரிசோதனை நிலையைத் தாண்டிவிட்டது; நிலையான வாழ்க்கை முறையாகிவிட்டது. எழுத்தறிவு பெறாத முதியோர்க்கெல்லாம் எழுத்தறிவு கொடுப் பதில் வெற்றிக்கோட்டை நெருங்கிவிட்டது. எல்லோர்க்கும் வேலை கொடுப்பதிலும் வெற்றி நிலையை எட்டிக் கொண் டிருந்தது. இவை சமதர்ம முறையின் சிறப்பினை உலகறியச் செய்தது.

தன்மான இயக்கத்தின் தந்தை, பெரியார் ஈ. வெ. ராமசாமி சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டார். காலத்தின் கருவூல மாகிய இம்முறையைப் பரப்புவதில் முனைந்தார். பிறவி ஏற்றத் தாழ்வைத் தகர்க்கத் துணிந்த சிந்தனைக்குச் செல்வ ஏற்றத் தாழ்வைத் தாக்க முற்படுவது இயல்பாக அமைந்தது.

விளைவு? 1931 ஆகஸ்டில் விருதுநகரில் நடந்த மூன்றாவது மாகாண சுயமரியாதை வாலிபர் மாநாட்டில் வெளிப்பட்டது.

# 10. கம்யூனிஸ்ட் அறிக்கையைக் தமிழில் வெளியிட்டார்

1931 மே திங்கள் முதல் 1931 ஆகஸ்ட் வரை சமதர்மக் கொள்கையைப் பரப்புதல், தன்மான இயக்கத்தின் தந்தையாகிய பெரியாரின் சீரிய கருத்தாக நடைபெற்றது. 1931ஆகஸ்டில் விருது நகரில் நடந்த மூன்றாவது மாகாண சுயமரியாதை வாலிபர் மாநாட்டில் இயக்கத்தின் இலட்சியங்களில் ஒன்றாக சமதர்மக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அம்மாநாட்டின் முதல் முடிவைப் பார்ப்போம்.

'சமதர்மத் தத்துவமும், பொதுவுடைமைக் கொள்கையும் நாட்டில் ஓங்கவேண்டும் என்பதே நமது இலட்சியமாயிருக்கிறபடி யால் விதி, கடவுள் செயல் என்பன போன்ற உணர்ச்சிகள் மக்கள் மனதிலிருந்து ஒழிக்கப்படவேண்டும்'.

இம்முடிவின் முற்பகுதி இலட்சியத்தை அறிவிக்கிறது; திட்ட வட்டமாகவே அறிவிக்கிறது. பிற்பகுதி அந்த இலட்சியம் நிறை வேறாதபடி, குறுக்கே நிற்கும் தடைக் கற்களைக் காட்டி அவற்றை ஒழிக்கச் சொல்லுகிறது.

போதிய சூடேற்றாமல் அரிசியை உலையில் இடுவது வீண் முயற்சி. எவ்வளவு நீண்ட காலம், சிறுகச்சிறுக நான்கு அரிசி களாகப் போட்டுப் பார்த்தாலும் ஒரு பருக்கைச் சோறும் கிடைக்காது. அத்தகைய முயற்சியும் பாழ், அதில் போடும் பொருளும் பாழ்.

விதி, கடவுள் செயல் என்னும் நம்பிக்கையுள்ளவரை பொது மக்களிடம் சமதர்ம உணர்வில் சூடு பிடிக்காது. சூடு பிடிக்காத வரை அது 'நல்லவர்களின் நம்பிக்கை'யாக மட்டுமே நிற்கும், 'வல்லவர்களின் பயனுள்ள செயற்பாடுகளாக' மாறாது. இதை யுணர்ந்ததால் தன்மான இயக்க வாலிபர்கள், போய்ச்சேர வேண்டிய இடத்தையும் காட்டி, வழியில் ஒழிக்கப்பட வேண்டிய வற்றையும் தெளிவாகக் காட்டினார்கள்.

மேற்கூறிய வாலிபர் மாநாட்டின் மற்றோர் முடிவு என்ன தெரியுமா?

'வர்ணாசிரமத்திலும் கடவுள் செயல் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருக்கிற யாராலும் மக்களுக்குச் சமத்துவமும் விடுதலையும் அடையும்படிச் செய்ய முடியாது என்று இந்த மாநாடு உறுதியாகச் சொல்லுகிறது, என்பதாகும்.

அய்ம்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு தன்மான இயக்கம் சொன்னது கல்லின்மேல் எழுத்து என்பதைப் பிந்திய இந்திய சமதர்ம வரலாறு மெய்ப்பித்துக்காட்டி வருகிறது.

சாதி ஏற்றத்தாழ்வு என்னும் நெருஞ்சிமுள் காட்டையும், கடவுள் செயல் என்னும் நம்பிக்கைப்பூண்டையும் உழுது புரட்டிப் போட முயன்றால் மக்கள் மனம் புண்படும் என்னும் எண்ணத்தில் அவ்விரண்டையும் தொடாமல் ஒதுக்கியவர்களின் தியாகம் என்ன வாயிற்று? அரை நூற்றாண்டு உழைப்பு என்னவாயிற்று? விழலுக்கிறைத்த நீராகிவிட்டது.

அது இழப்பு, அதற்கு மேலும் கேடு படர்ந்திருக்கிறதே. அவ நம்பிக்கை, ஆற்றாமை, சலிப்பு ஆகியவை இளைஞர்களைக் கௌவிக் கொண்டு வருகின்றனவே! அக்கால தன்மான இயக்கத்தின் சிவப்பு விளக்கைக் கவனித்திருந்தால், ஒருக்கால் சமதர்ம உணவு தழைத்திருக்கலாம். நிற்க.

சமதர்மத் தத்துவத்தை இயக்க ரீதியாக ஏற்றுக்கொண்ட பிறகு அக்கொள்கை மேலும் பரவியது. அதற்காக சாதியொழிப்புக் குரல் குறையவில்லை. இரண்டும் சூறாவளியென வீசின. இந்தியச் செய்தித்தாள்கள், இதழ்கள் கட்டுப்பாடாக இருட்டடிப்புச் செய்தன. அது பலிக்காத போது? திரித்துக் கூறின; அவதூறுகளைப் பொழிந்தன.

இவ்வளவுக்கிடையிலேயும் எதிர் நீச்சல் போட்டு வளர்ந்தது தன்மான இயக்கம்; சமத்துவத்தோடு சமதர்மத்தையும் கிளையாகக் கொண்ட இயக்கம் வளர்ந்தது.

தந்தை பெரியார் எதில் ஈடுபட்டாலும் முழு மூச்சோடு ஈடுபடும் இயல்பினர். மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மாநாடு

சமதர்மக் கோட்பாட்டையும் பொது உடைமைக் கொள்கையை யும் இலட்சியமாக அறிவித்த பிறகு, அவற்றைப் பரப்புவதில் தீவிரமாக முனைந்தார்.

சமதர்மக் கோட்பாட்டிற்கு ஊற்றுக்கால் எது? 1847 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ' என்ற சம தர்ம அறிக்கையாகும். அவ்வாண்டு இலண்டனில் ஒரு அனைத்துலக சமதர்ம மாநாடு நடைபெற்றது. அப்போது சமதர்ம இயக்கத்தின் சார்பாக அதன் கொள்கையைத் திட்டவட்டமாக வெளியிட முடிவு செய்தார்கள்.

அவ்வறிக்கையைத் தயாரிக்கும் பணியை காரல்மார்க்சு பிரட்ரிக் எங்கல்சு என்ற இரு ஜெர்மானியப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் உலகப் புகழ்பெற்ற சமதர்ம அறிக்கையைத் தந்தார்கள். அந்த அறிக்கையை 4-10-1931 நாளைய குடி அரசில், தமிழாக்கம் செய்து வெளியிட்டார். அப்படி வெளியிட்டபோது, பெரியார் ஈ. வெ. ராமசாமியே ஒரு முகவுரை எழுதினார். அதில்,

'சமதர்ம உணர்ச்சி ஒரு எண்ணமாய் ஏற்பட்டு அதன் தத்துவங்களைப் பற்றியும் கொள்கையைப் பற்றியும் வெளியில் எடுத்து மக்களுக்குத் தெரியும்படியாக மாநாடுகள் மூலமும் வெளிப் படுத்தப்பட்டிருப்பதாக நமக்கு விளங்கும்படியாய்க் காணப்படும் காலமே இன்றைக்கு சுமார் 80, 90 ஆண்டுகளுக்கு முன்பு என்று தெரிகின்றது. அதாவது 1847 ஆம் ஆண்டிலேயே இலண்டன் மாநகரத்தில் உலகத்திலுள்ள சமதர்மவாதிகளுடைய மாநாடு ஒன்று நடந்திருப்பதாகவும் அதன் பயனாய் அறிக்கை வெளியிட் டிருப்பதாகவும் தெரியவருகின்றது, என்று கோடிட்டுக் காட்டினார். இது பலரும் அறிந்த உண்மையே.

சமதர்மம் ஏன் இரஷ்யாவில் முதலில் நடைமுறைக்கு வந்தது? இக்கேள்விக்குப் பெரியார் கூறிய விளக்கத்தைக் காண்போம்.

'அதை (சமதர்மத்தை) சீக்கிரத்தில் கையாளப்படவும் அனுபவத்திற் கொண்டு வரவும் முயற்சித்த நாடு இரஷ்யாவாக ஏற்பட்டு விட்டது.

சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்களில் முதன்மை யான முக்கியஸ்தர்கள் ஜெர்மானியர்களாயிருந்தாலும் அதற்காக

மாநாடு கூடினது இலண்டன் பட்டினமாய்இருந்தாலும் அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சு நாடாயிருந்தாலும் அது முதன்முதல் அனுபவத்தில் கொண்டுவர முயற்சிக்க வேண்டிய இடம் இரஷ்யாவாகவே ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயமில்லாமலில்லை.

'என்ன நியாயம் என்று வாசகர்கள் கேட்பார்களானால் அதற்கு நமது பதிலாவது: எங்கு அளவுக்கு மீறிய—தாங்க முடியாத கொடுமை நடைபெறுகின்றதோ அங்குதான் சீக்கிரத்தில் பரிகார முயற்சிகொண்டு எழவும் சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும்?

'எனவே, இந்த நியாயப்பட பார்ப்போமானால் உலக அரசாங்கங்களிலெல்லாம் இரஷ்ய சார் அரசாங்கமே மிக்க கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கிறது. அதனாலேயே அங்கு சமதர்மமுறை அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று...' என்று விளக்கந் தந்தார்.

'இந்தியாவின் நிலை அதைவிட மோசமாயிற்றே. இங்கு ஏன் சமதர்மம் நடைமுறைக்கு வரவில்லை' என்ற அய்யங்கள் எழுவது இயற்கை. இவற்றை எதிர் பார்த்து, அவர் இவற்றிற்கும் பதில் சொல்லுவதைக் கவனிப்போம். இதோ பெரியார் பதில்:

'இந்த நியாயப்படி பார்த்தால் அவ்வித சமதர்ம உணர்ச்சி உலகில் இரஷ்ய தேசத்தைவிட, இந்தியாவிற்கே முதன்முதலாக ஏற்பட்டிருக்க வேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அநேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும் சூழ்ச்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே கல்வி, அறிவு, உலகஞானம், சுயமரியாதை உணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு வழி இல்லாமல், காட்டு மிராண்டித் தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது, அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும் மோட்ச சாதனமென்றும் புகட்டி வந்ததாலும் அதே சூழ்ச்சிக்காரர்கள் வேற்றரசர்களை அழைத்துவந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கியாளச் செய்துவந்ததாலும் உலகில்சமதர்ம உணர்ச்சி முதன் முதல் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி, இரஷ்யாவிற்கு முதலிடம் ஏற்படவேண்டியதாயிற்று.

காலத்தின் கட்டாயத்தால், சமதர்ம உணர்வு இந்தியாவிலும் தலைகாட்டுவதைப் பெரியார் சுட்டிக் காட்டினார். நம் மக்களிடையே சமதர்ம உணர்ச்சி போதிய அளவு வளராமல் போவதற்கும் காரணத்தைக் காட்டினார். உண்மையான, உயிருள்ள அக்கருத்துக்கள்இதோ:

'இப்போது உலகில் மற்றும் எல்லாப் பாகங்களிலும் ஏற்பட்டு விட்டதின் காரணமாய் இந்தியாவிலும் ஏற்பட வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாய்ப் போய்விட்டதால், இங்கும் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. ஆனால், உலகில் சமதர்ம உணர்ச்சிக்குப் பகையான தன்மைகளில் மற்ற நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் முக்கிய வித்தியாசம் இருந்து வருகின்றது.

'அதென்னவென்றால், மற்ற நாடுகளில் ஒரு விஷயம்தான் முக்கியமாய் கருதப்படுகின்றது. அதாவது முதலாளி (பணக்காரன்) வேலையாள் (ஏழை) என்பதேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல்சாதியார் கீழ்ச்சாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால், அது பணக்காரன் ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றி வருகின்றது. ஆதலால் இங்குச் சமதர்மத்திற்கு இருட்டடிப்பு, அதிகமான எதிர்ப்பு இருந்து வருவதுகொண்டு சமதர்ம உணர்ச்சி தலை தூக்க முடியவில்லை.

ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் நம் சமுதாயத்தைப் பிடித்து வாட்டும் கூடுதல் நோயைக் காட்டினார். சாதிப் பிரிவுகள் இல்லாமையால் பிற நாட்டு ஏழைகள்—அதாவது பாட்டாளி வர்க்கம் ஒரே அணியில் திரள்வது எளிதாக உள்ளது. உலகப் பாட்டாளிகள் ஒன்றவாது ஓர் இயக்கமாக உருவாக முடிகிறது. இங்கே சுரண்டப்படும் மக்கள் தங்களைத் தனித்தனிச் சாதிகளாகக் கருதுவதால் நெல்லிக்காய் மூட்டைகளாயிருந்து அவதிப்படுகிறார்கள்.

சாதியொழிப்பு, தன்னிலையிலேயே முன்னுரிமை பெற வேண்டிய ஒன்றாயினும் சமதர்மமுறைக்குப் பண்படுத்தும் முயற்சியாகவும் அதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

# 11. சுயமரியாதை சமதர்மக்கட்சி தோற்றம்

விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மாநாட்டில் பொதுஉடைமைக் கொள்கையும் சமதர்மக் கோட்பாடும் குறிக்கோளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால் 'சமதர்ம அறிக்கை'யை 'குடியரசு' வெளியிட்டு மக்களிடையே பரப்பிற்று. அக்காலக் 'குடியரசு' விற்பனையில் இக்கால வார இதழ்களுக்கு அருகில்கூட வரமுடியாது. ஆனால் பலனில்? அவைகளைவிடப் பத்துப் பங்காக வேலை செய்தது என்பது மிகையல்ல.

குடிஅரசின் வழியாகவும் பொதுமேடைகளிலிருந்தும் சமதர்மக் கொள்கை விரைந்து பரவிற்று. அந்நிலையில் திரு. ஈ. வெ. ராமசாமி, திரு. எஸ். இராமநாதன், திரு. இராமு ஆகியவர்களை அழைத்துக்கொண்டு கப்பலில் மேனாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். 13-12-1931 அன்று புறப்பட்ட பெரியார் 1932 நவம்பர் கடைசியில் தாயகம் திரும்பி வந்தார்.

எகிப்து முதல் சோவியத் நாடு வரை பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தார். பிறநாடுகளில் பொதுமக்கள் ஒருவரை ஒருவர் மதித்து நடந்துகொள்வதையும், தெருக்கள் பூங்காக்கள் போன்ற பொதுவிடங்களைத் துப்புரவாக வைத்திருப்பதையும் நேரில் அறிந்து வந்தார்.

அந்த அயல் நாட்டுப் பயணத்தில் பெரியார் நீண்டகாலம் தங்கியது சோவியத் நாட்டில்தான்; உலகத்தின் முதல் சமதர்ம நாட்டில்தான். சோவியத் நாட்டில் பெரியார் பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பல கல்வி நிலையங்களைப் பார்த்தார்; கூட்டுறவுப் பண்ணைகளைப் பார்த்தார்; நாட்டுடைமையான பெருந் தொழிற்சாலைகளைக் கண்டார். கலையரங்குகள், அரும் பொருட்காட்சிகள் பெரியாரின் பார்வையில் வந்தன.

சோவியத் நாடு பெரியாரைப் பெரிதும் கவர்ந்தது. எல்லோர்க்கும் வாழ்வு கிட்டத் தொடங்கிவிட்டதை நேரில் உணர்ந்துகொண்டார். அந்நாட்டில் மிகப் பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது அவருக்குப் புலனாயிற்று.

கோட்பாடாக ஏற்றுக்கொண்ட சமதர்மக் கொள்கையின் சிறப்பையும் நன்மையையும் பெரியார் நேரில் தெரிந்து கொண்டார். அதை இந்தியாவில் பரப்ப வேண்டுமென்னும் ஆர்வத்தோடு திரும்பி வந்தார்.

ஈரோட்டிற்குத் திரும்பி வந்த ஒரு திங்களில் சுயமரியாதைத் தொண்டர்கள் கூட்டத்தை ஈரோட்டில் கூட்டினார் பெரியார். அச்சிறப்புக் கூட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த தோழர் மா. சிங்கார வேலரை அழைத்தார். பிந்தியவர், அக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் கூறினார்.

ஈரோட்டில் இருநாள்கள் சுயமரியாதைத் தொண்டர்கள் கலந்துரையாடினார்கள். கூட்ட முடிவில் என்ன முடிவுக்கு வந்தார்கள்?

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் பொருட்டு அரசியல் கிளை ஒன்று தேவை. எனவே, 'சுயமரியாதை—சமதர்மக் கட்சி' யொன்றை தொடங்க வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. அக்கட்சிக்கு இலட்சியங்கள் என்ன? வேலைத் திட்டங்கள் எவை?

இவற்றைப் பற்றியும் முடிவு எடுத்தார்கள்.

சமதர்ம சமத்துவ சமுதாயத்தில் தன்னாட்சி உரிமை கொண்டிருப்பது இன்றியமையாதது. அரசியல் உரிமை இல்லாத போது சமதர்மம் பற்றியும், சமத்துவம் பற்றியும் பேசுவது வெறும் அறிவுலக விளையாட்டாகவே நின்றுவிடும். இதை உணர்ந்த சுயமரியாதைத் தொண்டர்கள் அதுபற்றியே முதலில் முடிவு செய்தார்கள்.

1931ஆம் ஆண்டு டிசம்பர் 28, 29 நாள்களில் அவர்கள் ஈரோட்டில் கூடியபோது இந்தியா அடிமைப்பட்டிருந்தது; ஆங்கில ஆட்சியில் சிக்கிக் கிடந்தது. அந்நிலை தன்மான இயக்கத்தவர்களுக்கு உடன்பாடா? இல்லை. இதோ அதுபற்றி அவர்கள் செய்த முடிவு:

'பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித்தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்வது.,

அன்றைய இந்தியா அயல் நாட்டுக்காரர்களிடம் மட்டுமா சிக்கிச் சீரழிந்தது? இல்லை. தொலைவிலிருந்து வந்த ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், போர்ச்சுக்கீசியர் மட்டுமா மக்களைச் சுரண்டிக் கொண்டிருந்தார்கள்? இல்லை.

இந்திய நாட்டின் கணிசமான நிலப்பரப்பு இந்திய மன்னர்களின் ஆளுகையில் இருந்தது. அய்நூறுக்கு மேற்பட்ட குறுநில மன்னர்கள் வைத்ததே சட்டம். அப்பகுதிகளில் சிலவற்றில் மட்டுமே நாகரீக ஆட்சி நடந்தது. மற்றவற்றில் காட்டுதர்பார் நடந்து வந்தது.

அன்னியர் ஆட்சிகளிலிருந்தே இந்தியப்பகுதி விடுதலை பெற்று மக்களாட்சி முறைக்கு வருவதைப் போன்றே, மன்னர் ஆட்சிப் பகுதிகளும் மக்களின் நேரடி ஆட்சிக்கு வருவதே சரி. அத்தகைய முடிவுக்குத் தன்மான இயக்கத் தொண்டர்கள் வந்தார்கள்; 1932இலேயே வந்தார்கள்.

'சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளை யெல்லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்குக் கொண்டுவருவது' என்பது மற்றோர் முடிவாகும்.

உழைக்கும் மக்களின் நேரடி ஆட்சியாக சோவியத் ஆட்சி தோன்றியதால்தான் அது தப்பிப் பிழைத்தது. அக்டோபர்ப் புரட்சி வெடித்ததும் வாக்குரிமையை உழைக்கும் மக்களுக்கு மட்டுமே வழங்கியதற்குப் பதில் எல்லா மக்களுக்கும் கொடுத்திருந்தால் நிலஉடைமைக்காரர்களும், சொத்துடைமைக்காரர்களும் நாளையொரு நாள் அந்நிலைக்கு உயரலாம் என்று கனவு காண்போரும் சமதர்ம ஆட்சிமுறையை முளையிலே கிள்ளி எறிந்திருப்பார்கள். அப்படிச் செய்யாமல், ~~ஈகஜீவி~~ உழைப்பாளிகளுக்கு மட்டும் வாக்குரிமை கொடுத்ததால் அப்புல்லுருவிகள் சமதர்ம முறையை அழிக்க முடியவில்லை.

அதை நினைவில் கொண்டே இந்திய ஆட்சி உடல் உழைப்பாளர்கள் ஆட்சியாக இருக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

# 12. சுயமரியாதை சமதர்ம வேலைத்திட்டம்

தென்னம்பிள்ளை - இளங்கன்று; நட்ட குழியைச் சுற்றி வேலி போடுகிறோம். ஏன்? இளம்பிள்ளையை ஆடுமாடுகள் கடித்துவிடக் கூடாது என்பதற்காக. விளையாட்டுப் பிள்ளைகள் ஒடித்து பிய்த்துவிடக்கூடாது என்பதற்காக.

தென்னம்பிள்ளை வளர்ந்து மரமாகிவிட்டபின்? அதில் ஆடு மாடுகளைக் கட்டி வைக்கிறோம்.

இளம் நிலையில் இருந்த சமதர்ம ஆட்சியில், 'சுகஜீவி'களாக இருந்தவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது வெறும் பாது காப்பு ஏற்பாடே; இன்றியமையாத பாதுகாப்பு ஏற்பாடே.

அவ்வழியைப் பின்பற்றியதால்தான் சோவியத் ஆட்சி தழைக்க முடிந்தது. எல்லோரும் வேலை செய்து வாழும் நிலை வந்ததும், 'பாட்டாளிகள் சர்வாதிகாரம்' என்னும் சொற்றொடர் கைவிடப் பட்டது; எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

1932 டிசம்பரில் ஆங்கிலேயர்கள் ஆண்ட இந்தியப் பகுதியை யும் இந்திய மன்னர் ஆண்ட பகுதியையும் விடுவித்து, உடலுழைப் போர் ஆட்சியில் ஒப்படைக்க வேண்டுமென்று சுயமரியாதை சமதர்மத் திட்டம் கூறிற்று.

அப்படி உழைப்போர் ஆட்சி அமையும்போது அது என்னென்ன செய்ய வேண்டும்? அவற்றையும் தன்மான இயக்கத் தோழர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள்.

உழைப்போர் ஆட்சி, சமதர்ம வாழ்க்கை முறையை உரு வாக்கும் கருவி. சமதர்ம முறைக்கு அடிப்படை, நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் நாட்டின் பொது உடைமையாதல்.

உற்பத்திச் சாதனங்கள் எவை? தொழிற்சாலைகள். இன்னும் என்ன? விளைநிலங்களும் காடுகளும்.

இயற்கைச் செல்வங்களும் தொழிற்சாலைகளும் மட்டுமா இக்காலச் செல்வங்கள்? இரயில்வேக்களும் செல்வங்களே. கப்பல், படகு முதலிய நீர்வழிப் போக்குவரத்துச் சாதனங்களும் செல்வத்தின் உருவங்களே. வங்கிகளில் சேர்ந்துள்ள பணமும் செல்வமாகும். இவை அனைத்தும் நாட்டு மக்களின் பொதுஉடைமையாக வேண்டும்.

தொழில்களை நாட்டுடைமையாக்கிவிட்டு, மற்றவற்றைத் தனியுடைமையாக்கி வைத்திருந்தால் சமதர்மம் நடைபெறாது. தொழிற்சாலைப் பொருள்களை விரைந்து எடுத்துக்கொண்டு போக முடியாதபடி போக்குவரத்துகளின் உடைமையாளர்கள் கதவடைப்பு செய்யக்கூடும். வங்கிகள் தனியார் கைகளில் தொடர்ந்து இருக்குமானால், நாட்டுடைமைத் தொழில்களை நெருக்கடியில் சிக்கவைக்க அவ்வங்கிகளைப் பயன்படுத்தலாம். ஆகவே சுயமரியாதை இயக்க சமதர்மக் கட்சியின் வேலைத் திட்டம்:

'எல்லாத் தொழிற்சாலைகளையும், இரயில்வேக்களையும், பாங்கிகளையும், படகு-நீர்வழிப் போக்குவரத்து சாதனங்களையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது' என்று கூறுகிறது.

அப்போது விமானப் போக்குவரத்து வளராததால், அச் சாதனத்தை நாட்டுடைமையாக்குவது பற்றி குறிக்கவில்லை என்று கொள்ளலாம்.

அடுத்து நிலம்பற்றி மேற்படி வேலைத் திட்டம் கூறுவதைக் கேளுங்கள்.

'எந்தவிதப் பிரதிப் பிரயோசனமும் கொடுபடாமல் நாட்டில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும், காடுகளையும், மற்ற தாவர சொத்துக்களையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.' இது நான்காவது திட்டமாகும்.

1917 இல் அக்டோபர்ப் புரட்சியின்போது, 'உழைப்பவர்களுக்கே நிலம்' என்பதே இரஷ்யாவில் முழக்கமாயிருந்தது. புரட்சி வெற்றி பெற்று நிலைத்த பிறகு அடுத்த கட்டத்திற்கு சோவியத் நாடு சென்றது. அது என்ன கட்டம்?

ஒவ்வோர் உழவரும் துண்டு நிலம் வைத்துக்கொண்டு பாடுபடுவதை விட்டு ஊரில் உள்ள நிலமனைத்தையும் இணைத்துக்

கூட்டுப் பண்ணையாக்கிப் பயிரிடுதல். அதற்குப் பெயர் கூட்டுப் பண்ணை முறை. அதிலிருந்து எவரும் பிற்காலத்தில் துண்டு நிலத்தைப் பிரித்துக்கொண்டு போக முடியாது.

1930 இன் தொடக்கத்திலேயே சோவியத் நாட்டில் கூட்டுப் பண்ணைகளை அமைப்பதில் முனைப்பு காட்டப்பட்டது. அதைப் பார்த்து விட்டு வந்த பெரியாரின் திட்டம் கடைசி 'மாடலை' பின்பற்றச் சொல்லிற்று போலும்.

திட்டத்தின் அய்ந்தாவது படி என்ன?

'குடியானவர்களும் தொழிலாளிகளும் லேவாதேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் செல்லுபடியற்றதாக்கி விடுவது'. நிலங்களை நாட்டுடைமையாக்கிவிட்டால் கடன்களைத் தள்ளிவிடுவதும் அதில் சேர்வதே முறை.

அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்துவிடுவது. 1932லேயே சுயமரியாதை சமதர்ம இயக்கம் காட்டிய குறிக்கோளை 1976இல் தான் நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்த முயற்சி நடந்தது. எவ்வளவு வெற்றி பெற்றதோ?

நாட்டுடைமையான தொழிற்சாலைகள் தொழிலாளர்களைப் பழையபடி கசக்கிப்பிழிவது முறையாகாது. அவை தொழிலாளர், பொதுமக்கள், நுகர்வோர் ஆகியோர் நலன்களைப் பேண வேண்டும். அதைச் செய்யும் வழியை ஈரோட்டுத் திட்டம் காட்டுகிறது.

'தொழில் செய்பவர்கள் ஏழுமணி நேரத்திற்குமேல் வேலை செய்யக்கூடாது.

அவர்கள் வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது.

தொழிலாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி அவர்களது சுக வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளையும், இலவச நூல்நிலையங்கள் முதலிய வசதிகளையும் ஏற்படுத்துவது'.

இவை தொழிலாளர் நலனைப் பேணுவது ஆகும்.

பொதுமக்கள் நலனை எப்படிப் பேணுவது?

தொழில் இல்லாமல் இருக்கின்றவர்களை அரசு பராமரிக்கும் படி செய்வதால்,

இவற்றையெல்லாம் சுயமரியாதை சமதர்மக் கட்சியின் திட்டம் பட்டியல் போட்டுக் காட்டியது.

தனியார் சொத்துக்களை பொதுஉடைமையாக்கச் சொன்ன சமதர்மத் திட்டம் கோயில்கள், மடங்கள் போன்றவைகள் மடக்கி வைத்திருக்கும் சொத்துக்களை மறந்துவிடவில்லை. அவற்றை விட்டுவைத்துக்கொண்டு, தனியார் சொத்துக்களில் மட்டும் கை வைப்பது வெடிகுண்டின்மேல் அழுத்தமாக உட்காருவதற்கு ஒப்பாகும்.

சோவியத் நாடு தனியார் நிலங்களை, செல்வங்களை நாட்டுடைமையாக்கியது போன்றே கோயில், மடம் ஆகிய சமய அமைப்புகளின் நிலங்களையும் செல்வங்களையும் பொதுஉடைமை யாக்கிவிட்டது. இந்த எடுத்துக்காட்டை மனதிற்கொண்டு சுய மரியாதைத் தொண்டர்கள் முடிவு செய்தார்கள்.

கோயில், பிரார்த்தனை இடங்கள் முதலிய மத நிறுவனங் களின் சொத்துகள், வரும்படிகள் ஆகியவற்றை பொதுமக்களின் தொழில், கல்வி, உடல்நலம், வீட்டு வசதி, அனாதைப் பிள்ளை கள் விடுதி ஆகியவற்றிற்குப் பயன்படுத்த வேண்டும். இது அவர்கள் முடிவு. அறிவுடையோர் முடிவு. செயல்பட, முற்போக்கு அறிவுடையோர் நிறைந்த சமுதாயம் தேவை.

# 13. மீரத் சதி வழக்கு : பெரியாரின் கண்டனம்

தொழில் செய்பவர்கள் ஏழு மணிக்குமேல் வேலை செய்யக் கூடாது என்று 1932ஆம் ஆண்டு டிசம்பர் கடைசியில் பெரியார் முன்னின்று தீட்டிய சுயமரியாதை சமதர்மத் திட்டம் கூறிற்று. அது அன்றைய தொழிலதிபர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. எனினும் தொழிலாளர் வர்க்கம் ஓரளவு அமைப்புகளின்கீழ் இயங்குவதால் இத்திட்டம் எளிதில் நிறைவேறியது. டாக்டர் அம்பேத்கார் இந்திய அரசில் தொழில் அமைச்சரானபோது எட்டு மணி நேர வேலைநாள் சட்டப்படி நடைமுறைக்கு வந்ததை இங்கே குறிப்பிட வேண்டும்.

ஈரோட்டு சுயமரியாதை சமதர்மத் திட்டம் வெளியான சில நாட்களில் இந்தியாவை உலுக்கிய முடிவு ஒன்று வெளியானது. அது அரசியல் கட்சிகளின் முடிவா? இல்லை. ஆட்சியின் முடிவா? இல்லை. பின் என்ன? வழக்கு மன்றத்தின் முடிவு ஆகும். என்ன வழக்கின் முடிவு?

மீரத் சதி வழக்கின் முடிவு. இவ்வழக்கு எப்போது தொடரப் பட்டது? 1929ஆம் ஆண்டு தொடரப்பட்டது. குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் எத்தனை பேர்? முப்பத்திரண்டு பேர். அவர்களில் இருவர் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள். மற்ற வர்கள் இந்தியர்கள்.

அவர்களில் சிலர் எஸ். ஏ. டாங்கே, அதிகாரி, எம்.ஜி. தேசாய் ஆவர். அன்று இந்தியாவை ஆண்ட ஆங்கில அரசு, பொது வுடைமைக் கட்சியை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட முனைந்தது.

1925இல் தோழர்கள் சிங்காரவேலர், டாங்கே போன்றவர்கள் இந்திய பொதுஉடைமைக் கட்சியைத் தொடங்கினார்கள். கான்பூர் போன்ற தொழில் நகரங்களில் பாட்டாளி மக்களை ஒன்று திரட்டினார்கள்; உரிமைக்குரல் எழுப்பச் செய்தார்கள். ஆங்கில ஆட்சி மிரண்டது. மிரண்டவர் கண்களுக்கு இருண்ட தெல்லாம் 'பேய்'.

20-3-1929 அன்று இந்திய ஆங்கில ஆட்சி மேற்கூறிய முப்பத்திரண்டு செயல் வீரர்களைக் கைது செய்தது. மார்க்சிய—லெனினியக் கொள்கைக்காரர்களாகிய அவர்கள் இந்தியாவில் இயங்கிக் கொண்டிருந்த பிரிட்டானிய மன்னர் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள்.

வழக்கு விரைவில் முடியவில்லை. நாற்பத்தைந்து திங்கள் போல் நீண்டது. அவ்வளவு காலமும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிறையில் வாட நேர்ந்தது.

இறுதியில் முடிவு சொல்லப்பட்டது. அய்வர் விடுதலை செய்யப்பட்டார்கள். மற்ற இருபத்தேழு பேர்களும் தண்டிக்கப் பட்டார்கள். சிலருக்கு மூன்றாண்டு சிறை. இருபது ஆண்டு சிறைத் தண்டனை பெற்றவர்களும் உண்டு.

இம்முடிவைக் கேட்ட பெரியார் தமது 'குடிஅரசு' வார இதழில் உணர்வூட்டும் தலையங்கம் தீட்டினார். 22-1-1933 அன்றைய குடி அரசு கூறுவதைப் படிப்போம்.

'இந்த இருபத்தேழு பேர் மாத்திரமல்ல; இன்னும் ஒரு இருநூற்று எழுபதுபேர்களைச் சேர்த்துத் தூக்கில் போட்டிருந் தாலும் சரி, நாம் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை'.

'ஏனென்றால் இந்தத் தோழர்கள் சிறையில் இருப்பதாலோ, தூக்கிலிடப்படுவதாலோ அவர்களுடைய கொள்கையாகிய பொது உடைமைக் கொள்கை என்பது அதாவது முதலாளிகளின் ஆட்சியைச் சிதைத்து நசுக்கி, சரீரத்தினால் பாடுபடுகின்ற மக்களுடைய ஆட்சிக்கு உலக அரசாங்கங்களையெல்லாம் திருத்தி அமைக்க வேண்டும் என்கிற கொள்கையோ உணர்ச்சியோ அருகிப் போய்விடும் பயம் நமக்கில்லை' என்று பறை சாற்றிற்று.

அந்த நம்பிக்கைக்குக் காரணம் என்ன? குடிஅரசின் சொற்களாலேயே அறிவோமாக. இதோ அச்சொற்கள்:

'இத்தொண்டர்கள் சிறையில் வதியும் ஒவ்வொரு விநாடியும் அவர்களது கொள்கையானது 1, 10, 100, 1000 கணக்கான தொண்டர்களைத் தட்டி எழுப்பி ஊக்கப்படுத்திக் கொண்டே தான் இருக்கும்.

பொது உடைமைக் கொள்கை என்பதை 27 பேரைத் தண்டித்தோ அல்லது 27 லட்சம் பேரைச் 'சமணர்களைக்

கழுவேற்றியது' போல நடுத்தெருவில் நிறுத்திக் கழுவேற்றிக் கொன்றோ அடக்கிவிடலாம் என்று நினைப்பது, கொழுந்துவிட்டெரியும் பெரும் நெருப்பை நெய்யைவிட்டு அணைத்துவிடலாம் என்று எண்ணுவது போல்தான் முடியும்.

'ஆகவே மீரத்து முடிவை நாம் மேளதாளத்தோடு வரவேற்பதுடன் தண்டனை அடைந்த தோழர்களை மனமார, வாயார, கையாரப் பாராட்டுகிறோம்; முக்காலும் பாராட்டுகிறோம். நமக்கும் நம் போன்ற வாலிபர்களுக்கும் இப்பெரும் பேறு கிடைக்கப்பெறும் நிலையை அடைய முடியவில்லையே என்று வருந்தி, மற்றுமொருமுறை பாராட்டுகிறோம்'.

எழுச்சியூட்டும் இத்தலையங்கம் மக்கள் மனதைக் கவர்ந்தது. இதைப்பற்றி எங்கும் பேசப்பட்டது.

ஈரோட்டு முடிவையொட்டி, பெரியாரும் அவருடைய இயக்கத் தோழர்களும் பொது உடைமைக் கோட்பாட்டினைப் பரப்புவதில் முழுமூச்சோடு ஈடுபட்டார்கள். தன்மான இயக்க இதழ்களில் சமதர்ம மணம் வீசிற்று பேச்சுக்களில் புரட்சிக்கனல் ஒளிவிட்டது.

ஊர்தோறும் சுயமரியாதை சமதர்மச் சங்கத்தினை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அக் காலகட்டத்தில் தோழர் ஜீவானந்தம் தன்மான இயக்கத்தில் பங்குகொண்டார். சாதி ஒழிப்பு, ஏழைபணக்காரத் தன்மை ஒழிப்புக் கொள்கைகளைப் பரப்ப உதவினார்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் வறுமைப் படுகுழியில் தள்ளப்பட்டோரும், ஊர்களுக்கு வெளியே ஒதுக்கப்பட்டோரும், சமுதாய இழிவுக்கு ஆளாக்கப்பட்டோரும் அநேகமாக ஒன்றாகவே இருப்பதால் சுயமரியாதை சமதர்மத் திட்டம் சூடு பிடித்தது; விரைந்து பரவிற்று; நூற்றைம்பது கிளைகள் போல் தோன்றின.

பெரியாரின் சமதர்மத் தொண்டை அக்கால அறிஞர் ஒருவர் மதிப்பிட்டு வெளிப்படுத்தினார். அவர் யார்? அவர் தோழர் மா. சிங்காரவேலர். அவர் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். வாழ்நாள் முழுதும் பொதுவுடைமைவாதியாகவே வாழ்ந்த வழக்கறிஞர். ஈரோட்டில் பெரியாரோடு இருந்து சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை உருவாக்கியவர்.

தோழர் சிங்காரவேலர் 30-4-1933 அன்று குடிஅரசில் 'சமதர்ம விஜயம்' என்னும் தலைப்பில் ஓர் தலையங்கம் தீட்டினார். அதில்,

''நமது 'குடிஅரசு' யாதொரு சுயநலமும் கருதாது, தேச நலத்திற்கே உழைத்துவந்ததின் முக்கிய பயன்களில், நமதுநாடு முழுமையும் சமதர்மப் பேரொலி முழங்குவதே பெரும் பயனாகும்'' என்று பாராட்டினார்.

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான அவர் மேலும் கூறுவதைக் கேட்போம்.

''ஒரு காலத்தில் உலகம் முழுமையுமே பரவப் போகிற சமதர்ம இயக்கத்தைத் தமிழ்நாட்டில், இவ்வளவு சிறிய காலத்தில் நாடு முழுமையும் விளங்கச் செய்து வருவது 'குடிஅரசின் மகத்துவமேயாகும். நமது காலத்தில் இதற்கு இணை இல்லை யென்றே சொல்லலாம்''

''தேசியப் பத்திரிகைகளும் அயல்நாட்டார் பத்திரிகைகளும் ஒரு கூட்டத்தார் நலத்தைக் கோரி, அவர்களை ஆதரித்து வந்திருக்க 'குடிஅரசு' ஒன்றே ஏழைத் தொழிலாளர்பாலும் விவசாயிகள் பாலும், திக்கற்றவர்பாலும், தாழ்த்தப்பட்டவர்கள்பாலும் பரிந்து பேச வந்திருக்கின்றது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் பாமர மக்களை ஆதரித்துப்பேச தமிழ்நாட்டில் 'குடிஅரசு' ஒன்றே உள்ளது''

''எங்கும் பல்லாயிரம் மக்களது அறிவை விசாலப்படுத்தியும் பகுத்தறிவைத் தூண்டியும் மதப்பற்றையும் மத வைராக்கியத்தை யும் குறையச் செய்து வந்திருக்கிறது. உயர்ந்த சீர்திருத்தங்களுக் கெல்லாம் உதவியாக நின்று வருவது நம் 'குடிஅர'சே''

''மதங்களின்மேல் வைத்துள்ள பற்று, 'குடிஅர'சின் கட்டுரை களால் குறைவு பெற்று வருவதற்கு சந்தேகமில்லை.''

''இன்று நமது இயக்கம், தமிழ்நாட்டிற்கு ஒரு பெரும் சண்ட மாருதமெனக் கருதும்படி ஆயிற்று'' என்று சிங்காரவேலர் படம் பிடித்துக் காட்டினார். இது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.

# 14. குடிஅரசு ஏடு அடக்குமுறைக்கு ஆளானது

தமிழகத்தில் சுயமரியாதை சமதர்மக் கழகங்கள் தோற்று விக்கப்பட்ட காலகட்டத்தில் இந்தியஅரசு மட்டத்தில் சமதர்மக் கொள்கை பரவுவதை அடக்கிவிட முடிவு செய்யப்பட்டது. இந்திய அரசின் முடிவை மாகாண ஆட்சிகள் நிறைவேற்றக் கடமைப் பட்டிருந்தன.

சென்னை மாகாண அரசின் கவனம் பெரியார் பேரிலும், அவர் நடத்தி வந்த குடிஅரசின் மேலும் பாய்ந்தது. மீரத் சதி வழக்கின் முடிவைப்பற்றி உணர்ச்சிமிக்க தலையங்கம் தீட்டிய 'குடிஅரசு', தோழர் சிங்காரவேலரால் பாராட்டப்பட்ட குடிஅரசு அடக்குமுறைக்கு ஆளானது.

மாகாண ஆட்சியின் ஆணைப்படி காவல்துறை அலுவலர்கள் 'குடிஅரசு' அலுவலகத்தைத் திடீரெனச் சோதனை செய்தார்கள். ஆட்சேபகரமான கட்டுரைகள் இருந்ததாகக் காட்டி, குடிஅரசிற்குக் காப்புப் பணம் கேட்டார்கள். பெரியாரிடம் பணம் இருந்தாலும் காப்புப் பணம் கட்ட விரும்பவில்லை. எனவே 'குடிஅரசை' நிறுத்திவிட்டார். அதற்குப் பதில் 'புரட்சி' என்ற பெயரில் ஓர் வார இதழைத் தொடங்கினார். என்னே பெரியாரின் துணிச்சல்!

புதிய வார இதழுக்குப் 'புரட்சி' என்று பெயர் சூட்டியதில் மட்டுமா அவருக்கே உரிய துணிச்சலைக் காட்டினார்? அதன் உள்ளடக்கமும் துணிச்சலின் வெளிப்பாடாக விளக்கியது.

26-9-1933இல் 'புரட்சி'யின் முதல் மலர் வெளியாயிற்று அதன் தலையங்கத்தில் பெரியார் எழுத்தைக் காண்போம். அது இதோ:

''குடிஅரசை ஒழிக்கச் செய்த முயற்சியால் 'புரட்சி' தோன்ற வேண்டியதாயிற்று. உண்மையிலேயே பாமர மக்களின் அதாவது பெரும்பான்மையான மக்களின் ஆட்சியாகிய குடிஅரசுக்கு

இடமில்லையானால், கண்டிப்பாகப் புரட்சி தோன்றியேதான் ஆகவேண்டும். அந்த அத்தீகப்படியே புரட்சி தோன்றியிருப்பதால் புரட்சியைப் புரட்சியில் பற்றுள்ள மக்கள் யாவரும் வரவேற்பார்கள் என்பதில் நமக்குச் சிறிதும் அய்யமில்லை.

''நமது முதலாளித்துவ ஆட்சியானது தனது காவலாளிகளாகிய பாதிரி வர்க்கத்திற்கு அடிமையாக இருக்க வேண்டியிருப்பதாக, குடிஅரசை அதன் முதுகுப்புறத்தில் குத்தி விட்டது. இந்தக் குத்தானது பாதிரிவர்க்கத்தை ஒழித்தால்தான் முதலாளி வர்க்கத்தை அழிக்கமுடியும்' என்ற ஞானபோதத்தை உறுதிப் படுத்திவிட்டது.''

புரட்சியின் முதல் தலையங்கம் தொடர்ந்து கூறுவதாவது:

மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு விரோதி.

மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி.

மதமே மனித சமூக சமதர்மத்துக்கு விரோதி.

மதமே கொடுங்கோலாட்சிக்கு உற்ற துணை.

மதமே முதலாளி வர்க்கத்துக்குக் காவல்.

மதமே சோம்பேறி வாழ்க்கைக்கு ஆதரவு.

மதமே உழைப்பவனைத் தரித்திரத்தில் ஆழ்த்தி, உழைக்காதவனை உச்சத்தில் வைப்பதற்கு உதவி என்கிற முடிவின் பேரிலேயே புரட்சி தோன்றியிருக்கிறது.

அய்ம்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இத்தலையங்கத்தைப் படித்தேன். உலக வரலாற்றை அளவுகோலாகக்கொண்டு அளந்து பார்த்தேன். அத்தனையும் சரியாக இருக்கக் கண்டேன். இப்போது படிக்கிற நீங்கள், இதைப் பலமுறை சிந்தியுங்கள். ஒவ்வொன்றும் முழு உண்மை என்பது புலனாகும்.

கருத்து மண்டலத்தில் உலாவிய பொது உடைமைக் கொள்கைக்கு முதன்முதல் செயல் உருவம் தந்த மாமனிதர், தோழர் லெனின் ஆவார். சமதர்ம முறையின் வளர்ச்சி பற்றி நினைக்கிற எவரும் அதற்கு வித்தூன்றிய லெனினைப் பற்றி நினைப்பது இயற்கை.

எனவே, 'புரட்சி' புதிய உலகம் தோற்றுவித்த லெனினைப் பற்றிய கட்டுரையைத் தாங்கி வந்தது. சோவியத் இரஷ்யாவில் நீதி முறை என்ற தலைப்பில் பல தொடர் கட்டுரைகளை வெளி

யிட்டது. அந்நாட்டு நீதிமுறை பற்றி பொதுமக்களுக்கு எடுத்துரைத்த முதல் தமிழ் இதழ் 'புரட்சி'யே ஆகும்.

சோவியத் நாட்டின் முதல் அய்ந்தாண்டுத் திட்டத்தை மொழி பெயர்த்துத் தமிழில் முதன்முதல் வெளியிட்டது, பெரியார் ராமசாமியின் 'புரட்சி' இதழே ஆகும்,

'புரட்சி' ரஷ்யாவின் 16 ஆண்டு பலன் என்னும் தலைப்பில், கண்திறக்கும் தகவல்களை வெளியிட்டது. அவை வருமாறு:

1. பள்ளிப் பிள்ளைகளுக்குச் சோவியத் சர்க்காரால் சாப்பாடு, உடை, ஜோடு ஆகியவை இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.
2. 5 ஆண்டுதிட்ட காலத்தில் 5கோடியே 80 இலட்சம் மக்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.
3. மூன்று ஆண்டுகளுக்குமுன், நாடெங்கும் கட்டாயக்கல்வி தொடங்கப்பட்டிருக்கிறது.
4. 1913இல் இரஷ்யாவில் 1000 பத்திரிகைகளுக்குக் குறைவாகவே இருந்தன. 1932 இல் 5000க்கு அதிகம்.

இப்படிச் சமதர்ம ஆட்சியின் அருமையான சாதனைகளையும் சிறப்புகளையும் பரப்புவதில் 'புரட்சி' முனைப்பைக் காட்டியது.

'பொது உடைமைத் தத்துவங்கள் என்ற நூலை பெரியாரின் 'குடிஅரசு' புத்தகாலயம் 1933இல் வெளியிட்டது. அதன் விலை எவ்வளவு? மூன்றணா; இப்போதையக் கணக்குப்படி பதினெட்டு காசுகள். முற்போக்குக் கருத்துகளைக் கொண்ட நூல்கள் தமிழ்ப் பொது மக்களுக்கு மலிவாகக் கிடைக்கச் செய்ததிலும் பெரியாரின் தொண்டு இணையற்றதாகும்.

பெரியவர்களின் படங்களையும், உருவங்களையும் வழிபாட்டுப் பொருள்கள் ஆக்குவது மூடநம்பிக்கையின் புதிய உருவம் ஆகும். ஆனால், அவற்றைப் புரட்சிக்கருத்துகளை நினைவூட்டும் பொருள்களாக மட்டும் பயன் படுத்துவதில் தவறில்லை.

இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டிலேயே கடவுள் வாழ்த்து, அரச வாழ்த்து, தலைவர் வணக்கம் முதலிய வாழ்த்துக்களை விட்டுவிடும்படி முடிவு செய்யப்பட்டது. அதையொட்டி பூசைக்குரியதாக அல்லாமல் சிந்தனைக்குத் தூண்டுகோலாக இருக்கும்படி லெனின் படத்தைத் திறந்துவைக்கப் பெரியார் ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சி 26-11-1933 அன்று ஈரோட்டில் நடந்தது. விழா நடந்த இடத்திற்கு 'ஸ்டாலின் மண்டபம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியது யார்? தமிழ்நாடு நாளிதழின் ஆசிரியர் டாக்டர் பி. வரதராஜுலு ஆவார். அதே நிகழ்ச்சியில், பெரியாரின் துணைவியார் மறைந்த நாகம்மையாரின் படமும் திறந்துவைக்கப்பட்டது. இரு படங்களையும் திறந்து வைத்தவர் ஒருவரே. அவர் எவர்?

தமிழ்த்தென்றல், 'நவசக்தி' ஆசிரியர், தொழிற்சங்கத் தலைவர், பின்னாளில் 'பொதுமை வேட்டல்' என்னும் நூலை எழுதியவராகிய திரு.வி. கல்யாணசுந்தரனார் ஆவார்.

இதே கல்யாணசுந்தரனார்தான் காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில், ஈ.வெ ராமசாமி கொண்டுவந்த 'வகுப்புரிமை'த் தீர்மானத்தை அவையோர்முன் வைக்கவும் விடாமல் நெருக்கடியை உண்டாக்கி, பெரியாரைக் காங்கிரசை விட்டே விலகும்படிச் செய்தவர்! வெவ்வேறு திட்டங்கள் பற்றி இருவருக்குமிடையே கடுமையான கருத்து மோதல்கள் ஏற்பட்டது உண்டு. அவ்வமயங்களில் ஒருவருக்கு ஒருவர் தாட்சணியப்பட்டுக் கொள்கைகளை விட்டுக் கொடுத்தார்களென்று எவரும் குற்றஞ்சாட்ட இயலாது. சில வேளை மாறுபட்ட கொள்கைகளின் நெருப்பாகக் காட்சி அளித்த அவ்விருவரும் உயர்ந்த பண்பாட்டிற்கு இலக்கணமாக விளங்கினார்கள்.

பொதுத் தொண்டில் ஈடுபடுபவர்கள், எல்லாக் காலமும் எல்லாக் கொள்கைகளிலும் மற்ற பெரியவர்களோடு முழுக்க முழுக்க ஒத்துப் போக இயலாது. அப்படிப்பட்ட நிலைக்குத் தங்களைத் தள்ளிக்கொள்பவர்கள் பொதுநலவாதிகளாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டு, தன்னலத்தைப் பேணிக்கொள்பவர்களாகவே இருக்கமுடியும்.

ஒரு முறையோ சிலமுறையோ கருத்து மோதல் ஏற்பட்டுவிட்டால் அதையே காழ்ப்புணர்ச்சியாக்கிக்கொண்டு, மாற்றார் முகத்தில் விழிக்கமாட்டேனென்று முரண்டுவது பண்பாடல்ல; பொது நலனுக்கு நல்லதல்ல.

எந்தெந்தப் பொதுநல நடவடிக்கைகளுக்கு எந்தெந்தப் பெரியவரை ஈடுபடுத்த வேண்டுமோ அவர்களைத் தனது விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவிட்டு ஈடுபடுத்துபவரே சமுதாயக் கண்ணோட்டமும் பொதுநலத்தில் அக்கறையும் கொண்ட பொதுநலவாதியாவார். அதற்குத் தந்தை பெரியார் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினார். எனவே, சமதர்மக் கோட்பாட்டில், தன்னைப்போன்றே பற்றுடைய திரு.வி. கல்யாணசுந்தரனாரைக் கொண்டு லெனினுடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கச் செய்தார், நிற்க,

# 15. சிவகங்கையில் சுயமரியாதை மாநாடு

1933ஆம் ஆண்டில் நடந்த 'பத்துப்பன்னிரண்டு சுயமரியாதை மாநாடுகளில் ஈரோட்டு சுயமரியாதை சமதர்மத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2-12-33இல் சிவகங்கையில் பெரியாரோடு சோவியத் நாடு சென்றுவந்த எஸ். இராமநாதன் தலைமையில் இராமநாதபுரம் மாவட்ட மூன்றாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. அம் மாநாட்டின் திறப்புவிழா உரையாற்றியவர் எவர்? குத்தூசி குருசாமியாரின் துணைவியார் தோழியர் குஞ்சிதம் அவர்களே.

2-12-33 இல் சிவகங்கையில் இராமநாதபுரம் மாவட்ட மூன்றாவது சுயமரியாதை மாநாட்டைத் தொடங்கி வைத்து, திருமதி குஞ்சிதம் குருசாமி, தமது உரையில்,

'நமது நாடு பொன் விளைந்த நாடு; தேனும் பாலும் பெருக் கெடுத்த நாடு; ஆனால் அன்னிய ஆட்சியால் வறுமையடைந்து விட்டது; நாம் ஆட்சி பெற்றதும் செழிப்புற்றுவிடும் என்று முழுப் பாரத்தையும் அன்னிய ஆட்சியின் தலையில் போட்டுவிடுவது சிலருக்குச் சர்வ சாதாரணமாய்ப் போய்விட்டது.

'உங்கள் வீட்டிலிருக்கும் 13 வயதுடைய விதவையை மறு மணஞ் செய்துகொடுக்க வேண்டாமென்று எந்த அன்னிய ஆட்சி கையைப் பிடித்துக் கொள்ளுகிறது?

'உங்கள் வீட்டு ஆண்களைப் படிப்பதற்கும், விளையாடுவதற் கும் அனுப்புவது மாதிரி, உங்கள் வீட்டுப் பெண்களையும் அனுப்பு வதை வேண்டாமென்று எந்த அன்னிய ஆட்சி தடுக்கிறது?

'எல்லா மக்களும் சாதிபேதமின்றி ஒன்றாய் வாழ்வதையும் எந்த அன்னிய ஆட்சி தடுத்துக் கொண்டிருக்கிறது?' என்று ஆணித் தரமாகக் கேட்டார்.

சாதி வெறி தணிவதற்குப் பதில், தேர்தல் தூண்டுதல்களால், அதிகமாவதையே, தன்னாட்சிபெற்ற இந்தியாவில் காண்கிறோம்.

விதவைத் திருமணம் இன்றும் அத்திப் பூத்தாற்போல்தான் நடக்கிறது.

பெண்களைப் படிக்க அனுப்புவதில் ஓரளவு முன்னேற்றங் காண்கிறோம்; எனினும் சமநிலை தொலைவில் இருக்கிறது. பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், பெண் கல்விக்கு இடையூறாக வருகிறது.

அன்னிய ஆட்சி ஒழிந்த பிறகு, இந்தியாவில் வறியோர் எண்ணிக்கை நஞ்சுபோல் ஏறக் காண்கிறோம். தொழில்கள் ஏராளமாகப் பெருகியும் நீர்த் தேக்கங்கள் பற்பல ஏற்பட்டும் ஒரு வேளைச் சோற்றுக்கே திண்டாடுவோர் எண்ணிக்கை பெருகக் காரணமென்ன?

பழைய சுரண்டல் முறை நீடித்தல்; அதிக வலுப்பெறுதல், ஓர் காரணம். அதைவிட ஆழமாக வேரூன்றிவிட்ட மற்றோர் காரணம், இந்தியாவின் தனித் தீங்காகும். அது என்ன?

கடவுள் வழிபாடு, பூசை என்றும், திருமணம், வளைகாப்பு காதுகுத்தல் ஆகிய சடங்குகளின் பேராலும் உணவுப் பொருட்களை, நேரத்தை, முயற்சியைப் பாழாக்குதல் மற்றோர் காரணம். தன்னாட்சி இந்தியாவில், அதுவும் அண்மைக் காலத்தில், ஆளுநர் முதல் ஏவலர் வரை, அரசமரத்தடி பொம்மைக்கு முழுக்காட்டக் கூட, முன்னே நிற்கிறார்கள். இதற்கா பெரிய அதிகாரிகள்? எத்தனை பொருட் செலவு? குடம் குடமாகப் பாலைக் கற்சிலை மேல் கொட்டினால், ஆயிரக் கணக்கான சிலைகள் மேல் கொட்டிப் பாழாக்கினால் — நாள் தவறாது பாழாக்கினால் — பச்சைக் குழந்தைகளுக்குப் பால் எங்கிருந்து கிடைக்கும்?

நெய் விளக்குகளுக்காக எரிக்கப்படும் நெய்யிற்கு அளவேது? எண்ணெய்க்குக் கணக்கேது? மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருட்களை இந்த அளவு அழிக்கும் மதம் இந்து மதம் ஒன்றே! அழிக்கும் மக்கள் இந்துக்கள் மட்டுமே!

விவரம் தெரியாத குழந்தையிடம் வைரத்தைக் கொடுத்தது போல், பகுத்தறிவு பெறாத பார்ப்பனரல்லாத ஊழியர்கள் கைகளில், உயர்வு ஊதியம், மேலும் உயர்வு ஊதியம்

என்று கொடுப்பது விழலுக்கு இரைத்த நீராகி வருகிறது. அவர்கள் வாழக் கற்றுக்கொள்ளவில்லை. வேலையில்லாத் திண்டாட்டமும் வறியோர் எண்ணிக்கையும் பெருகுவதைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை. நிற்க

சிவகங்கை மாநாட்டில், குஞ்சிதம் அம்மையார் பேசிய பேச்சின் மற்றோர் பகுதி இதோ:

'ஏனய்யா! அவர்களும்—சங்கராச்சாரி, பாதிரிகள், பண்டாரச் சன்னதிகள்—எங்களைப் போன்று பத்து மாதத்தில் பிறந்தவர்கள் தானே! அவர்களும் ரிக்ஷா இழுத்து அதனால் கிடைக்கும் கூலியைப் பெற்று வாழட்டுமே என்று தமிழ்நாட்டு வாலிபர்கள் கேட்கப்போகிறார்கள்'.

அந்த அம்மையார் மட்டுமல்ல; பல்லாயிரக் கணக்கானவர்கள், அத்தகைய நிலை தமிழகத்தில் உருவாகப்போகிறது என்று எண்ணினார்கள்: அதற்காகப் பாடுபட்டார்கள்; தியாகஞ் செய்தார்கள்.

எத்தனை பெரிய எதிர்பார்ப்பு! எத்தனை நம்பிக்கை!

சாணக்கியர் இராசகோபாலாச்சாரியார், புத்துணர்ச்சி வெள்ளத்தைத் திசை திருப்பிவிட்டார். பெரியாருடைய சுயமரியாதை சமதர்ம இயக்கத்தவர்களை, வேறு களத்திற்குப் பாய்ந்தோடவைத்துவிட்டார். அந்நிலையில் தேவையற்ற, படிப்பில் பட்டுப் போகும் பருவத்தினருக்குக் கட்டாய இந்திப் பாடத்தைத் திணித்து, தமிழர்களை வலுச் சண்டைக்கு இழுத்துவிட்டார். சமதர்ம நெடுஞ்சாலையில் விரைய வேண்டிய தமிழர் படை, இந்தித் திணிப்பைத் தடுக்கும் வழிக்குப் பாய நேர்ந்தது. அய்ம்பது ஆண்டுகளாகியும் அதிலிருந்து விடுபட்டு, சாதியொழிப்பு, சமதர்ம அமைப்பு, முதலிய பணிகளில், முனைய முடியாமல் தவிக்கிறோம்' நிற்க.

சிவகங்கை மாநாட்டிற்கு மீண்டும் செல்வோம். அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு எஸ். இராமநாதன், தமது உரையில்;

'சுயமரியாதை இயக்கத்தின் நேரிடையான இலட்சியம் மதங்கள் அழிய வேண்டும்; குருட்டு எண்ணங்களும் மூட நம்பிக்கைகளும் ஒழிய வேண்டும். இதற்கு ஏதோ சில தொண்டர்கள்

அடிபடுவதும், சில பத்திரிகைகள் அடக்கப்படுவதும் மாத்திரமே போதாது. பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் ஆண்களும் பெண்களுமாக, வீராவேசத்துடன் கிளம்பி, தங்கள் உயிரையும் பலி கொடுத்து, தங்கள் கொள்கையைச் சாதிக்க முன்வர வேண்டும்' என்றார்.

பல கோடி மக்களிடையே ஈராயிரம் ஆண்டுகளாக நிலைத்து விட்ட, பயனற்ற, கேடான, சமய நம்பிக்கைகள், அதிலிருந்து வடியும் சீழ் போன்ற, சாதி ஏற்றத் தாழ்வு உணர்ச்சிகள் இவற்றை அப்புறப்படுத்த கடுமையான மருத்துவம் தேவை. அம்மருத்து வத்தைத் தந்தை பெரியார் ஆற்றினார். போதிய அளவில், தமிழ் மக்கள், தங்களைப் பெரியார் மருத்துவத்திற்கு ஆட்படுத்திக் கொள்ளவில்லை. பெரியாரின் இயக்கம், ஆட்சிகளை வேலை வாங்கும் அளவிற்கு வலுப்பெற்ற பிறகு, தியாகஞ் செய்ய வந்தவர்களை விட ஆதாயம் தேட வந்தவர்கள் அதிகமானவர் கள். எரியும் நெருப்பில் வாழை மட்டைகள் வீழ்ந்தது. எனவே, மதவொழிப்புப் பணியும் சாதியொழிப்புப் பணியும் பழைய சூட்டில் நடக்கவில்லை. இது பெரியாரின் குறையல்ல; இயக்கத்தின் கோட்பாடுகளின் குறையல்ல. தமிழர் இயல்பில் குறை. தமிழர் களில் பலர், மாக்கல்லுக்கு ஒப்பானவர்கள். கருங்கற்கள் பயன் படுவதுபோல், மாக்கற்கள் பயன்படுமா?

நாம், வேலை தேடிக்கொள்வதில், சொத்து சேர்த்துக் கொள்வதில், உயர் பதவிகளுக்குச் சதி செய்வதில் காட்டிய ஆர்வத்தை, நம் சமுதாயத்தைத் தலைகீழாக மாற்றுவதில் காட்டவில்லை.

தென்னாட்டில் பெரியார் ஈ.வெ.ராமசாமி, சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை உருவாக்கி, அதற்கு ஆதரவாக, மாவட்ட மாநாடுகள் கூட்டி, மக்கள் ஒப்புதலைப் பெற்றுவரும் கால கட்டத்தில் இந்தியா முழுவதும் செல்வாக்குடைய பெரியவராகக் காந்தியார் விளங்கினார்.

அவர் அரசியல் உரிமைக்கு முன்னுரிமை கொடுத்த அளவு சமுதாய நீதிக்கும் பொருளியல் மாற்றத்திற்கும் கவனம் செலுத்தவில்லை என்பது பலருடைய கருத்து.

தக்ளி நூற்பு, கதராடை நெய்தல் போன்ற சிறு தொழில் களை வளர்க்கும்படி காந்தியார் கட்டளையிட்டார். அத்தகைய

சிறு தொழில்களை வளர்ப்பதால் எளியோர் ஓரளவு உணவும் உடையும் பெறுவார்கள் என்பது காந்தியாரின் கணக்கு. செல்வத்தைக் குவித்துவைப்போர் அறங்காவலர்களாக மாறிவிட வேண்டுமென்று காந்தியார் இதோபதேசஞ் செய்தார். அப்படி மாறிவிடுவார்களென்றும் கள்ளமறியாத காந்தியார் எதிர் பார்த்தார். எனவே பொருளியல் தலைகீழ் மாற்றக் கொள்கையைக் காந்தியார் பரப்பவில்லை.

காந்தியாரின் பொருளியல் முறைக்கு மாறான கருத்துடையவர்கள் என்ன நினைத்தார்கள்? அவர்களின் நினைப்பை, திருமதி குஞ்சிதம் தமது சிவகங்கை மாநாட்டுத் தொடக்கவுரையில் எதிரொலித்தார். அது என்ன?

"சுதேச சமஸ்தானத்து ராஜாக்களும், ஜமீன்தார்களும் ரோல்ஸ்ராய் மோட்டாரில் தான் போவார்கள். ஆனால் ஏழையாகிய நீ தக்ளி நூற்று சம்பாதிப்பதே சரி என்றும் இதுவே சுயராஜ்ய திட்டங்களில் ஒன்று என்றும் தோழர் காந்தியார் கூறுகிறார். ஆனால் தமிழ்நாட்டு இளைஞர்களோ அந்த ராஜாக்களும் ஜமீந்தார்களும் கல்லுடைத்துச் சம்பாதிக்கட்டுமே என்று கேட்கப்போகிறார்கள்" என்றார்.

அன்னியன் ஆண்ட அக்காலத்தில் அவ்வளவு வெளிப்படையாகப் பேச உரிமை இருந்தது; கேட்டுப் பின்பற்ற சமுதாயக் கண்ணோட்டமுள்ள மக்கள் இருந்தார்கள். 'வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்யும்' மக்கள் வாழ்ந்தார்கள். அந்தச் சோம்பேறிக் கூட்டத்தில் இடம் பிடித்துக் கொள்ள எதையும் செய்யத் தயங்காதவர்கள் இன்றைக்கிருக்குமளவு பெரிய அளவில் அன்று இல்லை.

சுதேச மன்னர்களும் பெருநிலக் கிழார்களும் கல்லுடைக்கப் போகாவிட்டாலும் அரியாசனங்களை இழந்துவிட்டார்கள். எஃகு மனிதர் வல்லபாய் படேலின் நடவடிக்கையால், மன்னர் ஆட்சிப் பகுதிகளும் பொதுமக்களுக்குச் சொந்தமான இந்தியாவோடு இணைந்து விட்டன.

தலைவிதி, பிறவிப் பயன், ஆகிய உளைச் சேறும் குடிசைத் தொழில்கள் என்னும் மயக்கப் பொருள்களும் பொதுமக்களின் சிந்தனையில் சூடேறாதபடி பார்த்துக்கொள்கின்றன. நிற்க.

மேற்கூறிய சிவகங்கை மாநாட்டின் முதல் முடிவு, இயக்கத்தவர்கள் சிலரின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தது.

இரண்டாவது முடிவு நம் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. அண்டை மாநிலமான கேரளத்தைச் சேர்ந்தவர்கள் எதனால் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதற்கு விளக்கமாக அமைந்துள்ளது. எனவே, அதையும் இங்கே குறிப்பது பொருத்தம். அம்முடிவு என்ன? இதோ.

'மலையாளத்திலுள்ள தீயா வகுப்பினர்கள், தாங்கள் இந்துக்கள் அல்லவென்றும் வேறு எந்த மதத்திலும் சேரத் தயாராக இல்லையென்றும் தங்கள் மாநாட்டில் தீர்மானித்திருப்பதை இம்மாநாடு பாராட்டுவதுடன் நம் நாட்டிலுள்ள இதர சமூகத்தாரும் மாநாடுகள் கூட்டி தாங்கள் மதமற்றவர்கள் என்று தீர்மானிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது'.

இதைப் பட்டிவீரன்பட்டி தோழர், டபிள்யூ, பி.எஸ். சௌந்தரபாண்டியன் முன்மொழிய, திருமங்கலம் மணிமாறன் வழிமொழிய, ஒரு மனதாக ஒப்புக்கொண்டது அம்மாநாடு.

அடுத்து, சமதர்மத்தை ஏற்றுக்கொள்ளும் முடிவை முன் மொழிந்தது எவர்? வழிமொழிந்தது எவர்? முன்மொழிந்தவர் தந்தை பெரியார். வழிமொழிந்தவர் பூவாளூர் அ. பொன்னம்பலனார்.

தந்தை பெரியார் பெருஞ்செல்வர் என்பது உலகறிந்தசெய்தி. பூவாளூர் பொன்னம்பலனார் வளமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அக்கால நிலைக்குப் பணக்காரர் கூட. பொது வாழ்க்கையில், தங்கள் தனி வாழ்வை மட்டுமின்றி வீட்டுச் செல்வத்தையும் கோணாது இழந்த நல்லோர்களில் அவர் ஒருவர்; பொன்னம் பலனார் சிறந்த அமைப்பாளர்; பேச்சாளர். இவ்விருவரும் ஏற்றுக் கொண்ட சமதர்மத்தை, சிவகங்கை மாநாடு ஏற்றுக் கொண்டது. அது பற்றிய முடிவு இதோ:

'ஈரோட்டில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் இலட்சியங்களையும் சமதர்மத் திட்டங்களையும் இம்மாநாடு ஆதரிப்பதுடன் அவைகளை மாகாண மாநாட்டிற்குப் பரிந்துரைக்கிறது'.

சிவகங்கை மாநாட்டுக்குத் தலைமை ஏற்ற தோழர் எஸ். இராமநாதன் மேற்படி முடிவு பற்றி மாறுபட்ட கருத்து கொண்டார். அதை அவர் நடத்திவந்த ஆங்கில இதழாகிய 'ரேஷனலிட்ஸ்' (பகுத்தறிவாளி) வழியாக வெளிப்படுத்தினார். தோழர் இராமநாதன் கண்ட குறைகள் என்ன?

1. ஈரோட்டில் தீட்டப்பட்ட, சுயமரியாதை சமதர்மத் திட்டம் என்பது, சுயமரியாதை இயக்கத்தில் பற்றுடைய சிலரால் எழுதப்பட்ட நகல்.

2. அத்திட்டத்தை வகுத்தவர்கள் அந்தச் சமயத்திற்கு ஏற்பட்ட கூட்டத்தார்கள்.

3. சங்க, கட்டுதிட்ட சம்மந்தமாகச் சில பிழைகள் அடங்கி யுள்ளன.

4. சட்டசபை, வட்ட, மாவட்ட சபைகளைப் பிடித்தல் சுயமரியாதைக் கொள்கைக்கு மாறுபட்டதாகும்.

5. சட்டசபைகளில் சமதர்மத்தை வாதிடல் ஆகாது. அதை அடைய தொழிலாளர் அமைப்புகளின் வழியாகப் போர் புரிய வேண்டும்.

சுயமரியாதை இயக்கத்தின் அமைப்பாளர்களில் ஒருவரும் தந்தை பெரியாரோடு, சோவியத் நாட்டிற்குச் சென்று, பார்த்து வந்தவருமான தோழர் இராமநாதனின் கருத்து மாறுபாடு அப்போது சிறிது சலசலப்பை ஏற்படுத்தியது. எனவே தந்தை பெரியார் 'குடியரசு' தலையங்கத்தின் வழியாக பதில் எழுதினார்.

'சுயமரியாதை சமதர்மத் திட்டத்தைத் தீட்டுவதற்காக, ஈரோட்டில் கூடியவர்கள், அப்போதைக்குக் கூடிய வெளியார் கூட்டமல்ல. மாறாக, சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டுள்ள செயல் வீரர்கள் ஆவார். அப்படியிருப்பினும் அத்திட்டத்தை வட்ட, மாவட்ட மாநாடுகளைக் கூட்டி, அவற்றின் முன் வைக்கிறோம். அதுவரை, பத்து இருபது மாநாடுகள் அத் திட்டத்தை ஒப்புக் கொண்டுள்ளன. அதையொட்டி நூற்று இருபது சங்கங்கள் சமதர்மத் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன மேற்கூறிய பொருள்பட பெரியார் பதில் எழுதினார்.

மூத்த பொதுஉடைமைவாதியான தோழர் ம. சிங்கார வேலுவும் அதே 'குடியரசி'ல் தனியொரு கட்டுரை வழியாக, தோழர் இராமநாதனுக்குப் பதில் கூறினார். அப்பதிலின் சுருக்கம் வருமாறு:

'சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை' உருவாக்கிய, ஈரோடு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பான்மையோர், சுயமரியாதை இயக்கக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆவார்.

ஒப்பாச்சாரங்களைக் கவனிக்காமல் இருந்தால் என்ன மூழ்கி விடப்போகிறது?

''கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ'' என்னும் பொதுஉடைமை அறிக்கை எந்தக் கமிட்டியில் உருவானது? தாம் கவனிக்க வேண்டியவை வருமாறு:

எடுத்த காரியம் என்ன? அது சரியா? சரியல்லவா? அது முடியுமா? முடியாதா?'

இப்படிப் பதில் கூறிய தோழர், சிங்காரவேலர், சட்டமன்றங்களின் வழியாக நிறைவேற்றப்பட்ட சில நல்ல, சீர்திருத்தச் சட்டங்களைச் சுட்டிக் காட்டினார்.

1. உடன்கட்டை ஏறுதலைத் தடை செய்தல்.

2. இந்து விதவைகளுக்குத் திருமண உரிமை வழங்கும் சட்டம்.

3. இந்து அறநிலைய சட்டம்.

4. குழந்தை மணத்தைத் தடுக்கும் சாரதா சட்டம்.

மேற்கூறியவைகளைப் போன்று சுயமரியாதை நோக்கங்களை சட்டசபை வழியாகச் செயல்படுத்தினால் என்ன தீமை? என்பது தோழர் சிங்காரவேலரின் வாதம்.

அன்றையச் சூழ்நிலையில் நின்று பார்த்தாலும், இராமநாதனுடைய முதல் இரு குறைகள் பொருளற்றவை. புரட்சிகரமான சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை உருவாக்கியவர்கள், அதற்காக மட்டும் கூடிய தெருக் கூட்டத்தவர்கள் அல்லர்; சுயமரியாதை இயக்கத்தின் நாடி நரம்புகளாக இயங்கிய, இன்னல் பல ஏற்ற, ஏற்க ஆயத்தமாக இருந்த பொறுப்புள்ள, சுயமரியாதை இயக்க முன்னணி வீரர்கள் என்பதை அன்றையப் பொது வாழ்க்கையில் இருந்த எல்லாப் பிரிவினர்களும் அறிவார்கள்.

சமதர்மம் கூடாது என்று இராமநாதன் கருதியிருந்தால், அடிப்படைக்கே எதிர்ப்பு சொல்லியிருக்க வேண்டும். அப்படிப் பட்ட கருத்தைக் கொண்டவர் அல்லர். எனவே, விதிமுறைகளில் பிழைகள் உள்ளன என்று அவற்றைப் பெரிதுபடுத்தியிருக்க வேண்டாம். கொள்கை சரியென்று ஏற்று இருந்த அவர் எப்

பிழைகளை எப்படித் திருத்தவேண்டுமென்று ஆலோசனை கூற உரிமை, தகுதி, பொறுப்பு மூன்றும் பெற்றவர்.

சட்டமன்றங்களின் வழியாகச் சமதர்மத்தைக் கொண்டுவர முடியாது. அதை நடைமுறைப்படுத்த, தொழிலாளர் அமைப்புகளின் வழியில் போர் புரியவேண்டும் என்று தோழர் இராமநாதன் கூறியது அன்றைக்கே பொருள் நிறைந்த கருத்தாகும்.

சார் அரசின் கடைசிப் பாராளுமன்றத்தில் பொதுஉடைமை வாதிகளான சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களால் பொருளியலில் எவ்வித பெரும் மாற்றத்தையும் கொண்டுவர முடியவில்லை என்பது வரலாறு.

# 16. புரட்சி ஏட்டின் தலையங்கம்

ஈரோட்டில், சுயமரியாதை இயக்கச் செயல் வீரர்களால் உருவாக்கப்பட்ட சுயமரியாதை சமதர்மத் திட்டம் பற்றி, தோழர் எஸ். இராமநாதனுக்கும், தோழர் சிங்காரவேலருக்கும் இடையே எழுந்த வாதம் கருத்து மாறுபாடு போல் முதலில் தோன்றியது. உண்மையில் அது கருத்து மாறுபாடு அல்ல என்பது பின்னர் புலப்பட்டது; நடைமுறை பற்றிய மாற்றுப் போக்கு மட்டுமே என்பது சில தினங்களில் வெளிப்பட்டது.

இதற்கிடையில். பெரியாரின் வார இதழான 'புரட்சி' சமதர்மக் கருத்தைப் பரப்புவதில் முனைப்பாக இயங்கியது. பற்பல பகுதிகளில் இருந்தும் சமதர்மத்திற்கு ஆதரவான கட்டுரைகள் வந்தன; வெளியாயின. கொழும்பிலிருந்து தோழர் அய்.எம். இப்ராஹீம் என்னும் அன்பரின் கட்டுரையில்,

'சர்வ மதங்களும் சர்வ முதலாளித்துவமும் ஒழிந்து, பகுத்தறிவு பரவி, சமதர்மம் நிலவினாலன்றி, மக்களுக்கு விமோசனம் இல்லை' என்று திட்டவட்டமாக எழுதியிருந்தார். இப்படிப் பல தெளிவான, தீவிர சிந்தனையாளருக்கு 'புரட்சி' இடமளித்தது. அதோடு நின்றதா? இல்லை.

17-12-33 நாளைய 'புரட்சி'யின் தலையங்கத்தைப் பார்ப்போம். அதன் ஒரு பகுதி வருமாறு:

''நாமும் நமது பகுத்தறிவைக் கொண்டு யோசிப்போம்.

ஒரு தனிப்பட்ட மனிதன், சமூக வாழ்வில் எந்தக் காரணத்தாலோ, உயர்ந்த சாதியானாகப் பாவிக்கும் யோக்கியதையை அடைந்து வருவதைச் சில தனி உரிமைகளை அடைந்து வருவதை இன்றைய தினம் நாம் ஆட்சேபித்து அப்படிப்பட்ட உரிமை யாவருக்கும் இருக்க வேண்டும் என்றும், அது எல்லோருக்கும் சரி சமத்துவமாக இருக்க வேண்டுமென்றும் கூறுகிறோம். இன்றைக்குச் சில சட்ட இடையூறுகள் இருந்தாலும் அவைகளையும் மாற்றி, புதிய சட்டங்களையும் புதிய பழக்கங்களையும் செய்ய வேண்டுமென்கிறோம்.

''இப்படிச் சொல்வது, அவ்வுயர் சாதிக்காரனுக்கு துவேஷமாகவோ அல்லது வேறு எந்த தப்பிதமாகவோ இருக்கின்றது என்று கருதி நாம் குற்றவாளியாக்கப்படுகிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

''அதுபோலவே, ஒரு தனிப்பட்ட மனிதன் எந்தக் காரணத்தினாலோ, ஒரு நாட்டை, இலட்சக்கணக்கான உயிர்களையும் ரூபாய்களையும் பறிகொடுத்து, ஜெயித்து, அரசனாகி, ஏக சக்கராதிபதியாகி, அந்நாட்டின் மீது ஆதிக்கம் பெற்று, வெகு காலமாக ஆட்சி செலுத்தி, பெருமையடைந்து வருவதை இன்று நாம் ஆட்சேபித்து,

'ஒரு நாட்டை ஆளும் பொறுப்பு அந்த நாட்டு ஜனங்களாகிய, எங்கள் எல்லோருக்கும் இருக்கவேண்டுமேயொழிய, சண்டையிட்டு ஜெயித்துவிட்டதனாலேயே, ஒரு தனிப்பட்ட மனிதன் அந் நாட்டைத் தனக்குச் சொந்தமென்று ஆளுவது, அதிகாரம் செலுத்துவது, எங்களுக்கு இஷ்டமில்லை. ஆதலால் அதை மாற்றக் கிளர்ச்சி செய்வோம்; புரட்சி செய்வோம்; அதற்கேற்ற சட்டங்கள் செய்யவும் முயற்சி செய்வோம். இதை யார் தடுத்தாலும் அத்தடுப்புக்குக் கட்டுப்படமாட்டோம்' என்று சொல்லுகின்றோம்.

''இப்படிச் சொல்வது இன்று எந்தச் சட்டத்திற்கு உட்பட்டது? அல்லது எந்தச் சட்டப்படி குற்றமாகப் பாவிக்கப் படுகிறது? இதை எந்த அரசாங்கம் துவேஷமாகக் கொள்ளுகிறது? ஏதாவது ஒரு அரசாங்கம் துவேஷமாகக் கொள்ளுகிறது என்றாலும் அதற்காக எல்லோரும் பயந்து, அக்கிளர்ச்சியை விட்டுவிடுகிறோமா?'' என்று 'புரட்சி' கேட்டது.

'மன்னர் ஆட்சியை ஏற்கமாட்டோம்; மக்கள் ஆட்சியே தேவை' என்னும் அரசியல் உரிமை உணர்வு எவ்வளவு முறையானதோ,

'எல்லோரும் சரிநிகர் சமம், என்னும் சமுதாய உணர்வு இயற்கையானதும் முறையானதும் ஆக இருக்கிறதோ, அதே தன்மையானதே, சொத்து சமுதாய உடைமையாக வேண்டுமென்று கோருவதும் என்று 'புரட்சி' வலியுறுத்திற்று. அதையும் காண்போம்.

"ஒரு தனி மனிதன் எந்தக் காரணத்தினாலேயோ, செல்வங்கள் தன் கைக்கு வரும்படியான முறைகள் செய்து, நாட்டு மக்கள் பாடுபட்டு உழைக்கும் பயன்கள், தனக்கு வந்து சேரும்படியான ஏற்பாடு செய்து, அதன் மூலம், ஒருவன் பொருளும் பூமியும் சேர்த்துப் பணக்காரனாகிவிட்டால், அந்தச் செல்வத்தைப் பொது ஜனங்கள் பார்த்து, 'அது எங்களுடைய செல்வம்; நாங்கள் பாடுபட்டதால், நீ சேர்த்துக்கொள்ள முடிந்தது; ஆதலால் எங்கள் எல்லோருக்கும் அதில் அனுபவமும் ஆதிக்கமும் இருக்க வேண்டுமென்று சொன்னால், அல்லது அதற்கேற்ற சட்டங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னால், இது எந்தச்சட்டப்படி குற்றமாகும்? இதை யார் எப்படி ஆட்சேபிக்க முடியும் என்பது நமக்கு விளங்கவில்லை.

"உலக வாழ்க்கையின் எந்தக் கொள்கையையும் எந்தத் திட்டங்களையும் எந்த அனுபவங்களையும் புரட்டி அல்லது மாற்றி அமைத்துக் கொள்ளவும் அனுபவத்தில் கொண்டு வரவும் மனித சமூகத்திற்கு உரிமை உண்டு என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆளும் மனிதனுக்கும் ஆளப்படும் மக்களுக்கும் உள்ள சம்பந்தம் எப்படியோ, அப்படித்தான், செல்வவான்களுக்கும் பாட்டாளிகளான ஏழை மக்களுக்கும் உள்ள சம்பந்தமாகும்.

"ஒரு கொடுங்கோல் அரசன் எப்படி தனது ஆட்சிக்குப் பீரங்கியையும் துப்பாக்கியையும் வெடிகுண்டையும் பட்டாளத்தையும் காவலாக வைத்திருக்கிறானோ அதைப்போல்தான் ஒரு செல்வவான் தனது செல்வத்துக்குக் கச்சேரியையும் (வழக்கு மன்றத்தையும்) சிறையையும் போலீசையும் ஆதரவாக வைத்திருக்கிறான்.

"ஒரு கொடுங்கோல் அரசை ஒழிப்பதற்கு, எப்படி நாம் பீரங்கியையும் துப்பாக்கியையும் வெடிகுண்டையும் கையாளுகின்ற மக்களைக் கூப்பிட்டு, 'தோழர்களே அரசர்கள் சொற்படி கேளாதீர்கள்; இனி, இதில் சம்பந்தப்படாதீர்கள்; விலகி எங்களுடன் சேர்ந்துகொள்ளுங்கள், ஆட்சியில் நம் எல்லோருக்கும் பொறுப்பும் பங்கும் பெறலாம்' என்று சொல்லவேண்டுமென்கின்றோமோ, அதேபோல்தான், தனிப்பட்ட மனிதனின் செல்வத்தன்மையை ஒழிப்பதற்கும் அதைப் பொதுவாக்குவதற்கும் அதேபோன்ற வழிகளைப் பின்பற்ற வேண்டியதாகும்' என்று தலையங்கம் தீட்டினார். பெரியார் அதோடு நிற்கவில்லை மேலும் வழிவகை சொன்னார். அதையும் பார்ப்போம்.

'உயர்ந்தசாதி என்னும் பேரால் தனிப்பட்ட உரிமைகளை அடைந்து வருவதையும் ஒழிக்க அப்படிப்பட்ட வழிகளைப் பின்பற்ற வேண்டியதாகும். இவைகளை எல்லாம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் குற்றம் என்றோ சட்ட விரோத மென்றோ சொல்லிவிட முடியாது.

''ஆனால், இப்படிப்பட்ட காரியங்களால், உயர்நிலையில் இருப்பவர்களுக்கு அதிருப்தி ஏற்படலாம். அதனால் எதிர்ப்பு ஏற்படலாம். இவையும் இயற்கையேயாகும். அப்ப்டிப்பட்ட அதிருப்திகள் எவையும் நீடித்து நிற்காது. அரை தலைமுறைக்குள் அவ்வதிருப்திகள் மறைந்துவிடும். பிறகு, உலக சுகபோகமே—வாழ்க்கை முறையே இப்படித்தான் என்ற எண்ணம் எல்லோருடைய மனதிலும் ஏற்பட்டுவிடும். பிறகு, அதிருப்தியோ எதிர்ப்போ, ஆன காரியங்களுக்கு இடமே இருக்காது. ஆதலால், இதற்காக எவரும் பயப்பட வேண்டியதில்லை'' — இப்படி நம்பிக்கையை வளர்க்க முயன்றது, 'புரட்சி' வார இதழ்.

# 17. பெரியாரும் அவர் தங்கையும் சிறைப்பட்டனர்

தந்தை பெரியாரின் அடிப்படை உணர்வு எது? மக்கள் இனப்பற்று.

மக்கள் இனத்திற்கு அரசியல் நிலை உண்டு. அந்நிலை எப்படி இருக்க வேண்டும்? குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு என்று இருக்க வேண்டும். அன்னிய ஆட்சி அதற்குத் தடை. தன்னாட்சி பெற்ற நாட்டிலும் அரசர்களும் சமயவாதிகளும் செல்வர்களும் விரும்பிய வண்ணம் ஆட்சி நடப்பது, மக்கள் நிலை அடைவதற்குக் கேடான வேர்ப்புழுவாகும்.

மனிதப் பற்றே, பெரியாரை, இந்திய விடுதலைப் போராட்டத்தில் குதிக்கவைத்தது. செல்வத்தில் திளைத்த அவரைச் சிறைச் சாலைக்குள் தள்ளியது; தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வை வளர்ப்பதில், தன்னேரிலாத வெற்றியைக் காணச் செய்தது.

மக்கள், சமுதாயத்தின் உறுப்பினர்கள்; சமுதாயத்தில் வாழ்பவர்கள். பெரும்பாலான இந்துக்களின் வாழ்க்கை, பிறவி பற்றி இழிவாக்கப் பட்டது; தாழ்த்தப்பட்டது. சாதி ஏற்றத் தாழ்வுகள் உலகில் எங்குமில்லாது இந்திய நாட்டில் மட்டுமே இருக்கும் தனிப்பெருங் கொடுமையாகும்; ஆழ வேரூன்றி விட்ட தீமையாகும். அதன் அடியைத் தேடிக் கண்டு பிடித்து, வேரோடு கல்லி எறியவேண்டும். மற்றவர்கள் இறங்க அஞ்சிய இப்பணியில் பெரியாரும் தன்மான இயக்கமும் முழு மூச்சோடு பாடுபடக் கண்டோம். சாதிக் கோட்டைகள் இடியா விடினும் பல விரிசல்கள் கண்டுவிட்ட நிலை, பெரியாரின் தொண்டின் விளைவாகும்.

அரசியல் விடுதலை என்னும் கருவியைப் பெற்று, அதைப் பயன் படுத்தி சாதிகளற்ற சமுதாயத்தை உருவாக்கினாலும் மக்கள் இனம் முழு மனித நிலையை எட்டிவிடாது.

மக்கள், பொருள்களை ஆக்குபவர்கள்; பொருள்களைத் துய்ப்பவர்கள். ஆக்கும் ஆற்றலுக்கு வாய்ப்பு பெறாதவர்கள்,

முழு மனிதர்களாக வளர இயலாது. துய்ப்பதற்கு இல்லாதவர் களும் மனிதத் தன்மையை அடைய முடியாது.

சுகவாழ்வு என்னும் சோம்பேறி வாழ்க்கை மனித இயலுக்கு மாறானது; மனித வளர்ச்சியைக் கெடுப்பது. அதேபோல் வறுமை வாழ்வு—பஞ்ச வாழ்வு—மனிதரைக் குறுக்கிவிடும். அவர்கள் கோணலின், கோழைத் தனத்தின், கசப்பின் நம்பிக்கை யின்மையின் கலப்பாகிவிடுவார்கள்.

எனவே, மனிதன் மனிதனாக மதிக்கப்படுவதற்கு, நடத்தப் படுவதற்கு, வளர்வதற்கு, வாழ்வதற்கு, அரசியல்முறை சமுதாய முறை, பொருளியல்முறை ஆகிய மூன்றுமே சீரமைக்கப்பட வேண்டும். இதை உணர்வதே, முழுமையான காட்சியாகும். இக் காட்சியைப் பெற்றிருந்த பெரியார் 17—12—33 நாளைய 'புரட்சி' வார இதழில் மூன்று மாற்றங்களும் ஒரே தன்மையன; ஒரே அடிப்படையைக் கொண்டவை என்று தெளிவாக்கினார்; அத்தகைய மாற்றங்களுக்காகப் பாடுபடுவது குற்றமல்ல என்று சுட்டிக் காட்டினார். அதற்குமேலும் சென்று, மேற்கூறிய மாற்றங்களால் உடனடியாகப் பாதிக்கப் படுவோர் உயர்நிலையில் இருப்போரே: அவர்கள் மனக்குறை படுவது இயற்கை; அக்குறை நீடிக்காது; அரை தலைமுறைக்குள் அகன்று விடும் என்று எழுதி நம்பிக்கையை ஊட்டினார். பெரியார் அப்படி நம்பிக்கையூட்ட அன்று காரணங்கள் இருந்தன.

அப்போது, வங்காளத்தில் நடந்த பரபரப்பான வழக்கு ஒன்றின் தீர்ப்பு, நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. வழக்கைத் தொடுத்தது, அம்மாநில அரசு. குற்றஞ் சாட்டப்பட்டவர் யார்? அனைத்து இந்தியத் தொழிலாளர் காங்கிரசின் அமைப்புச் செயலரான தோழர் ராஜம்காந்த்முகர்ஜி என்பவர் ஆவார். அவர் ஓர் பேச்சில், எட்டுக் கருத்துக்களை வெளியிட்டாராம். அதில் ஒன்று: 'நாட்டின் பொருளாதார வாழ்க்கையைத் தொழிலாளரே கட்டுப்படுத்த வேண்டும்' என்பதாகும். இது அரசிற்கு எரிச்சலை யூட்டியது; வழக்குத் தொடுத்து அடக்க முயன்றது. கல்கத்தா மாஜிஸ்டிரேட் வழக்கை விசாரித்தார். அவர் தமது முடிவில், 'பேச்சுரிமையானது நாகரீகமும் ஞானமும் வாய்ந்ததெனச் சொல்லிக் கொள்ளும் ராஜாங்கத்தின் எல்லா குடிமக்களுடையவும் பிறப்புரிமையாகும்' என்று சொல்லி முகர்ஜியை விடுதலை செய்தார். இதைப்பெரியார் குடியரசில் வெளியிட்டார். இம்முடிவு பேச்சுரிமையைக் காக்கும் என்று நம்பியது ஒரு காரணம் ஆகும்.

உயர் நிலையிலிருப்பதால், பாதிக்கப்படுவோர், அரை தலை முறையில் மனக் குறையை ஓட்டிவிட்டு நன் மக்களாக—சமத்துவ மக்களாக—வாழ ஒப்புவார்களென்று, பெரியார் நம்பக் காரணம் என்ன? இரஷ்ய அக்டோபர்ப் புரட்சியால், அதிர்ச்சியும் ஆத்திரமும் கொண்ட உயர்ந்தோர் முதலில் நான்காண்டுகள் போராடிப் பார்த்தார்கள்; அதில் தோற்றார்கள்; பிறகு புதிய சமதர்ம முறைக்குத் தங்களைப் பக்குவப் படுத்திக் கொண்டார்கள். சோவியத் மக்களின் மனநிலையை நேரில் அறிந்து வந்த பெரியார், நம் மக்களும் மனித நிலையடைய, அவ்வளவு விரைவில் உடன் படுவார்கள்; அவ்வளவு எளிதில் மனப்பக்குவம் பெறுவார்கள் என்று எதிர்பார்த்தார்.

நடந்ததோ வேறு வகையில். முதலில் அரசின் போக்கைக் கவனிப்போம்.

பிரிட்டனில் பேச்சுரிமைக்குப் பெருமதிப்பு கொடுத்து வந்த, ஆங்கிலேயர் அதே உரிமையை இந்தியர்களுக்கு வழங்கவில்லை. 1857இல் நடந்த முதல் இந்திய உரிமைப்போர் ஆங்கிலேய ஆட்சியாளரிடை கிலியை ஏற்படுத்தி விட்டது, நிர்வாக நடை முறைகள் பற்றிக் குறை சொன்னாலும் அதை ஆட்சியைக் கவிழ்க்கும் சதியாகவே கருதி அஞ்சத் தலைப்பட்டார்கள். பல மாவட்டங்கள் முழுவதுமே பொதுக்கூட்டங்களைத் தடை செய்து பார்த்தார்கள். அச்சகக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்து பார்த்தார்கள். ஆள் தூக்கிச் சட்டமியற்றி அதைப் பயன்படுத்தி அடக்க முயன்றார்கள். ஆட்சியை இழக்க எவருக்கு மனம் வரும்? எல்லாக் கெடுபிடிகளும் அடக்கு முறைகளும் எதிர்ப்பை கிளர்ச்சியை, போர்க் குரலை வளர்ப்பதையே கண்டது இந்திய ஆங்கிலேய ஆட்சி.

'மீரத் சதி' ஆட்சியின் கிலியைப் பலமடங்கு பெருக்கிற்று. அவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் பலர் பொது உடைமைவாதிகள், பகத்சிங்கின் லாகூர் குண்டுவீச்சு, அடக்கு முறையைப் பெருக்கிற்று. அரசு பொது உடைமைக் கொள்கையைப் பரப்புவதைத் தடை செய்தது.

உடனே நிர்வாகத்தின் நீண்டகரங்கள் பலரைப் பிடித்தன; தொல்லைப் படுத்தின. 20-12-33 அன்று பிற்பகல் 2 மணிக்குத் தந்தை பெரியாரும் அவரது தங்கை கண்ணம்மாளும் திடீரெனக் கைது செய்யப்பட்டார்கள், பெரியார் அப்போது 'புரட்சி'யின்

ஆசிரியர். திருமதி கண்ணம்மாள் அதை வெளியிடுபவர். எனவே புரட்சி அலுவலகத்தைக் காவல் துறையினர் சோதனையிட்டார்கள். நாற்பத்தாறு கடிதங்களைக் கைப்பற்றிக் கொண்டு போனார்கள். இருவர் பேரிலும் சாட்டப்பட்ட குற்றங்கள் எவை! பொது உடைமைக் கொள்கையைப் பரப்பியது; இரண்டாவது அரசு வெறுப்பு ஊட்டியது.

இக்காலத்தில் நிர்வாகமும் நீதியும் இணைந்திருந்தன. மாவட்ட நிர்வாகத்திற்குப் பொறுப்பாளியான மாவட்ட ஆட்சியாளரே மாவட்டக் குற்றவியல் நடுவராகவும் செயல் பட்டார்.

ஈ. வெ. ராமசாமி, கண்ணம்மாள் இவர்களின் வழக்கு கோவைமாவட்டக் குற்றவியல் நடுவராகிய ஜி. டபில்யூ. வெல்ஸ் முன் வந்தது.

வழக்கம் போல, ஈ. வெ. ரா. எதிர் வழக்காடாமல் வழக்கு மன்றத்தில் தன்னிலை விளக்க அறிக்கையைப் படைத்தார். அதைப் படிப்போம். அது வருமாறு:

(1) என் பேரில் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்குக்கு ஆதாரமே கிடையாது.

(2) வழக்குக்கு அஸ்திவாரமான 'குடியரசு' தலையங்கத்தை இப்போது பல தரம் படித்துப் பார்த்தேன், அதை நான் எழுதினேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

(3) அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களுக்காவது வாக்கியங்களுக்காவது ராஜத் துவேஷக் குற்றம் சாட்டப்படு மானால், இன்றைய அரசாங்கமுறை நிர்வாகமுறை முதலியனவை களைப் பற்றி ஆராய்ச்சி செய்து குறைகளை எடுத்துச் சொல்லவோ, அவற்றால் மக்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களை விலக்கப் பரிகாரம் தேட ஏற்பாடு செய்யவோ யாருக்கும் அதிகாரம் கிடையாது என்றுதான் முடிவு செய்யப் பட்டதாகும்.

(4) என்ன காரணத்தைக் கொண்டு என்மேல் ஆதாரமற்ற இந்தப் பிராது தொடரப்பட்டிருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால் என்னுடைய சமதர்மப் பிரசாரத்தை நிறுத்தி விடச் செய்வதற்காக முதலாளி வர்க்கமோ அல்லது மதசம்பிரதாயக்

—6—

காரர்களோ செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும் என்னும் முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. கட்டுரையின் விஷயத்திலாவது சாட்டப்பட்ட குற்றத்தின் அமைப்பே கிடையாது.

(5) முக்கியமாக அதில் சொல்லப்பட்ட விஷயமெல்லாம் கல்வி இலாக்காவின் சம்பளங்கள் அதிகமென்றும் பிள்ளைகளுக்குக் கல்விச் செலவு அதிகமென்றும் அதற்கேற்ற பயன் விளைவதில்லையென்றும் இப்படிப்பட்ட முறையால், லாபம் பெறும் பணக்காரர்களும் அதிகார வர்க்கத்தாரும் உத்தியோகஸ்தர்களும் சொல்லுவதைக் கேட்டு ஏமாந்து போகாமல் வரப்போகும் தேர்தல்களில் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்று ஏழைப் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டியதே ஆகும்.

(6) நான் 7, 8 ஆண்டு காலமாய்ச் சுயமரியாதை இயக்கச் சமதர்ம பிரச்சாரம் செய்து வருகிறேன். சமூக வாழ்விலும் பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழ வேண்டுமென்பது அப்பிரச்சாரத்தின் முக்கிய தத்துவமாகும்.

(7) நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை நாட்டு மக்கள் யாவரும் சமமாய் அனுபவிக்க வேண்டும் என்பதும் அவ்வுற்பத்திக்காகச் செய்யப்படவேண்டிய தொழில்களில் நாட்டு மக்கள் எல்லாரும் சக்திக்குத் தகுந்தபடி பாடுபடவேண்டும் என்பதும் அத்தத்துவத்தின் கருத்தாகும்.

(8) அவ்வியக்க லட்சியத்திலோ, வேலைத் திட்டத்திலோ, பிரச்சாரத்திலோ. அதற்காக நடைபெறும் குடியரசு பத்திரிகையிலோ பலாத்காரம், துவேஷம், இம்சை இடம் பெற்றிருக்கவில்லை. எந்த விதத்திலாவது அவை நமது நாட்டில் இடம் பெறுவது என்பது எனக்கு இஷ்டமான காரியம் அல்ல.

(9) அதற்கு அத்தாட்சி வேண்டுமானால், பல ஆண்டுகளாக இரகசிய போலீஸ் இலாக்கா சுருக்கெழுத்து அறிக்கைக்காரர்கள் எனது பிரசங்கத்தை விடாமல் குறித்து வைத்திருக்கும் அறிக்கைகளையும் சுமார் பத்தாண்டைய 'குடிஅரசு' பத்திரிகையின் கட்டுரைகளையும் சர்க்கார் கவனித்து வந்தும் என்மேல் இத்தகைய வழக்கை இதற்கு முன் ஏற்படுத்தியதில்லை என்பதே போதும்.

(10) அரசாங்கமானது முதலாளித் தன்மை கொண்டதாயிருப்பதால் அது இத்தகைய சமதர்ம பிரசாரம் செய்யும்

என்னையும் எப்படியாவது அடக்க வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதில் அதிசயமில்லை. தற்கால அரசாங்க ஆட்சியில் பங்கு பெற்று போக போக்கியமும் பதவியும் அதிகாரமும் அடைந்து வரும் பணக்காரர்களும் மற்றும் மதம், சாதி, படிப்பு என்கிற சலுகைகளைக் கொண்டு முதலாளிகளைப் போலவே வாழ்க்கை நடத்துகின்றவர்களும் இப்படிப்பட்ட அரசாங்கத்துக்கு நேர்முகமாவும் உதவி செய்து தீரவேண்டியவர்களாய் இருப்பதால், அவர்களும் இம்முயற்சிக்கு அனுகூலமாய் இருப்பதிலும் அதிசயமில்லை.

(11) பல நூற்றாண்டுகளாக உலக வாழ்க்கையில் கடவுள் செயல் என்றும் இயற்கையென்றும் கருதும்படியாகச் செய்து, நிலை நிறுத்தப்பட்டு, நடைபெற்று வரும் சமூக அமைப்பையும் பொருளாதார முறையையும் மாற்றுவது என்பது சிலருக்கு இஷ்டப்படாத காரியமாயிருந்தாலும் அவற்றை மாற்றி அமைத்தாலொழிய மக்கள் வாழ்க்கையில் உள்ள அநேக காரியங்களும் குறைகளும் நிவர்த்தியாகி சௌக்கியமாகவும், திருப்தியாகவும் வாழ முடியாது என்பது எனது உறுதி.

(12) இப்படிப்பட்ட ஒரு மாறுதல் உண்டாக ஆசைப்படுவதும் அதற்காகப் பலாத்காரம், துவேஷம், இம்சை ஆகியவை இல்லாமல் பிரச்சாரம் செய்வதும் குற்றமாகாது.

(13) ஏதாவதொரு கொள்கைக்குப் பிரச்சாரம் பரவ வேண்டுமானால் அக்கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்கள், அக்கொள்கைக்கு இடையூறு செய்பவர்களால் அடக்குமுறைக்கு ஆளாக வேண்டியதும் அவசியமேயாகும். அதற்காக நாமே வலுவில் போய் கஷ்டத்தைக் கோரி எடுத்துக்கொள்ளக் கூடாது என்றாலும் தானாகவே ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிடக்கூடாது. இந்தப் பிரச்சாரத்தைத் தடுக்க வேண்டுமென்று கருதி இந்த வழக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் எப்படியாவது எனது விஷயத்தில் துவேஷம், வெறுப்பு, பலாத்காரம் முதலியவை இருப்பதாகக் கற்பனை செய்து தீரவேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். அந்தப்படி செய்யப்படும். கற்பனைகளால் நான் தண்டிக்கப்பட்டாலும் பொதுவாக என்மீது நம்பிக்கையும், நல்லெண்ணமும் உடையவர்களும் சிறப்பாகக் கூட்டு வேலைக்காரத் தோழர்களும் தப்பான அபிப்பிராயம் கொள்ளக்கூடுமாதலால் அப்படிப்பட்ட கற்பனைகளை மறுத்து,

உண்மையை விளக்கிட வேண்டுமென்றே இந்த ஸ்டேட் மெண்டைக் கொடுக்கக் கடமைப்பட்டவனானேன்.

(14) இதனால் பொதுமக்களுடைய கவனிப்பு இன்னும் அதிகமாவதோடு அவர்களது ஆதரவும் பெற நேர்ந்து கிளர்சிக்குப் பலமேற்படக் கூடுமாதலால் என் மீது சுமத்தப்பட்ட இவ்வழக்கில், இந்த ஸ்டேட்மெண்டை மாத்திரம் கொடுத்துவிட்டு, எதிர்வழக் காடாமல் இப்போது கிடைக்கப்போகும் தண்டனையை மகிழ்ச்சி யோடு வரவேற்கிறேன்.

(15) இந்நிலையில் சர்க்கார் என்னைத் தண்டித்தாலும் சரி அல்லது இந்தப் பிராதுக்குப் போதிய ஆதாரமில்லையென்று நியாயத்தையும் சட்டத்தையும் லட்சியம் செய்து வழக்கை தள்ளி விட்டாலும் சரி, இப்படிப்பட்ட அடக்கு முறையை வரவேற்கு மாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

முடிவு என்ன?

பெரியாருக்கு ஆறு திங்கள் வெறுங்காவல்; அதோடு ரூபாய் 300அபராதம். கண்ணம்மாளுக்கு மூன்று திங்கள் வெறுங்காவல்; 300 ரூபாய் அபராதம்.

பொதுஉடைமைக் கொள்கையைப் பரப்பியதற்காகக் கிடைத்த தண்டனைகள் இவை.

# 18. புரட்சி ஏட்டில் சமதர்ம முழக்கம்

பொது உடைமைக் கொள்கையைப் பரப்பியதற்காக, ஈ. வெ. ராமசாமியும் அவரது தங்கை கண்ணம்மாளும் சிறைத் தண்டனை பெற்றதால் சமதர்மப் பேச்சு அடங்கி விட்டதா? இல்லை. சீரிய கருத்துக்களைக் கொடிய அடக்குமுறைகள் அழித்ததில்லை. உலக வரலாற்றின் சுருக்கம் இதுவே.

புரட்சியின் ஆட்சியாளராகப் பொறுப்பேற்ற ஈ.வெ. ராவின் அண்ணார், தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி இயக்கத் தோழர் களுக்குத் தெம்பூட்டினார். தன் கையெழுத்திட்டு எழுதிய 28-1-34 நாளையத் தலையங்கத்தில் அவர் கூறியதைக் கவனிப் போம். 'நமது கொள்கை சமதர்மமும் சமத்துவமுமானதற் கேற்றபடி, நமது இயக்கத்தவர்களும் ஒருவருக்கொருவர் சமமான வர்களே ஆவார்கள்' இப்படி உணர்த்திவிட்டு, பெரியார், வெளியில் இல்லாதபோது, தானே பெரியாராகக் கருதிக்கொண்டு அவரது தொண்டினைச் செய்ய வேண்டும் என்று வழிகாட்டினார். மற்றவர்களுக்குக் காட்டிய வழியை அவரும் பின்பற்றினார். எப்படி? சமதர்மத்திற்கு ஆதரவான கட்டுரைகளை வாங்கி வெளி யிட்டதால், சமதர்ம மாநாடுகளை நடத்தும்படித் தூண்டியதால், தமிழ்நாடு மாகாண முதல் சமதர்ம மாநாடு மன்னார்குடியில் நடந்தபோது, அதில் பங்கு கொண்டதால்.

கடவுள் நம்பிக்கையை அலசிப் பார்க்காமலே, சமதர்மக் கோட்பாட்டினை நடைமுறைப் படுத்திவிடாலாமென்ற விபரீத சிந்தனை, இன்று உலவக் காண்கிறோம். இது நிலத்தைப் பண் படுத்தாமலே, பயிரிடலாம் என்று முயல்வதற்கு ஒப்பாகும். இது இக்கால சமதர்ம இயக்கத்தவர்களுக்கு நன்றாகத் தெரியும் சமத்துவத்திற்கும் சமதர்மத்திற்கும் பக்குவப்படுத்த, கடவுள் கற்பனைப் பூண்டுகளை அவற்றோடு கலந்த சக்தி உணர்வுகளை உழுது மிதித்துவிட வேண்டுமென்று செயல் பட்டார்கள்.

ஈ. வெ. ராமசாமி விசாரணைக் கைதியாக, சிறையில் அடை பட்டுக் கிடக்கையில், ஏற்கனவே திட்டமிட்டபடி, சென்னையில்

முதல் நாத்திக மாநாடு நடந்தது. அதற்குத் தலைவர் யார்? தோழர் ம. சிங்காரவேலர். வரவேற்புக் குழுத் தலைவர் காஞ்சிபுரம் நாத்திக சி. கே. குப்புசாமி ஆவார். பொருளாளர் எவர்? குஞ்சிதம் அம்மையாரின் தந்தையார் திரு. தி. சு சுப்ரமணியம். அம்மாநாட்டில் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி தனது மனைவி ரெங்கநாயகி, மகள் மிராண்டா ஆகியோரோடு கலந்துகொண்டார். அம்மாநாட்டில் பின்னர் என்னை மணந்து கொண்ட காந்தம்மாவும் அவருடைய தங்கை வெங்கடேசம்மாளும் கலந்து கொண்டதைக் குறிப்பிட வேண்டும். அம்மாநாட்டு வரவு செலவுக் கணக்கு சில வாரங்களுக்குப் பின் 'புரட்சி'யில் வெளி யாயிற்று. செலவு இருநூற்றுச் சில்லரை ரூபாய்களே. நிற்க

'புரட்சி'யில் தோழர் ப. ஜீவானந்தம் தொடர்ந்து கட்டுரை களும் பாட்டுகளும் எழுதி வந்தார். 25-2-34 நாளைய புரட்சியில் ஜீவா எழுதிய 'ரஷ்யாவின் பாடம்' என்னும் பாடல் முதல் பக்கத்தில் வெளியாயிற்று. ஒரு பக்க அளவு உள்ள அப் பாடலில்,

'வேதம் ஜபதபம் வீழ்ந்து போச்சு
மின்சாரத்தால் வாழ்வு மேன்மையாச்சு
ஆதரவில்லை மதங்களுக்கே
அடிமாண்டது ஆதிக்கப் பேய்கிறுக்கே'

என்று பாடிப் பூரித்தார்.

பாட்டோடு நின்றாரா? அதே இதழில் அவர் 'சமதர்மம் என்றால் என்ன என்று விளக்கும் கட்டுரையையும் எழுதினார்.

'காம்ரேட்' என்னும் புனை பெயரில் எழுதிய மற்றோர் கட்டுரையின் தலைப்புக்குப் பொதுஉடைமையும் காந்தியப் பொருளாதாரமும் என்பதாகும்.

அக்கால கட்டத்தில், தோழர் ஜீவானந்தத்திற்குப் 'புரட்சி'யில் தாராளமாக இடம் கிடைத்தது. 29-4-34 நாளைய புரட்சி 'தொழிலாளர் எழுச்சி' என்னும் பாடலை வெளியிட்டது.

'கோடிக்கால் பூதமடா தொழிலாளர்
கோபத்தின் ரூபமடா'

எனப் புகழ்பெற்ற அப்பாடல் தொடங்குகிறது.

'யாவும் எனதுடைமை—புவிமிசையாவும் எனக்குரிமை' என்று ஜீவா எக்காளமிட்டு, அய்ம்பத்து நான்கு ஆண்டுகள் முடியப் போகிறது. நாமோ, வேறு பக்கம் பொய்ம்மான் வேட்டையாடிக் கொண்டே இருக்கின்றோம்.

புரட்சியில் சிங்காரவேலர், செ. தெ. நாயகம், சிதம்பரனார் சித்தக்காடு இராமையா ஆகியோர்களும் எழுதினர்.

ஈ. வெ. ராமசாமி சிறையில் இருக்கையில் பம்பாயில் ஆலைத் தொழிலாளர் எண்பதாயிரம் பேர்கள் வேலை நிறுத்தத்திற்குத் தள்ளப்பட்டார்கள். பெரியார் வெளியே இருந்தால் எவ்வளவு ஆர்வத்தோடு தொழிலாளர்களை ஆதரிப் பாரோ அதே ஆர்வத்தோடு, புரட்சி ஆதரித்தது. முதலாளித் துவத்தைக் கண்டிப்பதிலும் சூடு தணியவில்லை.

'குருட்டு முதலாளியும் செவிட்டு சர்க்காரும்' என்ற தலைப்பில் 'காம்ரேட்' என்ற பெயரில் சீவா எழுதினார். அதில் அவர் அடிக் கோடிட்டுக் காட்டியபடி, முதலாளியும் ஆட்சியும் கைகோத்து நிற்பதையும் தாண்டியே சமதர்ம உலகத்தைத் தரிசிக்க முடியும். இதை இளைய தலைமுறை உணர்ந்து விழித்து விட்டால்? சாதிக் கொடுமைகளும் வறுமைப்பாறைகளும் திமுதிமு எனச் சரிந்துவிழும்.

ஜீவானந்தம் எழுதியதுபோல, சே. நரசிம்மன், எம். ஏ. 'போல்சுவிக் ஆட்சி எல்லாத் தேசங்களிலும் நன்மை பயக்குமா?' என்னும் தலைப்பில் தொடர் கட்டுரைகள் எழுதினார். நாகை தோழர் டி. என். இராமச்சந்திரன் என்பவர் பகுத்தறிவிற்கும் சமதர்மத்திற்கும் உரமூட்டும் ஆய்வுக்கட்டுரைகளைத் தமிழில் பெயர்த்துக் கொடுத்து உதவினார்.

'சமதர்ம உலகைக் காண யுவர்காள் வம்மின்' என்று கொழும்பு எம். கே. எம். காதர் என்பவர் எழுதினார்.

பல சமயத்தவர், பல நிலையினர் அச்சமின்றித் தொடர்ந்து 'புரட்சி' யில் எழுதி வந்தார்கள்.

அப்போதைய இந்திய சட்ட மன்றத்தில் தோழர் ஜோஷி என்பவர் 'வேலை இல்லாத கஷ்டத்திலிருந்தும் சம்பளக் குறை விலிருந்தும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு அனுபவ சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்,

என்ற முடிவினை முன்மொழிந்தார். இப்போதுள்ள இந்திய ஆட்சிகளே கையை விரித்துவிடும். அன்றைய ஆங்கிலேய ஆட்சி ஆதரவு தரவில்லை. அதைக் கண்டித்து, 'பாதுகாப்பு மன்னர் களுக்கா? பட்டினிகளுக்கா?' என்று புரட்சி தலையங்கம் தீட்டியது.

பெரியார் மூட்டிய சமதர்மத் தீ, கொழுந்து விட்டெரியும்படி பார்த்துக் கொண்டார்கள் இயக்கத் தோழர்கள். அதில் குறிப்பிடத்தக்கது, இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் நடந்த சுயமரியாதை மாநாடாகும். அதற்குச் சில வாரங்களுக்கு முன் நடந்த மன்னார்குடி சமதர்ம மாநாடும் பெருமைக் குரியது.

உலகத் தொழிலாளர் நாளாகிய மே நாளைச் சிறப்பாகக் கொண்டாடச் செய்தது 'புரட்சி', சோவியத் ஆட்சியின் இரண்டாவது அய்ந்தாண்டுத் திட்டம் பற்றிய கட்டுரையை வெளி யிட்டது 'புரட்சி', ஆங்கில நாட்டின் இலக்கிய மேதையாக விளங்கிய பெர்னாட்ஷா பொதுஉடைமை பற்றிக் கூறியவற்றை வெளியிட்டது 'புரட்சி'. அவற்றை நீங்களும் தெரிந்து கொள்வது நல்லது. அவை இதோ!

'பொது உடைமை பரவப் பரவ நாகரிகம் வளரும்'

'பொது உடைமையின்றி நாம் வாழ முடியாது'

'நாளேற நாளேற, பொதுஉடைமை வாழ்வு மலர்ந்துவருகிறது'

தந்தை பெரியார், பொதுஉடைமைக் கொள்கையைப் பரப்பியதற்காகச் சிறைபட்டபிறகும் அவருடைய வார இதழாகிய 'புரட்சி' அதே பணியினைச் செய்து வந்தது.

'போல்சுவிக்கியக்கம்—லெனின் வெற்றி' என்னும் கட்டுரை 29-4-34 இல் வெளியாயிற்று. இரஷ்ய சிறைச்சாலைகள், குற்ற வாளிகளை நடத்தும் முறையைப்பற்றிய கட்டுரை வெளிவந்தது.

புரட்சியின் மற்றோர் இதழ், 'இன்றைய இரஷ்ய—குழந்தை இல்லங்களும் அரண்மனைகளும் ஆண் பெண் உறவும்' என்ற நீண்ட தலைப்புடைய கட்டுரையைத் தாங்கி வெளிவந்தது' அக்கட்டுரை, சோவியத் நாட்டிற்குச் சென்றுவந்த, நித்திய நாராயண பானர்ஜி எழுதியது. அதை ஏ. வி. சீனிவாசன் என்பவர் மொழிபெயர்த்திருந்தார். இக்கட்டுரை அடுத்த இதழிலும் தொடர்ந்து வந்தது.

'எல்லா உற்பத்திச் சாதனங்களையும் ஏகோபித்த கூட்டுறவு முறையில் சொந்தமாக்குவதோடு மாத்திரம் சோசலிசம் நின்று விடுவதில்லை.

உற்பத்திப் பொருள்களைச் சரிசமதையாக வினியோகப் படுத்துவதில் அதிகம் முனைந்து நிற்கிறது. இதைச் சுட்டிக் காட்டிய கட்டுரை, இந்தியாவின் தனித்தன்மையை நினைவில் கொண்டு சரியான வழி காட்டியது. அதைப் பார்ப்போம்.

'தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்கு முன்பு—அதுவும் அவர்களுடைய அடிமைத் தன்மை — அறியாமை — அந்தகாரம்— மூடக் கொள்கைகள் முதலிய யாவும் மற்றும் ஆட்சியாளர் நலனுக்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு வீறிட்டு நிற்கும் சமஸ்தானாதிபதிகள் — பிரபுக்கள் — நிலச்சுவான்தாரர்கள் முதலிய முதலாளித்துவ ஆக்கங்கள் யாவும் இவை போன்ற பிற நூற்றுக் கணக்கான சக்திகளோடு, எதிரிட்டுப் போராட வேண்டுமென்று அறிவுறுத்தியது.'

நூற்றுக் கணக்கான ஆதிக்கங்களை எதிர்த்துப் போராட என்ன தேவை என்பதையும் 'புரட்சி' இதழின் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்.

'தேவையான, விரைவான, நடவடிக்கையானது, தொழிலாளர்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பார்களையும் ஒன்று படுத்தி, அவர்களுக்கு ரோஷத்தைக் கிளப்பிவிட்டு, சோசியலிசத்துக்குச் சரியாகக் கொண்டு செலுத்துவதேயாகும் என்று திசை காட்டிற்று.

உலகின் எந்த நாட்டிலும் பிறவியைக் காட்டித் தாழ்த்தப் பட்டவர்கள் கிடையாது. மற்ற தனியுடைமை நாடுகளில், ஏழை, பணக்காரன் என்ற இரு பிரிவே உண்டு. இவை நிலையான பிரிவு அல்ல; பிறவி பற்றிய பிரிவும் அல்ல; ஏழை, சட்டத்திற்குட் பட்டோ, சட்டத்திற்கு அப்பாலோ, பணக்காரனாகிவிட முடியும், ஆவதைக் காண்கிறோம். சில வேளை, பணக்காரன், ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி ஏழையாவதையும் காணலாம். ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பார், ஆயுள் உள்ளவரை தாழ்த்தப்பட்டவர் களே, எவ்வளவு படித்தாலும் தாழ்த்தப் பட்டவர்களே; எவ்வளவு நுட்பத் திறன் பெற்றாலும் அந்நிலையே. எவ்வளவு குண சீலனாயினும் அந்நிலையை விட்டு மீள முடியாது.

இக்கொடுமையின் விளைவு என்ன? இந்தியச் சமுதாயத்தின் ஆறில் ஒரு பங்கினர் ஒட்டுமொத்தமாக ஒடுக்கப்பட்டவர்கள்.

எல்லாச் சாதிகளிலும் சில சிறு பெரு முதலாளிகளைக் காண முடியும். சிறுபெரும் நில உடைமைக்காரர்களைக் காணமுடியும் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரில், முதலாளி உண்டா? இல்லை; பண்ணையார் உண்டா? இல்லை; குறுநில மன்னர் உண்டா? இல்லை.

அய்ம்பது ஆண்டுகள் வரை அத்தனை கோடி தாழ்த்தப் பட்டோரும் அன்னக் காவடிகள் என்று கூடச் சொல்லிவிடலாம். அப்படியென்றால், அத்தனை கோடி மக்களும் சமதர்மத்திற்காகக் களத்தில் நின்று போராட வேண்டியவர்கள்.

'சாதியும் ஒழிக; தனியுடைமையும் ஒழிக' என்று வீறு கொண்டு, போராடுவதற்கு உரிமையும் தேவையும் இருந்த அப்பெரும் பிரிவின், மான உணர்ச்சியை நாம் தூண்டிவிட்டோமா அவர்களுக்குச் சமதர்ம திசை காட்டி, அவர்களோடு இணைந்து நடந்தோமா?

தொழிலாளர்களை மட்டும் அணி சேர்த்த, இந்திய பூர்ஷ்வா இனம் தாழ்த்தப்பட்டவர் களுக்காகவும் போராடி அவர்களோடும் கைகோத்துப் பாடுபட்டிருந்தால், சாதிக் கொடுமையும் பணக் கொழுப்பும் தனியுடமையும் இதற்குள் பழங்கதையாகியிருக்கும். வருங்காலத்தில் அப்படி நடக்குமென்று எதிர்பார்த்துத் தாழ்த்தப் பட்டோர் ஏமாறக் கூடாது.

'காலுக்குச் செருப்புமில்லை; வயிற்றுக்குக் கூழுமில்லை' என்பது, அய்யருக்கோ, முதலியாருக்கோ, பிள்ளைக்கோ வந்துள்ள நோயல்ல. இந்நோய்' நாய்க்கர் பிரிவையோ, நாடார் பிரிவையோ, வாட்டுவதை விட அதிகமாக, பரவலாகத் தாழ்த்தப் பட்டோரை வாட்டுகிறது. எனவே தாழ்த்தப் பட்டோர் அனைவரும் சாதி யொழிப்புத் தேனில் சமதர்ம கார மாத்திரையை இழைத்துச் சாப்பிட முன்வர வேண்டும்.

தொழிற்சாலை போன அய்யர், பண்ணையிழந்த பிள்ளை, நாயக்கர், முதலியார், பல்விழந்த பாம்பின் நிலைக்கு ஆளாவார் கள். அவர்களின் சாதி நஞ்சு வலிவிழந்துவிடும். பழக்கக் கொடுமையால் சிறிது காலம் மிரட்டலாம்; நாமும் மிரளலாம்

ஆனால் நெடுநாளைக்குச் செல்லாது. எனவே, பிறவித் தொழிலாளிகளான தாழ்த்தப்பட்ட உடன் பிறப்புகளே, மான உணர்வும் பொதுஉடைமை உணர்வும் வளர்ப்பதில் முனைப்பாக யிருத்தல் நல்லது. நிற்க.

ஆதிக்கவாதிகளின் குறும்பு நீடித்தது. மன்னார்குடியில் ஒருவரைக்கொண்டு 'புரட்சி'யின் ஆசிரியரான தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி மீது மான இழப்பு வழக்கு தொடரப் பட்டது. பெரியவர் 2-6-34 இல் ஈரோட்டில் கைது செய்யப் பட்டார். அவர் காப்புப் பணம் கட்டிவிட்டு வெளியேவந்து எதிர் வழக்காடினார். இறுதியில் வழக்கு தள்ளுபடிச் செய்யப்பட்டது?

வெளியிடுவோராகிய கண்ணம்மாவைச் சும்மாவிட்டார்களா? ஆசிரியர் பெயர் இல்லாது வெளியிட்டதற்காக வழக்குத் தொடுத்து ரூபா 100 அபராதம் விதித்தனர்.

இதற்கிடையில், சிறையிலிருந்து ஈ. வெ. ராமசாமி விடுதலை ஆனார், சமதர்மப் பணியைத் தொடர்ந்தார்.

கோவை மாவட்ட திருப்பூரில் 1934 ஆம் ஆண்டு மே திங்கள் 20, 21 நாள்களில் செங்குந்தர் 12 ஆவது மாநாடும், செங்குந்த வாலிபர் 2 ஆவது மாநாடும் நடந்தன. வாலிபர் மாநாட்டிற்குத் திரு. கா. ந. அண்ணாதுரை (அறிஞர் அண்ணா) தலைமை தாங்கினார்.

தந்தை பெரியார் அம்மாநாடுகளில் கலந்துகொண்டார். அப்போதுதான் அண்ணா பெரியாருக்கு அறிமுகம் ஆனார்.

பெரியார் அப்போது, 'சமதர்மம்' பற்றி உரையாற்றினார். அவ்வுரையின் நடுவே,

'இன்று ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் ஆளுக்கொரு வேலை செய்து சமமாக உண்டு, உடுத்திக் களிப்புடன் வாழ்க்கை நடத்துவதில்லையா? அதுபோலவே ஒரு கிராமம், ஒரு ஜில்லா, ஒரு மாகாணம் அல்லது நாட்டிலுள்ள சகல மக்களும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல வாழ முடியாதா? நாட்டில் உள்ள சொத்துக்களைத் தனித்தனியாக அவனவன் விருப்பம்போல் அனுபவிக்கும் தனியுரிமை யாருக்கும் இல்லை' என்று விளக்கினார்.

கஷ்டப்பட்டு உழைக்காது சுகவாழ்வு வாழ்வதும், தேவை களுக்கு மேற்பட்ட சொத்துகளுக்குச் சொந்தக்காரனாக

இருப்பதும் ஒரு கௌரவம் என்றும் கண்ணியமானது என்றும் கருதுவது ஒரு மூடநம்பிக்கையே தவிர வேறில்லை' என்று பெரியார் இடித்துரைத்தார்.

தனியுடமையால் பணம் பாழாவதைச் சுட்டிக்காட்டுவதைப் பாருங்கள்.

'மனிதனுக்கு மூன்று அல்லது நான்குமணி நேரம் மோட்டார் வேண்டியிருக்கும். இதற்காக இருபதுமணி நேரம் யாருக்கும் பயனின்றி இருக்கிறது. இதில் வீணாகப் பணம் முடங்கிக் கிடக்கிறது' என்றார்.

3-6-34 நாளைய புரட்சியில் வெளியான ஒரு கட்டுரையின் சிறு பகுதியைப் படியுங்கள்.

'இலவசமாக வீசும் பிராண வாயு, கோடீசுவரன் நுரையீரல் களில் நுழைகிறதே, அப்பரிசுத்த வாயுவே ஏழையின் தேகத்திலும் பட்டு சுகத்தை உண்டாக்குகிறது. முதலாளித் தத்துவம் காற்றைத் தமக்கு என்று ஏராளமாகச் சேமித்து வைத்து ஏழைக்குச் சிறிதளவே கொடுத்து உதவும்படித் திட்டம் வகுக்கக் காணோம். காற்றுக்குத் தடையில்லாதபோது, மற்றவைகளுக்குத் தடைகளும் விதிகளும் இருப்பானேன்? இக்கேள்வி பொருத்தமானதே.

# 19. சமதர்மத் திட்டம்: நீதிக் கட்சி ஏற்றது—காங்கிரசு மறுத்தது

அரிமா, அச்சம் அறியாதது. தன்மான இயக்கத்தின் தந்தை சிறைக்கஞ்சாச் சிங்கம். எனவே, பொதுஉடைமைக் கொள்கையைப் பரப்பியதற்காகச் சிறைப்படினும் அப்பணி நிற்கவில்லை. அது தொடர, வழிவகை செய்ததை முன்னர் கண்டோம். ஈ. வெ. ராமசாமி சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்த பிறகு திருப்பூர் செங்குந்தர் மாநாட்டில், சமதர்ம முழக்கம் எழுப்பியதைக் கண்டோம்.

'புரட்சி' வாரஇதழ் வாயிலாகவும் மேடைப் பேச்சுகளின் வழியாகவும் சமதர்மக் கொள்கையைப் பெரியாரும் அவரது பெருந்தொண்டர்களும் பரப்பிவரும் வேளையில், தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற பெயருடையநீதிக் கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்ட மொன்று சென்னையில் 1934 ஆம் ஆண்டு ஜூன் 7, 8, நாட்களில் நடக்குமென்று அறிவிக்கப்பட்டது. அக்கட்சியின் பேராதரவாளரான ஈ. வெ. ராமசாமிக்கும் அழைப்புவந்தது. அக்கட்சியை எடை போடவும் அதை எதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று வழிகாட்டவும் அவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார் பெரியார்.

'புரட்சி' இதழில் ஈ. வெ.ராமசாமி பின்வருமாறு எழுதினார்:

'ஜஸ்டிஸ் கட்சியானது அரசியலிலும் சமூக இயலிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வாழ்க்கைப்போட்டியில் சம சந்தர்ப்பம் இல்லாத மக்களுக்கும் விடுதலையும் சமத்துவமும் அளிப்பதற்காக என்று தோற்றுவிக்கப்பட்டது என்கிற உண்மை யாவரும் அறிந்ததாகும். அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியானது, இப்போது, நாளடைவில் செல்வந்தர்களான முதலாளிமார்கள், ஜமீந்தார்கள் ஆதிக்கத்திற்குள்ளாகி, அவர்களது நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும் பெருக்கிக் கொள்ளவுமான வழிகளுக்கே பயன் படக்கூடிய மார்க்கங்களில் திருப்பப்பட்டு வருகின்றது என்ற விஷயம் பார்ப்பனரல்லாத மக்களில் பெரும்பான்மையோர் அறிந்ததாகும்.

அன்றைய நிலையைத் துல்லியமாக மதிப்பிட்ட, ஈ. வெ. ராமசாமி, அக்கட்சியைச் சரியான வழிக்குக் கொண்டுவரலா மென்று நம்பினார். அவர் எழுதியதை இப்போது படிப்போம்.

'ஆனாலும் அதை (ஜஸ்டிஸ் கட்சியைப் பழையபடி), தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மக்கள் விடுதலைக்கும் சமத்துவத்துக் கும் திருப்ப முடியாது என்று சொல்லி விடுவதற்கில்லை, என்பது இன்னமும் நம்முடைய கருத்தாகும்.

'மக்கள் ஒரு கட்டுப்பாடாய் இருந்து, நெருக்குவார்களானால், அவர்கள் வழிக்கு வந்து, கட்சியின் உண்மை நோக்கத்திற்கு உழைக்க முன் வந்தாலும் வரலாம்.'

அக்காலத்தில் தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் தாழ்த்தப் பட்டவர்களின் மேல் சுமத்தப் பட்டிருந்தஇழிவையும், ஏழைகளின் மேல் திணிக்கப்பட்டிருந்த வறுமைக் கொடுமையையும் ஒருங்கே தூக்கியெறியத் துடித்தவர்கள் பிற கட்சிகளைவிடப் பெரியாரின் கட்சியில்தான் ஏராளமாக இருந்தார்கள். அன்று சாதியொழிப் பிற்கு நீதிக்கட்சியாளரிடையே இருந்த அளவு ஆதரவுகூட தமிழ் நாட்டின் பிற அரசியல் கட்சிகளிடம் இல்லை. எனவே ஈ. வெ. ராமசாமி முழு நம்பிக்கையோடு ஈரோடு சுயமரியாதைச் சமதர்மத் திட்ட அடிப்படையில், நீதிக்கட்சியின் ஆலோசனைக் கூட்டத்திற்கு ஒரு செயல் திட்டத்தை அனுப்பிவைத்தார். புரட்சிகரமான அத்திட்டம் என்ன சொல்லிற்று?

1. பொது மக்களின் சேவைக்கும், சௌகரியத்துக்கும், நன்மைக் கும் அவசியமென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழிற்சாலைகள், இயந்திர சாதனங்கள் போக்கு வரவு சாதனங் கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படிச் செய்ய வேண்டும்.

2. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயி களுக்கும், அவற்றை வாங்கிப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கும் இடையே தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றின் வழியாக விவசாயி களின் துன்பங்களையும், சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அப்புறம்?

3. விவசாயிகளுக்கு இன்று உள்ள கடன்களை ஏதாவது ஒரு வழியில் தீர்ப்பதுடன், இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லை ஏற்படாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

வகுப்புவாரி உரிமைக்குப் போராடிய ஈ. வெ. ரா. அவ்வுரிமை சுரண்டல் உரிமையாக மாறிவிடக்கூடாது என்பதில் தெளிவாகவும், உறுதியாகவும் இருந்தார். அவர் அனுப்பிய திட்டத்தில் ஒரு பகுதி இதோ:

'அரசாங்க உத்தியோகச் சம்பளங்கள், மக்களின் பரிசுத்த தன்மையைக் கெடுக்கக்கூடியதாகவும் இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிகமிக தாங்க முடியாததாகவும் இருப்பதால் அவைகளைக் குறைத்து, உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும், மீத்துப் பெருக்கிவைப்பதற்கு லாயக்கில்லாததாகவும் இருக்கும்படிச் செய்யவேண்டும்.'

தன்னாட்சி இந்தியா, உற்பத்திச் சாதனங்களைச் சமுதாய உடைமையாக்கத் தவறிய போதிலும் இலாபத்திற்கு உச்சவரம்பு, சம்பளத்திற்கு உச்சவரம்பு, சொத்துக்கு உச்சவரம்பு ஆகியவற்றைக் கொண்டுவந்து நடைமுறைப் படுத்தியிருந்தால் நம் பொருளியல் நிலை இவ்வளவு படுமோசமாகியிராது.

நாட்டுடைமையானவை ஊட்டத்திற்குப் பதில் நலிவை வளர்த்திருக்காது. வேலை வாய்ப்பு வாய்க்கால்கள் அடைபட்டுப் போன நிலை உருவாகியிருக்காது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளோர் இவ்வளவு பெருகியிருக்க மாட்டார்கள். தேர்தலை மட்டும் சிந்தித்துக்கொண்டிருக்கும் எந்த இந்திய அரசியல் கட்சியும் வரம்புகள் கட்டும் சூழ்நிலையைக்கூட உருவாக்கப் போவதில்லை.

ஈ. வெ. ராமசாமி நீதிக்கட்சியின் ஆலோசணைக்கு அனுப்பிய திட்டத்தில் மதநம்பிக்கை பற்றியும் குறிப்பிட்டார். அந்த ஆலோசனை என்ன?

'மதங்கள் என்பவைகள் எல்லாம் அவரவர்களுடைய தனி எண்ணமாகவும், தனி அமைப்புகளாகவுமே இருக்கும்படிச் செய்வதுடன் அரசியலில், அரசியல் நிர்வாகத்தில் அவை எவ்வித சம்பந்தமும் குறிப்பும் பெறாமல் இருக்க வேண்டும். சாதிக்கென்றோ, மதத்திற்கென்றோ எவ்வித சலுகையோ உயர்வு தாழ்வு நிலையோ, அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்

பட்ட முறைகளைக் கையாளுவதோ, ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக்கூடாது.'

சமதர்மத்தின் இன்றியமையாத கூறு, இரண்டறக் கலந்த கூறு, எது? சாதி பற்றியோ மதம் பற்றியோ எவருக்கும் சலுகை தராமை. இப்போதுள்ள சலுகைகள் பற்றிப் புழுங்குவோர், கூப்பாடு போடுவோர், எதிர்த்துப் போராடத் துடிப்போர் சமதர்மத்திற்குப் போராடினால் அப்போராட்டத்திற்குப் பொருள் உண்டு. இல்லாவிடில் சுரண்டல் கூட்டத்தின் பங்கு சண்டை என்ற அளவில்தான் அது முடியும். அது எல்லோரையும் வாழ்விக்கப் பயன்படாது.

'மனிதன் ஆயிரங்காலத்துப்பயிர்' என்பது உலக வழக்கு. தனி மனிதனுடைய வயது, அதிகம் போனால் நூறு ஆண்டுகள். மக்கள் இன வயது அதற்குமேலும். மனிதர்கள் மறைந்த பிறகும் இனம் தொடரும்: பல்லாயிரம் ஆண்டுகள் தொடரும். இதை நினைவு படுத்துவதே மேற்கூறிய வழக்கு. சரி, அது நமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன?

நெம்புகோல், தேரை நிலையிலிருந்து கிளப்பிவிடலாம். அதே போல், சில தலைவர்களின் நெம்புதலால் தேங்கிக் கிடக்கும் சமுதாயம் நகரலாம். நகர்த்துவதற்கு உறுதியும் கூர்மையும் உடைய சிலர் போதுமானவர்களாக இருக்கலாம்.

நம்முடைய சமுதாயத்தின் தேவை என்ன? நகர்தல் அல்ல; தலைகீழான மாறுதலே. அத்தகைய மாறுதலும் ஒரோவேளை பல முற்போக்காளர்களின் முயற்சியால் நிகழலாம். அதுபோதாது. அது நிலைத்து நிற்க வேண்டும். நிலையான தலைகீழ் மாற்றத்திற்கு வேர் எது? கல்வி அறிவு. அக்கல்வி அறிவின் உட்கரு எது? எழுத்தறிவு.

தன்னாட்சி இந்தியாவின் பெரியவர்கள் இதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை.

'மந்திரத்தால் மாங்காய் விழும்' என்பதை நம்பாத, காரண காரியங்களின் தொடர்புகளை உணர்ந்த பகுத்தறிவுப் பகலவனாகிய ஈ. வெ. ராமசாமி அவை உருவாக என்னென்ன தேவை என்பதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சமதர்ம ஆட்சிமுறைக்கு உயிர்நாடியான அறிவுக்கு வழி செய்வதையும், ஈ. வெ ராமசாமி தமது திட்டத்தில் சேர்த்தார்

இதோ அப்பகுதி :

'குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் குறிப்பிட்ட ஓர் அளவு கல்வி யாவது, எல்லா மக்களுக்கும் ஏற்படும்படியாகவும் செய்வதுடன் இது நடந்து வருகிறதா என்பதையும் அடிக்கடிக் கவனித்து, தக்கது செய்ய, ஏற்பாடு செய்ய வேண்டும்.'

சமுதாய மாற்றத்திற்குச் சரியான, முறையான, கல்வியின் பங்கு மிகப்பெரியது. அத்தகைய கல்வியை உறுதிப்படுத்தாமல், நடக்கும் எந்தமாற்றமும் நெடுநாளைக்கு நிலைக்காது. அதை உணர்ந்தவர்களில் முன்னே நிற்பவர் மாமேதைலெனின்; அவருக்கு இணையாகத் தோன்றுபவர் ஈ. வெ. ராமசாமி.

புரட்சிப்புகை மண்டியிருந்தபோதும், சமதர்மக் குழந்தை வாழ்விற்குப் போராடிக்கொண்டிருந்த போதும் பொதுக்கல்வியை மறக்காது, அதன் மேல் கருத்தாயிருந்து, வயதுவந்தோர்க் கெல்லாம் கல்வியின் வாடை வரவிட்ட பெருஞ்சாதனையாளர், லெனின் ஆவார். சாதித்துக்காட்ட வாய்ப்புப் பெறாத, பெரியார் ஈ. வெ. ராமசாமியும் பொது மக்களின் கல்வித் தேவையை நாள் தோறும் சுட்டிக்காட்டினார்; விழிப்பூட்டினார்.

இன்றைய தமிழ்நாட்டில், குடிசைதோறும் கல்வி வேட்கையைக் காண்கிறோம். அவ்வேட்கையை வளர்த்ததில் மற்றவர்களைக் காட்டிலும் தந்தை பெரியாரின் பங்கே அதிகம். அவ்வேட்கையைத் தணிக்கும் பெரும் முன்னோடி முயற்சிகளில், ஏழை பங்காளர் காமராசர், எடுத்துக் கொண்ட நடவடிக்கை களுக்கு ஈடே இல்லை.

சிங்கத்தை அதன் குகைக்குள்ளே சண்டைக்கு இழுப்பது போலச் செல்வர்கள் நிறைந்த நீதிக் கட்சிக்கு ஈ. வெ. ராமசாமி, சமதர்மக் கொள்கைகளை உள்ளடக்கிய தீர்மானங்களை அனுப்பி வைத்தார்.

நீதிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் 1934ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7,8 நாள்களில் சென்னையில் நடந்தது. கட்சித் தலைவர் பொப்பிலி அரசர் தலைமை ஏற்றார். ஈ. வெ. ராமசாமி கலந்து கொண்டு ஆலோசனைகள் கூறினார்.

ஈ. வெ. ராமசாமியின் தீர்மானங்களைத் தலைவர் பொப்பிலி அரசர், ஈ. வெ. ரா, ஆர் கே. சண்முகம், டபிள்யூ. பி.ஏ. சௌந்தர பாண்டியன் போன்றவர்களோடு கலந்துபேசி வேண்டிய சொல்

திருத்தங்களோடு நீதிக்கட்சியின் அடுத்த மாநாட்டில் வைப்ப தென்று அக்கூட்டம் ஒப்புக்கொண்டது. அது வெறும் கண் துடைப்பா? இல்லை. ஒப்புக்கொண்ட படியே 1935ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் வாரத்தில் தலைவர் பொப்பிலி, ஈ.வெ. ராமசாமியையும் மற்றவர்களையும் அழைத்துப் பேசினார். மூன்று நாள்கள் பேசியபின், தீர்மானங்களை மாநில மாநாட்டிற்கு அனுப்பினார். அம்மாநாடு அவற்றை ஆலோசித்தது. மீண்டும் தனிக் குழுவொன்றிற்கு அனுப்பியது. அதுவும் காலங்கடத்தும் முயற்சியாகப் போய் விடவில்லை. அப்படித் தேங்க விடுவாரா பெரியார்?

தனிக்குழுவின் பரிந்துரைகளோடு அத்தீர்மானங்கள், அடுத்த நீதிக்கட்சி மாநில மாநாட்டில் வைக்கப் பட்டன; ஏற்றுக்கொள்ளப் பட்டன. ஆம்; சமதர்மத்திட்டம் நீதிக்கட்சியால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

வேறு பக்கத்தின் போக்கு எப்படியிருந்தது?

இந்திய தேசியக் காங்கிரசு அபேதவாதிகள் சென்னையில் கூடிச், சமதர்மக் கொள்கையை முன்னிலைப் படுத்தி முடிவு செய்ததை முன்னரே சுட்டிக் காட்டினேன். அத்தகையோர் உறங்கி விடவில்லை. அங்கும் இங்கும் மாநாடுகளைக் கூட்டினார்கள். சம தர்மக் கோட்பாட்டைப் பரப்பினார்கள். சமதர்மம் இல்லாத தன்னாட்சி உரிமை பயனற்றது என்று தெளிவு படுத்த முயன்றார்கள்.

22-10-1934இல் பம்பாயில் காங்கிரசு சமதர்ம மாநாடு நடந்தது. அம்மாநாடு, 'பூரண சுயேச்சை' என்பதற்கு விளக்கம் தரும் ஓர் முடிவை மேற்கொண்டது. அம்முடிவைப் பார்ப்போம்.

'உழைக்கும் பொதுமக்களின் கைக்கு ஆட்சியும் அதிகாரமும் வருவது என்பதாகப் பொருள் படவேண்டும்.' உழைக்கும் மக்களைச் செல்லாக் காசுகளாக்கவே வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை என்னும் முறையை நம் தலைவர்கள் பிற்காலத்தில் ஏற்றுக்கொண்டார்களோ?

உழைக்கும் மக்களுக்கு எல்லா அதிகாரங்களையும் மாற்றிவிட வேண்டுமென்று பறை சாற்றிய பம்பாய் மாநாடு, பொருளாதார விடுதலையே உயிர் நாடி என்று காட்டுகிறது.

'இந்தியா வேண்டுவது விடுதலை; பட்டினியாகக் கிடக்கும் கோடிக்கணக்கானவர்களுக்குக் குடிக்க கஞ்சி வேண்டும்' என்ற முழக்கம் அம்மாநாட்டில் ஒலித்தது.

முகவரி இல்லாத எவரோ கூறிய விளக்கமா? இல்லை. அன்றைய காங்கிரசு வட்டாரங்களில் புகழ்பெற்ற திருமதி கமலா தேவி சட்டோபாத்யாயா, சுவாமி முக்தானந்தர் போன்றவர்கள் விடுதலைக்குக் கூறிய சரியான விளக்கம் இது.

ஈ. வெ. ராமசாமி நீதிக்கட்சிக்கு அனுப்பிய சமதர்மத் திட்டங்களை அப்போதே தமிழ்நாடு காங்கிரசுக்குழுவிற்கு அனுப்பி வைத்தார். எந்தக் கட்சி அவற்றை ஏற்றுக்கொள்கிறதோ அந்தக் கட்சிக்குச் சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவு கிடைக்கும் என்றும் அறிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரசு அதைப் பொருட் படுத்தவில்லை. திரு. சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் பெரியாரிடம் நேரில் பதில் உரைத்தார். வகுப்புரிமையை இடைக்கால மருந்தாகச் சேர்த் திருப்பதால் அது காந்தியாருக்கு உடன்பாடு இல்லை என்று சொல்லி விட்டார்.

காங்கிரசு அன்று ஏறிட்டுப் பார்க்க மறுத்த சமதர்மத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டபோது, ராசகோபாலாச் சாரியார் என்ன சொன்னார் தெரியுமா?

'நீதிக்கட்சி இதைச் செறிக்க முடியாது' என்றார்.

அக்காலச் சிந்தனைகளை நெருக்கமாக அறியாதவர்களுக்கு இது வியப்பாக இருக்கும். எனவே அக்காலச் சிந்தனையை அறிந்த நான் அக்கால அறிஞர்களின் கருத்துப் போக்கைக் கோடிட்டுக் காட்டவேண்டும்.

1917ஆம் ஆண்டு அக்டோபரில் நிகழ்ந்த உலகத்தின் மிகப் பெரிய சமதர்மப் புரட்சி, உலகம் முழுவதும் ஆதிக்க சக்திகளை அதிர்ச்சி யடையச் செய்தது. நான்கு ஆண்டுகள் தொடர்ந்த உள் நாட்டுப் போர்களும் வெளிநாட்டுத் தாக்குதல்களும் பாட்டாளி ஆட்சியை நசுக்கிவிடுமென்று அவர்கள் மனப்பால் குடித்தார்கள். நடந்ததோ வேறாக இருந்தது. சமதர்ம ஆட்சி வெற்றிபெற்று விட்டது; வேர் ஊன்றி விட்டது. அதுமட்டுமா? பல்துறையிலும் தழைத்தது; போற்றத்தக்க வகையில், அளவில் தழைத்தது இதோ பானை சோற்றுக்குச் சில சோறு பதம்.

1917இல் இரஷ்யாவில் எழுத்தறிவு எவ்வளவு? நூற்றுக்கு இருபத்தைந்து பேர்களுக்கே உண்டு. அது 1920இல் 44.4 விழுக்காடாயிற்று. 1926இல் 52.8 விழுக்காடாயிற்று. அடுத்த அய்ந்தாண்டுகளில் மேலும் தாவிற்று. 1931இல் நூற்றுக்கு 78.6 பேர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். இதன் பொருள் என்ன? பள்ளி வயதை அடையாத குழந்தைகளும் அய்ம்பது வயதைத் தாண்டி விட்டவர்களுமே தற்குறிகளாக இருந்தார்கள். எவ்வளவு விரைவான வளர்ச்சி?

அதே போன்று பெரும்பாலோருக்கு வேலை இல்லை என்ற நிலையும் விரைந்து ஒழிந்தது. 1935க்குள் வேலை செய்யும் வயதில் இருந்த அனைவருக்கும் வேலை கொடுத்து விட்டார்கள்.

அதுமட்டுமா? விபசாரம் ஒழிக்கப்பட்டு விட்டது. எவரையும் எவரும் பணம் கொடுத்து வாங்க, துய்க்க முடியாது. ஆண்பெண் சமத்துவம் நடைமுறையாகி விட்டது.

இருநூறு ஆண்டுகளிலும் தனியுடைமை நாடுகள் எட்ட முடியாத நிலையை அந்தச் சமதர்ம நாடு இருபது ஆண்டுகளில் அடைந்து விட்டதைக் கண்ட அறிவாளிகள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் அம்முறையிடம் ஆழ்ந்த அக்கறை காட்டினார்கள்.

கல்லூரி மாணவர்களிடையிலும், அரசு ஊழியர்களிடையிலும் அரசியல் கட்சியாளர்களிடையிலும், எழுத்தாளர்களிடையிலும், முற்போக்குச் சிந்தனையாளர்கள் சமதர்மவாதிகளாகவே இருந்தார்கள். இத் தென்றல் செல்வந்தர்களிடையிலும் வீசிற்று.

அன்று சோவியத் நாட்டில் மட்டும் நடைபெற்ற சமதர்ம வாழ்க்கை முறை விரைவில் உலகளாவிய வாழ்க்கை முறையாக மாறிவிடும் என்று பல செல்வந்தர்கள்கூடக் கருதினார்கள். தடுக்கமுடியாத அம்முறை—புதிய நாகரிகத்தை ஏற்றுக்கொண்டு அதைப் பரப்புவதே காலமறிந்த அறிவுடைய செயல் என்று எண்ணினார்கள். தொடக்கக்காலத் தியாகங்கள் பொது உடைமை ஆதரவாளர்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற கருத்தினை வளர்த்தது.

தியாகத் தீயில் புடம்போட்ட சக்திகளைப் போட்டி போடும் சக்திகளாக, தேர்தல் கானல் நீரைத் தேடியோடும் சக்திகளாக

எளிதில் மயக்கிவிட முடியுமென்று அவர்கள் நினைக்கவில்லை போலும். எனவே, பல நிலைகளிலும், பல வட்டாரங்களிலும் ஆர்வமுடைய சமதர்மவாதிகளைக் காண முடிந்தது. சமதர்மக் காற்றின் விளைவுகளில் ஒரு பகுதி சமதர்மக் கவிதைகள்.

முன்னரே சுட்டிக் காட்டிய படி தோழர் ஜீவானந்தம் கவிதைகள் 'புரட்சி' யில், பின்னர் வந்த 'பகுத்தறிவி'ல் வெளியாயின. ஏறத்தாழ ஈராண்டுக்காலம் ஈ.வெ.ரா. வின் வார இதழ்களில் வாரந் தவறாது அத்தகைய பாடல்கள் வெளியாயின.

தொழிலாளர் படும் துயரங்களை, அவற்றைப் போக்கும் வழியான சமதர்மப் பொருளியலின் சிறப்புகளை விளக்கும் அப்பாடல்கள், பிழைப்புக் கவிஞர்களால் பாடப்பட்டவையல்ல; கொள்கையின் கொப்பளிப்பில் பாடிய அக்கவிஞர்கள் பலராவர். அவர்களில் ஒருவராகிய கடம்பங்குளம் நாராயணன் என்பவரின் 'ஏழைகள் முறையீடு' என்ற பாடலில் ஒரு பகுதியை உங்கள்முன் வைக்கத் தோன்றுகிறது.

''மாடிவீடு வேண்டாம்—படுக்க
மஞ்சம் மெத்தை வேண்டாம்
ஓடக்கார் வேண்டாம்—தோழா!
உடைமைபல வேண்டாம்
பசிக்குணவு வேண்டும்—பாலர்
படிப்பிற்குதவ வேண்டும்
நசிக்கும்வரை யுடலம்—தோழா!
நான் வினையாற்றுகிறேன்
இந்த முறைதனக்கே உலகம்
இசையவில்லை யானால்
எந்த முறை கொண்டும்—தோழா!
இயக்குதல் குற்றமையா!''

பாட்டாளி அணியைச் சமதர்ம முன்னணியாக மாற்ற அக்காலத் தீவிரவாதிகள் கருதினார்கள்; முயன்றார்கள். நாம் இப்போது எந்தப் பக்கம் ஓடிக்கொண்டிருக்கிறோம்?

# 20. அரசின் அடக்குமுறை: புரட்சி ஏடு நின்றது பகுத்தறிவு ஏட்டின் பணி தொடங்கியது

இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளில் உலகில் ஒரே சமதர்ம நாடுதான் இருந்தது. அந்த முதல் சமதர்ம நாடு முதல் தரமான சமதர்ம நாடாக விளங்கியது. இருபது ஆண்டுகளுக்குள் அது சாதித்தவை பல. எல்லோருக்கும் எழுத்தறிவு; எல்லோருக்கும் வேலை; எல்லோருக்கும் நல்வாழ்வு உறுதியாகி விட்டது. அந்த நாட்டின் சிறப்புகளும் சாதனைகளும் இந்தியாவிற்குத் தெரிய ஒட்டாதபடி ஆங்கில ஆட்சி இருட்டடிப்பு செய்தது.

இருப்பினும் பெரியாரின் 'புரட்சி' இதழ் வாயிலாக அவை தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலும் பரவின. ஒரே சமயத்தில் படித்தவர்களிடையிலும் பாட்டாளிகளிடையிலும் சமதர்ம உணர்வினை வளர்ப்பதில் 'புரட்சி' இதழ் இணையற்ற வெற்றி பெற்று வந்தது. அதனால் அன்று இந்தியாவை ஆண்ட ஆங்கில ஆட்சி எரிச்சல் கொண்டது; அடக்குமுறையில் இறங்கிற்று.

'புரட்சி'யிடம் நன்னடக்கைப் பணம் கேட்டது. பெரியார் அதற்கு உடன்படவில்லை; புரட்சி நின்றது. அதற்குப் பதில் 'பகுத்தறிவு' தோன்றியது. எப்போது? 1934 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் கடைசி வாரத்தில். அது தன் கொள்கையை முதல் தலையங்கத்தில் வெளிப்படுத்தியது.

'பகுத்தறிவு' எதற்குப் பாடுபடும்?

'எங்கும் நிறைந்த இறைவனை வழுத்தவோ,

'எல்லாம் வல்ல மன்னனை வாழ்த்தவோ,

'யாதினும் மேம்பட்ட வேதியனை வணங்கவோ,

'ஏதும் செய்ய வல்ல செல்வவானை வாழிய செப்பவோ, கருதியோ அல்ல; மாறாக, மனித சமூக ஜீவாபிமானத்தையும் ஒற்றுமையையும் பிரதானமாகக் கருதி உழைத்து வரும்.

இந்த அறிவிப்பிற்கு ஏற்றபடியே 'பகுத்தறிவு' செயல்பட்டு வந்தது.

தோழர் ப. ஜீவானந்தம் பகுத்தறிவில் தொடர்ந்து எழுதி வந்தார். அவர் 'எனது கனவு' என்று பாடிய பாட்டின் சில வரிகளைப் பாருங்கள்.

'ஆண்டான் அடிமையெனும் அவச்சொல் அங்கில்லை
ஆண்பெண் பேதம் பாராட்டும் அழிகிறுக் கங்கில்லை
வேண்டும் சுயேச்சைப் பேச்சில் விதிவிலக்கில்லை
மீறும் சட்டதிட்டங்கள் கூறுவோர் இல்லை'

'பகுத்தறிவு' தனது தலையங்கம் ஒன்றில்,

'இந்திய விடுதலை, சமதர்மவாதிகளால் தான் முடியும்' என்று எழுதியது.

'தொழிலாளர் நலம்' என்னும் தலைப்பில் தி. அ. வேங்கடசாமிப் பாவலர் பாடிய பாட்டைப் பகுத்தறிவு வெளியிட்டது. அதில்,

'விளைபொருள் செய்பொருள்கள் யாமே—நெற்றி
வேர்வை நிலம்வீழ உழைப்போமே
உழைப்பில்லார் வீட்டில் அவை போமே—எங்கள்
உள்பசித்தீ புகுந்து வேமே'

என்ற காட்சி உள்ளத்தில் பதிந்தது.

ஏற்கனவே, 'குடியரசு புத்தகாலயம்' என்ற பெயரில்,

(1) பொதுஉடைமைத் தத்துவ வினா விடைகள்

(2) 1917 புரட்சியின் சுருக்கம்

(3) போல்சுவிசம் அல்லது பொதுஉடைமை

(4) காரல் மார்க்சின் சரித்திரச் சுருக்கம்—ஆகிய நூல்களை வெளியிட்டு அரசின் சினத்திற்கு ஆளான ஈ. வெ. ராமசாமி, 'நான் நாத்திகன் ஏன்?' என்ற தோழர் பகத்சிங் எழுதிய கட்டுரையைத் தமிழில் நூலாக வெளியிட்டார்.

இங்கிலாந்தில் குடியிருந்த சக்லத்வாலா என்ற இந்தியர் சோவியத் நாட்டிற்குச் சென்று வந்தார். அவர், 'சோவியத் நாட்டில் கண்டதென்ன?' என்ற தலைப்பில் ஆங்கிலக்

கட்டுரைகளை எழுதினார். அதைப் 'பகுத்தறிவு' தமிழாக்கம் செய்து தொடர் கட்டுரைகளாக வெளியிட்டது.

இதற்கிடையில் 1933 சூலையில் இந்திய அரசு பொது உடைமைக் கட்சியைத் தடை செய்தது. சுயமரியாதை இயக்கமும் அதே பணியைச் சுறுசுறுப்பாகச் செய்து வந்ததைக் கண்ட அன்னிய ஆட்சி அதையும் தடைசெய்ய ஆலோசனை செய்து கொண்டிருந்தது.

அவ்வேளை ஆர். பால்மர்தத்தா என்பவர் இலண்டனிலிருந்து வெளியான 'இந்தியஅரங்கம்' என்ற இதழில் ஓர் கட்டுரை எழுதினார். அதைப் 'பகுத்தறிவு' தமிழில் வெளியிட்டது. அது அரசின் கண்ணை உறுத்தியது. பெரியாரின் இயக்கத்தை ஒடுக்க நினைத்த அன்னிய ஆட்சி பகத்சிங்கின் நூலைத் தடை செய்தது.

20-1-1935அன்று ஞாயிறு பகல் பணிக்குப் 'பகுத்தறிவு' அலுவலகம் காவல் துறையால் சோதனையிடப்பட்டது. ஈ. வெ. கிருஷ்ண சாமியின் வீடும் சோதனையிடப்பட்டது. அலுவலகத்திலிருந்து பகத்சிங்கின் நூல்களைப் பறிமுதல் செய்து எடுத்துக்கொண்டு போயினர்.

29-1-1935 இல் பகுத்தறிவு இதழுக்கும் அதை அச்சிட்ட 'உண்மை விளக்கம்' அச்சகத்திற்கும் ரூபாய் 2000 நன்னடக்கை உறுதிப் பணமாகக் கேட்கப்பட்டது. உறுதிப் பணம் கட்டாது மீண்டும் 'குடிஅரசை'த் தொடங்கினார்.

இவ்விடத்தில் மற்றோர் தகவலைச் சொல்ல வேண்டும். வட ஆற்காடு மாவட்டம் சோலையார்ப்பேட்டையில், பெரியாரின் இயக்கத்தைச் சேர்ந்த பார்த்தசாரதி என்பவர் 'சமதர்மம்' என்ற வார இதழைத் தொடங்கி நடத்தத் தலைப்பட்டார். தோழர் ஜீவானந்தம் அதற்குத் துணையிருந்தார். அதற்கு மூவாயிரம் ரூபாய் உறுதிப் பணம் கேட்கப்பட்டது.

பகுத்தறிவு அலுவலகத்தைச் சோதனையிட்டுச் சென்றபின் 21-2-1935 அன்று காலை 7-30 மணிக்கு அவ்வார இதழின் ஆசிரியரான பெரியாரின் அண்ணார் ஈ. வெ. கிருஷ்ணசாமி ஈரோட்டில் கைது செய்யப்பட்டார்.

அதற்கு முந்தைய நாளாகிய 20-2-1935 அன்று இரவு 11 மணிக்கு தோழர் ஜீவானந்தம் சோலையார்ப்பேட்டையில் கைது செய்யப்பட்டார்.

ஆட்சியின் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் போக்கு எந்த அளவிற்கு இருந்தது?

3-3-1935 அன்று வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்ட ஈ.வெ' கிருஷ்ணசாமியை ஜாமீனில் விடவும் மறுக்கும் அளவு பழிவாங்கும் போக்கு இருந்தது. அவர்மேல் சாட்டப்பட்ட குற்றம் என்ன? அரச வெறுப்பைத் தூண்டினார். அதற்கு ஆதாரமாகக் காட்டப் பட்டவை எவை? வெளியிட்ட பகத்சிங்கின் நூலின் முதற் பாகமும் குடியரசு தலையங்கம் மூன்றும் ஆகும்.

அடுத்த வார 'குடியரசில்' ஈ. வெ. ராமசாமி 'சுயமரியாதை இயக்கம்' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டார். அதில்,

சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் கொள்கையானது, பார்ப்பன ஆதிக்கக் காங்கிரசை ஒழிப்பதும், அதற்காக எவ்வளவு அவசியப்பட்டாலும் அவ்வளவு அரசாங்கத்தோடுஒத்துழைப்பதும், சமுதாய இயலில் சாதிபேதங்களை அகற்றுவதும், மூடநம்பிக்கை களை ஒழிப்பதும் பொருளியலில் சமதர்மமும் ஆகும். இவைகளைப் பற்றிய விஷயங்களை மக்களிடையே பிரசாரம் செய்யவும் அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவுமான காரியங்கள் நடைபெற வேண்டுமானால் காங்கிரசு ஆட்சியைவிடப் பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகுநாளைய கருத்தாகும் என்று விளக்கம் தெரிவித்திருந்தார்.

'சமதர்மம்' என்றாலே கிலி பிடித்திருந்த ஆங்கில ஆட்சி அதைப் பொருட்படுத்தவில்லை. பெரியாரின் அண்ணன் ஈ. வெ. கிருஷ்ணசாமி தண்டிக்கப்பட்டார்.

# 21. சுயமரியாதைப் பணியா? சமதர்மப் பணியா?

சுயமரியாதை இயக்கத்தின் பொருளியல் கொள்கை சமதர்மம் என்பதை 1930 ஆகஸ்டில் விருதுநகரில் நடந்த மாகாண சுயமரி யாதை வாலிபர் மாநாட்டின் முதல் முடிவே அறிவித்து விட்டது.

1932ஆம் ஆண்டின் இறுதியில் ஈரோட்டில் உருவாக்கப்பட்ட சுயமரியாதை சமதர்மத் திட்டம் அக்கோட்பாட்டிற்கு முழு உருவம் கொடுத்தது.

அக்கொள்கையைப் பொதுமக்களிடம் பரப்பும் பொருட்டு பத்துப் பதினைந்து மாநாடுகள் நடத்தப்பட்டன; நூற்றுக்கு மேற்பட்ட சுயமரியாதைச் சமதர்ம இயக்கக் கிளைகள் நிறுவப் பட்டன.

பிரிட்டானியப் பேரரசு போன்ற எந்த முதலாளித்துவ அரசோடும் தொடர்பில்லாத, மக்கள் சமதர்ம ஆட்சியை நிறுவுவதே சுயமரியாதைச் சமதர்ம இயக்கத்தின் குறிக்கோள் என்றும் பறைசாற்றப்பட்டது. இவ்வளவிற்குப் பிறகும் ஆங்கில ஆட்சி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா? அடக்குமுறையில் இறங்கியது இயற்கையே.

முதலில் பெரியாரையும் கண்ணம்மாவையும் சிறைக்கு அனுப்பிய ஆட்சியாளர்கள் பின்னர் பெரியாரின் அண்ணார் ஈ. வெ. கிருஷ்ணசாமியையும் தண்டித்தனர்.

உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமை ஆக்கும் சுயமரி யாதைச் சமதர்மத் திட்டத்தைச் 'செல்வர்களின் கட்சி' என்று வீணாகப் பழிக்கப்பட்ட நீதிக்கட்சி ஆலோசித்து ஏற்றுக் கொண்டது. ஆனால், 'தியாகிகள்' நிறைந்ததாகச் சொல்லப்பட்ட காங்கிரசு அதை அன்று ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில ஆட்சி பொதுஉடைமைக் கட்சியைத் தடைசெய்த பிறகும் பெரியாரின் சமதர்மத் தொண்டு

நிற்க வில்லை. 'கட்சிக்குத் தடையேயொழிய கொள்கைக்குத் தடையில்லை' என்று திறமையாகப் பெரியார் வாதிட்டுப் பார்த்தார். ஆனால் பலிக்கவில்லை. நாட்டின் ஆதிக்கப் பிற்போக்குச் சக்திகள் வெள்ளையர் காதைக் கடித்தபடி இருந்தன. சுயமரியாதை இயக்கத்தையும் தடை செய்ய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

வாழ்க்கையின் அடிப்படைத் துறைகளில் எதிர்நீச்சல் போடும்படி மக்களுக்குக் கற்றுக் கொடுத்துவந்த தன்மான இயக்கத்திற்கு அடக்குமுறை நிலை ஓர் நெருக்கடியை உருவாக்கியது.

'சமத்துவமும் தேவை; சமதர்மமும் தேவை. முடிந்தால் இரண்டிற்கும் பாடுபட வேண்டும். முடியா விட்டால்? அடக்கு முறைக்கு ஆளாகி இயக்கத்தவர் பலர் சிறைக்குச் சென்று தக்க சூழ்நிலைக்காகக் காத்துக்கொண்டிருக்கலாம். அத்தகைய சிறை வாழ்க்கை நம் மக்களுக்குத் தியாகமாகவும் வீரமாகவும் தோன்றலாம். அவ்வழியைப் பின்பற்றுவதா? அல்லது மாற்று வழியைப் பின்பற்றுவதா?' இத்தகைய கேள்விகள் தன்மான இயக்கத்தவர் உரையாடல்களில் எழுந்தன.

மாற்றுவழி எது? சுயமரியாதைப் பணியை மட்டும் தொடர்வது ஆகும்.

சமதர்மக் கொள்கையைப் பரப்புவதற்காகச் சிறை சென்று விட்டால் தீண்டாமையொழிப்பு, சாதியொழிப்பு, மூடநம்பிக்கை யொழிப்பு ஆகிய சமுதாயச் சீரமைப்புப் பணியை எவர் செய்வர்?

'புத்தருக்குப் பின் முதன்முதலாகப் பெரியாரின் இயக்கமே இதில் முனைப்பாக ஈடுபட்டது; ஓரளவு வெற்றியும் கண்டு வருகிறது. இதே சூட்டில் பாடுபட்டால் சாதிக் கொடுமைகளை ஒழித்துவிட முடியுமே! எல்லாவற்றையும் நாமே செய்தோம் என்று சொல்லிக் கொள்ளவோ, நாங்களும் வீரர்கள் என்று விளம்பரப் படுத்திக் கொள்ளவோ சாதியொழிப்புப் பணிக்கு இடையூறு செய்துவிட்டால் மீண்டும் அது முளைக்குமா? பரவுமா?' இப்படி இயக்கத்தின் உயிர்நாடிகளாக இருந்த பலர் கேட்கத் தலைப் பட்டனர்.

இறுதியில், அப்போதைக்குச் சமத்துவப் பணியில் மட்டும் முழு மூச்சாக ஈடுபடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இயக்கத்தின் இம்முடிவு எதன் பொருட்டு மேற்கொள்ளப் பட்டது? இயக்கத் தலைவர் பெரியாரின் சொற்களால் அதைத் தெரிந்து கொள்வோம்.

"நான் இரஷ்யாவிற்குப் போவதற்கு முன்பே பொது உடைமைத் தத்துவத்தைச் சுயமரியாதை இயக்கத்துடன் கலந்து பேசி வந்தது உண்மைதான். இரஷ்யாவில் இருந்து வந்தவுடனும் அதை இன்னும் தீவிரமாகப் பிரசாரம் செய்ததும் உண்மைதான். ஆனால் சர்க்கார் பொதுஉடைமைக் கொள்கைகள் சட்ட விரோத மானது என்று தீர்மானித்து நமது சுயமரியாதை இயக்கத்தையும் அடக்கி ஒடுக்கி ஒழித்துவிட வேண்டுமென்று கருதியிருக்கிறார்கள் என்று உணர்ந்த பிறகு எனக்குப் புத்திசாலித்தனமாகச் சில காரியம் செய்யவேண்டியதாக ஏற்பட்டுவிட்டது.

"இந்த நிலையில் சுயமரியாதை இயக்கத்தை ஒழித்துவிட்டு நான் மட்டும் வீரனாக ஆவதற்கு ஜெயிலுக்குப் போய் உட்கார்ந்து கொள்ளுவதா?

"அஸ்திவாரத்தில் கையை வைத்துச் சாதிகளை ஒழிப்பதற்கு இன்று இந்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைத் தவிர வேறு எந்த இயக்கமும் இல்லை என்பதை நன்றாக ஞாபகத்தில் வையுங்கள்.

"சமதர்ம வளர்ச்சிக்குப் பிற பக்கங்களிலும் ஆட்கள் கிடைக் கலாம். சாதியொழிப்புக்குத் தன்மான இயக்கம் மட்டுமே போராடுவதால் இவ்வியக்கத்தைக் காப்பாற்றிப் பயன்படச் செய்வது இப்போதைக்கு முன்னுரிமை உடையதாகும்."

மேற்கூறிய காரணத்தால் பெரியாரும், அவருடைய இயக்கமும் அப்போதைக்குப் பொதுஉடைமைக் கொள்கையைப் பரப்புவதில் முனைவதில்லை என்று முடிவு செய்தார்கள்.

பிழைப்பிற்காகப் பொதுப்பணிக்கு வந்தவர்களாக இருந்தால் பொதுஉடைமைக்கு ஆதரவான எல்லாவற்றையும் அழுத்திக் கொன்றிருப்பார்கள். பெரியாரின் இயக்கமோ பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களையும் கண்டித்துக்கொண்டு திருத்தப் பாடுபடுவதாயிற்றே!

எனவே, பொதுஉடைமைப் பிரசாரம் சட்ட விரோதம் என்று சொன்னதும் அதைக் கைவிடக் கோரும் அறிக்கையைத் தாங்கிவந்த 'குடியரசு' சமதர்மப் பணியை அடியோடு கை நழுவ விடவில்லை.

இரஷ்ஷியா அய்ந்தாண்டுத் திட்டம் பற்றிய தொடர் கட்டுரைகளை, 'ருஷ்ய பாலபாடம்' என்ற தலைப்பில் 'குடியரசு' பல வாரங்கள் வரை வெளியிட்டது. ருஷியாவின் முன்னேற்றம் பற்றிய தொடர் கட்டுரைகளோடு ருஷியாவின் விபசாரத் தடுப்பு முறை பற்றிய கட்டுரையையும் வெளியிட்டது.

24-11-1935 நாளைய'குடியரசு'லெனினுடைய தங்கை அன்னா உலியனோவாவின் மறைவுச் செய்தியை வெளியிட்டது.

8-3-1936 ஆம் நாளைய 'குடியரசு' 'பணக்காரத் தன்மை, ஒரு மூடநம்பிக்கையே' என்ற அருமையான தலையங்கத்தைத் தாங்கி வெளிவந்தது.

சமதர்மப் பெருமழையை அப்போதைக்குப் பெரியார் நிறுத்தி வைத்தார். ஆனால் சிறுமழை பெய்வதைத் தடை செய்யவில்லை. தன்மான இயக்கத்தைப் பொறுத்தமட்டில் சமதர்ம உணர்வு உயிரோடு இருந்தது; இருக்கிறது.

ஆனால் பெரியாரின் எதிர்பார்ப்பு பலிக்க வில்லை. சமதர்ம வளர்ச்சிக்குப் பிற பக்கங்களிலும் ஆள்கள் கிடைக்கலாமென்று பெரியார் எதிர்பார்த்தது அப்போது நடைபெற வில்லை.

'அபேதவாதம்' என்னும் நூலைத் தமிழில் எழுதி வெளியிட்டு அவ்வுயரிய கொள்கையைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்தியவர் மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார். அவர் தொடர்ந்து அபேதவாதியாக இயங்கவில்லை. அதற்கு எதிரியாக மாறினார். சுயமரியாதை இயக்கத்தால், வெள்ளம்போல் பெருக்கப்பட்ட சமதர்ம உணர்வினைக் கண்டு அஞ்சினார். அதைத் திசை திருப்ப முயன்றார். அதில் ஓரளவு வெற்றியுங் கண்டார். அத்திட்டம் என்ன?

# 22. கட்டாய இந்தியைப் புகுத்தி இராஜாஜி திசை திருப்பினார்

பெரியார் உருவாக்கிய சுயமரியாதை சமதர்மத் திட்டத்தில் இருபெருங் கூறுகள் இருந்தன. முதற் கூறு, இந்நாட்டை மட்டும் பிடித்துள்ள—இந்நாட்டுச் சமயங்கள் அரும்பாடுபட்டுக்காத்துவரும் —வருண பேதங்களை அதாவது, சாதிமுறையை ஒழிப்பது ஆகும். இரண்டாவது கூறு, உலக சமதர்ம இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும்.

அனைத்திந்திய அளவில் கட்டவிழ்த்து விட்ட அடக்கு முறையால் பொதுஉடைமைக் கட்சி தடை செய்யப்பட்டது. அதே பொதுஉடைமைக் கொள்கையை வேறு இயக்கத்தின் சார்பில் பரப்பிவந்த பெரியாரும் அவருடைய அண்ணார், தங்கை ஆகியோரும் சிறைத் தண்டனைக்கு ஆளானார்கள். அரசின் கெடுபிடி நடவடிக்கைகள் ஏற்படுத்திய நெருக்கடியால் பெரியாரின் இயக்கம் அப்போதைக்குச் சாதியொழிப்புப் பணியோடு நின்றுவிட முடிவு செய்தது.

அப்பணி வெற்றிபெற்றால், சமதர்மம் வெற்றிபெறுவதற்கு நெடுங்காலம் ஆகாது. இதைத் தொலைப் பார்வையுடைய பெரியார் உணர்ந்தார். அவரோடு நெருக்கமாயிருந்த பிற்கால குத்தூசியார் குருசாமி, அஞ்சா நெஞ்சர் அழகிரிசாமி, அ. பொன்னம்பலனார் போன்றவர்கள் உணர்ந்தார்கள்.

தொலைநோக்கு நம்முடைய தனிச்சொத்து அல்லவே. நமக்குத் தெரிந்த அளவு இராசகோபாலாச்சாரியாருக்கும் தெரிந்தது. சாதியொழிப்புப் பணி அவருடைய கூட்டத்திற்குப் பெருங்கேடு. அதேபோலப் பொதுஉடைமைக் கோட்பாடும் அவர் களுக்குப் பெருங்கேடு. இரண்டையும் எதிர்த்து ஒழிப்பது எளிதான தல்ல என்று இராசகோபாலாச்சாரியாரின் நுண்ணறிவுக்குப் பட்டது வியப்பல்ல. அடுத்துக் கெடுப்பதற்காகவே அபேத வாதத்தைத் தானே முன்னின்று அறிமுகப்படுத்திப் பார்த்தார்.

இருப்பினும், காங்கிரசுக்காரர்களோ பிறரோ அபேதவாதத்திற்கு இந்தியக் குருநாதராகத் தன்னை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது அவருக்குப் புலனாகிவிட்டது. காங்கிரசு அபேதவாதிகள் இவரை விட்டுவிட்டு இயங்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் சார்பில், ஜெயப்பிரகாச நாராயணனே ஈரோட்டிற்கு வந்து, பெரியாரோடு பேசி, அவரை அனைத்திந்திய சமதர்ம இயக்கத்திற்கு அழைத்ததும் இராசகோபாலாச்சாரியாரின் நெஞ்சில் நெருஞ்சி முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தது.

தற்குறித் தமிழர்களுக்குப், பல தலைமுறைகளாகவே சிந்திப்பதை மற்றவர்களுக்கு விட்டுவிட்ட தமிழர்களுக்குப் பெரியாரின் இயக்கம் சமத்துவத்தையும் சமதர்மத்தையும் பெற்றுத் தரக்கூடிய ஓரே இயக்கம் என்பது புரியாவிட்டாலும் இராசகோபாலாச்சாரியாருக்கு அது துல்லியமாகத் தெரிந்தது.

இராசகோபாலாச்சாரியாரின் நுண்ணறிவு திசைதிருப்பும் திட்டத்தைக் கண்டுபிடித்தது.

நாட்டுப்புறங்களில் எவராவது வளமாக வாழ்வதாகத் தோன்றினால், அக்கம்பக்கத்தாரின் அழுக்காறு நொடியில் வேலை செய்யத் தொடங்கிவிடும். வளர்முகத்தில் தோன்றுபவரை ஏதாவதொரு வம்பில் சிக்கவைத்துவிடுவார்கள். அதிலிருந்து மீட்டுக் கொள்வதில் அவர் சீரழிந்து விட்டால், வளர்ச்சி பழங்கதையாகிப் போகும்.

தொன்றுதொட்டு நம் குருதியின் அணுக்களில் இரண்டறக் கலந்துள்ள 'சதி' புத்தி வேலை செய்தது. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காக்கும் கொக்கென, இராசகோபாலாச்சாரியார் காத்திருந்தார். அருமையான வாய்ப்பு 1937 இல் சிக்கியது. சென்னை மாகாணத்திலும் வேறு பல மாகாணங்களிலும் ஆட்சி உரிமைகள் காங்கிரசுக் கட்சியிடம் சிக்கியது. நம் சென்னை மாகாணத்தில் இராசகோபாலாச்சாரியார் முதல் அமைச்சர் ஆனார்; கரடியை அவிழ்த்து விட்டார்.

ஆட்சியைக் கைப்பற்றிய சில தினங்களுக்குள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அது என்ன?

அடுத்து வரும் கல்வியாண்டிலிருந்து நூறு உயர்நிலைப் பள்ளிகளில், கட்டாய இந்திப்பாடம் நடைமுறைக்கு வரும் என்றார்.

அதுவும் வெள்ளோட்டமே; சில ஆண்டுகளில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கட்டாய இந்தி புகுத்தப்படும் என்றார். அது மிரட்டல். நுனிப்புல் மேய்வோர், இதை இந்தியாவின்மேல் கொண்ட பற்றாகக் கொள்வர். நாம் விருப்பு வெறுப்பின்றி ஆய்வோம்.

எதற்காக இந்தியைக் கட்டாயம் படிக்க வேண்டுமென்றார்? நாட்டின் ஒருமைப்பாட்டிற்குத் தேவையெனப்பட்டது. இந்திய அரசுப் பணிகளில் சேர்வதற்கு உதவுமென்று பறைசாற்றப் பட்டது.

நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்கக் கூடியவர்கள் எவர்? அய்யங்கார் குலத்து அஞ்சல் ஊழியர்களா? இந்திய அரசுப் பணி யாளர்களா? அரசு வங்கி அலுவலர்களா? அவற்றில் வேலை செய்யும் கடைநிலை ஊழியர்களா? அரசியல் பெரியவர்களா? உள்ளூர் கொடிகட்டிகளா?

அரசியலிலும் அலுவல்களிலும் அனைத்திந்திய மட்டத்தில் தொண்டு செய்யக் கூடியவர்களே ஒருமைப்பாட்டை வளர்க்கும் வாய்ப்பினையோ, சிதைக்கும் சூழலையோ பெறமுடியும். அரசியலில் வேண்டுமானல் படிப்பு குறைவாக இருப்பதே நல்ல ஆதாயமாக இருக்கலாம்.

இந்திய அரசு அலுவலகங்களில் சேர்வதற்கு எந்த நிலை படிப்பாளிகளுக்கு அக்காலத்தில் வாய்ப்பு இருந்தது. மேல்மட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு வாய்ப்பு இருந்தது. அடுத்துப் பட்டம் பெற்றவர்களுக்கு ஓரளவு இருந்தது. உயர்பள்ளிப் படிப்பை முடித்தவர்களுக்கு? மிகமிகக் குறைவு. எட்டாவதோடு நின்றுவிட் டவர்களுக்கு? அக்காலத்தில் வாய்ப்பே இல்லை எனலாம்.

இந்நிலையில் ஒன்றை நினைவு படுத்த வேண்டும். அது என்ன? அன்று நாட்டுடை மையாக்கப் பட்ட வங்கி ஒன்றே ஒன்று தான். அது 'ஸ்டேட் பாங்க்' என்றழைக்கப்படுவது ஆகும். அதன் கிளைகள் சிறு நகரங்களுக்குக் கூட எட்டவில்லை. இரயில் வேக்களை ஆங்கிலக் கம்பெனிகள் நடத்தின. ஆயுள் ஒப்பந்தக் கம்பெனிகள்? அக்காலத்தில் தனியார் துறையில் இருந்தன. பிற் காலத்தில் முளைத்துள்ள நாட்டுடைமைத் தொழிற்சாலைகள் 1937இல் இல்லை.

அப்படியென்றால் இந்திய அரசுப் பணிகள் எண்ணிக்கையில் மிகச் சொற்பம். அதற்குப் போக விரும்புவோர் பட்டப் படிப்பாவது படித்திருந்தால் சென்னை, நாகை போன்ற துறைமுக அலுவலகங்களில், அஞ்சல் நிலையங்களில் எழுத்தர்களாகலாம். இவர்களுக்கு இந்தி பேசும் பகுதிகளில் வேலை பார்க்க நேரிடுவது அருமையிலும் அருமை. ஆகவே அவர்கள் ஒருமைப்பாட்டை வளர்க்க இயலாது.

அப்படியிருக்க, எட்டாவதுவரை படித்து நின்றவர்கள் இந்திய அலுவலகங்களில் என்ன வேலை பெறக்கூடும். கடைநிலை ஊழியர் வேலைகள் கிடைக்கலாம். அத்தகையோர் எண்ணிக்கை அன்று ஒருசில நூற்றுக்கு மேல் ஏறாது. அவர்களும் இந்திபேசும் பகுதிகளில் பணிபுரியப் போவது அத்தி பூத்தது போலவே.

மேல்மட்டப் படிப்போ, பட்டப் படிப்போ பெற்றவர்கள் இந்தி தெரிந்துகொண்டால், எல்லோரும் இல்லாவிட்டாலும் சிலராவது அதைப் பயன்படுத்தி ஒருமைப்பாட்டை வளர்க்க வாய்ப்புப் பெறுவார்கள்.

அன்றைய நிலையில் பதினோராவது வரையில் படித்தவர்கள் இந்தி தெரிந்து கொண்டிருந்தால் சூதாட்டம் போலவே இருக்கும். ஆறாவது வகுப்பு படிப்பவர்கள் இந்தியைக் கற்றுக்கொண்டால் அதைப் பயன்படுத்தி அன்று எந்த இந்திய அரசின் பணிக்குப் போயிருக்க முடியும்? எத்தனைமுறை இந்தி மாநிலங்களுக்குச் செல்லக்கூடும்? எந்த அளவிற்கு இந்தி மக்களோடு அளவளாவி ஒருமைப்பாட்டை வளர்த்திருக்க முடியும்? கடலிலே பெருங்காயம் கரைத்த அளவிற்கே பயன் கிட்டியிருக்கும்.

ஒருமைப்பாட்டை வளர்க்க இந்தி என்றிருந்தால், பிற காங்கிரசு ஆட்சி மாகாணங்களில் இந்தியை ஏன் கட்டாயப் பாடமாக்கவில்லை? மற்றவர்களுக்கு இல்லாத அக்கறை நம் இராசகோபாலச்சாரியாருக்கு மட்டும் ஏற்பட்டுவிட்டதாக நம்பாதீர்கள். அத்தகைய பயனுக்காக இந்தியைக் கட்டாயமாக்க விரும்பினால் அதை மேல்மட்டப் படிப்புக்குக் கட்டாயப்படுத்தி இருப்பார். குறைந்த அளவு உயர்நிலை வகுப்புகளில் கொண்டுவந்திருக்க வேண்டும். அதையும் விட்டுவிட்டு ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை இந்தி கட்டாய பாடம். ஆறாவது வகுப்பில் இந்தியில் போதிய மதிப்பெண் பெறாவிட்டால் ஏழாவது வகுப்

புக்குப் போகமுடியாது என்பதே அவருடைய திட்டம். ஓராண்டு தவறியவனை அடுத்த ஆண்டு படிக்க விடுவது அக்காலத்தில் அருமை.ஏதோ சில உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமே இரண்டாம் ஆண்டும் படித்துப் பார்க்க விடுவார்கள்,

கட்டாய இந்தித் திட்டத்தின் உள்ளுறை என்ன?

நாட்டுப்புறங்களிலிருந்து ஆறாம் வகுப்பிற்கு வந்து சேரும் பதினாயிரக் கணக்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் புதிதாக இரு மொழிகளை –ஆங்கிலத்தையும் இந்தியையும் படிக்கவேண்டும். இரண்டிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

இல்லாவிட்டால் மாடு மேய்க்க, விறகு பொறுக்க, துணி வெளுக்க, மூட்டை தூக்கப் போகவேண்டும்.

தப்பித்தவறி சிலர் இந்தியிலும் தேர்ச்சி பெற்றால், ஒன்பதாவதில் தொடர்ந்து படிக்க வாய்ப்பு கிடையாது: ஒன்பதாவதிலோ, பத்திலோ, பதினொன்றிலோ விருப்பப் பாடமாகப் படிக்கவும் இடம் இல்லை, அந்நிலையில் இந்தி அறிவு எவ்வளவு காலத்திற்குப் பசுமையாக இருந்து ஒருமைப்பாட்டை வளர்க்கவோ, வேலை வாங்கவோ பயன்படுமென்பதைச் சிந்தியுங்கள்.

# 23. இந்தி எதிர்ப்பு முதன்மை பெற்றது

ஆயிரம் ஆண்டுகளாகக், கல்வியின்மேல் நாட்டம் இல்லாதிருந்த தமிழர்களிடையே நீதிக்கட்சியின் தொண்டும், தன்மான இயக்கப் பணியும் ஓரளவு—பெருமளவல்ல—படிப்பார்வத்தைத் தூண்டின. உயர்நிலைப் பள்ளிகள் நெடுந்தொலைவில் இருந்த காலம் அது. அப்பள்ளிகளின் அருகில் இருந்த சில பார்ப்பனரல்லாத குடும்பங்களாவது பிள்ளைகளை அய்ந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்கவைக்க முன்வந்தார்கள். அதுவே தங்களுக்குக் கடும் போட்டியாக வருமென்று கால காலமாகக் கல்வி பெறுவோர் அஞ்சினர்.

ஒரே நேரத்தில் இரு புது மொழிகளை ஆறாம் வகுப்பில் புகுத்தி இரண்டிலும் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றால்தான் ஏழாவது வகுப்பிற்குப் போகலாம் என்று ஆணையிடுவது கல்வியைத் தேடிவரும் புதிய தலை முறையை மட்டம் தட்டி அனுப்புவதாகும் என்று பொது மக்கள் கருதினார்கள். அக்கருத்து கற்பனையென்று ஒதுக்கி விடுவதற்கு இல்லை.

கட்டாய இந்தியைக் கொண்டு வந்தது சமதர்மக் கொள்கைப் பரப்புதலைத் திசை திருப்பும் ஆயினும் அது பொதுமக்களின், பொதுக் கல்வியின் தலையில் மண்ணை வாரிக் கொட்டும் என்பதில் சிறிதளவும் அய்யமில்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஏன்?

தமிழ் மொழியின் எழுத்து இந்தி எழுத்துக்கு மாறானது. ஆறாம் வகுப்புப் படிக்கும் தமிழ்க் குழந்தை, தமிழ் எழுத்து, ஆங்கில எழுத்து, இந்தி எழுத்து ஆகிய மூன்றையும் சமாளிக்க வேண்டும். மூவகை இலக்கணங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும்.

முந்தைய தலைமுறை வரை எழுத்தறிவு பெறாதவர்களுக்கு இதைச் சமாளிக்க முடியாது. இதை உணர்ந்த பொதுமக்கள் கொதிப்படைந்தார்கள். நெடுங் காலமாகத் தமிழ்நாட்டுப் பொது மக்களின் நலன்களைக் கவனிக்கும் பெரிய அமைப்பு கிடையாது.

1917இல் நீதிக்கட்சி தோன்றிய பிறகு அந்த அமைப்பு பார்ப்பனரல்லாதாரின் குரலாகச் செயல்பட்டது. பொதுமக்களிடம் சிறிதளவு விழிப்பையும் ஊட்டியது.

1937இல் நடந்த பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்ததால் அக்கட்சி கட்டாய இந்தியை எதிர்த்து தனியாகப் போராடும் நிலையை இழந்துவிட்டது. மக்களறிந்த தலைவரோ இயக்கமோ கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினால் அவருக்கோ அந்த அமைப்புக்கோ ஆதரவாக நிற்கும் நிலையில் மட்டுமே நீதிக்கட்சி இருந்தது.

தமிழ் கற்றோரும் தமிழ் கற்பிப்போரும் கட்டாய இந்தியால் தமிழர் கல்வி வளர்ச்சி பாதிக்கப் படுவதைப் போலவே தமிழும் தன்னிலை இழக்கும் என்று அஞ்சினார்கள். ஆங்கில ஆதிக்கத்தால் அக்காலத் தமிழில் வடுவாகத் தோன்றுமளவு ஆங்கிலச் சொற்கள் நிறையக் கலந்து இருந்தன.

முன்னர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மணிப் பிரவாள நடையில் தமிழ் சிதைய, அதைச் செப்பனிட பெருமுயற்சி தேவைப் பட்டதை அவர்கள் நினைவு கூர்ந்தார்கள். புதிய இந்தி மொழியைப் பச்சிளம் பருவத்தில் கற்பதால் வரும் தலை முறைத் தமிழர்கள் கால்பங்கு தமிழ்ச் சொற்களையும் முக்கால் பங்கு பிற மொழிச் சொற்களையும் கையாளுவார்கள் என்று கருதினர். உலகின் மூத்த மொழிகளில் ஒன்றாகிய தமிழ் வரம்பின்றி பிற மொழிச் சொற்களைக் கடனாகப் பெறுவது அதன் உயிர் ஊக்கத்தைக் கெடுக்கும்; இயல்பைச் சிதைத்துவிடும். இப்படி அறிஞர்கள் கருதினார்கள்.

அறிஞர்கள், தமிழ் மொழியைக் காக்கும் பொருட்டு கட்டாய இந்தியை எதிர்த்தார்கள். கட்டாய இந்தித் திட்டம் தவறான நிலையில் திணிக்கப்படுவதால் தொடர்ந்து படிக்க வழி செய்யாததால் தங்கள் மக்களின் சாதாரணக் கல்வியும் கத்தரிக்கப் படுமென்று பெற்றோர்கள் எதிர்த்தார்கள்.

வெவ்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு பிரிவினர் கட்டாய இந்திப் பாடத்தை எதிர்த்தாலும் அந்த எதிர்ப்புப் பரவலாக இருந்தது. அவ்வுணர்ச்சி தமிழ்க் கழகங்களின் சார்பில் கண்டன முடிவுகளாக வெளிப்பட்டது. மாநாடுகள் வழியாகப் புலப்பட்டது.

கட்டாய இந்திப் பாடம் கட்சித் திட்டம் அல்லவாயினும் கட்சியின் ஆட்சி அப்படியொரு முடிவை அறிவித்த பிறகு அதை எப்படியும் ஆதரித்தாக வேண்டும் என்ற நிலையில் காங்கிரசு கட்சியினர் இருந்தனர்.

ஒரு வலிமை மிக்க கட்சியின் ஆட்சியைப் பிடித்துள்ள பெருங் கட்சியின் தீங்கான முடிவை முறியடிக்க பெரும் போராட்டம் தேவை என்பது பலருக்கும் புரிந்தது. அப்போராட்டத்தில் சிறை செல்லல் போன்ற தொல்லைகளைச் சமாளிக்க நேரிடலா மென்பதும் தெளிவாயிற்று. காங்கிரசைப் போன்ற கட்டுப் பாடான இயக்கம் ஒன்றே கட்டாய இந்திப் பாடத்தைத் தடுத்து நிறுத்த இயலும் என்பதும் வெட்ட வெளிச்சமாயிற்று.

தமிழ் நாட்டின் நன்மைக்கும், தமிழர் உரிமைக்கும் தந்தை பெரியாரும் அவரது தன்மான இயக்கமும் போராடும் அளவிற்கு வேறெந்த தலைவரோ இயக்கமோ போராட முடியாது என்பது நாடறிந்த உண்மை. இராசகோபாலாச்சாரியாருக்கு ஈடு கொடுத்துப் போராடக்கூடியவர் பெரியாரைத் தவிர எவரும் இல்லை. பெரியாரின் இயக்கம் ஈர்க்குமளவு பிற இயக்கங்கள் போராட்டத் தொண்டர்களை ஈர்க்க இயலாது என்பது வெளிப் படையாகத் தெரிந்தது.

கண்டன மாநாடுகள் பொதுக் கூட்டங்கள் முதலியவற்றின் உணர்வுகளை அன்றைய ஆட்சி பொருட்படுத்தவே இல்லை போராட்டம் ஒன்றே கட்டாய இந்திப்படிப்பைத் தடுக்கும் என்பது பொது முடிவு. அப்போராட்டத்தை முன்னின்று நடத்த வேறு எவரும் எந்த அமைப்பும் போதிய வலிவோடு முன்வராமையால் தந்தை பெரியார் அப்பொறுப்பினை ஏற்றார். கட்டாய இந்தி எதிர்ப்பு தன்மான இயக்கத்தின் உடனடிப் பணியாகிவிட்டது.

போதிய அறிவிப்பு கொடுத்துவிட்டு சென்னை, தங்கசாலை தெருவில் உள்ள இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியின் முன்பு நாள்தோறும் அடையாள மறியல் செய்வது கட்டாய இந்தி எதிர்ப்பு முறையாக முடிவு செய்யப்பட்டது.

இதில் ஒன்றைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும். அதுஎன்ன? குறிப்பிட்ட நாளில் தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி என்று திட்ட மிடவில்லை. பெரியாரின் எல்லாக் கிளர்ச்சிகளுமே வன்முறைக்கு

வழி செய்யாத முறையிலும் பொதுமக்களின் அன்றாட வேலை களுக்கு இடையூறாக இல்லாத தன்மையிலுமே ஏற்பாடு செய்யப் படும்.

அம்முறையில் ஒரே ஊரில் ஒரே பள்ளியின் முன்பு மட்டும் மறியல். அதுவும் பள்ளிக்குப் போவோரைத் தடுக்கும் வகையில் அல்ல. 'கட்டாய இந்தி ஒழிக' என்று முழக்கம் இடுவதன் வாயிலாகப் பொதுமக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவதோடு நிற்பது. அப்படி எழுப்பும் முழக்கமும் நாள் முழுவதும் அல்ல; சில மணித்துளிகளே நடக்கும். இத்தனையும் இணைந்ததே கட்டாய இந்தி மறியல் திட்டம்.

அத்தகைய மறியலில் ஈடுபட்டோரைக் கைது செய்யாமல் விட்டிருந்தால் போராட்டம் சூடு பிடித்திருக்காது. அரசு நிலைமையை எளிதில் சமாளித்திருக்கலாம். அது அன்றைய முதல் அமைச்சர் இராசகோபாலச்சாரியாருக்குப் புரியாதது அல்ல. அவர் விரும்பியதோ சூடு பிடிக்கும் கிளர்ச்சி. அப்படிச் சூடு பிடித்தால் எங்கும் இது பற்றியே பேச்சாகி விடும். ஆதரிப்போர் ஆதரிக்கட்டும். எதிர்ப்போர் எதிர்க்கட்டும். எப்படியானாலும் பேச்சு அது பற்றியே சுழன்றால் சமதர்மப் பேச்சு பெருமளவு குறைந்துவிடும். நின்றாலும் நின்றுவிடும் என்று அவர் மதிப்பிட்டார். ஆகவே, மறியல் செய்தவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்து தண்டனை பெற்றுத்தர அவர் ஆணையிட்டார்.

அப்பள்ளிக்கூடம் நடக்கும் ஒவ்வொரு நாளும் எதிரில் முழக்க மிட்ட நான்கு தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்னும் செய்தி வந்தன. அடுத்துக் கடுந்தண்டனைச் செய்தி தொடர்ந்து வெளியாயின. ஆங்காங்கே இதுபற்றியே பேச்சாயிருந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சிறைப்பட்டார்கள். பச்சைக் குழந்தைகளோடு தாய்மார்கள் சிறை சென்றார்கள். தந்தை பெரியார் ஈராண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்த பெரியாருக்கா, அறுபது வயதினரான ஈ.வெ. ராமசாமிக்கா இத்தகைய கடுந் தண்டனை என்று தமிழ்த் தென்றல் திரு. வி.கல்யாணசுந்தரனார் கல்லும் கரையும் வகையில் கண்டித்து எழுதினார். டாக்டர் வரதராசுலுவும் அப்படியே கண்டித்தார். பலரும் கண்டித்தனர். பல இதழ்களும் கண்டித்தன.

இத்தனையும் மறுசிந்தனையைத் தூண்டவில்லை. எதிர் பார்த்தபடித் திசைதிருப்பம் நடப்பதைக் கண்டு அன்றைய ஆட்சி முதல்வர் மனநிறைவு கொண்டிருப்பார். அதை வெளிப் படுத்தாமல் சமாளித்தார்.

ஈராண்டுகள் போல் நீடித்த கட்டாய இந்தி எதிர்ப்புப் போரில் தாலமுத்து, நடராசன் என்ற இரு இளந்தொண்டர்கள் சிறையில் உயிர் நீத்தார்கள். அதுவும் மக்கள் கவனத்தை சமதர்மத் திலிருந்து மொழி ஆதிக்கத் தீங்கின் மேல் திருப்பிவிட்டது.

ஆங்கில ஆட்சியின் அடக்குமுறையை விட நம்மவர் ஆட்சியின் சூழ்ச்சியே சமதர்மக் கோட்பாட்டைப் பரப்பும் பணியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

சென்னை தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளியின் முன் கட்டாய இந்திப் பாடத்தை எதிர்த்து முழக்கமிட்ட அடையாளப் போராட்டம் ஏறத்தாழ ஈராண்டுகள் போல் நீடித்தது. முதல் ஆண்டிலேயே, சட்ட மீறலைத் தூண்டி விட்டார் என்று குற்றஞ் சாட்டித் தந்தை பெரியாருக்கு ஈராண்டுத் தண்டனை வாங்கித் தந்தது இராசகோபாலாச்சாரியாரின் ஆட்சி.

பெல்லாரி சிறையில் அடைபட்டிருந்த பெரியார், கடுமையான நோய்க்கு ஆளானார். அவர் எடை பெருமளவு குறைந்து விட்டது. சிறை அலுவலர் அரசுக்கு அறிவித்தார். அரசு என்ன செய்தது?

அப்போது, சென்னை அரசின் முதல் மருத்துவராகப் பணி புரிந்து வந்த டாக்டர் குருசாமியை (முதலியாரை) அனுப்பி, மருத்துவ சோதனை செய்ய வைத்தது. மருத்துவர் அரசு வெகுளுமே என்று அஞ்சாமல், உள்ளது உள்ளபடி அறிக்கை கொடுத்தார்.

தந்தை பெரியாரின் உயிர் ஊசலாடியதை அரசு அறிந்து கொண்டது. அவரை மேலும் சிறையில் வைத்திருந்தால், பெரியாரின் உயிருக்கு ஊறு நேரலாமென்று அரசு அஞ்சியது. அத்தகைய பழிக்கும் அதனால் விளையக்கூடிய பகைக்கும் ஆளாக அரசு விரும்பவில்லை. எனவே, தண்டனைக் காலம் முடிவதற்குள் பெரியாரைத் திடீரென விடுதலை செய்தது. அது நல்ல விவேகமான ஆணை என்பதில் ஐயம் இல்லை.

பெரியார் என்னும் தனிப்பட்ட தலைவரிடம் காட்டிய அந்த விவேக அணுகுமுறையைப் பொதுமக்களைப் பாதிக்கும் கட்டாய இந்திப் பாட முறையில் கையாளவில்லை. முன்வைத்த காலைப் பின்வைப்பதில்லை என்று அரசு அடம் பிடித்தது. ஆக்கப் பணி களுக்குப் பயன்படுத்தியிருக்க வேண்டிய ஆட்சி வாய்ப்பை, வம்பை வளர்ப்பதற்குப் பயன்படுத்தினார், முதல்வர் இராசகோபாலாச் சாரியார். இருபத்தேழு ஆண்டுகளுக்குப், பிறகு, அவரே, இந்தி ஆட்சி மொழிக்கு எதிரான கிளர்ச்சிக்குத் தூபம் போட்டதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

சென்னை மாநிலப் பிரதமராக இருந்த போது, சின்னஞ்சிறு வயதினருக்கு மட்டும் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது இந்தியாவின் ஒருமைப் பாட்டை வளர்க்க என்று தம்பட்டம் அடித்தார்; மற்றவர்களைக் கொண்டும் அடிக்க செய்தார். ஆனால் இந்தி மட்டுமே ஆட்சிமொழியாகும் நிலை, நெருங்கியபோது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். இம் முரண்பாடுகளை எப்படி விளக்குவது?

முன்னே ஆர்வத்தில்—முன்னோடியாக விளங்க வேண்டு மென்னும் துடிப்பில், இந்தி பாடத்தைக் கட்டாயமாக்கினார். கால் நூற்றாண்டுக்குப் பிறகு முதிர்ச்சியின் தெளிவால் இந்தியின் தனியாட்சியில் உள்ள தீங்கினை உணர்ந்தார் என்று விளக்கலாமா? அது இராசகோபாலாச்சாரியாரின் மதி நுட்பத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

கட்டாய இந்தியைப் படிக்க முயன்றால் பொதுமக்களின் குழந்தைகள் தேர்ச்சிபெற மாட்டார்கள். கல்விப் போட்டிக்கு வராமல் குலத் தொழில் செய்யப் போய்விடுவார்கள்; படிக்க மறுத்தால் தமிழர்கட்கும் வடஇந்தியர்களுக்கு மிடையே கடுமையான கசப்பு ஏற்பட்டுவிடும் என்று இராஜாஜி கணக்குப் போட்டிருக்க வேண்டும்.

சமதர்மவாதிகள், மொழிச்சிக்கல் பற்றி ஒன்றுபடாமல் பிரிந்து, காழ்ப்புணர்ச்சி கொண்டு, நின்றால், சமதர்மக் கொள்கை விரைந்து பரவாது என்று அந்த அறிவாளி நினைத்திருக்க வேண்டும். வரலாற்று நிகழ்ச்சிகள், அத்தகைய கோடுகளையே காட்டுகின்றன.

கட்டாய இந்தி எதிர்ப்புப்போர் என்னும் திசை திருப்ப நெரிசலில் பெரியாரும் அவருடைய இயக்கமும் சிக்காமல் இருந்தால் பெரியார் பகுத்தறிவு இயக்கத்தையும் சமதர்ம இயக்கத்தையும் தமிழ்நாட்டிற்கு அப்பாற்பட்ட மாநிலங்களிலும் பெருமளவு பரப்பியிருப்பார்.

ஜெயப்பிரகாச நாராயண் அவர்களின் அழைப்பை ஏற்றுச் செயல் பட்டிருந்தால் அனைத்திந்திய சமதர்ம இயக்கத்தோடு தமிழ் நாட்டின் தன்மான இயக்கம் கலக்காமல் போனாலும் தனித்து நின்று செயல்பட்டிருந்தாலும் இந்திபேசும் மாநில மக்களிடம் பெரியார் கொள்கை, அடிக்கடியும் விரிவாகவும் பரவ வாய்ப்புகள் வளர்ந்திருக்கும். பெரியார் ஆண்டிற்கொரு முறையாகிலும் வடமாநிலங்களில் பகுத்தறிவு மழைபொழியவும் சமதர்மக் கோட்பாட்டினைப் பயிரிடவும் வாய்ப்புகள் வந்திருக்கும்.

இந்தியாவிலுள்ள சமதர்ம வாதிகளும் பகுத்தறிவாளர்களும் உள்ளத்தால் இரண்டறக் கலக்காமல் உதட்டளவே நட்புக் கொள்ள நேர்ந்தது. எதற்கும் பயனில்லாத, தேவையற்ற மன வேற்றுமையையும் பிரிவினையும் வளர்த்துவிட்ட பத்துப் பன்னிரெண்டு வயதினருக்குக் கட்டாய இந்தி பாடமுறைபோல் தான்.

இப்படி விளையும் என்பதை மற்றவர்களைவிடத் துல்லியமாக உணர்ந்தது, இராஜாஜியின் கூர்மையான மதி. எனவே, தேவையற்ற திட்டத்தைக் கட்டாயப்படுத்தினார்; அடம்பிடித்தார்; மானப் பிரச்சினை ஆக்கிவிட்டார்.

தாய்மொழியிழந்து ஊமையராகிவிடுவோமென்ற அச்சத்தில் தமிழ் மக்கள் போர்க்களத்திற்குத் தள்ளப்பட்டார்கள். அன்று இத்தகைய சமுதாயப் போராட்டத்திற்குப் பொறுப் பேற்கும் நிலையில் இருந்த ஒரே கட்சியாகிய தன்மான இயக்கம் போராட்டத்தில் குதித்தது.

இதற்கிடையில் 1939 செப்டம்பரில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. 'செர்மானிய மக்கள் ஆரிய இனத்தவர்; ஆளப்பிறந்த இனத்தவர்' என்னும் அகந்தை வெறியை ஊட்டி ஊட்டி, இட்லர், செர்மானியரை உலகப் போரில் தள்ளினான். இட்லரின் கூட்டாளிகள், இத்தாலிய முசோலினியும் சப்பானிய டோஜோவும் ஆவர்.

இம்மூவருமாகச் சேர்ந்து பிரிட்டன் பிரான்சு முதலிய நாடு களைத் தோற்கடித்தல், அவற்றிடம் சிக்கி உள்ள அந்நிய நாடுகளை தாங்கள் பங்கு போட்டுக்கொண்டு ஆளுதல், இவ்விரு குறிக்கோள் களோடு, இவர்கள் இரண்டாம் உலகப் போரில் குதித்தார்கள்.

பிரிட்டன் போர் அறிவிப்பு செய்ய வேண்டியதாயிற்று. தனது ஆளுகையில் இருந்த இந்தியாவும் தன் பக்கம் நின்று போராடு மென அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிப்பதற்கு முன்பு, பல மாநிலங்களில் இயங்கி வந்த காங்கிரசு அமைச்சரவைகளைக் கலந்தாலோசிக்கவில்லை; இந்தியக் காங்கிரசுத் தலைவர் களையும் கலந்து பேசவில்லை. இவற்றைச் சாக்காகச் சொல்லி, காங்கிரசு அமைச்சரவைகள் பதவிகளை விட்டு விலகின.

பிரதமர் இராசகோபாலாச்சாரியாரும் அவரது அமைச்சரவை யும் விலகியது; ஆங்கிலேயரின் பேராதரவு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதில்லை என்று அனைத்து இந்திய காங்கிரசு முடிவு செய்தது. எனவே, ஆங்கில ஆட்சி, மற்ற கட்சிகளின் ஆதரவை அதிகமாக நாடும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அந்நெருக்கடி தமிழர்களுக்கு நன்மையாயிற்று.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை விலகிய சில திங்களில், கட்டாய இந்திப் பாடம் எடுக்கப்பட்டது.

ஆனால் போர்க் காலமானதால், போருக்கு அப்பாலான சமதர்மக் கொள்கைப் பரப்பிற்கு முன்னரே விதிக்கப்பட்ட தடை எடுபடவில்லை; அத்தடை தொடர்ந்தது. இப்படி, உலகப்போர், சமதர்மக் கொள்கைப் பரப்புதலை தடுத்து நிறுத்திவைத்தது.

ஆங்கில ஆட்சிமுறையின் அடக்குமுறையால் நின்ற சமதர்ம இயக்கம் கட்டாய இந்திப் பாட முறையால் மூழ்கிப் போன சமதர்ம இளம்பயிர்—போர் நெருப்பால் பொசுங்கியது.

# 24. தமிழ்நாடா? திராவிடநாடா?

மக்கள் இன நல்வாழ்விற்கு, நிறை வாழ்விற்கு, ஏற்ற ஒரே வாழ்க்கை முறை சமதர்மப் பொருளியல் முறையாகும். அக் கோட்பாட்டினைப் பட்டி தொட்டியெல்லாம் பரப்பியதற்காகப் பெரியார், ஆங்கில ஆட்சியால் தண்டிக்கப்பட்டுச் சிறைக்குள் தள்ளப் பட்டார். அரசின் அடக்குமுறை, சமதர்ம உணர்வை வெளிப் படுத்தாமல், சாதியொழிப்பில், மூடநம்பிக்கை யொழிப்பில் தன்மான இயக்கத்தை முனைய வைத்ததை முன்னர் கண்டோம். இந்திப்பாடத்தைக் கட்டாயமாக்கி, தமிழரின் எதிர்ப்பைக் கிளறி விட்டு, தமிழ் மக்கள், தொடர்ந்து சமதர்மச் சிந்தனைக்குப் போகாதபடி, திசை திருப்பியதையும் ஏற்கனவே கவனித்தோம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பொங்கிய ஓர் உணர்வு, உருப்பெற்ற ஒரு கோட்பாடு, முட்டுச் சாலையாக முடிந்தது.

கட்டாய இந்திப் பாடத்தை எதிர்த்து நடந்த போரட்டத்தின் போது, திருச்சியிலிருந்து, நூறுபேர்களைக் கொண்ட படை யொன்று, கால்நடையாகவே, சென்னை வந்து சேர்ந்தது. அப்படை வழி நெடுக, பல ஊர்களில் கூட்டங்களை நடத்தி கட்டாய இந்தியால் விளையக் கூடிய தீமைகளைப்பற்றி விளக்கி வந்தது. அதுபற்றிப் பொதுமக்களின் உணர்வு எப்படியிருந்தது? எழுச்சியூட்டும் ஆதரவைத் தருவதாக இருந்தது.

அப்படை, சென்னை வந்தடைந்தபோது, என்றும் நினைத்து ஊக்கம் பெறும் வகையில் ஆர்வமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்படையினரை வரவேற்கும் பொருட்டு, சென்னை திருவல்லிக் கேணி கடற்கரையில், பெரியதோர் கூட்டம் கூடியது. அப்பெருங் கூட்டத்தில் தந்தை பெரியார் உரையாற்றுகையில், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற கருத்தை முதன் முதலாக வெளியிட்டு முழங்கினார். அம்முழக்கத்தால் எழுச்சி பெற்றவர்கள் ஏராளம்' அதிர்ச்சி கொண்டவர்களும் அநேகர்.

எழுச்சி கொண்டவர்கள், 'புதுவழி கண்டு விட்டோம்; புது வாழ்வு பெற்றுவிடுவோம்; பிறபகுதி இந்தியர்கள், சமதர்மக்

கோட்டைத் தொடுவதற்கு முன்பே, தமிழர்கள் அதை எட்டிப் பிடித்து விடுவார்கள். தென்னகத்தில் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும் பெருவாழ்வு விரைந்து வரும்' என்று எதிர் பார்த்தார்கள்.

அதிர்ச்சி கொண்டவர்கள், 'பசுவை வெட்டுவதா? நாட்டைத் துண்டாடுவதா? துரோகம்; தேசத் துரோகம்; தடுப்போம். நாட்டைப் பிரிப்பதைத் தடுப்போம், என்று ஆர்ப்பரித்தார்கள்; 'எலி வலை எலிகளுக்கே' என்று கேலி செய்தவர்களும் உண்டு.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்று பெரியாரும் அவரைப் பின்பற்றுவோரும் குரல் எழுப்பியபோது கூட, ஜின்னாவோ அவரைச் சேர்ந்தவர்களோ, பாகிஸ்தான் பிரிவினையைப் பற்றி பேசவில்லை என்பதை நினைவில் கொண்டு மேற்செல்வோம்.

சென்னை மாகாண பொதுமக்களைத் தட்டி எழுப்பி, அவர்களின் உரிய பங்கிற்காகப் போராடி, ஆறாண்டு காலம் ஊழலற்ற ஆட்சி நடத்தி, தொடக்கக் கல்வி நீரோட்டத்திற்கு உதவிய நீதிக் கட்சி, தமிழர் கட்சியல்ல; அக்கட்சி, தமிழர், தெலுங்கர்,கன்னடியர், மலையாளிகள் ஆகிய நால்வருக்கும் உரியதாக இருந்தது. நான்கு மொழியினருக்கும் உரிய நீதிக் கட்சிக்குத் தந்தை பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவர் 'தமிழர் தலைவர்' என்ற நிலைக்குமேல், வளர்ந்து விட்டார்; தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்து விட்டார். அந்நிலையில், பெரியாரின் முந்திய இலட்சியம் வளர்ந்துவிட்டது; 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற குறிக்கோளாக விரிந்துவிட்டது.

தலைவரைச் சிறையில் விட்டு விட்டு அவரது உருவத்தை மேடையிலிருத்தி, நடவடிக்கைகளை மேற்கொண்ட நீதிக்கட்சியின் மாகாண மாநாடு, அனைவரும் எழுந்து நிற்க, உலகறியக் கொடுத்த உறுதி என்ன? தலைவரின் வழி நின்று, அவரது இலட்சியம் நிறைவேற அயராது உழைப்போம் என்பதே பல்லாயிரவர் திரண்டு கொடுத்த உறுதி மொழியாகும்.

ஏற்கனவே, காங்கிரசு ஏற்றுக்கொள்ளாத சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை நீதிக்கட்சி, பொப்பிலி அரசர் தலைமையில் இயங்கியபோது ஏற்றுக் கொண்டது. அத்திட்டத்தின் முதற் கூறு வருணப் பிரிவுகளை - சாதிமுறையை, ஏற்றுக்கொள்ளாமல் அதை ஒழிக்கப் பாடுபடுவதாகும். மற்றோர் கூறு, அனைத்துலகச் சமதர்ம

முறையாகிய உற்பத்திச் சாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், வங்கிகள் ஆகியவற்றை மக்கள் உடைமை யாக்குவதாகும்.

இத்தகைய திட்டத்தை நீதிக் கட்சி உண்மையாக ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகத்தான் அடுத்த வாய்ப்பில் பெரியாரையே, கட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டது. அவரது குறிக்கோளை நிறைவேற்ற அயராது பாடுபடுவதாக வாக்குறுதியும் தந்தது.

முப்பது கோடி மக்களைக் கொண்ட இந்தியாவைச் சமதர்ம வழிக்குப் பக்குவப்படுத்திக் கொண்டு வருவதைக் காட்டிலும் எளிதாகவும் விரைவாகவும் நான்குகோடி பேர்களைக் கொண்ட சென்னை மாகாணத்தை ஆயத்தப் படுத்திவிடலாமென்று, பெரியாரும் அவரைப் பின்பற்றியவர்களும் நம்பினார்கள். அந்நம்பிக்கை, வெறும் அவாவில் எழுந்ததல்ல. அக்கால கட்டத்தில் அப்படி நம்புவதற்குச் சில காரணங்கள் இருந்தன. அவற்றைப் பார்ப்போம்.

அப்போதைய நிலையில், கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் பெரியாருடைய சாதிக் கலைப்பு, சமதாமத் திட்டம், ஆகிய இரண்டிற்கும், நல்ல வரவேற்பு இருந்தது. இரு பகுதிகளிலும் பொதுமக்களுடைய நம்பிக்கைக்கும் மதிப்பிற்கும் உரியவர்களாக வாழ்ந்த பெரியவர்கள், பெரியாருக்கு வேண்டியவர்களாக விளங்கியது போலவே அவரது கொள்கைக்கு ஆதரவோ, பரிவோ, காட்டுபவர்களாக இருந்தார்கள். ஆந்திரா, கர்னாடகா பகுதிகளிலும் பெரியார் ஓரளவு அறிமுகமானவராக இருந்தார்.

தெளிந்த தலைவர், தியாகம் பல புரிந்த செல்வர், புதிய இலட்சியங்களுக்காகத் தொடர்ந்து தியாகம் புரியத் தயங்காத சிறைப் பறவை, அஞ்சாமையில் அரிமா, இப்படிச் சுடர்விட்ட தந்தை பெரியார் முன்னின்று நடத்தும் சமதர்மப் போராட்டம், தென்னகத்தைப் பொருத்த மட்டில், வெற்றி பெறும் வாய்ப்பு இருந்ததாகத் தோன்றியது. தமிழ்நாட்டில் 150 சமதர்மச் சங்கங்கள் அமைக்க முடிந்ததே! திராவிடநாடு பிரிந்துவிட்டால், சமதர்ம ஆட்சியை நிறுவுவது எளிதாகிவிடும் என்று நம்பியதால், புது மழைக்குப் பின் தலை நீட்டும் பசும்புற்கள் போல், திராவிடநாட்டுக் கோரிக்கையைப் பெரியார் இயக்கத்தவர்கள் எழுச்சியோடு வரவேற்றார்கள். எந்த அளவிற்கு?

உலகப் போர் நடந்து கொண்டிருக்கையிலேயே 4-8-1940இல் திருவாரூரில் நடந்த நீதிக் கட்சியின் 15ஆவது மாகாண மாநாட்டில் சென்னை மாகாணத்தை ஒரு தனி நாடாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யும் அளவிற்கு ஆதரவு இருந்தது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இழிவுக்கு ஆளாகி, வறுமைக்கு ஆட்பட்டுத் தற்குறித் தன்மையில் வீழ்ந்து, புரோகிதனும் மற்றவனும் சுரண்ட, தவித்துக்கொண்டிருந்த பொதுமக்கள், சமதர்ம வழியை, விடுதலை வழியாக—வாழ்வளிக்கும் பெருவழியாகக் கருதினார்கள்.

திருவாரூர் மாநாட்டில், திராவிட நாட்டுப் பிரிவினைக்கு வேண்டிய திட்டங்களைத் தயாரிக்க திட்டக் குழு வொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவில் பெரியாரோடு, தோழர்கள் பி. டி. இராசன், கன்னையா (நாயுடு) பி. இராமச்சந்திர (ரெட்டி) இருவரும் ஆந்திரர்கள், எம். ஏ. முத்தையா (செட்டியார்) என். ஆர். சாமியப்பா, நாராயணசாமி (நாயுடு) அப்பாதுரை (பிள்ளை), ஏ. துரைசாமி மகாபலஹெக்டே (கன்னடியர்) பி. பாலசுப்ரமணியம், சி. பாசுதேவ், கி. ஆ. பெ. விசுவநாதன் ஊ. பு. தூ. சௌந்தர பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.

பிரிவினை எண்ணத்தின் பின்னணி என்ன?

நெடுந்தொலைவில் இருந்து இந்தியாவிற்கு வந்து, வணிகங்களைத் தொடங்கி, மெல்ல, மெல்ல, ஆட்சியாளர்களாக மாறிய ஆங்கிலேயர்கள் இந்திய அரசுரிமையைக் கைப்பற்றியபோது இந்திய நாடு முழுவதையும் ஒரே மன்னரிடமிருந்தோ, ஆட்சியிடமிருந்தோ பறித்துக்கொண்டார்களா? இல்லை, பல அரசர்களிடமிருந்து கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர் வந்தபோதோ அதற்கு முந்திய எக்காலத்திலோ, இந்திய நாடு முழுவதும் ஒரே குடைக்கீழ் ஆளப்படவில்லை.

ஊரில் ஓர் வீடு, அண்ணன் தம்பிகள் நால்வர்; அவர்கள் தனித் தனிக் குடும்பம் நடத்தினர். அவர்களுக்குள் அழுக்காறு, சண்டையாகி அன்னியர் தலையிடும் நிலையை உருவாக்கிற்று, நால்வர் சொத்துக்களையும் பொதுவான ஒருவர் ஏற்றுப் பராமரிக்கும் நிலை சில காலம் இருந்தது. அச் சொத்துக்களை திருப்பிக்

கொடுத்துவிடும் காலம் வந்தபோது, 'மொத்தமாகக் கொடுத்து விட்டு ஓடாதே; அவர் அவரிடமிருந்து எடுத்ததை அவர் அவரிடமே கணக்குச் சொல்லி, கொடுத்து விட்டுப்போ' என்று சொல்லமாட்டோமா?

அதைப் போலவே, 'எத்தனையோ மன்னர்களிடமிருந்து பறித்த ஆட்சி உரிமையை அந்தந்தப் பகுதி மக்களிடம் ஒப் படைத்து விட்டுப் போ' என்று கேட்கத் தோன்றிற்று.

இத்தகைய சிந்தனை, அரசியல் உலகில், எங்காவது எழுந்தது உண்டா? உண்டு. எங்கே எழுந்தது? சோவியத் நாட்டில் எழுந்தது; செயல்பட்டது. எப்போது? எப்படி?

இரஷ்ய மக்களின் மன்னராகத் தோன்றிய சார், அக்கம்பக் கத்தில் இருந்த பிற மன்னர்களை, ஆட்சிகளைக் கவிழ்த்துவிட்டு, பல இன மக்களை சாரின் பேரரசில் இணைத்து, அடக்கிவைத் திருந்தான். இது இந்திய மக்களை ஆங்கிலேயர் ஒரு கூண்டுக்குள் அடைத்து ஆண்டதற்கு ஒப்பாகும்.

1917 அக்டோபரில் வெடித்த, உலகத்தின் மாபெரும் புரட்சி, சார் ஆட்சியைத் தொலைத்தது; பாட்டாளி ஆட்சியை அமைத்தது; சமதர்ம ஆட்சியைக் கொண்டு வந்தது. அதோடு நிற்கவில்லை. சிலருக்குத் தனிநாடு தந்தது. அக்டோபர் புரட்சி யின் தலைவரும் சோவியத் முறையின் தந்தையுமான, பிரதமர் லெனின், சார் பிடித்த மண்ணெல்லாம் புதிய ஆட்சியில் இருக்க வேண்டுமெனக் கூறி அடக்கிவைக்க முயன்றாரா இல்லை. மாறாக, இரஷ்யரல்லாத பிற இன மக்களுக்கு, சுய நிர்ணய உரிமை உண்டு. அவர்கள் விரும்பினால், இரஷ்யாவிலிருந்து பிரிந்து போகலாம்; தங்களுக்கேற்ற ஆட்சிமுறையை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு என்று அறிவிப்பு செய்தார்.

அது ஏட்டு அறிவிப்பு அல்ல; நடைமுறைக்கு வந்த உரிமை யாகும். அவ்வுரிமையைப் பயன்படுத்தி, எஸ்பெக்கியர், அர்மீ னியர் போன்றவர்கள், இரஷ்யாவிலிருந்து பிரிந்து போனார்கள். தனியாட்சி நிறுவிக் கொண்டார்கள்; சமதர்ம ஆட்சியை உரு வாக்கிக் கொண்டார்கள்; சில ஆண்டுகளுக்குப் பிறகு, பெரிய சமதர்ம ஒன்றியம் மிக நல்லது என்று அவர்கள் எண்ணித் தாமாகவே, சமத்துவ அடிப்படையில் இரஷ்ஷிய சமதர்ம

சோவியத் கூட்டாட்சியோடு இணைந்து கொண்டார்கள் பிரிந்தவர் கூடினும் தனித்தனிக் கொடியோடு, சோவியத் ஒன்றியத்தில் வாழ்கிறார்கள்.

மாமேதை லெனின், பல்வேறு இனங்களுக்கு, சுயநிர்ணய உரிமை வழங்கியதும் சார் ஆட்சியில் அடிமைப்பட்டு, மொழியிழந்து வாழ்ந்த சில இனத்தவர், அவ்வுரிமையைப் பயன்படுத்தியதும் தென்னிந்தியாவில் உள்ள பலரிடையே ஒத்த உணர்வுகளைத் தூண்டியது. இந்தியாவிலிருந்து பிரிந்தால்தான், சாதிக்கொடுமையை, சாதி இழிவை ஒழிக்க முடியும்; சமதர்ம முறையை சில ஆண்டுகளில் கொண்டுவர இயலும் என்ற மதிப்பீட்டில் எழுந்தது திராவிட நாட்டுக் கோரிக்கை. அது குருட்டுச் சிந்தாக முடிந்தது எதனால்?

எந்த ஒரு குறிக்கோளோ, கோட்பாடோ, திட்டமோ, அதன் உயர்ந்த தன்மையாலோ, அதனுள் பொதிந்துள்ள பெரும் தன்மையாலோ, அதுவாகவே, வெற்றி பெற்று விடாது. நீதிக்குத் துணையாக, வலிமை, வரும்போதே, அது வெற்றிபெற வாய்ப்பு உண்டு. சின்னஞ்சிறு நீதிக்கு, மாறுதலுக்குப் போராட, சிறு வலிமை போதும் பெரியதோர் நீதிக்கு, குறிக்கோளுக்குப் போராட, பெரும் வலிமை தேவை.

அய்ந்தாறு கோடி மக்களின் வருங்காலம் பற்றிய, கோட்பாடே, திராவிட நாடு பிரிவினை கோரிக்கையாகும். அது தென்னக மக்களின் வருங்கால அரசியலை மாற்றும்; பொருளியல் நிலையைத் தலைகீழாகப் புரட்டிப்போடும்; சமுதாயத்தில் நிலவி வந்த பிறவி ஏற்றத் தாழ்வு உணர்வுகளை உடைத்தெறியும் என்று கூறப்பட்டது. அதற்காகவே, நாட்டுப் பிரிவினை கேட்கப் பட்டது. இதில் எவ்வித ஒளிவுமறைவும் இல்லை.

பொதுமக்களிடமிருந்து இதற்குப் போதிய ஆதரவும் தியாகமும் கிடைத்தனவா? இல்லை.

நிலக்கிழார்களும் வட்டிக் கடைக்காரர்களும், வணிகர்களும், பிற செல்வர்களும் சமதர்மம் வந்தால் குடிமுழுகிப் போகுமென்று அஞ்சினார்கள். இது இயற்கை. எளிய மக்களும் மிரண்டார்கள். இப்போது கூட, பெட்டிக் கடைக்காரர்களும் வேலையற்ற பட்டதாரிகளுமே, நடைபாதை வாசிகளுமே, சமதர்மம் என்றால் மிரளும்போது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், அவர்கள் நிலை எப்படி யிருந்திருக்கு மென்று ஊகிக்கலாம்,

எந்த ஏழைகளுக்காகச் சமதர்மம் வரவேண்டுமோ அந்த ஏழைகளே ஆதரவு கொடுக்கத் தவறியபோது, திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் போதிய வலிமை சேரவில்லை.

சமுதாயத்தின் அடித்தட்டுகளில் உள்ளவர்கள் கூட தங்களுக்கிடையில் உள்ள உட்பிரிவுகளைக் கலைக்க, இன்றைக்கும் பாடுபடுவதில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கேட்கவா வேண்டும்.

பெரியார் இயக்க மாநாடுகளில் எல்லாச் சாதியாரும் சேர்ந்து உட்கார்ந்திருப்பதோடும் கலந்து அமர்ந்து உண்பதோடும் சாதியொழிப்பு உணர்வு நின்று விட்டது. இதுவே கசப்பான உண்மை.

கலப்புத் திருமணங்கள் ஆண்டுதோறும் நடந்தனவே என்று கேட்கத் தோன்றுகிறதா? நடந்தது உண்மை. பத்தாயிரம் பேர்கள் சாதி யொழிப்பு மாநாடுகளில் கூடிவிட்டு, இரண்டொருவர் மட்டுமே கலப்புத் திருமணத்திற்குக் காரணமாயிருந்தார்கள். சமத்துவ உணர்வு முழுமையான செயல் உருவம் பெறுவதற்குப் போதுமான துணிவுடையவர்கள் ஏராளம் இல்லை.

மெய்யாகவே திராவிட நாடு உருவாகி விட்டால், சாதியொழிப்புச் சட்டம் வந்துவிடும்; உற்பத்திச் சாதனங்கள் நாட்டுடைமையாகி விடும் என்று எண்ணற்றோர் உள்ளூர அஞ்சினர்.

அக்கால கட்டத்தில், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பெரியாரிடம் இருந்த ‘தற்கொலைப்’ பட்டாளத்தை விட, சிறந்த பட்டாளம் எவரிடமும் இல்லை. இருப்பினும் அது திராவிட நாட்டைப் பிரித்து வாங்குவதற்குப் போதியதாக இல்லை.

திருவாரூர் மாநாட்டில், திராவிட நாட்டுப் பிரிவினைக்குத் திட்டந் தீட்ட அமைக்கப் பட்ட குழுவின் உறுப்பினர்கள் பட்டியலை மறுமுறை படித்துப் பாருங்கள். பெரியார் ஒருவர் தானே சிறைக்கஞ்சாத சிங்கம்; எத்தகைய விலையையும் கொடுக்கத் தயங்காத பெருந்தியாகி.

மற்றவர்கள்? அனைவரும் மேடை முழங்கிகள் கூட இல்லை பாதிப்பேர்கள் போலபேச்சாளர்கள்;களங்காணாத பேச்சாளர்கள். அவர்களில் அநேகர் பொதுமக்களின் பார்வைக்கும் கிட்டாதவர். அத்தகையோர், மக்களிடம் எப்படி எழுச்சியூட்ட முடியும்? போதிய போராட்ட உணர்வினை வளர்க்க முடியும்?

—9—

புதிய பிரிவினைத் திட்டத்திற்குத் தேவையான அளவு சூடு பிடிக்காவிடினும் பழைமை விரும்பிகள், இப்போது உள்ள பொருளியல். முறையை—சாதி முறையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரே வழி திராவிட நாட்டை எதிர்ப்பது என்று முடிவுக்கு வந்தார்கள். எனவே, சமயப் பாதுகாப்பு, பண்பாட்டுப் பாதுகாப்பு என்னும் பெயரில் ஒரு கூட்டம் எதிர்த்தது. 'நாட்டுப் பற்று' என்ற பெயரால் ஒரு கூட்டம் எதிர்த்தது. கீரைக் கடைக்குப் போட்டிக் கடை வைக்கும் போக்கால், பலர் எதிர்த்து விளம்பரம் தேடினர். இத்தகைய காரணங்களால் திராவிட நாட்டுக் கோரிக்கை நிறைவேறுவதற்கு வேண்டிய போராட்ட வலிமை குவியவில்லை.

தனிநாடு பெற, கூட்ட வலிமை போதாது; நியாய அடுக்குப் போதாது; நாவன்மை போதாது என்பது புலனாயிற்று.

பெரியார் திராவிட நாடு கேட்ட பிறகும் சில ஆண்டுகள் வரை ஜின்னா, பாகிஸ்தான் பிரிவினை கேட்கவில்லை. இருந்தும் அக் கோரிக்கை வெற்றி பெற்றது. எதனால்? தலைவர் ஜின்னா சொல்லி விட்டால், கண்ணை மூடிக்கொண்டு எத்தகைய போராட்டத்திற்கும் குதிக்கக் கூடியவர்கள், போதிய எண்ணிக்கையில், அவர் பின்னால் இருந்தார்கள்; செயல் பட்டார்கள்.

பெரியார் அறிவுப் பூர்வமாக, எவ்வளவுதான் காந்திய முறைகளைக் கண்டித்தாலும் நடைமுறை என்று வரும்போது காந்தியை மிஞ்சும் 'சாத்வீகி' யாகவே நடந்து வந்தார்.

அவராலோ, அவரது இயக்கத்தாலே, எவருடைய உயிருக்கோ உடைமைக்கோ, பொதுச் சொத்துக்கோ சிறிதளவு இழப்பும் ஏற்பட்டதில்லை என்பது பெரியாருக்குரிய தனிச் சிறப்பாகும். அச்சிறப்பு அவருக்குப் பின்னரும் தொடர்வதைக் காண்கிறோம்.

இருப்பினும் ஏதோ தொல்லைகளும் கொடுமைகளும் பெரியார் இயக்கத்தால் கட்டவிழ்த்து விடப் பட்டது போல, 'மேலோர்' அன்றும் அலறினார்கள்; இன்றும் அலறுகிறார்கள்; அத்தனையும் பொய் அழுகை.

இல்லை யென்றால், மடியில் கனமிருப்பதால், வழியில் பயமேற்பட்டு ஒப்பாரி வைத்துக்கொண்டே முன்னேறச் செய்யும் சூழ்ச்சியாக இருக்கலாம். மூவாயிரம் ஆண்டுகளாகப் பிறவி முதாளித்துவத்தால் பிறரைச் சுரண்டியதில் வாழ்வு வாழ்பவர்களுக்கு—சாதி ஆணவக்கனம் மடியில் இருப்பவர்களுக்கு எதைக் கண்டாலும் அச்சம் ஏற்படுவது இயற்கை.

# 25. திராவிடநாடு கோரிக்கை: ஆங்கில அரசு புறக்கணித்தது

நாட்டு மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள்போல் தற்குறிகளாக இருந்தார்கள்; படித்த சிலரும் அறிவு பெறவில்லை; அறியாமை, மூடநம்பிக்கை ஆகியவற்றில் இருந்து விடுவிக்கும் படிப்பைப் பெறவில்லை. அவற்றை நியாயப் படுத்தும் பாடங் களையே படித்தார்கள்; பதவிகளைத் தேடுவதே அவர்கள் குறிக்கோள்.

பொதுமக்கள் சில ஆயிரம் ஆண்டுகளாக, அரசியலில் உள் நாட்டு மன்னர்களுக்கோ வெளிநாட்டு மன்னர்களுக்கோ அடிமைப் பட்டுக்கிடந்தார்கள். மன்னராட்சியை மாற்றி, மக்களாட்சியை உருவாக்க வேண்டும் என்னும் குடியாட்சி உணர்வையே பெறாது இருந்தவர்கள் நம் மக்கள். சமயத்தின் இரும்புக் கரங்கள் நம் மக்களின் சிந்தனையை மறக்க வைத்த அளவு பிறநாட்டு மக்களின் சிந்தனையை வீழ்த்தவில்லை.

'ஏழ்மை, கடவுளின் கட்டளை' என்று நம்பியோர் பிற நாடு களில் இருந்தாலும் சமுதாயத்தின் நிலைக்கு, 'பொதுமக்களும் பொறுப்பானவர்கள் — முழுப் பொறுப்பாளர்கள் அல்லாத போதிலும் பெரும் பொறுப்பாளர்கள்' என்னும் கருத்து பிறநாட்டு அறிஞர்களிடையே அதிகம் பரவிற்று; செயல்பட்டது.

எந்த நாட்டிலும் கூட்டத்திற் கூடி ஆதரிக்கும் அத்தனை பேரும் போராட்ட வீரர்கள் ஆவதில்லை. இருப்பினும் 'நாட்டத் திற் கொள்ளாத' மக்கள் நம்மிடையே இருக்கும் பெரும் விழுக்காட்டில் பிற பிரிவினரிடையே இல்லை.

இறை நம்பிக்கையுடைய இஸ்லாமியர்கள் படத்தையோ உருவத்தையோ அண்ட விடுவதில்லை; எதற்கும் பால் முழுக்கு, இளநீர் முழுக்கு, தேன் முழுக்குப் போட்டு உணவுப் பொருள் களைப் பாழாக்குவது இல்லை,

கிறித்துவர்களும் கிறித்துவின் சிலைக்கோ கன்னிமேரி சிலைக்கோ பலவகை முழுக்குகள் போடுவதை வழிபாட்டு முறையாகக் கொள்வதில்லை.

மற்றவர்களால் பொருள்களைப் பாழாக்காது வழிபட முடிகையில் இந்துக்களுக்கு மட்டும் அதிகப் பொருட்களைப் பாழாக்குவதே அதிக பக்தியாக, இறை நம்பிக்கையின் வெளிப் படாக இருப்பானேன்? அவற்றை விட்டுவிட்டு வழிபடும் பட்டதாரி கூட இல்லையே!

பிற சமயங்களில் தன்னலம், சுரண்டல், ஆதிக்கம் ஆகிய ஒட்டடைகள் கால ஓட்டத்தில் சேர்ந்து போயிருக்கலாம்.

இந்து சமயத்தின் ஊற்றுக்கால்களே நச்சானவை. அவை சிறுகூட்டம் பெருங்கூட்டதகை அடிமைப் படுத்தி, இழிவு படுத்தி மிதித்து வைக்கும்—பிறவி முதலாளித்துவத்தின் சுரப்புகள் ஆகும். அவற்றின் துணையால் பாட்டாளிகளை, உழவர்களைச் சுரணடிக் கொண்டு அவர்கள் வறுமையிலிருந்து விடுபட முடியாமல் அவர் களை அழுத்தி வைக்கவே இந்து சமயமுறைகள் தோன்றின; பயன்படுகின்றன.

வணங்குகின்றவனுக்கும் வணங்கப்படுவதுக்கும் இடையில் தரகனாவது வடமொழியாவது இருக்கக் கூடாதென்றும், வழி பாட்டிற்காகக் காசுபணம் செலவழிக்கக் கூடா தென்றுந்தானே 1929இல் முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டிலும், 1930இல் இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டிலும் முடிவு செய்தார்கள், அதைக் கூடச் செய்ய முன்வராத, நாணல்களாக அல்லவா தமிழர்கள் வாழ்ந்தார்கள்?

எப்போதோ பல நூற்றாண்டுகளுக்கு இழந்த உரிமையைக் கடைசியாக வந்தவனிடம கேட்டது தவறல்ல; கொடுமையல்ல.

அன்றைய அரசியல் உலகில் சென்னை மாகாணத்தைவிடச் சிறிய நாடுகள் பல, குறைந்த மக்கள் எண்ணிக்கையுடைய நாடுகள் பல, முன்னர் சிக்கி இருந்த பெரிய ஆட்சிகளிலிருந்து விடுபட்டு தன்னாட்சி பெற்ற நாடுகளாக இயங்கி வந்தன.

இன்று செய்திகளில் அதிகம் அடிபடும் போலந்து முதல் அமைதியான நேபாளம் வரை அன்றே ஆட்சி உரிமை உடைய தனிநாடுகள். இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அவற்றை விடச் சிறு நாடுகள் கூடத் தன்னாட்சி பெற்றுவிட்டன.

இவற்றையெல்லாம் கல்லூரி காணாத தந்தை பெரியாரும், அவரது இயக்கத்தவரும் தெளிவுபடுத்தி பொதுமக்கள் ஆதரவைத் திரட்ட முயன்றார்கள். இந்தி எதிர்ப்பு உணர்வைச் சாதகமாக்கி திராவிட நாட்டுக் கொள்கையைப் பரப்ப முயன்றார்கள்.

அன்றையக் காங்கிரசு கட்சியின் தலைவர்களில் ஒருவராகிய ச. இராசகோபாலாச்சாரியார் 'தமிழர்கள் மட்டுமே நாட்டை ஆளலாம் என்ற தைரியம் ராமசாமி (நாயக்கரு)க்கு இருக்கிறது. அதிலே தவறில்லை. அயர்லாந்து நம் மாகாணத்தில் 16இல் ஒரு பங்கு இருக்கிறது. டிவேலாரா சுயராஜ்யம் நடத்தவில்லையா? தைரிய மிருந்தால் நடத்தலாம்' என்று பேசினார். எப்போது, எங்கே அப்படிப் பேசினார்?

1945ஆம் ஆண்டு மே 28 ஆம் நாள் இராசகோபாலாச்சாரியார் அப்படிப் பேசினார்; சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் அப்படிப் பேசினார்.

அவரது சீடர்கள் முதலில் இருட்டடிப்பு செய்தார்கள்; பிறகு கிண்டல் செய்தார்கள்; பின்னர் எதிர்ப்பைக் கிளப்பிவிட்டார்கள்; தூற்றலை வளர்த்துவிட்டார்கள். அப்படியிருக்க இராஜாஜி இப்படி ஆதரிக்க எது காரணமாயிருந்தது?

இரண்டாம் உலகப் போரில் பெரியாரைச் சார்ந்தவர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இயங்கியது உண்மை. அது தலைவரின் தன்னலம் பற்றியல்ல; கட்சியினரின் தனிப்பட்ட நன்மைக்காக அல்ல. பின் எதனால்?

உலகப் போரில் இட்லர் வெற்றி பெற்றால் மனிதகுலம் முழுவதுமே அடிமைப்பட்டுவிடும் என்பது பெரியாரின் மதிப்பீடு. எனவே இட்லர் வெற்றி பெறுவதைத் தடுக்கவேண்டும் என்பது நோக்கம். பிந்தைய நிகழ்ச்சிகள் அம் மதிப்பீடும் நோக்கமும் சரியானவையென்று காட்டிவிட்டன.

சோவியத் நாட்டோடு அமைதி உடன்படிக்கை செய்து கொண்டிருந்த இட்லர் முன்னறிவிப்பின்றி திடீரென மிக அதிகமான படை கொண்டு சோவியத் நாட்டைத் தாக்கினான். அக் கடும்போர் நான்காண்டுகள் நீடித்தன. அக்காலத்தில் மற்றோர் சதித்திட்டம் அம்பலத்திற்கு வந்தது. அது என்ன?

சோவியத் நாட்டைப் பிடித்த பிறகு இட்லரின் படைகள் பெர்சியா வழியாக இந்தியாவைத் தாக்கி அடிமைப்படுத்த வேண்டும் என்பது சதித் திட்டம்.

இட்லரின் குறிக்கோள், அய்ரோப்பாவை அடக்கி ஆள்வதோடு நிற்காது அதற்கு அப்பாலும் பாயும் என்பதைப் பலருக்கும் முன்ன தாகவே பெரியார் உணர்ந்திருந்தார். எனவே பேராதரவுக்கு முன் வந்தார்; ஆர்வத்தோடு ஆதரவு திரட்டினார். இதில் என்னகுற்றங் காணமுடியும்? மதிப்பீடும்தவறல்ல;நோக்கமும்நல்லதாகமுடிந்தது.

1940இல் தந்தை பெரியாரை அழைத்து சென்னை மாகாண அமைச்சரவையை அமைத்து நடத்தும்படி அப்போதைய ஆளுநர் கோரினார். தனிநாட்டை உருவாக்கப் போராடிக்கொண்டிருந்த பெரியார் பதவி ஆசை கொள்ளவில்லை; முதல் அமைச்சராக மறுத்து விட்டார். இராசகோபாலாச்சாரியார் தலையிட்டு பெரியார் முதல் அமைச்சரானால் தாம் ஆதரிப்பதாகக் கூறியும் மறுத்துவிட்டார். பிறகு வைசிராய் பேசி, முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்க வேண்டினார். பெரியார் இணங்கவில்லை.

மீண்டும் 1942இல் ஓர்முறை ஆளுநர், தந்தை பெரியாரை முதல் அமைச்சராக வரும்படி அழைத்தார். அதையும் பெரியார் மறுத்துவிட்டார். பிறகு வைசிராயே கேட்டார். அப்போதும் மறுத்துவிட்டார். இப்படி பெருந் தியாகங்களைச் செய்த பெரி யாரை 'ஆங்கிலேயரின் பல்லக்குத் தூக்கி' என்று பத்திரிகை யுலகம் கட்டுப்பாடாக உளமார்ந்த பொய்யைப் பரப்பிற்று; புரோகித உலகம் கயிறு திரித்தது; அரசியல்வாதிகள் அவதூறு செய்தனர்.

திராவிட இயக்கத்திற்கு எதிர்ப்பிரசாரம் கட்டவிழ்த்து விடப் பட்டது. தமிழர்களைப் பிடித்து முன்னிறுத்தி, திராவிடநாடு கோரிக்கையை எதிர்க்கச் செய்தார்கள். சென்னை தொழில் அதிபர்கள் திராவிடநாடு கோரிக்கையைக் காட்டி தொழிற்சலுகை பெற்றார்கள்.

இன்றைக்கும் 'மதவுரிமை அடக்கப்பட்ட சோவியத் நாட்டைக் கூட ஆதரித்தார்' என்று விழாக்களில் மேடையேறி முழங்கும் பெரியவர்கள் அறிவாளிகளாகக் கருதப்படும்போது, அந்நாளில் பெரியாரின்பேரில் பொய்யான பழிகளைச் சுமத்தியது வியப்பல்ல.

'விழுங்குணவை விழுங்குவதற்கும் உணர்ச்சியற்றார்' என்று பாரதிதாசனால் இடித்துரைக்கப்பட்ட தமிழ்மக்கள் அப்பழிகளைச் சாக்காகச் சொல்லி ஒதுங்கிப்போனது, சமதர்மப் பயிர் வளர் வதைத் தள்ளிப் போட்டது.

திராவிடநாடு கோரிக்கைக்குப் பின் கிளம்பிய பாகிஸ்தான் கோரிக்கை சூடு பிடித்ததைக் கண்டே இராஜாஜி, 'தைரியமிருந் தால் தமிழர்களே ஆளலா'மென்று ஆசை காட்டினார்.

திராவிடநாடு கோரிக்கை தமிழகத்திற்கு அப்பால் இருந்த அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது.

ஒருமுறை, அலிகார் பல்கலைக் கழக மாணவர் கூட்டத்தில் பேசிய சர். பிரேஷ்கான் நூன் என்ற இஸ்லாமியத் தலைவர்,

'இந்தியா விடுதலை பெறும்போது அய்ந்து அரசுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். அந்த அய்ந்து அரசுகளின் பிரதிநிதித்துவம் கொண்ட ஓர் இந்தியக் கூட்டாட்சி ஏற்பட வேண்டும். அக் கூட்டாட்சி பாதுகாப்பு, நாணயமுறை ஆகியவற்றிக்குப் பொறுப்பாயிருக்க வேண்டும்' —என்று கூறினார். அந்த அய்ந்து அரசுகளில் ஒன்றாக திராவிடநாடு (சென்னை மாகாணம்) அமைய வேண்டுமென்று கோடிட்டுக் காட்டினார்.

திராவிடநாடு கோரிக்கை பற்றி அனைத்திந்திய முஸ்லீம் லீக்கின் தலைவர் ஜின்னா அவர்கள் கூறியது வருமாறு :

'திராவிடப் பொதுமக்களே! நீங்கள் திராவிட நாட்டைத் தனியாக நிறுவ உங்கள் சொந்த இலட்சியப்படி வேலை செய்யுங்கள். திராவிடத்தைத் தனி நாடாக்குவதில் என்னாலியன்ற எல்லா உதவிகளையும் செய்கிறேன். திராவிட நாட்டில் வசிக்கும் 7 சத முஸ்லீம்களும் உங்களுடன் தோழமைபூண்டு ஒழுகுவார்கள்' என்றார்.

இந்தியச் சட்டசபையில் 17-3-1942இல் பேசிய அனைத்து இந்திய முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் ஜனாப் லியாக்கத் அலிகான்: இந்தப் போர் முடிந்ததும் நிர்மாணிக்கப்படும் இந்திய அரசியலில் பாகிஸ்தானும் திராவிடஸ்தானும் கண்டிப்பாய் அமைந்து தீரவேண்டும் என்று கூறினார்.

தனி நாடு என்னும் புரட்சியான பலன் கேட்டுப் பெறுவது அல்ல; தோழமை கட்சிகள் பரிந்துரைக்கப் பெறுவது அல்ல; சொந்த வலிமையால் விளைய வேண்டியது. சொந்த வலிமை போதுமானதாக இருந்ததா?

பாகிஸ்தான் கோரிக்கைக்குப் பின்னால் பொங்கியெழுந்த ஆதரவுபோல அவைகள் திராவிட நாட்டிற்கு எழவில்லை. எனவே, இந்திய அரசியல் உரிமை பற்றி தலைவர்களைக் கலந்தாலோசிக்க வந்த 'சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் குழு' பெரியாரின் கட்சியைப் பொருட்படுத்தவில்லை.

# 26. தேர்தலில் நிற்காதீர்கள் பட்டம் பதவிகளைக் கைவிடுங்கள்

அரசியலில் நிலையான நண்பர்களும் இல்லை; நிலையான பகைவர்களும் இல்லை! இது உண்மையான வழக்கு ஆகும்.

ஆங்கிலேயர்கள், நெடுந் தொலைவிலிருந்து வந்து, இந்தியர் களைச் சுரண்டிக் கொண்டிருந்தார்கள். அதற்கு, எவர், எவர் எப்போது பயன்பட்டார்களோ, அவர்களை யெல்லாம் அவ்வப் போது பயன்படுத்திக் கொண்டார்கள். தேவைப்பட்டால், ஆதரிப்பவர்களைக் கைவிட்டு விட்டு பகைவர்களோடு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இந்திய அரசியல் விவகாரங்களில் மட்டுமா இப்படி நடந்து கொண்டார்கள்? இல்லை; பிற நாட்டுத் தொடர்புகளிலும் 'உடுக்கை இழந்தவன் கைபோல, நெருக்கடியில் உதவியர்வகளை விட்டுவிட்டதோடு, அவர்களை எதிர்ப்பவர்களுக்குத் துணையாகி விட்டார்கள். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

உலகின் முதல் சமதர்ம ஆட்சி, லெனின் தலைமையில், 1917இல் ஏற்பட்டது. இரஷ்யாவில் முளைத்த அம்முறையை, முளையிலேயே கிள்ளி எறிந்துவிட, பிரிட்டன் உள்ளிட்ட பதினான்கு முதலாளித்துவ நாடுகள் முயன்றன; நான்கு ஆண்டு கள்போல், இரஷ்யாவைத் தாக்கி, அப்பரந்த நாட்டில் போரிட்டன; இறுதியில் தோற்றன.

இரண்டாவது உலகப்போர் சூடுபிடித்து நீண்டுகொண்டிருந்த போது, சோவியத் ஆட்சியை அழிக்க முயன்ற பிரிட்டன், சோவியத் நாட்டோடு, கூட்டுறவும் ஒத்துழைப்பும் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். ஆங்கிலேயர், அப்போதைக் காகிலும் பழைய பகையை மறக்கவேண்டியதாக இருந்தபோது சோவியத் நாட்டிற்கும் தோழமை வரவேற்கத் தக்கதாக இருந்தது. இவ்விரு நாடுகளும் அமெரிக்காவும் இணைந்து நின்றே, அப்போரின் பிற்பகுதியில் போரிட நேரிட்டது.

உலக முழுவதற்கும் கேடாக அமையக்கூடிய இட்லரை முறியடிக்க, அத்தகைய, முன்னாள் எதிரிகளின் கூட்டு தேவைப் பட்டது. வெற்றிக்குப் பிறகு முதலாளித்துவ நாடுகள் சோவியத் ஆட்சியை ஒழிக்கக் கனவு காண்கின்றன. இது பகற் கனவே.

அதேபோல் அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னதாக, இந்திய அரசியல் சீர்திருத்தம் பற்றித் தீவிரமாகத் திட்டமிட வேண்டிய நிலையில், தொல்லை கொடுத்த இந்தியக் கட்சிகளோடு, ஆங்கில ஆட்சி உடன்பாடு செய்துகொள்ளவேண்டும்.

இந்தியாவிற்குப் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் நோக்கத்தோடு, ஆங்கில ஆட்சி, ஓர் உயர்மட்டக் குழுவை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது. சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் தலைமையில் வந்த குழு, இந்தியாவில், காங்கிரசு போன்ற பல அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசிக் கருத்தறிந்தது. ஆட்சிப் பழக்கமுடைய நீதிக் கட்சியை—போர் நெருக்கடியின் போது ஆதரவு கொடுத்த நீதிக்கட்சியை—அவர்கள் அழைக்க வில்லை.

'1940-இலும் 1942-இலும் சென்னை மாகாண ஆளுநரும் இந்திய வைசிராயும் அழைப்பு விடுத்ததைப் பொருட்படுத்தாது சென்னை மாகாண முதல் அமைச்சர் பதவியை ஏற்க மறுத்து விட்ட, பெரியார் ஈ. வெ. ராமசாமி, வேறு எவ்வகை தாட்சணியத்திற்கும் கட்டுப்பட மாட்டார். திராவிட நாடு கோரி, அடம் பிடிப்பார். அதற்குச் செவி சாய்த்தால், காங்கிரசுக்காரர்கள் ஒத்துழையாமையை மேற்கொள்ளலாம். பாகிஸ்தான் கோரும் இந்திய முஸ்லீம் லீகை அழைத்துக் கலந்து பேசினால், காங்கிரசுக் காரர்கள் அவ்வளவு முரண்டிக்கொள்ள மாட்டார்கள்.' இப்படி ஆங்கிலேயர் எண்ணியிருக்கக் கூடும். அப்படி நினைத்திருந்தால், அது தவறல்ல; சரியான மதிப்பீடு என்பதைப் பிற்காலப் போக்குகள் காட்டி விட்டன.

பொதுத் தொண்டுக்கு வந்துவிட்டவர்கள், தங்களுக்குத் தனிப் பட ஏற்படும் அவமானங்களைப் பொருட்படுத்தக் கூடாது என்பது குறள்நெறி. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய தந்தை பெரியார் சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்ஸிடம் பேட்டி கேட்டுப் பெற்று, அவரைக் கண்டு, திராவிடநாடு கோரிக்கையை வற்புறுத்தினார். தூதுக் குழுவைப் பொருத்தமட்டில், அது செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது.

பெரியார் இயக்கத்தைப் பொருத்த மட்டில், போரில், ஆங்கிலேயருக்கு ஆதரவு கொடுத்தது, எவ்விதப் பேரத்தின் அடிப்படையிலும் அல்ல; தனிப்பட்டவர்களின் நன்மைக்காகவும் அல்ல.

இட்லர் கட்டவிழ்த்துவிட்ட நாசிச, இனவெறிப் போக்கு, மாந்தர் இனம் முழுவதையும் அடிமையில் ஆழ்த்திவிடும்; எனவே, அப்பெருங் கேட்டைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், இட்லருக்கு எதிரான நேசக்கட்சிக்கு உதவி வந்தது.

சர். ஸ்டாபோர்ட் கிரிப்சின், அலட்சியப் போக்கையும் பொருட்படுத்தாத பின்னரும் ஓராண்டிற்கும் மேலாகத் தொடர்ந்து பெரியாரைப் பின்பற்றியவர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாகப் பணியாற்றினார்கள்.

நூற்றுக்கு எண்பது பேர்களுக்குமேல் தற்குறிகளாகக் கிடந்த நம் சமுதாயத்தில், உண்மைக்குத் திரையிடப்படுவது எளிது; வாயாடிக்காரர்கள், நினைத்த பொய்களைப் பரப்புவது மிக எளிது.

'பெரியார் இயக்கத்தவர், ஆங்கிலேயருக்கு வால் பிடிப்பவர்கள்' என்று ஒருபக்கம் உளமாரப் பொய்யைப் பரப்பி வந்தார்கள். அவர்களில் பலர், ''ஆங்கில ஆட்சி பெரியாரைப் பொருட்படுத்தவில்லை'' என்று மதிப்புக் குறைவாகத் தூற்றினர்.

அந்நிலையில், நீதிக் கட்சியின் மாகாண மாநாடு வந்தது. சேலத்தில், 27-8-1944 அன்று பெரியார் ஈ. வெ. ராமசாமி தலைமையில் கூடிய அம்மாநாட்டில், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சி **'திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம்** பெற்றது.

அம்மாநாட்டில், அண்ணாவின் பெயரில், சில புரட்சிகரமான கருத்துகள் முன்மொழியப்படும் என்று தெரிய வந்தது. அத்தீர்மானம், கட்சியில் இருந்த சில பெரிய மனிதர்களுக்கு அதிர்ச்சியூட்டின. எனவே அப்பெரியவர்கள் மாநாட்டுக்கு முன்னதாக, எதிர்ப்பினைத் திரட்டும் பணியில் சிலரை முடுக்கிவிட்டார்கள். கட்சியின் பெயர் மாற்றக் கருத்தையும் 'ஒத்துழையாமை' நினைப்பையும் முறியடிக்க, ஏற்பாடு செய்யும்படி ஆணையிட்டார்கள். அம்முயற்சியில் தேவைப்பட்டால் பெரியாரின் தலைமையை

மாற்றினாலும் பரவாயில்லை என்பது 'பெரியோர்கள்' செயல் வீரர்களுக்குக் காட்டிய குறிப்பாக இருந்தது.

பெரியாரும் அண்ணாவும் தங்களுக்குள் பேசிக் கொண்டே அத்தீர்மானங்களைக் கொண்டு வந்தார்கள் என்பது, அப்போது பெரியவர்களுக்குத் தெரியாது.

சுறுசுறுப்பாளர்கள், அண்ணாவை அணுகினார்கள். ஏதேதோ அளந்தார்கள். எவர் எவர் மனங்கள் புண்படும்; எவர், எவர் தேவைப்படும்போது, பெரியாருக்கு எதிராக அண்ணாவின் பக்கம் நிற்பார்கள் என்றெல்லாம் சொல்லி ஊக்கப்படுத்த முயன்றார் கள். அண்ணா ஏமாறவில்லை. பொறுமையாகக் கேட்டார்; அமைதியாகப் பதில் உரைத்தார். என்ன பதில்?

'காந்தியார், உயிரோடிருக்கும் வரை அவர்தான் தலைவர்; அவரை எதிர்த்து வெல்ல முடியாது; ஜின்னா உள்ள வரை அவரே இஸ்லாமியர்களுக்குத் தலைவர். மற்றோர் தலைவரைக் காட்ட முயற்சிப்பது, பலிக்காது. அதேபோல், பெரியார்தான் நமக் கெல்லாம் வாழ்நாள் தலைவர்; அவருக்கு எதிராகப் போக முயல்வது, சரியாகாது.

மாநாடு கூடியது; கட்சியின் பெயரை மாற்றும் முடிவு நிறைவேற்று. பின்வரும் நீண்ட முடிவும் செய்யப்பட்டது.

'கால நிலையையும் உலகப் போக்கையும் சர்க்கார் நிலையை யும் நம் மக்கள் தன்மையையும் இதுவரை நடந்து வந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும் அதனால் உண்டான பயனையும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் சர்க்காருக்கும் இருந்து வரும் நிலைமையை யும் நன்றாக, ஜாக்கிரதையாக, ஆலோசித்துப் பார்த்ததில், நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும் நம் கட்சியின் தன்மானத்தைக் கோரியும் நமது கட்சியின் பேரால் இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்து வரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக் கொண்டு போகவிட்டு விட்டோம்.

'அதாவது, நம் கட்சி தோன்றிய காலம் முதல் இதுவரை' நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து வந்ததும் சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்குத் தொல்லை கொடுத்து வந்த ஸ்தாபனங்களையும் எதிர்த்துப் போராடி, சர்க்காருக்கு அனுகூலமான நிலையை உண்டாக்க உதவி செய்து வந்ததும்

குறிப்பாக சென்ற அய்ந்து வருட காலமாக நடந்து வரும் உலக யுத்தத்தில், நல்ல நெருக்கடியில் நேச நாடுகளின் வெற்றிக்குக் கேடு உண்டாக்கும் நிலையில், நம் நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்து வந்த பெருங் கிளர்ச்சிகளையும் நாச வேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும் நேச நாடுகளுக்குப் பணம், ஆள், பிரசாரம், முதலியவைகள் நிபந்தனையின்றி, சர்க்காருக்கு உதவி வந்ததும் சர்க்காராலும் பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத் தக்க நிலை ஏற்படுவதற்குப் பயன்பட்டு விட்டது.

'இந்திய அரசியல், சமூக இயல் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளில், சர்க்கார், நம் கட்சியையும் நம் இலட்சியமாகிய திராவிட நாட்டுப் பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள்'.

'இந்திய மக்களின் அரசியல் சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் குறிப்பிடத்தக்கதாகவும் நீதிநெறி உடையதாக இருந்து ஒழுங்கு முறைக்கும் கட்டுப்பட்டு, சர்க்கார் மெச்சும்படி நடந்து வந்ததும் நம ஸ்தாபனம் சர்க்காரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக் கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக, அலட்சியப் படுத்தப்பட்டு விட்டது.

'நம் கட்சிக்கு அடியிற் கண்ட திட்டம் உடனே அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டியது அவசியமும் அவசரமும் ஆன காரியமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(அ) நம் கட்சியிலிருக்கும் அங்கத்தினர்களும் இனியும் வந்து சேர இருக்கும் அங்கத்தினர்களும் சர்க்காரால் மக்களுக்கு அளிக்கப்பட்ட எந்தவிதமான கவுரவப் பட்டங்களையும் உடனே சர்க்காருக்கு வாபஸ் செய்துவிட வேண்டும்; இனி ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

(ஆ) அதுபோலவே, அவர்கள் யுத்தத்திற்காகவும் மற்றும் சர்க்கார் காரியங்களுக்காகவும் மத்திய சர்க்காராலோ, மாகாண சர்க்காராலோ, எந்தவித கமிட்டியில் எப்படிப்பட்ட கவுரவ ஸ்தாபனம் அங்கத்தினர் பதவி, ஆலோசகர் பதவி, அளிக்கப்பட்டிருந்தாலும் அவைகளை எல்லாம் உடனே ராஜினாமா செய்து விட வேண்டும்,

(இ) 'தேர்தல் அல்லாமல்' ஸ்தல ஸ்தாபனம், அதாவது ஜில்லா போர்டு, முனிசிபல் சபை, பஞ்சாயத்து போர்டு ஆகியவைகளின் தலைவர், உபதலைவர், அங்கத்தினர் ஆகிய பதவிகளில் சர்க்காரால் நியமனம் பெற்ற அல்லது நியமனம் பெற்ற அங்கத்தினர்களால் தேர்தல் பெற்றோ, இருக்கிறவர்கள் யாவரும் தங்கள் தங்கள் பதவியை உடனே இராஜினாமா செய்துவிட வேண்டும்.

(ஈ) சர்க்காரால் தொகுதி வகுக்கப்பட்ட எந்தவிதமான தேர்தலுக்கும் கட்சி அங்கத்தினர்கள் நிற்கக்கூடாது. இதை ஏற்று ஒரு வாரத்தில் இதன்படி கட்டுப்பட்டு நடக்காதவர்கள் எவரும் தங்களுக்கு இக்கட்சியில் இருக்க இஷ்டமில்லையென்று கருதி, கட்சியை விட்டு நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்.

கெடுவைப் பொருத்தமட்டில் 31-3-1945க்குள்ளாகத் தமிழ் நாட்டில் 10,000க்குக் குறையாமல் உறுப்பினர்களைச் சேர்த்து, மாவட்ட, வட்ட சங்கங்களை நிறுவி, தனி மாநாடு கூட்டி, தெரிவித்து அன்று முதல் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# 27. இந்திய விடுதலை: பெரியாரின் கணிப்பு

27-8-1944-இல் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமியின் தலைமையில் நடந்த சேலம் மாநாட்டில் அரசோடு ஒத்துழைப்ப தில்லை என்று முடிவு எடுக்கப் பட்டதை முன்னர் கண்டோம். பட்டங்களையும் கௌரவப் பொறுப்புகளையும், விட்டுவிட வேண்டுமென்பது அதன் கூறாக அமைந்தது. 'இது பற்றிப் போதிய அறிவிப்பு இல்லை' என்று சொல்லியவர்களுக்குப் போதிய காலம் கொடுப்பதற்காக, பத்தாயிரம் உறுப்பினர்களைச் சேர்த்தபின், தனி மாநாடு கூட்டி, மேற்படி முடிவுகளை உறுதிப் படுத்த, மாநாடு, ஒப்புக் கொண்டது.

அதன்படி உறுப்பினர்கள் சேர்ப்பதில் முனைப்பு காட்டப் பட்டது; எதிர்பார்த்த எண்ணிக்கையினர்களைச் சேர்க்க முடிந்தது. அதன் பிறகு, தனி மாநாடு கூட்டப் பட்டது. அது திராவிடர் கழகத்தின் பதினேழாவது மாநாடு ஆகும். அது எங்கே நடந்தது? திருச்சி, புத்தூர் திடலில் நடந்தது. பெரியார் ஈ. வெ. ராமசாமி தலைமை யேற்றார். அம்மாநாட்டில், ஏற்றுக் கொண்ட 'ஒத்துழையாமை' முடிவு உறுதிப் படுத்தப் பட்டது.

திருச்சி மாநாட்டில், திராவிடர் கழகத்தின் இலட்சியமாக, பின் வருமாறு முடிவு செய்யப்பட்டது.

திராவிடநாடு (சென்னை மாகாணம்) சமுதாயம், பொருளாதாரம், தொழில்துறை, வாணிபம் ஆகியவற்றில் பூர்ண சுதந்தரமும் ஆதிக்கமும் பெறவேண்டும்.

அப்படி திராவிட நாடு ஏற்பட்டால், அதில் உள்ள மக்கள் எப்படி நடத்தப்படுவார்கள்? இக்கேள்விக்குப் பதிலாக, இரண்டாவது முடிவு அமைந்தது. அதைக் காண்போம்.

'திராவிட நாட்டிலுள்ள மக்கள் யாவரும் சாதி, வகுப்பு, அவை சம்மந்தமான உயர்வு தாழ்வு, இல்லாமல் சமுதாயத்திலும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் பெற்று சம வாழ்வு வாழச் செய்ய வேண்டும்.'

இப்படியென்றால் பொருள் என்ன? பார்ப்பனருக்கும் சம உரிமை இருக்கும்; சம வாய்ப்பு இருக்கும்; வேலையிருக்கும்; வாழ்வு இருக்கும்; அவ்வாழ்வு சோம்பேறி வாழ்வாக, பிறவி உயர் வாக இராது என்று பொருள்.

'எல்லோர்க்கும் வாழ்வு' என்று முரசு கொட்டிய பிறகும், பார்ப்பனர்கள் திராவிடர் கழகத்தை எதிர்ப்பதை விடவில்லை. அந்த எதிர்ப்பு நாட்டுப் பற்றை அடிப்படையாகக் கொண்டது அல்ல; தங்களுக்குள்ள பிறவி உயர்வும் அதனால் தொடரும் தனி வாய்ப்புகளும் போய்விடுமோ, என்ற அச்சத்தால் எழுந்தது ஆகும்.

நம் நாட்டைப் பொறுத்த மட்டில், திராவிடநாடு பிரிவினை கோரிக்கையைக் காட்டி அழுது, தமிழ்நாட்டுப் பார்ப்பனப் படிப்பாளிகள், முன்னிலும் அதிகமாக இந்திய அரசிலும் பிற மாநில அரசுகளிலும் இந்திய முதலாளிகளிடமும் வேலைகளைப் பெற முன்வந்தார்கள். தமிழ்நாட்டுப் பார்ப்பனத் தொழில் அதிபர் கள், பெரியாரின் கிளர்ச்சிகளைத் தங்களுக்கு உதவியாகப் பயன் படுத்திக் கொண்டார்கள்.

இயற்கையாக, தமிழ்நாட்டு முதலாளிகளுக்கு எவ்வளவு தொழில் உரிமம் கிடைக்குமோ, அதைவிட, அதிகமாகவே உரிமங்களைப் பெற்றார்கள். யானை உண்ணும் உணவில் சிதறியவற்றை எறும்புகள் பொறுக்கித் தின்பதுபோல, பார்ப்பனரல்லாத முதலாளிகள் சிலரும் பெருந் தொழில் நடத்த வாய்ப்பு பெற்றார்கள்.

தமிழ்ப் பொதுமக்களைப் பொருத்தமட்டில் 'பழைய கறுப்பனே' என்னும் நிலை நீடிக்கிறது. எதனால்? எல்லோர்க்கும் வேலையும் எல்லா வேலைகளுக்கும் வாழ்க்கைப் போதுமான ஊதியமும் கொடுக்கக்கூடியது சமதர்ம பொருளியல் முறையே.

வேலை செய்யும் வயதினர் பலராகவும் வேலைகள், சிலவாக வும் உள்ள வரையில், செல்வாக்கோ, சாதகமோ உள்ள சிலர் வேலைகளைத் தட்டிக் கொண்டு போவதும் மற்றவர் வேலை யில்லாது அலைவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இந்திய மக்களிடையிலும் சரி, தமிழ்நாட்டு மக்களிடமும் சரி, சென்ற முப்பதாண்டுகளில் சமதர்ம உணர்வு பரவியதைவிட நடுத்தர சுரண்டல் உணர்வு, நச்சுக்காற்று போல பரவி விட்டது.

சென்னை மாகாணம் முழுவதையும் திராவிட நாடாகப் பிரித்து, முழு ஆட்சி உரிமை உடைய நாடாக்க, எண்ணிய திராவிடர்கழகம் தமிழ்நாட்டிற்கு அப்பால், அன்று பரவவில்லை.

கேரளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய பகுதிகளில், திராவிடர் கழகத்தின் கோட்பாடுகள், நடைமுறைகள் பற்றி, கொள்கைப் பரப்பு முயற்சி அரிதாகவே இருந்தது. எனவே அப்பகுதிகளில் இருந்த, சமய நம்பிக்கையற்ற, சாதி உணர்வு அற்ற, சமதர்மக் கருத்துடையவர்கள் கூட, திராவிடர் கழகத்தோடு, பின்னிப் பிணைந்து, செயல்பட வாய்ப்புகள் வளரவில்லை.

இக்குறைபாட்டை கழகம் உணராமல் இல்லை. 'பிற தென்னகப் பகுதிகளில், கழகக் கொள்கைகளைப் பரப்ப அமைப்பு கள் ஏற்படுத்தப்பட வேண்டும்' என்று திருச்சி மாநாட்டின் 22வது முடிவு கட்டளையிட்டது. ஆனால் அது நடைபெறாமல் காலங் கடந்து விட்டது.

திருச்சி மாநாட்டிற்கு முன்பே, இரண்டாம் உலகப் போர் ஒய்ந்து விட்டது; வென்ற பிரிட்டானியரும் நலிந்துபோய் விட்டனர். பிரிட்டானியப் பேரரசை அப்படியே கட்டிக் காக்க இயலாது என்பதை நம்மை விடத் தெளிவாகப் பிரிட்டானியர் புரிந்து கொண்டார்கள். கப்பற் படையைச் சேர்ந்த இந்தியர்கள், புரட்சியில் குதித்தார்கள். பிரிட்டானியக் கொடியை இறக்கி விட்டு, இந்திய காங்கிரசுக் கொடி, இந்திய முஸ்லீம் லீக் கொடி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடி ஆகியவற்றைப் பறக்க விட்டார்கள். நிலைமை முற்றி விட்டதை ஆங்கிலேயர் உணர்ந் தார்கள்.

இந்தியாவிற்குத் தன்னாட்சி உரிமை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பது புலனாயிற்று. அப்படியே விடுதலை வழங்கிவிட்டு, வெளியேறி விட, பிரிட்டானியர் ஏற்பாடு செய் தார்கள்; இந்திய அரசியல் கட்சிகள் சிலவற்றோடு உடன் பாட்டிற்கு வர முயன்றார்கள். கடைசியில், முழு ஆட்சி உரிமை யுடைய இடைக்கால இந்திய அரசு உருவாயிற்று; முழு விடுதலைக்கு நாளும் குறிப்பிடப்பட்டது.

பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுக்க இசைந்த பிரிட்டானியர். திராவிட நாட்டைப் பிரிக்காமலே, இந்திய ஆட்சியிடம் ஒப்படைக்க முடிவு எடுத்தனர்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் நாள், இந்தியா முழு விடுதலை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, 'வர இருப்பது விடுதலை அல்ல; கெடுதலையே என்று அறிவித்தார்; அதை மகிழ்ச்சி நாளாகக் கொண்டாடுவதற்கு இல்லை; துக்க நாளாகவே கொண்டாட வேண்டும்' என்றார். ஏன் அப்படிச் சொன்னார்?

தன்னாட்சி என்ற பெயரால், வர இருப்பது, ஆள் மாற்றமே யொழிய ஆட்சி முறை மாற்றமல்ல என்பது பெரியாரின் கணிப்பு

'வெள்ளைத் துரைமார் ஆதிக்கஞ்செலுத்திய இடங்களைக் கறுப்புத் துரைமார் பிடித்துக் கொண்டு, ஆதிக்கஞ் செலுத்துவார்கள். பிற நாட்டார் சுரண்டியதற்குப் பதில் நம் நாட்டவர் சுரண்டுவர்' என்று பெரியார் சுட்டிக் காட்டினார்.

இந்திய பொதுவுடைமைக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவராகிய தோழர் ம. சிங்காரவேலர், வர இருக்கும் ஆட்சி உரிமை பற்றி என்ன சொன்னார்?

"இது பழைய முதலாளி திட்டமே. ஆதிக்கமுடையோரும் பொருள் பெற்றோரும் அதிகாரிகளும் கூடி நடத்தும் திட்டம் இதுவே. பொதுத் தேர்தல் என்று பெயர் கொடுத்து விட்டு, பலவித சூழ்ச்சிகளால் ஆதிக்கமுடையோர் தங்களையே தேர்தல் செய்து கொண்டு ஆட்சி புரிந்து வரும் திட்டமாகும்' என்று மதிப்பிட்டார்.

ஆனால் செய்தி நிறுவனங்களும் கருத்து மேடைகளும் பெரியாருக்கு எதிராகத் திருப்பி விடப்பட்டன.

ஏது மறியாத பொதுமக்களோ, மெய்யாகவே விடிவு காலம் வரப்போகிறது, என்று, எண்ணி மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்கள்.

தலைமுறைகளின் இடைவெளி, தென்பட்டது அவ்வேளை. அறிஞர் அண்ணா, விடுதலை நாளைக் கொண்டாடும்படி அறிக்கையை விட்டார். அது இயக்கத்தவர்களிடையே முதல் அதிர்ச்சியையும் விரிசலையும் உண்டாக்கியது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அழியாமல் தொடரும் சாதி ஏற்றத்தாழ்வை ஒழிக்கப் புறப்பட்டவர்கள் அதற்கான முன்

நடவடிக்கைகளில் ஈடுபட்டு, எதிர்ப்பட்ட ஊரார் பகைக்கும் தூற்றலுக்கும் ஈடு கொடுத்து வந்த சமத்துவ வாதிகள், சமதர்மமே எல்லோரையும் வாழ்விக்கும் என்று புரிந்து கொண்டு அக்கொள்கையைப் பரப்பி, நிலமுடையோர், பணமுடையோர், போன்றவர்களின் பகையைத் தேடிக்கொண்ட, முற்போக்குச் சிந்தனையாளர் தாங்கள் பட்டபாட்டினை நொடியில் பாழாக்கி விட்டார்கள்.

சூடேறிய விளக்குக் கூட்டின்மேல் இருதுளி தண்ணீர் பட்டால் கண்ணாடி சிதறிப் போவது போல், முற்போக்குச் சிந்தனையில் சூடேறிய காளைகள் சிதறிப் போனார்கள்.

சமத்துவத்திற்காக முன்னேறிக் கொண்டிருந்த பேரணி, 'ஆகஸ்ட் 15, விடுதலை நாளா? கெடுதலை நாளா?' என்ற வெட்டிப் பேச்சின் பக்கம் திரும்பி விட்டது.

சமதர்மத்திற்காகக் களம் நோக்கி நடந்த தியாகப் படை, அந்த ஒரு நாள் கூத்தைப் பற்றியே, பேசி, எழுதி, வீணாகி விட்டது.

'அரசியல் உரிமை' என்ற அக்கருவியைக் கொண்டு, பொருளியல் பொதுவுடைமையை வளர்க்கவும் சமுதாய ஒரு நிலையைப் பயிரிடவும் பொதுமக்களைத் திரட்ட வேண்டியவர்கள், 'பெரியார் சொன்னது சரியா? அண்ணா சொன்னது சரியா?' என்று வாதிட்டு ஏமாந்தார்கள்.

சென்ற முப்பத்துநான்கு ஆண்டுகளின் வரலாறு எதை மெய்ப்பித்தது?

பெரியார் கணிப்பு சரியென்பதை மெய்ப்பித்தது. சிங்கார வேலர் கூறியதைச் சரியென்று காட்டியது. வெள்ளையன் வெளியேறிய போது நடந்தது, ஆள்மாற்றம் மட்டுமே, என்பது உறுதியாயிற்று. விடுதலை பெற்ற இந்தியாவில், பொதுமக்கள் நிலை, அன்னியர் ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் மோசமாகி விடும்' என்று பெரியார் சொன்னது எவ்வளவு உண்மை என்று எல்லோரும் உணர்கிறார்கள்.

மதிப்பீடு சரியாக இருப்பதாலேயே, மருத்துவம் சரியாகி விடுவதில்லை, நம் மக்கள் பெரியாரின் மருந்தைப் போதிய அளவில்

ஏற்கவில்லை. நான்கு நாட்களுக்கு ஒரு முறை, மருந்தை மாற்றிக் கொள்ளும் என்புருக்கி நோயாளியின் நிலைக்கு நம் சமுதாயம் தள்ளப்பட்டு விட்டது.

இந்தியா விடுதலை பெற்று இமயத்திலும் மாநிலங்களிலும் காங்கிரசு ஆட்சி ஏற்பட்டது.

சென்னை மாகாணத்திலும் காங்கிரசு ஆட்சி வந்தது. கட்டாய இந்திப் பாடமும் திரும்பி வந்தது.

இந்திய அரசியல் மேல்மட்ட வற்புறுத்தலின்படி, சென்னை மாகாணத்தில், ஓமந்தூர் ராமசாமியை முதல் அமைச்சராகவும் கோவை, தி. ச. அவினாசிலிங்கனாரை கல்வி அமைச்சராகவும் கொண்டிருந்த காங்கிரசு ஆட்சி, பழையபடி, இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிற்று. ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை எல்லோரும் இந்தி படித்து, தேர்ச்சி பெற வேண்டுமென்று ஆணையிட்டது.

அப்போதும், இந்தியை எதிர்ப்பதிலிருந்து திராவிடர் கழகத்தை விடுவித்துவிட்டுத் தாங்கள் பொறுப்பேற்கக் கூடிய பெரியவர்களோ, மக்கள் அமைப்புகளோ, இல்லை.

தமிழ் மக்கள் சாதாரண படிப்புகூட பெற முடியாதபடி செய்யும் கட்டாய இந்திப் பாட முறையை ஒழிக்கும் பணிக்குத் திராவிடர் கழகம் திரும்ப நேரிட்டது. இன்றியமையாத இப் போரில் ஏற்பட்ட அக்கறை, சமதர்மப் பணியை ஓரளவு பின்னே தள்ளி விட்டது என்றால் மிகையல்ல.

# 28. இடைக்கால இந்திய அரசும் கம்யூனிஸ்டுகள் மீது அடக்குமுறையும்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் பதினைந்தாம் நாள், சட்டப்படி இந்திய நாடு விடுதலையான நாள். ஏறத்தாழ அதற்கு ஓராண்டு முன்னதாகவே இந்தியாவை ஆளும் பொறுப்பு இந்தியர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டது. பண்டித சவகர்லால் நேரு பிரதமராயிருந்து ஆட்சி செய்தார்.

அவ்வேளை, நாட்டின் பற்பல பகுதிகளில் கோரிக்கை ஒலிகள் கேட்டன; ஊர்வலங்கள், பேரணிகள் நடந்தன. ஏன் அப்படி?

இந்தியர்களில் பெரும்பாலோர் பாட்டாளிகள்; ஏழைகள்; வாய்ப்புகளை இழந்து நலிந்தவர்கள். அன்னியர்கள் ஆண்ட காலத்தில், அவர்கள் வெளியேறினால் தொல்லைகள் அனைத்தும் தொலைந்து விடுமென்று பலரும் பேசினர்; எழுதினர். 'விடியல்' எளிதாக வந்து விடும் என்று அப்பாவி மக்கள் நம்பினார்கள்.

காலையில் வெளியே சென்ற தந்தை மாலையில் வீட்டிற்குள் நுழைந்ததும் நாலு பிள்ளைகளும் ஓடிவந்து, சுற்றி நின்று ஒரே நேரத்தில் ஆளுக்கொரு முறையீடு செய்வதுண்டு. அதைப்போன்ற சூழல் இந்தியர் ஆட்சிக்கு ஏற்பட்டது.

சமதர்மவாதியாகக் கருதப்பட்ட நம் நேருதானே ஆட்சி செய்கிறார். இவரிடம் முறையிடாமல் எவரிடம் முறையிடுவது? இப்போது முறையிடாமல் எப்போது முறையிடுவது? இப்படிக் கருதினார்கள் நலிந்தோர் அனைவரும்.

மூலைக்கு மூலை குறைபாடுகள்; அனைத்தையும் அடுக்கினார்கள், வேலையில் இருந்த தொழிலாளிகள். அலுவலர்களோ சோவியத் நாட்டை ஒப்பிட்டு, பிற வளர்ந்த நாடுகளை ஒப்பிட்டு அங்குள்ள வாய்ப்புகளும் வசதிகளும் கோரினார்கள். அவர்களுக்கு அமைப்புகள் உண்டு. அந்த அமைப்புகளின் முழக்கமே எல்லாமாகத் தோன்றியது. அமைப்புகளின் கீழ் வராத கோடிக்கணக்கான

உதிரித் தொழிலாளர்கள் குமுறல் காதுகளில் எட்டவில்லை. வேலையற்றுத் திண்டாடும் பட்டினிப் பட்டாளமோ குரல் எழுப்பவும் வலிவின்றி வதைப்பட்டது.

நாட்டின் சிறுபான்மையாளர்களாகிய அமைப்புகளுக்குட் பட்ட பாட்டாளிகளின் கோரிக்கைகளே புதிதாக ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எரிச்சல் ஊட்டின; தொல்லை கொடுப்பதற் காகவே எழுப்பப்படுவனவாகத் தோன்றின.

பதவிகளைப் பெறுவது அருமை; எதற்கும் பயன்படுத்த முடியாத, உப்புசப்பு இல்லாத பதவிகளைப் பெற்றுவிட்டால்கூட அவற்றை உதறிவிட்டுப் போக துணிச்சல் வருவது அதனினும் அருமை; அந்நிலையில் நண்பர்களையும் சதிகாரர்களாக நினைப்பார்கள். ஆட்சியில் உட்கார்ந்து விட்டவர்கள் தங்கள் நாற்காலிகள் ஆட்டங் காண்பதாக நினைத்து விட்டால் ஒரே மருந்தையே கையாள்வார்கள். அது என்ன மருந்து? அடக்கு முறை மருந்து.

1946இல் இந்தியாவில் இடைக்கால இந்திய ஆட்சி ஏற்பட்டதுமே அடக்குமுறை வெடித்தது. வழக்கம் போல பொது அமைதிக்குக் கேடு விளையாமல் காக்கும் பொருட்டு என்ற சாக்கில் இந்திய மாநிலங்களில் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டன. அவை பின்னர் சட்டமன்றங்களால் சட்டமாக்கப் பட்டன.

'அவசரச் சட்டங்கள் இன்றைய அடக்கு முறைக் கருவிகள், என்று ஆத்திரப்படுபவர்கள் இதை நினைவில் வைத்துக்கொள் ளட்டும். எதை? இந்தியாவின் தன்னாட்சி உரிமை 'அவசரச் சட்டம்' என்னும் அடக்குமுறையோடு பிறந்தது. அன்றுமுதல் அடுத்தடுத்து ஒவ்வோர் வேடத்தில் அடக்குமுறை அரங்கேறி ஆட்டம் போடுகிறது.

இந்தியச் சிந்தனையாளர்கள், பொதுத் தொண்டர்கள் ஒவ் வோர் முறையும் தங்களுக்குள் இருக்கும் அற்ப கருத்து வேறுபாடு களைப் பலமடங்கு பெரிதாக்கிக் காட்டிக்கொண்டு, ஒரு பிரிவினர் மாறி மறுபிரிவினர் அடக்குமுறைக்குத் தோள் கொடுக்கிறார்கள்

இடைக்கால இந்திய அரசு ஏற்பட்டதும் பற்பல தொழிற் சங்கங்கள் தங்களுக்கு விடிவு காலம் வந்துவிட்டதாகக் கருதிக்

கொண்டு, தாங்கள் படும் துன்பங்களை விரித்துரைத்தார்கள். அதைப் போக்கக் கூடிய கோரிக்கைகளை முன்வைத்தார்கள்; சிற்சில இடங்களில் வேலை நிறுத்தஞ் செய்யப்போவதாக அறிவிப்புக் கொடுத்தார்கள்.

அந்நிலையில் மெய்யான மக்கள் ஆட்சியிடம் எதை எதிர்பார்க்க வேண்டும்? நசுக்குகிறவர்களைக் கூப்பிட்டுக் கண்டித்து' நசுக்கப்படும் மக்களுக்கு ஆதரவாகக் குறிப்பு காட்டுவார்களென்று எதிர்பார்ப்பது தவறல்ல.

அப்படி நடந்ததா? இல்லை. இந்திய முதலாளிகளின் சுரண்டலுக்கு மட்டுமா நம் அரசுகள் அரண் ஆயின? இல்லை. அயல் நாட்டு முதலாளிகளின் சுரண்டலுக்கும் அட்டகாசத்திற்கும் காவல் தந்தன.

பொது அமைதிக்குக் கேடு விளைவிக்கக் கூடிய எவரையும் கைது செய்து சிறையில் அடைக்கும் 'ஆள்தூக்கி' அதிகாரத்தை நிர்வாகத்திற்குக் கொடுக்கும் அவசரச் சட்டங்களைப் பிறப்பித்த மாநில அரசுகள் அவற்றைச் செயல்படுத்தின. தில்லி, பம்பாய் மதுரை போன்ற இடங்களில் தொழிற்சங்கங்கள், கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்கள் ஆகியவை சோதனையிடப்பட்டன. செயல் வீரர்கள், புதிய சட்டத்தின்கீழ் சிறைக்குள் தள்ளப்பட்டார்கள்; செய்த குற்றத்திற்காக அல்லாது, முன்நடவடிக்கையாகப் பலரும் கைது செய்யப்பட்டனர். திரு. பி. இராமமூர்த்தி முதலானோர் கைதானார்கள்.

சென்னையில் பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளிகள் 14,500 பேர்கள் தக்க அறிவிப்புக்குப் பின் வேலைநிறுத்தஞ் செய்தார்கள். சென்னை மாகாண ஆட்சி—தேசீய காந்தீய மரபில் வந்ததாகக் கூறப்பட்ட ஆட்சி என்ன செய்தது? சாய்ந்தது எவர் பக்கம்? அந்த ஆலையின் வெள்ளை முதலாளிகள் பக்கம்.

அப்போதைய தொழில் அமைச்சர் டாக்டர் டி.எஸ்.எஸ்.இராசனுக்கு அப்போராட்டம் எப்படித் தோன்றிற்று? பொது அமைதிக்கும் ஆட்சிக்கும் வேட்டுவைக்கும் முயற்சியாகவே தோன்றிற்று.

பல்லாண்டுகளுக்கு முன்பு சேரன்மாதேவி குருகுல மாணவர்கள் அனைவருக்கும் சமபந்தி நடத்த வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரசின் செயற்குழு முடிவு செய்தபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தன் உறுப்பினர் பதவியை உதறி விலகியவர்

ஆயிற்றே டாக்டர் இராசன். அவருக்கு பி.&சி. தொழிலாளர் போராட்டம் சதியாகத் தோன்றிற்று; அப்புறம் அமைச்சரவை முத்திரை குத்தாமல் இருக்குமா?

வேலை நிறுத்தத்தை முறியடிக்க முனைந்தது. அன்றைய தொழிலாளர் தலைவர் தோழர் எஸ்.சி.சி. அந்தோணி (பிள்ளை)யை விசாரணையின்றிச் சிறையில் தள்ளியது. பின்னர் நாடு கடத்தியது.

தோழர் பக்கிரிசாமி(பிள்ளை), ஏழுமலை, முத்தையா போன்ற மற்ற தலைவர்கள் பலரையும் அப்படியே சிறைப்படுத்தியது. பிறகு போராட்டத்திற்குப் பொறுப்பேற்ற திரு. வி. கல்யாண சுந்தரனாரைத் தன் வீட்டைவிட்டு அகலாதிருக்க அடக்கு முறை ஆணையிட்டது.

சட்டப்படி, கொட்டிமுழங்கி தன்னாட்சி பெறவேண்டிய 15-8-1947க்கு அய்ந்தாறு திங்களுக்கு முன்பே சென்னை மாகாணத்திலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அந்தப் பாணங்கள் பெரும்பாலும் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியினர் மேலும் தொழிற்சங்கச் செயல் வீரர்கள் மேலும் விடப்பட்டன.

அவ்வளவோடு நின்றார்களா? இல்லை. வலிமை மிக்க இந்திய அரசு உள்நாட்டு அமைச்சர் வல்லபாய்படேலின் தூண்டுதலால் இந்தியத் தேசியத் தொழிற்சங்கம் (I.N.T.U.C) தோற்றுவிக்கப் பட்டது. அதன் வழியாக இந்தியத் தொழிலாளர்கள் பிரிக்கப் பட்டனர்.

இத்தனையும் நடந்தபிறகும் வரப்போவது கெடுதலை அல்ல, விடுதலை என்று கருதியவர்கள் ஏராளம்.

செல்வர்களே காலத்தில் கனிந்து தங்கள் சொத்தை அறக் கட்டளைகளாக்கிவிட்டு, உழைத்து உண்பார்களென்று இன்றும் எண்ணற்றவர்கள் நம்புகிறார்களே! அதைப்போல் அன்றும் நம்பினார்கள்.

பெரியார் சென்னை பி.&.சி தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு தந்தார். சமதர்மக் கருத்துகளைப் பரப்பிக் கொண்டே இருந்தார். அவரது 'விடுதலை' நாளிதழ் அடக்குமுறைக்கு ஆளானது. நன்னடத்தைப் பணம் கட்ட நேரிட்டது.

தன்னாட்சி விடியலில் தொடங்கிய அடக்குமுறை, தடுப்புக் காவலில் வைத்தல், வாய்ப்பூட்டு போன்றவை ஏறத்தாழ மூன்றாண்டுகள் நீடித்தன. முன்னர் கூறியபடி அவை கம்யூனிஸ்ட்டுகள் மேல் ஏவப்பட்டன. மோகன்குமாரமங்கலத்தைப் பம்பாயில் கைது செய்து கொண்டுவந்து, வேலூர் சிறையில் அடைத்து வைத்தது அரசு; தனியறையில் பூட்டிவைத்தது.

மோகன்குமாரமங்கலத்தைத் தடுப்புக் காவல் சட்டப்படி சிறைப்படுத்தியது சட்டத்திற்குப் புறம்பானது. அதைக்காட்டி வழக்கு தொடரப்பட்டது. ஆகவே அவரை உச்சநீதி மன்றத்தின் முன் கொண்டுவந்து காட்ட வேண்டுமென்று கோரப்பட்டது.

நீதிமன்றம் அப்படியே ஆணையிட்டது.

பம்பாய் காவல்துறையினரின் ஆணைப்படி, சென்னை மாகாண ஆட்சி மோகன்குமாரமங்கலத்தை சிறையில் வைத்திருப்பது செல்லாது என்று முடிவு கூறி, உச்சநீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

சென்னையில், ஏ.கே. கோபாலன் என்ற பொது உடைமைக் கட்சித் தலைவர்களில் ஒருவர் அப்படியே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அதை எதிர்த்து வழக்காடியதில் சென்னை உயர்நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. அவர் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியே வந்ததும் மீண்டும் கைது செய்யப் பட்டார். மறுபடியும் எதிர்த்து வழக்காடி விடுதலை பெற்றார்.

ஆங்காங்கே சில பொதுஉடைமைத் தலைவர்கள் தலைமறைவாகி விட்டார்கள். அவர்களில் ஒருவர் ஜீவானந்தம்; மற்றொருவர் மணலி கந்தசாமி. இவர்கள் வெவ்வேறு நாள்களில் குத்தூசி குருசாமி வீட்டில் தலை மறைவாகத் தங்கியிருந்தார்கள். வேறு ஏற்பாடுகள் செய்ததும் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்கள். மணலி கந்தசாமியின் தலைக்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசு என்று காவல்துறை அறிவித்திருந்தபோது, இப்படி அவரைத் தன் வீட்டில் பதுங்கியிருக்கச் செய்த துணிச்சல்காரர் சா. குருசாமி ஆவார்.

மணலி கந்தசாமி தன் வீட்டில் வந்து, தங்கித் தப்பிய பல நாட்களுக்குப் பிறகு சா. குருசாமி, ‘விடுதலை’ நாளிதழில் நாள் தவறாது குத்தூசி என்னும் புனைபெயரில் எழுதி வந்த ‘பலசரக்கு மூட்டை’ என்ற தலைப்பில் நகைச்சுவை பொங்க ஓர் கட்டுரை எழுதினார். துணிவுக்கு எடுத்துக்காட்டான, 16-10-1950 நாளைய அக்கட்டுரை இதோ;

"இதோ! மணலி கந்தசாமி!

"எங்கே? எங்கே? காட்டு; சுட்டுத் தள்ளுகிறோம். எங்கே, அந்த ஆள்? இந்த ஒரு ஆளுக்காக மாதம் எத்தனை ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறது? நிரபராதிகளை எல்லாம் அடித்து எலும்பை முறிக்க வேண்டியதாயிருக்கே! காட்டு அவனை" என்று அதிகாரிகள் (அதாவது அகிம்சா ஆட்சி இயந்திரத்தின் சக்கரங்கள்) ஆத்திரத்துடன் கேட்கலாம். மந்திரிகள், 'அகப்பட்டானா' என்று பெருமூச்சு விடலாம்.

மணலி கந்தசாமி இருக்குமிடம் யாருக்குமே தெரியாது. காந்தி சோதிடருக்கும் சிவராம சோதிடருக்குமே தெரியாதென்றால் எனக்கு எப்படித் தெரியும்? கந்தசாமி எங்குமிருப்பார், பகவான் கிருஷ்ணனைப்போல! மந்திரிகள் வீட்டிலேயே ப்யூனாக இருக்கலாம். போலீசார் வீட்டிலேயே சமையற்காரனாக இருக்கலாம்; பணக்காரரர் வீட்டிலேயே தோட்டக்காரனாயிருக்கலாம். மாதம் 20,000 ரூபாய் 30,000 ரூபாய் சர்க்காருக்குத் தண்டச் செலவு வைக்கின்ற கந்தசாமியைப் பார்க்க வேண்டுமென்று உங்களுக்கெல்லாம் ஆவலாயிருக்கிறதல்லவா? எனக்குக் கூட அப்படித்தான் இருக்கிறது!

"மணலி கந்தசாமி என்பவர் ஒரு கம்யூனிஸ்டாம். அவர் 2, 3 ஆண்டுகளாக அண்டர் கிரவுண்டில் (தலைமறைவாக) இருக்கிறாராம். அவரைத் தேடிப் பிடிப்பதற்காக அதிகாரிகள் செய்கின்ற அட்டகாசம் உண்டே; எழுதினால் ஏட்டில் இடம் இருக்காது. தஞ்சை ஜில்லாவுக்கு நேரில் போய்ப் பார்த்தால்தான் தெரியும்.

'இதோ! மணலி கந்தசாமி! இந்த வைக்கோற்போரில் ஒளிந்திருக்கிறார்' என்று தஞ்சை ஜில்லாவில் கூறிவிட்டால் போதும், உடனே அதற்குத் தீவைத்து விடுவார்கள் அதிகாரிகள்.

'இதோ! இந்த எருமை மாட்டு வயிற்றுக்குள் இருக்கிறார் மணலி கந்தசாமி' என்று யாரோ ஒரு சிறுவன் வேடிக்கைக்காகச் சொன்னால் போதும். டப்! டப்! டப்!டப்! துப்பாக்கிப் பிரயோகந்தான்.

உடனே அந்த எருமைமாடு சுட்டு வீழ்த்தப்பட்டுவிடும். அதன் வயிற்றுக்குள்ளே சோதனை நடக்கும்.

கிண்டலுக்காக நான் இப்படிக் கூறவில்லை. திருவாரூரில் யாரோ ஒருவர் வீட்டில் மணலி கந்தசாமி ஒளிந்து கொண்டிருப்ப தாக யாரோ ஒரு சோம்பேறி (துப்பறிகின்ற நிபுணன்) அதிகாரி களுக்குக் கூறிவிட்டான். அதிகாரிகளில் ஒருவர் மகாமகா நிபுணர். அவர் என்ன செய்தார் தெரியுமா? இன்னொருவர் வீட்டில் போய் தடபுடல் செய்தார். இந்த வீடு, திராவிடர் கழகத் தோழர் ஒரு வரின் வீடு. அவர் திடுக்கிட்டுப் போய்விட்டார். மாலை 3 மணிக்கு ரிசர்வ் படையுடன் திடீரென்று வீட்டிற்குள் நுழைந்து, பெண்டு பிள்ளைகளை எல்லாம் அலறச் செய்து, கழகத் தோழரைப் போலீஸ் வளையம் போட்டு ஒரே கலாட்டா! சந்துபொந் தெல்லாம் சோதனை! கூரையைக் கிளறிக் கீத்துக்குள்ளே கூடத் தேடினார்களாம். (ஆண்கள் வயிற்றைத்தான் ஆபரேஷன் பண்ண வில்லை.)

அதிகாரிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார் களாம்.

'இந்த வீடுதானே, மாணிக்கம் வீடு?' என்று கேட்டார் சலிப் படைந்த மேலதிகாரி.

'இல்லை சார்! என் பெயர் அண்ணாமலையாச்சே!' என்றார் கழகத் தோழர்.

தப்பான வீட்டில் சோதனை நடந்து விட்டதைக் கண்டார்கள். முகத்தில் அசடு வழிந்து அண்டா நிறைந்ததாம். ஒரு வாரத்துக்கு முன்பு நடந்த சங்கதி இது!

''இன்ன மந்திரி வீட்டில் மணலி கந்தசாமி இருக்கிறார் என்று சொன்னால் போதும், உடனே மந்திரி வீடும் இதே கதிதான்.

''எனக்கொரு யோசனை தோன்றுகிறது. யார் யார் கள்ள மார்க்கெட் வியாபாரத்துக்காகச் சரக்குகளைப் பதுக்கி வைத் திருக்கிறார்களோ அந்த இடத்தைக் காட்டி, இந்த இடத்திலே தான் மணலி கந்தசாமி இருக்கிறார் என்று சொன்னால்போதும், பதுக்கல் சாமான்களெல்லாம் அம்பலத்துக்கு வந்து விடும். பூனையைத் தேடப் போய் யானை சிக்கினால் லாபந்தானே!

தம்பி கந்தசாமி! நீ இன்னும் என்னென்ன கூத்துக்குக் காரணமாயிருக்கப் போகிறாயோ! நீ எங்கே இருந்தாலும் சரி! பத்திரமாயிரு. உன்னால் ஆயிரம் போலீஸ்காரர்கள் சுகமாகப்

பொழுது போக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நிரபராதிகள் அடிபட்டுச் சாகிறார்கள். அதற்கு நீ என்ன செய்வாய் பாவம்!

"கந்தசாமி, இருஇரு; பாணிவாலா மகராஜ் அண்டர்கிரவுண்ட் தண்ணீரைச் சிண்டைப்பிடித்து இழுத்து வருகிறாராம். அவரை வரவழைத்து (மந்திரி பக்தவத்சலனார் மூலமாக்) உன்னையும் அண்டர்கிரவுண்டிலிருந்து அலாக்காகத் தூக்கிவரச் சொல்கிறோம் பார்!

"அண்டர்கிரவுண்ட்! அண்டர்கிரவுண்ட்! யாரிடத்திலே பலிக்கும் இந்த பாச்சா! இதோ எங்கள் போலீஸ்காரர்களையும், மந்திரகவச நிபுணர்களையும் அழைத்துவரப் போகிறோம்.

சரி, தம்பி! உன் நட்சத்திரம் என்ன என்று மட்டும் சொல்லேன். எங்கள் ஊர் வெள்ளப்பூண்டு ஜோசியரிடம் கேட்டுப் பார்க்கிறோம்."

குத்தூசியாரின் கிண்டல் எப்படி?

# 29. கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப் பட்டனர் பெரியார் அடைக்கலம் தந்தார்

சென்னை மாகாணத்தைப் பொறுத்த மட்டில், பொதுவுடைமைக் கட்சியின்மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறையை, கொடுமைகளை ஊரறியச் செய்ததில் முதல் இடம் எவருடையது? தந்தை பெரியாருடையது ஆகும்; அவருடைய இயக்கத்திற்கு உரியதாகும்; 'விடுதலை' நாளிதழுக்கு உரியதாகும்.

தந்தை பெரியாருக்கு இருந்த பல சிறப்புகளில் ஒன்று வருமுன் அறிதல் ஆகும். காங்கிரசு ஆட்சியின் கைகளில் ஒப்படைக்கும் ஆட்சிமாற்றம் வெறும் ஆள்மாற்றமே; அடிப்படைத் தன்மையில் எவ்வித மாற்றமும் இராது; பொதுமக்களுக்குக் 'கெடுதலை யாகவே இருக்கு' மென்று பெரியார் அறிவித்தார்.

ஏதோ பெரியாருக்குத் தெரியாததைத் தாங்கள் தெரிந்து கொண்டிருப்பதைப் போலவும் பெரியாரைவிட அதிகமாக இந் நாட்டின் விடுதலைக்குப் போராடியவர்கள் போலவும் சிலர் வெவ்வேறு முத்திரைகளில் விடுதலை நாளைக் கொண்டாடுவதில் பரம்பரை பக்தர்களைப்போல முனைந்தார்கள். அது அடிப்படை ஆதாரம் இல்லாத ஆர்வம் என்பதை அப்போதைய அரசின் கெடு பிடிகள், பொதுஉடைமைக் கட்சியை ஒழிக்க எடுத்த நடவடிக்கைகள் ஆகியவை புலப்படுத்தின.

பொதுஉடைமைக் கொள்கைக்கும் பொதுஉடைமைக் கட்சிக்கும் எதிராக முடுக்கிவிடப்பட்ட அடக்கு முறை பற்றி பெரியார் என்ன கூறினார்?

'இந்தியாவை ஆளவந்தோர் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முதலாளித்துவ நாடுகளின் தூண்டுதலால், வற்புறுத்தலால், அந்நாடுகளின் ஆட்சிக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி பொது உடைமைக் கொள்கைப் பரப்புதலைத் தடுத்து நிறுத்த முனைகிறார்கள்' என்று பொருள் படும்படி அறிவித்தார்.

சேலம் சிறையில் இருபத்துஇரண்டு பொதுஉடைமைக் கட்சியினரைச் சுட்டுக் கொன்றது தமிழ் மக்கள் சிந்தனையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. கடலூர் சிறை போன்றவை களிலும் 'கட்டுப்பாடு' என்ற பெயரில் சில படுகொலைகள் நடந்தன. இக்கொடுமைகளைச் சுடச்சுட கண்டித்தது 'விடுதலை'.

அடக்குமுறை அளவுக்குமேல் போகும் போது நேர் எதிர் பலனையே கொடுக்கும். சென்னை மாகாணத்தில் அப்படிப்பட்ட நிலை உருவானது. பொதுமக்கள் காங்கிரசிடம் வைத்திருந்த மதிப்பை இழந்தார்கள். அது ஆட்சிக்கு வந்த பிறகு காந்திய வழியை விட்டு, அடக்குமுறை வழிக்குப் போய்விட்டதாக வாக்காளர்கள் கருதத் தொடங்கினார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நான்கு ஆண்டுகளில், காந்தியடிகளின் தலைமையில் பல்லாண்டுகளாகத் திரட்டிய மக்களின் பரிவைப் பறிகொடுத் தார்கள்.

அந்நிலையை உணர்ந்த அனைத்திந்திய பொதுஉடைமைக் கட்சியின் தலைவர்கள் கூடி, பழைய போராட்ட முறைகளைக் கைவிட்டுவிட்டு தேர்தல் களங்களில் இறங்கி, நாடாளுமன்ற, சட்ட மன்றத் தேர்தலுக்கு நின்று பொதுஉடைமைக் கொள்கையைப் பரப்புவது என்று முடிவு செய்தார்கள். பின்னர், அம்முடிவைப் பம்பாயில் கூடிய மாநாடு உறுதிப்படுத்தியது.

தேர்தலுக்கு நிற்பதென்றால் தேர்தல் உடன்பாடு என்ற நிலை உருவாவது இயற்கை. அத்தகைய உடன்பாடும் கூட்டணியும் ஆங்காங்கே தோன்றின.

சென்னை மாகாணத்தில் காங்கிரசிற்கு எதிராக ஓர் அய்க்கிய முன்னணி உருவாயிற்று. அதற்குத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி உதவி செய்தார்; ஆதரவாக நின்றார்; ஆதரவு தரும்படி வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

திராவிடர் கழகத்தவர் தேர்தலில் நிற்கக் கூடாது என்னும் கொள்கையை மீண்டும் வலியுறுத்தி விட்டு, வாக்காளர் எவருக்கு வாக்களிப்பது என்று வழி காட்டினார்.

'பொது மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்பட்டு, முற் போக்குச் சிந்தனைகளை நசுக்க முயன்ற, காங்கிரசு ஆட்சிகளை வெளியேற்றுவதே குறிக்கோள், பொதுஉடைமை வேட்பாளர் களை ஆதரித்து வெற்றிபெறச் செய்வது அதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். அப்படிச் செய்யுங்கள்,

'எந்தத் தொகுதியிலாவது, பல வேட்பாளர்கள் நின்று, காங்கிரசிற்கு எதிரான ஓட்டுகளைச் சிதறடித்து, காங்கிரசு வேட்பாளர் வெல்ல வழி செய்து விடுவார்கள் போல் தோன்றினால், அங்கே, அதிக வெற்றி வாய்ப்புடைய காங்கிரசு கட்சியைச் சாராத வேறு கட்சிக்காரராயினும் அவருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யலாம். இத்தகைய வேண்டுகோளை விடுத்தார்.

தந்தை பெரியார், தமது நீண்ட, இணையற்ற, பொது வாழ்க்கைத் தொண்டில், தமது நாட்பட்ட விருப்பு வெறுப்புகளை விளையாடவிட்டது அரிது.

எவரை எக்கட்சியை எதிர்த்தாலும் அது அவரது மதிப்பீட்டில், அந்நியர் அக்கட்சி பொது நன்மைக்குக் கேடாகச் செயல்பட்டார், செயல்படுகிறார், செயல்படுவார், என்ற முடிவு ஏற்படுவதால் மட்டுமே இருக்கும். அதே மனிதர், அதே கட்சி, பொது நன்மைக்குப் பயன்படும் என்று பட்டுவிட்டால், முன்னர் எடுத்த நிலைக்கு நேர்மாறான நிலையை எடுப்பார்; ஆதரிப்பார்; துணை நிற்பார்.

சென்னை மாகாணத்தில், அய்க்கிய முன்னணி முளைத்த பருவத்தில், அப்போதைய இந்திய பொதுஉடைமைக் கட்சியின் தலைவராக விளங்கிய தோழர் டாங்கே, தென்னாட்டிற்கு வந்தார். திருச்சியில், பெரியாரோடு கலந்துரையாடினார்; திருச்சியில் இருபதாயிரம் பேர்கள் கொண்ட பொதுக்கூட்டத்தில் தோழர் டாங்கே உரையாற்றினார்.

அப்போது, 'கம்யூனிஸ்டுகள் காக்கை குருவிகளைப் போல, சுட்டுக் கொல்லப் பட்டதை—கொடுமைப்படுத்தப் பட்டதைப் பெரியாரும் அவரது இயக்கமும் வன்மையாகக் கண்டித்த அளவு எவரும் எந்த இயக்கமும் கண்டிக்கவில்லை; பெரியார், கம்யூனிஸ்ட்டுகள் பால், காட்டிய அளவு பரிவையும் அவர்களுக்குக் கொடுத்த அளவு ஆதரவையும் இந்தியாவில் வேறு எவரும் எந்த இயக்கமும் கொடுக்கவில்லை' என்னும் பொருள்பட, நாடறியப் பறை சாற்றினார்.

பின்னர் பம்பாயில் ஒரு பெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர் டாங்கே தமது உரையில் 'சென்னை மாகாணத்தில் செயல்படும் திராவிடர் கழகமும் பொதுஉடைமைக் கட்சியும் பொதுத் தேர்தலில் ஒத்துழைக்கப் போகிறது.

'வேட்டையாடப் பட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரியார் கொடுத்த அளவு, ஆதரவு, அடைக்கலம், வேறு எவரும் கொடுக்க வில்லை.

'திராவிடர் கழகமும் பொது உடைமைக் கட்சியும் இலட்சிய ஒருமைப்பாடு உடையது.

'திராவிடர் கழகம் சாதி வேற்றுமையற்ற சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுகிறது. அதோடு, சமதர்ம சமுதாயம் உருவாகவும் உழைக்கிறது.

'இவ்விரண்டு இலட்சியங்களும் பொதுஉடைமைக் கட்சியின் குறிக்கோள்கள் ஆகும்.

'நம் இரு சாராருக்கும் இடையே உள்ள சிறு கருத்து வேறு பாடு, ஒன்றே ஒன்றைப் பற்றித்தான். எது முதல், எது இரண்டாவது, என்பது பற்றியதாகும்.

'பொருளாதார மாற்றத்திற்கு நாம் முன்னுரிமை கொடுக்கிறோம். திராவிடர் கழகம் சமுதாய மாற்றத்திற்கு முன்னுரிமை கொடுக்கிறது. அவ்வளவுதான் மாறுபாடு' என்று பொருள்படப் பேசினார்; பெரியாரையும் அவரது இயக்கத்தையும் பாராட்டி, நன்றிக் கடன் செலுத்தினார்.

பொதுத் தேர்தல் வந்தது. பெரியார், சூறாவளிப் பயணத்தை மேற்கொண்டார்; அய்க்கிய முன்னணிக்கு ஆதரவு திரட்டினார்.

குத்தூசி குருசாமியார் அன்றைய காங்கிரசு ஆட்சி நடைமுறைப்படுத்திய 'ஆறு அவுன்ஸ்' பங்கீட்டை வைத்து 'ஆறு அவுன்ஸ் ஆட்சி' என்று பெயர் சூட்டினார். பற்றாக்குறை பங்கீட்டால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மனதில் அது பதிந்து விட்டது. விளைவு?

1952இல் நடந்த பொதுத் தேர்தலில் சென்னை மாகாண சட்டமன்றத்தின் பேரவையில் காங்கிரசு கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடிக்கத் தவறிவிட்டது. மற்ற கட்சிகளின் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தத்தில் பெரும்பான்மையினர் ஆனார்கள். ஆனால் அதிகப்படியான சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி காங்கிரசாக இருந்தது. எனவே அதற்கு அமைச்சரவை அமைக்க வாய்ப்பு கிடைத்தது.

அப்போது காங்கிரசிலிருந்து விலகியிருந்த, என்றும் தேர்தல் களத்தில் நிற்காத சக்ரவர்த்தி இராசகோபாலச்சாரியாரை அழைத்து முதல்வர் ஆக்கினால் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த சிலர் ஆச்சாரியாருக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற குறிப்பு கிடைத்தது. அப்போது தமிழ்நாட்டில் காங்கிரசின் தலைவராக விளங்கிய காமராசர் ஆச்சாரியாரை அழைத்தார்; முதல் அமைச்சராக்கி மகிழ்ந்தார்; ஆதரித்து நின்றார்.

காமராசர் மட்டுமா அப்படிச் செய்தார்? பெரியாரும் ஆச்சாரி யார் ஆட்சியை வரவேற்று எழுதினார். எதனால்?

ஆச்சாரியார் கல்கி கிருஷ்ணமூர்த்தியைத் தூது அனுப்பி ஆதரவு கேட்டதற்குத் தாட்சணியப்பட்டு அல்ல. ஆச்சாரியார் ஆட்சி, நிர்வாகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சிக்காரர் களும் தலையிடுவதைத் தடுக்கும் என்று நம்பியதால்; அவரது ஆட்சி நேர்மையாகவும், நாணயமாகவும் நடக்கும் என்று எதிர் பார்த்ததால்; ஆட்சிக்கு வந்துவிட்ட ஆச்சாரியாரால் பார்ப்பனரல்லாதாருக்குக் கேடு வராதபடி பெருமளவு தடுக்கும் உபாயமாக ஆதரவு தந்தார்.

ச. இராசகோபாலாச்சாரியாரின் ஆட்சியினுடைய வரலாற்றைக் காட்டுவதற்கு முன் அன்றைய அனைத்திந்திய கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே திராவிடர் கழகத்திற்கும் தந்தை பெரியாருக்கும் நன்றிக் கடன் பட்டிருப்பதாகக் கூறியதற்குக் காரணத்தைப் பார்ப்போம்.

பொதுவுடைமைவாதிகளை வேட்டையாடியதை எதிர்த்து பெரியார் போராடினார்; திராவிடர் கழகத் தலைவர் போராடினார்; 'விடுதலை' நாளிதழ் போராடியது; நாள்தோறும் போராடியது.

அதில் குத்தூசி குருசாமியார் 'பலசரக்கு மூட்டை' என்னும் தலைப்பில் ஒவ்வொரு நாளும் தனிக் கட்டுரை எழுதி வந்தார். ஈடு இணையற்ற துணிவோடும் கிண்டலோடும் நாள் தவறாது எழுத எப்படித்தான் முடிந்ததோ; அந்த அடக்குமுறை ஆண்டுகளில் அக் கட்டுரைகள் பொதுஉடைமையை ஆதரித்தே வரும்? பொது உடைமைக் கட்சியின் மேல் எடுத்த நடவடிக்கையைக் கிண்டல் செய்யும் பாணியில் வரும்.

சேலம் சிறையில், இருபத்து இரண்டு பேர்கள் சுட்டுக்கொல்லப் பட்ட சில நாள்களில் கல்கத்தா செல்லும் இரயில் வண்டி

கவிழ்ந்தது. அது 'கம்யூனிஸ்டுகள் சதி, என்று அதிகார வர்க்கம் சொல்லிற்று. குத்தூசியார் பேனா தாக்கிற்று.

**'இப்படித்தான் செய்யவேண்டும்'** என்ற தலைப்பில் 17-3-1950 அன்று அவர் எழுதியதை அப்படியே பார்ப்போம்.

''கல்கத்தா ரயிலைக் கவிழ்த்த கம்யூனிஸ்டுகளைப் பற்றி, பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிவதற்காக ஒரு பத்திரிகை பிரமாண்டமான ஏற்பாடு செய்திருந்தது. ஏராள மான கடிதங்கள் உண்மையாகவே வந்து குவிந்தன. கம்யூனிஸ்டு களைக் கண்ட கண்ட இடத்தில் சுட்டுத்தள்ள வேண்டும் என்றே எல்லாக் கடிதங்களும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி நடையில் எழுதி யிருக்கின்றனர். (இந்தச் சேவைக்காக இந்தப் பத்திரிகைக்குச் சென்னை சர்க்கார் 2, 3 இலட்ச ரூபாய் கொடுத்துதவ வேண்டு மென்று சிபார்சு செய்கிறேன்.) இக்கடிதங்களைக் கண்டதும் தரைக்கு மேலேயுள்ள இரண்டொரு கம்யூனிஸ்டுகளும் அண்டர் கிரவுண்ட் போயிருப்பார்கள் என்றே நினைக்கிறேன். நல்ல வேலை செய்தார் ஆசிரியர். குண்டோ வெடிமருந்தோ செலவில்லாமல் ஆபீசிலுள்ள ஒரு பாட்டில் 'இங்க்' செலவிலேயே கம்யூனிஸ்டுகளை ஒழித்துக்கட்டி விட்டார். ஏழ்மையில் நெளிந்துகொண்டிருக்கும் இவருக்கும் சர்க்கார் ஏதாவது உதவிசெய்யாவிட்டால் நன்றிகெட்ட சர்க்கார் என்றே குற்றம் சாட்டுவேன்.

''கல்கத்தா ரயில் விபத்து சேலம் படுகொலையை மறைப்பதற் காகச் செய்யப்பட்டது என்று கம்யூனிஸ்ட் பத்திரிகைகள் குறைகூறு கின்றன. அதாவது, காங்கிரஸ்காரர்களே ஆகஸ்ட் தனம் செய்து விட்டு அதைக் கம்யூனிஸ்டுகள் தலையில் சுமத்தி சேலம் சிறைக் கொலைப் பழியிலிருந்து தங்கள் சர்க்காரைத் தப்பவைப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடென்றும் அப்படியில்லாவிட்டால் எந்த விசாரணையும் நடப்பதற்கு முன்பே இரயில் கவிழ்ந்த மறு நிமிஷத் திலேயே 'இது கம்யூனிஸ்டுகளின் நாச வேலை' என்று பொறுப் புள்ள உத்யோகஸ்தர்களும் இரண்டொரு மந்திரிகளும் அறிக்கை விட்டிருப்பார்களா என்றும் வடநாட்டு கம்யூனிஸ்ட் பத்திரிகைகள் எழுதுகின்றன.

''இதுமட்டுமா?''

''அந்த ரயிலில் காளா வெங்கட்ராவும் அவரைச் சேர்ந்தவர் களும் போனதால் அவருக்கு விரோதிகளாயுள்ள ஆந்திரத் தலைவர் களின் சதி வேலையாக ஏன் இருக்கக்கூடாதென்றும்எழுதுகின்றன.

—11—

''இம்மாதிரி எழுதியிருப்பதற்குப் பொருத்தம் இருப்பது போலவே சில நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. கல்கத்தா ரயில் விபத்தைக் காரணமாகக் காட்டி சட்டசபை களிலும் காங்கிரஸ் பத்திரிகைகளிலும் காங்கிரஸ்காரர் காங்கிரஸ் பிரசாரமும் கமயூனிஸ்டு ஒழிப்புப் பிரசாரமும் செய்கிறார்கள். இந்தச் சாக்கில் நமக்கு இரண்டு ஓட்டு கிடைத்தால் போதும் என்று கருதி காங்கிரஸ் தலைவர்கள், இந்தமாதிரி நாசவேலைக் காரருக்கா தேர்தலில் ஆதரவு காட்டப்போகிறீர்கள்' என்று பொது மேடைகளில் பேசி வருகிறார்கள்.

''எப்படியோ போகட்டும். காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் தகராறு இப்போது நிற்கப் போவதில்லை. இந்த இரண்டு கட்சிகளில் ஒன்று ஒழிந்தால்தான் மற்றொன்று உயிர் பிழைக்க முடியும். இரண்டில் எதற்குச் செல்வாக்கிருக்கிறதோ எது உண்மையோ அது பிழைக்கட்டும்.

''ஆனால் ஒரு சங்கதியை மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை ரயில் விபத்து செய்யும் தேசத் துரோகிகளுக்கு பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் என்ன தண்டனை விதித்தார்களோ, அதே தண்டனையை விதித்தால்தான் அவர்கள் கொட்டத்தை அடக்க முடியும் என்று யாரோ ஒருவர் எழுதியதாக காங்கிரஸ் தமிழ்ப் பத்திரிகையொன்றில் வெளியாகியிருக்கிறது.

''என்னைப் பொருத்தமட்டில் நான் இதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். கட்டாயம் பிரிட்டிஷார் செய்தது போலச் செய்ய வேண்டியது தான்

''சிறைக்குள் இருந்துகொண்டே ரயிலைக் கவிழ்க்கும் வேலை களைச் செய்த இந்தக் கூட்டத்தாருக்குச் சிறைக்குள் இனி இடம் அளிககக் கூடாது. இந்திய மந்திரிகள் இவர்களை டெல்லிக்கு வரவழைத்து ஆட்சியை இவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இவர் களையெல்லாம் மந்திரிகளாக உட்கார வைத்து இந்த பஞ்ச காலத்தில் இவர்கள் ஆட்சி நடத்த முடியாமல் தத்தளிக்கும்படி செய்யவேண்டும்.

''வெள்ளைக் காரர்கள் இப்படித்தானே செய்தார்கள். போலீஸ்காரர்கள் மீது தீயிட்டுக் கொளுத்தியவர்கள் சட்ட சபையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தந்திக் கம்பியை அறுத்தவர்கள் ஜில்லா போர்டு தலைவர்களாய் இருக்கிறார்கள். தபாலாபீசைக் கொளுத்தியவர்கள் மாதம் ஆயிரம் இரண்டாயிரம் சம்பாதிக்கிறார்கள். ரயிலைக் கவிழ்த்தவர்கள் மந்திரிகளாய் இருக்கிறார்கள்.

''இவ்வளவும் செய்யத்துணியாத 'ஆகஸ்ட் துரோகி' ஆச்சாரியாரை முதலில் மாகாணத்தை விட்டே விரட்டி இப்போது அடையாற்றில் அக்கடா என்று உட்கார வைத்திருக்கிறார்கள்.

''ஆகவே வெள்ளைக்காரர் நாசவேலைக் காரர்களைத் தண்டித்தது போல் செய்ய வேண்டுமானால், காங்கிரஸ் மேலிடத்து மந்திரிகள் கம்யூனிஸ்டுகளை மேற்கண்டபடிதான் செய்ய வேண்டும்.

''ஒருக்கால் இப்படியெல்லாம் செய்வார்களென்று கருதித்தான் கம்யூனிஸ்ட் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் இரகசியமாக முன்கூட்டிப் பேசிக் கொண்டு இந்த நாடகத்தை நடத்துகிறார்களோ என்றுகூட சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

''இல்லாவிட்டால் இந்த மாதிரியாகக் காங்கிரஸ் பத்திரிகையிலேயே ஒருவர் எப்படி எழுத முடியும்?

''இதெல்லாம் அரசியல்! நம்மைப் போன்ற பாமரர்களுக்கு — நாசவேலையால் நஷ்டமும் உயிர்ச் சேதமும் அனுபவிக்கிறவர்களுக்கு இந்த மாதிரி அரசியல் தந்திரமெல்லாம் விளங்கவே விளங்காது.

''சும்மா காட்டுக் கூச்சல் போடாதீர்கள். உங்கள் பிரசங்கமோ எழுத்தோ எந்த முட்டாளும் புரிந்து கொள்ள முடியாது.

''எங்களிடமிருந்து ஆட்சியைப் பிடுங்க வேண்டுமானால் நாங்கள் என்னென்ன காரியங்கள் செய்தோமோ அவைகளை நீங்களும் செய்தால்தான் நல்லது. இல்லாவிட்டால் பொது மக்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள். பொறுப்பில்லாமல் அதிகாரத்தை வீசி எறிந்து விட்டார்கள் என்று சொல்ல மாட்டார்களா?

''நாங்கள் வெள்ளையனிடத்திலிருந்து அதிகாரத்தை வாங்கியது போலவே நீங்களும் வாங்கிக் கொள்ளுங்களேன்'' என்று கூறி காங்கிரஸ் தலைவர்கள் கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் ஒருக்கால் ஏதாவது இரகசிய ஒப்பந்தம் செய்திருக்கலாமோ.

''இதில் ஏதோ மர்மமிருக்கிறது! தகப்பனுக்கும் பிள்ளைக்கும் நடக்கிற சண்டை மாதிரியே இருக்கிறது. பக்கத்து வீட்டுக்காரர்களாகிய நாம் சமாதானம் செய்து வைப்பதில்கூட ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; அளவுக்கு மீறித் தலையிடக் கூடாது''

தொடர்ந்து காட்டிய பெரியாரின் ஆதரவு பயன் பட்டதா?

# 30. சேலம் சிறைக் கொடுமைகள்

'அதிகாரம் பொல்லாதது; அது நல்லவர்களையும் அல்லவர்கள் ஆக்கும் இயல்புடையது என்பதற்குச் சான்றாக நின்றது, 11-2-1950 இல் சேலம் மத்திய சிறையில் நடந்த துப்பாக்கிச்சூடு. அச் சிறையின் இணைப்புப் பகுதியில், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மூன்று பகுதிகளைச் சேர்ந்த 350 கம்யூனிஸ்டுகள் அடைக்கப் பட்டிருந்தார்கள். கேரளத்தைச் சேர்ந்தவர்களே அதிகம்.

சிறைப்பட்டிருந்த கம்யூனிஸ்டுகளில் பலர், இந்திய விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டவர்கள்; பலமுறை சிறைக் கொடுமைகளைத் துய்த்தவர்கள்.

ஆங்கிலேய ஆட்சியின் போது கூட நடக்காத கொடுமைகள் நம்மவர் ஆட்சியில் நடந்தன. அவை என்ன?

அரசியல் கைதிகளாகிய கம்யூனிஸ்டுகள் கூட மற்ற கைதிகளைப் போல, குல்லாய் போட்டுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. கைதியின் எண்ணைக் குறிக்கும் சட்டையை அணிய வேண்டும் என்று இழிவு படுத்தினார்கள். சிறைக்குள்ளிருந்து தண்ணீர் இறைக்க மாடுகளுக்குப் பதில், கம்யூனிஸ்ட் கைதிகள் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். சாலை போடும் கல் உருளையை இழுக்கும்படி வற்புறுத்தப் பட்டார்கள்.

இக்கொடுமைகளுக்கு உடன்பட மறுத்தார்கள் என்ற சாக்கில் சிறை அலுவலர்கள் சொல்லத் தகாத சொற்களைச் சொல்லி வம்புக்கு இழுத்தார்கள். அது முற்றும்படித் துண்டினார்கள். அதைச் சாக்காக்கி, அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

வெறியடங்கும் மட்டும் துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளினார்கள். தடிகொண்டு தாக்கி கைகால்களை உடைத்தார்கள்.

மனித உள்ளம் உடைய எவரும் ரத்தக் கண்ணீர் வடிக்குமளவு, உயிர்ப் பலி கொடுக்க நேர்ந்தது.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்த சிறைக்கொடுமை. 22 உயிர்களைக் குடித்தது. 103 பேர்கள் காயம்பட்டு அவதிப் பட்டார்கள்.

இக்கொடுமைகளைக் கண்டித்து, அடுத்து அடுத்து எதிர்ப்புக் குரல் எழுப்பியவர் தந்தை பெரியார்; தொடர்ந்து கண்டித்து எழுதி, மக்கள் கவனத்தைக் கவர்ந்தது 'விடுதலை' நாளிதழ். அஞ்சாது அயராது எழுதியவர் குத்தூசி குருசாமியார்.

சேலம் சிறைக் கொடுமையைக் கண்டித்து 15-2-1950 அன்று 'விடுதலை' தலையங்கம் தீட்டியது. அதன் தலைப்பு என்ன? 'இது வரையில் 22' என்பதாம்.

அத்தலையங்கத்தைப் படியுங்கள்:

"சேலம் பலி 22 ஆகிவிட்டது. காயம் பட்டவர்களில் இன்னும் எத்தனை பேர் அதிகார வெறிக்குப் பலியாகப் போகிறார்களோ தெரியவில்லை. ரயில் விபத்தோ, பஸ் விபத்தோ ஏற்பட்டால் விபத்தில் மாண்ட உயிர்களின் பெயர்கள் உடனே வெளிவந்து விடுகின்றன. ஆனால் சேலம் பலிப் பட்டியல் மட்டும் வெளிவராத காரணம் தெரியவில்லை.

"தங்கள் கொள்கைக்காக, உயிர்விட்ட, ஒப்பற்ற வீரர்களை அதிகார வர்க்கம் மரக்கட்டைகளாகக் கருதி இருக்கிறதா? அல்லது அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் குடும்பங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் உண்டு என்று கருதியிருக்கிறதா? சவங் களைக்கூட இவர்கள் கண்ணில் காட்டியதாகத் தெரியவில்லை.

"13-2-1950 திங்களன்று நாம் கேட்டுக் கொண்டபடியே பொது விசாரணை நடத்துவதற்கு ஆட்சியாளர் ஏற்பாடு செய்திருப்பதாக அறிகிறோம். மகிழ்ச்சி; ஆனால் அந்த விசாரணைக் கமிட்டியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் இருக்க வேண்டியது பொருத்தம். அதற்கு வசதி இல்லாத காரணத்தினால், அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரசின் (ஏ ஐ.டி யு.சி.) தலைவரான தோழர் வி. சர்க்கரைச் செட்டியாராவது அவசியம் இருந்தாக வேண்டும். இல்லையேல், வெறும் மாஜி சர்க்கார் உத்யோகஸ்தர் களின் விசாரணையிலும் தீர்ப்பிலும் பொது மக்களுக்குத் திருப்தி யிருக்காது.

அது மட்டுமல்ல. விசாரணை முடியும் வரையில் இந்தப் படுகொலை சம்பந்தப்பட்ட 'டயர்கள்' (Dyers) சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும். தங்கள் அதிகார எல்லையை மீறி வெறித்

தனமாக நடந்து கொண்ட சில்லறைத் தேவதைகள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"என் எதிரியை அடிப்பதற்கு என் கையில் கிடைத்த கருவியைப் பயன்படுத்துவேன்' என்று அந்நாளில் முதலமைச்சர் ஆச்சாரியார், இந்தி எதிர்ப்பாளர்கட்காகக் கூறியதை, 'கண்ணன் காட்டிய வழி'யாகக் கருதி, இன்றைய அதிகாரிகள் நடந்து வருகிறார்களோ என்று அச்சப்படுகிறோம்.

"ஏனெனில் சர்தார் பட்டேல், பார்லிமெண்டில் கூறிய பதிலில் 'இந்தியாவில் அரசியல் கைதிகள் இல்லை' என்று மனந்துணிந்து கூறியிருக்கிறார். அதாவது காங்கிரஸ் தியாகிகளைத் தவிர மற்ற அரசியல் கட்சிக்காரரர்கள் எல்லோரும் வெறும் கலகக்காரர்கள், குண்டர்கள் என்பதுதான் சர்தாரின் எண்ணம் போலும். இரும்பு மனிதருக்கு இரும்பு இதயந்தானே இருக்கும்?

"தண்டவாளத்தைப் பெயர்த்தும், தபாலாபீஸைக் கொளுத்தி யும் நாச வேலைகள் செய்த ஆகஸ்ட் தியாகிகள், அரசியல் கைதிகள் என்றார்கள் அன்றைய ஆட்சியாளர்கள்.—அதாவது வெள்ளையர். ஆனால் இன்றுள்ள காருண்ய சீலர்களின் காங்கிரஸ் ஆட்சியாளரோ, கம்யூனிஸ்டுகளை 'அரசியல் கைதிகள் என்று அழைப்பதற்குக் கூட மறுக்கிறார்கள். கல்நெஞ்சு! கல்நெஞ்சு

"ஊரெங்கும் 144 தடையும் ஊர்வலத்திற்குத் தடையும் தொழிலாளர் வாய்களில் அடக்குமுறைத் துணி முடிச்சும் இல்லா திருந்தால் சேலம் நிகழ்ச்சிக்கு நாள்தோறும் கண்டனம் மாரியாகக் கொட்டுவதைக் காணலாம். இன்று மூச்சுப் பேச்சு இல்லை. பார்ப்பன—காங்கிரஸ் பத்திரிகைகள், காஷ்மீர் பற்றியும் பிரிட்டிஷ் பொருளாதாரத் திட்டம் பற்றியும் தலையங்கம் எழுதிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் சுடுகாட்டு அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது. 22 பிணங்களும் தொழிலாளர் உலகைக் கண்டு ஏளனமாகச் சிரிக்கின்றன. நினைக்க நினைக்க நெஞ்சம் துடிக்கிறது!'' இப்படித் தலையங்கம் தீட்டி, கம்யூனிஸ்டு களைச் சுட்டுக் கொன்றதைச் சாடியது 'விடுதலை'

22-2-1950ஆம் நாளைய 'விடுதலை' தலையங்கம் என்ன? வேண்டுகோள் ஆகும். எவருடைய வேண்டுகோள். தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமியின் வேண்டுகோள். எவருக்கு வேண்டு கோள்? பொது மக்களுக்கு வேண்டுகோள். என்ன செய்யும்படி வேண்டுகோள்? 5-3-1950இல் கண்டன நாள் கொண்டாடும்படி வேண்டுகோள். அதையும் படிப்போம்.

'சேலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காவல் கைதிகள் ஜெயில் அதிகாரிகளால் சுடப்பட்டு 22 பேர் கொல்லப்பட்டும் 100 பேர்கள் காயப்பட்டும் வீழ்த்தப்பட்ட அகோர காரியமானது. பொதுமக்களால் மிகவும் கண்டிக்கப்படத் தக்க காரியமாகும் என்பதோடு, இனி அப்படிப்பட்ட காரியம் நடக்காமல் இருக்கும் படிப் பார்த்துக்கொள்ள வேண்டியது பொதுமக்கள் கடமை யாகும். ஏனெனில், இதுபோல் இதற்கு முன்பும் பல தடவை நடந்துமிருக்கிறது.

"அதிகாரிகள் நடந்து கொண்ட தன்மையானது சரியானதா, தவறானதா என்பதைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக சர்க்கார் நியமித்திருக்கும் கமிட்டியானது பொதுமக்களுக்கும் அதிகாரிகளால் துன்பம் அடைந்தவர்களுக்கும் நம்பிக்கையற்ற மக்களைப் பெரிதும் கொண்ட கமிட்டியாய் இருப்பதால், பொது மக்கள் அந்த விளக்கத்தை எதிர்பார்த்திருப்பதும் பயனற்ற காரியமாகும்.

"ஆதலால் அதிகாரிகளுடையவும், சர்க்காருடையவும் செய்கை களை மக்கள் கண்டிக்கிறார்கள் என்பதையாவது சர்க்காருக்குக் காட்டவேண்டியது பொது மக்கள் கடமையாகும்.

"ஆகவே, இந்தக் கண்டனக் கருத்து தெரிவிக்கும் காரியத் திற்கு ஆக, திராவிடர் கழக அங்கத்தினர்கள் 5-3-1950ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆங்காங்குள்ள கழகங்கள் மூலம் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து தீர்மானம் செய்து, தீர்மானத்தைச் சர்க்காருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பிக் கொடுக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்.

"5-3-1950ஆம் தேதியன்று, கூட்டம் நடத்துவதற்கு முன்பு கழகத்தார் கூடுமானவரை பொதுமக்களுடன் கழகத்திலிருந்து கோர்வையாகச் சென்று, கட்சி பேதமில்லாத பொதுக் கூட்டமாகவே நடத்தி, தீர்மானம் செய்ய வேண்டியது; போலீசாரிடம் அனுமதி பெற்றுக் கூட்டம் நடத்த வேண்டியது.

"போலீசாரோ, சர்க்காரோ தடை உத்திரவு போட்டால்' நிறுத்திக் கொண்டு, சேலம் ஜெயிலில், குறிப்பிட்ட தேதியில் அதிகாரிகளும் சர்க்காரும் நடந்துகொண்ட கோரத் தன்மையைக் கண்டிப்பதாக எழுதி உள்ளூர் மக்களிடம் கையெழுத்து வாங்கி அனுப்ப வேண்டியது.

"கூட்டத்தில் ஆத்திரமும் அதிக்கிரமுமான பேச்சுகள் நிகழாமல், கழகத் தோழர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.

இப்படி ஈ. வெ. ராமசாமி வேண்டுகோள் விடுத்தார்,

# 31. குலக் கல்வித்திட்டத்தைப் புகுத்தி இராஜாஜி மீண்டும் திசை திருப்பினார்

நிழலை, உண்மை என்று கருதி, அதன் பின்னே ஓடுவது போல, வெறும் ஆள்மாற்றத்தை, உண்மையான அரசியல் விடுதலை என்று பொதுஉடைமைக் கட்சியினர் நம்பினர்; வேறு பிரிவினர்களும் நம்பினர்.

கும்பலிலே கோவிந்தா போட்டு வளராத தந்தை பெரியாரோ, 1947இல் கிடைக்கப் போவது மெய்யான விடுதலை அல்ல; சுரண்டும் உரிமை மாற்றம்; அன்னியனே பெரிதும் சுரண்டிய இடத்தில், நம்மவர்களே அதிகம் சுரண்டும் உரிமையும் வாய்ப்பும் பெறுவதற்குத் தொடக்கம்' என்று எச்சரித்தார். அது செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. இதற்காகப் பெரியாரை அன்றும் தூற்றினரார்கள்; இன்றும் தூற்றுகிறார்கள். அது பலருடைய பொழுது போக்கு.

தந்தை பெரியாரின் எதிர்ப்பார்ப்புப்படியே, விடுதலை பெற்ற சூட்டோடு, அடக்குமுறை கட்டவிழ்த்து விடப் பட்டது. பொதுஉடைமைக் கட்சியினரும் அகலக் கால் வைத்து மாட்டிக் கொண்டார்கள். பலப்பல உயிர்கள் பலியாயின. பல்லாயிரக் கணக்கானவர்கள் சிறைகளில் அவதிப் பட்டார்கள்.

விருப்பு வெறுப்புகளைப் பாராமல் சமத்துவக் கொள்கைக்கும் பொதுவாழ்க்கையில் நேர்மைக்கும் மட்டுமே தலைவணங்கும் பெரியார், பொதுவுடைமைக் கட்சிக்கு ஆதரவாகத் தொடர்ந்து பேசினார்; எழுதினார். கொடுமைகளுக்கு ஆளான மக்கள் மேல் பொதுமக்களுக்கு, இயற்கையாகவே பரிவு ஏற்படும். அப்பரிவினை பெரியார் இயக்கத்தின் தொண்டர்கள் ஊதி ஊதி வளர்த்தார்கள்.

இதற்கிடையில், எந்த அமெரிக்காவை—பிரிட்டனை நிறைவு படுத்த, இந்தியாவில் பொதுஉடைமைக் கட்சிக்குத் தடைவிதிக்கப் பட்டதோ, அந்த அமெரிக்காவும் பிரிட்டனும் மெய்யான நண்பர்கள் அல்ல என்பது தெளிவாயிற்று. எப்படி?

இந்தியாவில் பொதுத்துறையில் புதியதோர் எஃகாலை கட்ட, பிரதமர் நேரு விரும்பினார். அவருடைய தனிப்பட்ட பற்று எப்படியிருப்பினும், பொதுமக்கள் மிரண்டுவிடக் கூடாது என்பதற்காக, பிரதமர் நேரு முதலில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முதலாளித்துவ நாடுகளின் உதவியை நாடினார். உதவி கிடைக்கவில்லை. அவர்கள் என்ன சொன்னார்கள்?

'தனியார் துறையில் எஃகாலை வைப்பதானால், எங்கள் முதலாளிகளை முதலீடு செய்ய விடுவதானால் புதிய எஃகாலைக்கு உதவுவோம்' என்றார்கள்.

அயல் நாட்டார் ஆதாயத்திற்காக இந்தியாவில் தொழில் தொடங்குவதானால் அவர்கள் உதவக் கூடுமென்றார்கள். நமக்கென்ன நன்மை? நம் உழைப்பாளிகளுக்குக் கூலி கிடைக்கும்; நம் பட்டதாரிகளுக்குப் பிழைப்பு கிடைக்கும்; நம் முதலாளிகள் சிலருக்கு இலாபத்தில் பங்கு கிடைக்கும்.

'ஆலையில்லா ஊரில், இலுப்பப்பூ சர்க்கரை.' வறியோர் செறிந்த இந்தியாவில் ஆயிரங்கோடிச், சொத்து, முதல் வரிசைச் சொத்து. பிற நாட்டு முதலாளிகளின் செல்வமோ பல ஆயிரங் கோடி என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அந்நிலையில் நம் முதலாளிக்கு ஒரு பங்கு இலாபம் கிடைத்தால், அன்னிய முதலாளிகள் பத்து பங்கு எடுத்துக் கொண்டு போவார்கள். அதற்கு உடன்பட முடியுமா? அதுவும் மிக முக்கியமான எஃகு, பாதுகாப்புக் கருவிகள், ஆகியவற்றில் அயல் நாட்டுச் செல்வம் ஆதிக்கம் செலுத்துவது ஆபத்து, எனவே, பிரதமர் நேரு, வேறு பக்கம் திரும்ப நேர்ந்தது. சோவியத் நாட்டை நாடவேண்டிய நிலை உருவானது.

பொதுஉடைமைக் கட்சியைத் தடை செய்து, அடக்கி ஒடுக்கும் ஆட்சிக்கு சோவியத் ஆட்சி உதவாது, என்று நினைத்திருக்கக் கூடும்.

அளவிற்கு மீறிய அடக்குமுறை, பொதுமக்களிடையே காங்கிரசு ஆட்சியின் மேல் எதிர்ப்பை வளர்த்தது; பொது உடைமைக் கருத்தின்மேல் கவனத்தைத் திருப்பியது. அதே நேரத்தில் சோவியத் உதவியை நாடவும் நேர்ந்தது. இந்தக் 'காலத்தின் கட்டாயங்கள்', ஆட்சியாளர், வேறு முறைகளைக்

கையாளும்படி செய்தன. பொதுஉடைமைக் கட்சிக்கு இருந்த தடையை நீக்கிவிட்டு, பொதுத் தேர்தல் நடத்த இந்திய அரசு விரும்பியது.

தலைமறைவாக இருந்த பொதுஉடைமை வாதிகள் சிலர் இரகசியமாகக் கூடினர். கலந்துரையாடினர். 'வேட்டு' முறையைக் கைவிட்டு விட்டு, 'ஓட்டு'முறைக்கு மாறுவது, என்று முடிவு செய்தனர். பின்னர் இம்முடிவு, நாடு தழுவிய பெரிய கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பொதுஉடைமைக் கட்சியின்மேல் இருந்த தடை நீக்கப் பட்டது; பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

சென்னை மாகாணத்தில், தந்தை பெரியாரின் தூண்டுதலால், காங்கிரசு அல்லாத கட்சிகளிடையே தேர்தல் உடன்பாடு உருவாயிற்று. காங்கிரசை எதிர்த்து, பலமான போட்டி, உருவாயிற்று.

ஏற்கனவே, குறிப்பிட்ட, அடக்குமுறைகளுக்கு மேலாக உணவுப் பற்றாக்குறை பற்றி பொதுமக்கள் காங்கிரசு ஆட்சியின் மேல் வெறுப்புக் கொண்டிருந்தார்கள்.

போட்டியிட்ட கட்சிகள் சிலவற்றிற்குள்ளே ஏற்பட்ட தேர்தல் உடன்பாடு — தந்தை பெரியாரின் சூறாவளித் தேர்தல் சுற்றுப் பயணம் — முதலியன காங்கிரசைச் சிறுபான்மைக் கட்சியாக்கிற்று.

ஆட்சி இயந்திரத்தைக் கையில் வைத்திருந்த காங்கிரசு கட்சி, மாகாண சட்டசபைக்கு 367 இடங்களுக்குப் போட்டியிட்டு, 152 இடங்களை மட்டுமே பிடித்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 131 இடங்களில் போட்டியிட்டு 62 இடங்களைப் பிடித்தது. எந்தக் கட்சியிலும் சேராது நின்ற 667 பேர்களில் 62 பேர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.

சட்ட மன்றத்தில் சிறுபான்மை யாகி விட்ட போதிலும் காங்கிரசு கட்சி அமைச்சரவை அமைத்தது. மற்ற எந்தக் கட்சியும் பெறாத அளவு அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற காரணத்தால் காங்கிரசு பொறுப்பேற்றது. அரசியல் துறவு பூண்டிருந்த ஆச்சாரியார் முதல் அமைச்சரானார். அதற்கு உதவும் பொருட்டு சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப்பட்டார்,

முதல் அமைச்சரான இராசகோபாலாச்சாரியார், பெரியாருக்குத் தூது அனுப்பினார்; பெரியாரின் ஆதரவைக் கோரினார்.

ஆட்சியைப் பிடிப்பதில் நாட்டமில்லாத பெரியார், எப்போதும் ஆட்சியிலிருப்பவர்களிடம் சரியான வேலை வாங்குவதிலேயே கருத்தாயிருப்பார்.

பெரியாரின் கொள்கைகளையும் போக்குகளையும் அறிந்த மூத்தவர், தூது அனுப்பினால், அதற்குப் பொருள் என்ன? பெரியாரின் கருத்துக்கு நேர் எதிர்ப்பான எதையும் இராஜாஜி செய்யமாட்டாரென்பதே உட்பொருள். தனிப்பட்ட முறையில் இராஜாஜியின் நாணயத்தில் பெரியாருக்கு நம்பிக்கை உண்டு. எனவே, பழைய பகையை பெருந்தன்மையோடு மறந்து விட்டார். இராஜாஜியின் அமைச்சரவையை ஆதரித்து எழுதினார். அரிசிப் பங்கீட்டை எடுத்து விடவேண்டுமென்று ஆலோசனை கூறினார். ஆட்சியில், நிர்வாகத்தில்—கட்சிக்காரர்களின் தலையீடு இல்லாது இராஜாஜி பார்த்துக்கொள்வாரென்ற நம்பிக்கையைத் தெரிவித் தார்.

பெரியார் விரும்பியபடி நடந்தது. அரிசிப் பங்கீட்டு முறையை இராஜாஜி ஒழித்தார். கட்சியின் பெயரைச் சொல்லிக் கொண்டு நியமனங்களிலும் நிர்வாகத்திலும் தலையிடுவதைப் பெருமளவு அடக்கிவிட்டார். இவற்றின் வாயிலாக, மக்களின் நல்லெண் ணத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு, பொது மக்கள் தலையில் கை வைக்கும் வேலையில் ஈடுபட்டார். அது என்ன?

'குலக்கல்வித் திட்டம்' என்பதாம். இப்பெயர் இராஜாஜியால் சூட்டப்பட்டது. இத்திட்டத்தை வேறு எவரும் அப்படித் தவறாக அழைக்கவில்லை.

அத்திட்டம் என்ன?

நாட்டுப்புறச் சிறுவர் சிறுமியர் முழு நேரம் படிக்கக் கூடாது அரை நாள் மட்டுமே படிக்கவேண்டும். பாதி நாள், குலத் தொழில் செய்யக் கற்றுக்கொள்ளட்டும். பொதுமக்களின் குழந்தைகளுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்.

ஒவ்வோர் நாட்டுப்புறப் பள்ளியும் இரு ஷிப்டுகளில் வேலை செய்யும். இரண்டு ஷிப்டுகளுக்கு வெவ்வேறு ஆசிரியர்கள் கிடை

யாது. இரண்டிற்கும் ஒரு 'செட்' ஆசிரியர்களே வேலை செய்ய வேண்டும். அதாவது நாளைக்கு அய்ந்து மணிகள் வேலை செய்த நாட்டுபுற ஆசிரியர்கள், புதிய திட்டத்தின் கீழ், ஆறு மணிகள் வேலை செய்ய வேண்டும்.

இத்திட்டம், திடீரென நடைமுறைப் படுத்தப்பட்டது. அது பற்றி, அன்றைய கல்வி அமைச்சருக்கோ, பிற அமைச்சர்களுக்கோ அமைச்சரவைக்கோ, முன்கூட்டித் தெரியாது. கல்விச் செயலருக்கும் தெரியாது.

பள்ளிக்கூடக் கல்வியோடு தொடர்பே இல்லாத ஒருவரை பொதுக் கல்வி இயக்குநராக்கி, அவரைக் கொண்டு இப்படியொரு திட்டத்தைச் சுற்றறிக்கையாக அனுப்ப ஏற்பாடு செய்தார், முதல் அமைச்சர் இராஜாஜி.

இத்திட்டம் 1953ஆம் கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது. அதுபற்றிய சுற்றறிக்கையைத் திடீரென செய்தித்தாள் களில் கண்ட அமைச்சர்களும் பெரிய அலுவலர்களும் அதிர்ச்சி யடைந்தார்கள்.

"முதலமைச்சர் ஆணைப்படி நடந்தது. அவர்தான், இத் திட்டத்தை ஆலோசனையாக, 'கோட்டை'க்கு அனுப்பாமல் நேரே ஆணையிட்டு விட்டு, தகவல் கொடு என்றார். அப்புறம் நான் என்ன செய்ய" என்று அன்றைய இயக்குநர், விளக்கஞ் சொல்ல நேர்ந்தது.

இராஜாஜி, இப்படியொரு திட்டத்தைக் காதும்காதும் வைத் தாற்போல் நடைமுறைப்படுத்தச் சொல்லுவானேன்?

இளமை, முற்போக்குச் சிந்தனைக்குப் பிறப்பிடம்; புரட்சிகர மான செயல்களுக்கு உந்துதல்.

முதுமை, தளர்வின் பருவம்; ஆற்றாமையின் விளை நிலம்; புதிய சிந்தனைகளைக் கண்டு மிரளும் காலம். தனது பழைய கருத்துகளைப் பற்றியே அச்சமும் அவநம்பிக்கையும் சுரக்கும் நிலை, முதுமை நிலையாகும்.

மக்களின் உள்ளங்களைக் கவரவேண்டிய நிலையில் இருந்த காலத்தில், கவர்ச்சிகரமான தீண்டாமையொழிப்பு, பேதமற்ற வாழ்க்கைமுறை ஆகியவற்றிற்காக, இராசகோபாலாச்சாரியார் வழக்காடினார். வயது ஏற ஏற, அறிந்தும் அறியாமலும் அந்நிலை யிலிருந்து நழுவினார்,

1938 ஆம் ஆண்டு, கீழ்வகுப்புகளுக்கு இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது, இராஜாஜியின் இந்திப்பற்று உந்தியதால் அல்ல. 'சமதர்மக் கோட்பாட்டை விரைந்து வளர்த்துவரும் தன்மான இயக்க வெள்ளத்தைத் திசை திருப்பிவிடவேண்டும்; தென்னிந்திய சமதர்மக் கொள்கையினரும் வட இந்திய சமதர்மக் கொள்கை யினரும் ஒன்று சேர வொட்டாதபடி அவர்களுக்குள் வெறுப்பை வளர்த்துவிட வேண்டும்.

இவை, காலந் தாழ்த்தாது நடக்க வேண்டும் என்பது அவ ருடைய கருத்து. அதற்கேற்ற உபாயமாகவே, கட்டாய இந்தியைக் கொண்டு வந்தார். தமிழர்கள் கொதித்து எழுந்து போராடும் நிலைக்கு அவர்களைத் தள்ளினார். இந்தி மொழிக்காரர்கள் தமிழர்களைப் பிறவிப் பகைவர்களாகக் கருதும் பாழ் நிலையை உருவாக்கிவிட்டார். ஆனால் அவரே 1965இல் இந்தி எதிர்ப்புக்குத் தூண்டுகோலானார்.

அதேபோல, ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கையை, 'பசுவை வெட்டுவதா!' 'தாயைத் துண்டாடுவதா?' என்று எதிர்த்து வந்த இராசகோபாலாச்சாரியார் பிறகு பாகிஸ்தான் பிரிந்து போவதை ஆதரிப்பதில் முன்னே நின்றார். அத்தகைய பிரி வினை இருநாட்டு மக்களிடையேயும் வாழையடி வாழையாகப் பகையை வளர்க்கும். அப்பகை உணர்ச்சி, இந்தியர்களின் சிந் தனையைச் சமதர்மத்திலிருந்து வேறுபக்கம் திருப்பிவிடும் என்று இராசகோபாலாச்சாரியாருக்குப் புலப்பட்டது ஆகவே பிரி வினையை ஆதரித்தார்.

அதே உள்ளுணர்வுதான், குலக்கல்வித் திட்டம் என்னும் அணு குண்டை அவர் திடீரென வீசுவதற்குக் காரணம்.

கல்விக் கண் திறந்து முன்னேற முயலும் நாட்டுப்புற மக்களின் பிள்ளைகள் பட்டங்கள் பெற்று, போட்டிக்கு வராதிருப்பதற்கு, குலக் கல்வி முறை உதவும் என்று நினைத்தார். அதோடு, பசுமை யாக வளர்ந்துவரும் சமதர்மச் சிந்தனையை அழிக்கும் பூச்சியாக, கேடான இத்திட்டத்தைப் பயன்படுத்த நினைத்தார். இப்படி யொரு திட்டம் வந்தால், தமிழர்களின் கவனம் அதை எதிர்ப் பதற்கே திரும்பிவிடும். சமதர்மக் கொள்கையைப் பரப்ப, போதிய கவனமும் நேரமும் முயற்சியும் கிடைக்காது என்பது அவர் கணக்கு. எனவே, எந்த காமராசர் அழைத்து, முதல் அமைச்சர் ஆக்கினாரோ, அவருக்கும் சொல்லாமல், அரைவேளைப் படிப்பைத் திணித்தார்.

அத்திட்டம் வெளியான அன்று தமிழ் நாடு காங்கிரசின் தலைவர் காமராசர், விருதுநகரில் இருந்தார். அவருக்கு அதிலுள்ள கேடு பளிச்சென்று புரிந்தது. அன்று மாலை, விருதுநகரில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய காமராசர், 'இந்தப் பைத்தியக்காரத்திட்டத்தை ஒழித்து விட்டுத்தான் மறு வேலை, என்று சூளுரைத்தார். அப்போது அது, இயக்குநரின் விபரீத திட்டம் என்றுதான் அவர் நினைத்தார். இராஜாஜி திட்டம் என்பது, பின்னரே தெரிய வந்தது.

அத்திட்டம் வெளியானதும் அதைக் கண்டித்து, தந்தை பெரியார் அறிக்கை விட்டார். மாகாண கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கண்டன அறிக்கை விட்டார். அறிஞர் அண்ணாவின் அறிக்கையும் அப்படியே அமைந்தது. தென்னிந்திய ஆசிரியர் கழகத்தின் தலைவர், இக்கல்வியைக் கண்டித்து அறிக்கைவிட்டார். இராஜாஜியிடம் பற்றுடைய டாக்டர் சுப்பராயன் கண்டித்தார். முன்னாள் முதல் அமைச்சர் ஓமந்தூர் இராமசாமியார் எதிர்ப்புத் தெரிவித்தார். அதிகார வர்க்கமும் பிற்காலத்தில் சுதந்திரா அணிக்குத் தாவப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த 'தேசியவாதி'களும் மட்டுமே அப்பன் தொழிலுக்குப் பிள்ளை போகும் கல்வி முறையை வரவேற்றார்கள்.

குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக, கையெழுத்து வாங்கும் முயற்சியில் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களே முனைந்தார்கள். பெரும்பாலோர், எதிர்த்துக் கையெழுத்திட்டார்கள்.

இதற்குள், குலக்கல்வித் திட்டம் முதல் அமைச்சர் இராசகோபாலாச்சாரியார் பெற்றெடுத்த கோரப் பிள்ளை என்பது காமராசருக்குத் தெரிய வந்தது. அவருடைய நிலை தர்ம சங்கடமாகி விட்டது. பொதுமக்களுக்குக் கேடான 'அரைவேளைப் படிப்பு' என்கிற முறையை ஒழித்தாக வேண்டும்; அதே நேரத்தில் இராசகோபாலாச்சாரியாருக்கு எந்தவித பெருமைக்குறைவும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய சங்கடமான நிலையில் சட்ட மன்றக் காங்கிரசு கட்சிக் கூட்டத்தில்பேசிய முதலமைச்சர் இராஜாஜி, 'புதிய கல்வித் திட்டத்தைக் கைவிட்டால், எதிர்கட்சிகளின் குறிப்பாக திராவிடர் கழகத்தின் கை ஓங்கிவிடும். சட்டமன்றத்தைக் கலைக்கும் நிலை ஏற்படலாம்' என்று பொடிவைத்துப் பேசினார். அந்த நயமான மிரட்டல், ஓரளவு பயன்பட்டது. காங்கிரசு உறுப்பினர்கள்

தங்கள் கருத்துகளை மறந்துவிட்டு அரசிற்கு ஆதரவு கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டார்கள். இராஜாஜியே, அச்சோதனையின் விளைவைக் கவனித்த பிறகு புதிய திட்டத்தைக் கைவிட்டு விடுவார் என்று தங்களைத் தாங்களே தேற்றிக் கொண்டார்கள்.

சட்டமன்றக் கூட்டம் வந்தது. மன்றம் குலக் கல்வித் திட்டத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற அரசின் தீர்மானம் வந்தது. அத்திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டுமென்ற திருத்தம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

முதலமைச்சர், அடிப்படையான திட்டம் என்று கருதிய ஒன்றை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தள்ளிவிட்ட பிறகு அத்திட்டத்தை உடனே எடுத்து விடுதல் அல்லது பதவியிலிருந்து விலகிக் கொள்ளல் என்பதே சரியான செயல்பாடு ஆகும்.

தேர்தலுக்கு நிற்காது ஆளுநர் நியமன வழியாகச் சட்டமன்ற மேலவைக்கு வந்து முதல் அமைச்சரானவர் பாராளுமன்ற மரபினைப் பின்பற்றவில்லை. சாதாரண அரசியல்வாதியின் நிலைக்குத் தாழ்ந்து போனார். அடிப்படையான திட்டம் பற்றி அரசு கொண்டுவந்த தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றியது வெறும் பரிந்துரையே ஆகும் என்று வாதாடினார்.

மேற்படி தீர்மானம் நிறைவேறியதற்கு அடுத்த நாளே இணைந்த சென்னை மாகாண சட்டமன்றத்தின் கடைசிக் கூட்டம். அதற்குப் பிறகு ஆந்திர மாகாணம் பிரிந்துவிடும்.

கடைசி நாளன்று ஏழைகளுக்கு நிலம் ஒதுக்குவது பற்றிய தீர்மானம் ஒன்றை எதிர்க்கட்சி உறுப்பினர் சட்டமன்றத்தின்முன் கொண்டு வந்தார். அதை வற்புறுத்த வேண்டாமென்று அரசு சார்பில் கோரப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் அன்று மன்றத்திற்கு வரவில்லை; பலர் ஊர் திரும்பி விட்டார்கள். அன்று அரசிற்கு ஆதரவாளர்களே அதிகமாக வந்திருப்பதும் புலப்பட்டது. இந்நிலையை எடுத்துக் காட்டியதையும் பொருட்படுத்தாது தீர்மானத்தின்மேல் வாக்கெடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்தியது. அப்படியே எடுக்கப்பட்டது. விளைவு? எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. வெங்கையாவின் தீர்மானம்

தோற்கடிக்கப்பட்டது. அதாவது அரசின் எதிர்ப்பு வெற்றி பெற்றது; பதினேழு வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றது.

இராசகோபாலாச் சாரியாரின் சாணக்கியம் வேலை செய்தது. முந்திய நாள் ஒரு வாக்கு குறைவாகப் பெற்றுத் தோற்ற அரசுக்கு அடுத்தநாள் தீர்மானத்தில் பதினேழு வாக்குகள் கிடைத்திருப்பது அதன்மேல் முழுநம்பிக்கை இருப்பதைக் காட்டுவதாகும் என்று வாதிடப்பட்டது. அதைக்காட்டி காங்கிரசு ஆட்சி தொடர்ந்தது.

கடைசிநாள் கட்சிக்காரர்கள் பலரும் வெளியூர் போய் விட்டதைத் தெரிந்து கொண்ட பிறகும் 'முடிவைப்பற்றிக் கவலையில்லை' என்று அடம்பிடித்து வாக்கெடுப்பை வற்புறுத்தியது தவறான தோற்றத்தைக் கொடுத்தது.

காங்கிரசு ஆட்சி கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகளுக்குப் பலியானவர்கள் எடுத்த நிலை இராஜாஜியின் ஆட்சிக்கு உயிர் கொடுத்துவிட்டது என்று பொதுமக்கள் கருதி அதிர்ச்சி யடைந்தார்கள். அதற்குக் காரணம் கண்டுபிடிக்க முயன்றார்கள். அவரவர் கண்ணோட்டப்படி காரணம் தென்பட்டது. ஊர் வாயை மூட உலைமூடி உண்டா?

'பார்ப்பன இராஜாஜிக்கு உதவும் பொருட்டே, கம்யூனிஸ்ட் கட்சியின் பார்ப்பனத் தலைமை அப்படிச் செய்துவிட்டது' என்றனர் ஒரு சாரார்.

இராஜாஜி பதவி விலகினால் சும்மா விலக மாட்டார்; சட்ட மன்றத்தைக் கலைத்துவிட்டே விலகுவார். அதனால் தங்கள் பதவி போய்விடும் என்று அஞ்சியதால், அவருக்கு உதவி செய்துவிட்டார் கள்' என்று பேசியவர்கள் பலர்.

திடலில் தலைதெறிக்க ஓடிவிளையாடுகிற பிள்ளை, ஆட்ட மயக்கத்தில் மூலையிலுள்ள பாழுங்கிணற்றில் வீழ்ந்துவிட்ட நிலையாக இருக்கக் கூடாதா? சட்டமன்ற சதுரங்கத்திற்குப் புதியவர்களாக இருந்ததால் புது முறுக்கில், தங்கள் பகைவருக்கே உதவி விட்டார்களோ?

# 32. காமராசர் முதலமைச்சரானார்

சில திங்களுக்குப் பின் சென்னை மாநில சட்டமன்றம் கூடிற்று. அப்போது உறுப்பினர் ஒருவர் கேள்வியொன்று கேட்டிருந்தார். அது குலக்கல்வித் திட்டம் பற்றியது.

புதிய கல்வித் திட்டத்தால் பள்ளிக்கு வருவோர் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதா? மாவட்ட வாரியாகப் புள்ளி விவரங்களைக் கேட்டிருந்தார்.

புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன; சட்டமன்றத்தில் வெளியிடப்பட்டன. அவை புலப்படுத்தியது என்ன?

'இரண்டொரு மாவட்டங்கள் நீங்கலாக பெரும்பாலான மாவட்டங்களில், எதிர்பார்த்ததற்கு மாறாக பள்ளிக்கு வருவோர் வருகை பெரிதும் குறைந்துவிட்டது'-இப்படி முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் பதில் அளித்தார்.

நோயாளிக்குக் கொடுத்த மருந்து நோயை அதிகமாக்கி விட்டதை உணர்ந்த மருத்துவர், அம்மருந்தைக் கைவிட வேண்டியதுதானே?

கூடுதலாகப் பிள்ளைகளைச் சேர்க்க உதவும் என்ற சாக்கில், அரைவேளைப் படிப்பைக் கொண்டு வந்தவர், அதற்கு நேர்மாறான விளைவைக் கண்ட பிறகு அதைக் கைவிட்டுவிட வேண்டியது தானே! அதைத்தான் அவருடைய கட்சியார் எதிர்பார்த்தார்கள்.

நடந்ததோ வேறு வகையாக இருந்தது. அத்திட்டத்தை நியாயப்படுத்தும் சிறு குழுவொன்றை நியமித்தார்; ஆதரவாக அறிக்கை பெற்றார். அரசின் திட்டங்களை மெய்யாக விமர்சிக்கும் உரிமை வெள்ளையனோடு வெளியேறி விட்டதே! குலக்கல்வித் திட்டம் தொடரும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

தன் ஆட்சிக்குத் தொல்லை கொடுக்கவே பெரியாரும் திராவிடர் கழகமும் அப்பாட முறையை எதிர்ப்பதாக, ஊர் ஊராகப் பொய்யைப் பரப்ப ஆட்களை முடுக்கிவிட்டார்.

திராவிடர் கழகத்தின் எதிர்ப்பை 'தேசபக்தர்கள்' சமாளித்துக் கொள்வார்கள் என்று சாடை காட்டி உசுப்பினார். அப்புறம் கேட்க வேண்டுமா?

திருச்சி போன்ற சில நகரங்களில் இராஜாஜியின் ஆதரவாளர் கள், வன்முறையில் இறங்கினார்கள்; திராவிடர் கழகததவர் களைத் தாக்கினார்கள். அரசு வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தது. போதிய விழிப்போடு தடுக்கவில்லை; வன்முறையாளர் களின் துணிச்சல், விவேக வரம்பைத் தாண்டி விட்டது.

திருச்சியில், பெரியார் சென்றுகொண்டிருந்த வேனை மடக்கி, அட்டகாசம் செய்தார்கள்; வண்டிக்குச் சேதம் விளைத்தார்கள். பெரியாரையும் தாக்க முயன்றார்கள். அக்கம் பக்கததவர்கள் வந்து, நிலைமை மேலும் மோசமாகதபடி, காப்பாற்றினார்கள். அச்செய்தி அறிந்து, ஆயிரக்கணக்கானவர்கள், பெரியார் மாளிகைககு வந்து குவிந்துவிட்டார்கள். பெரியார், பொறுமையின் திருவுருவமாக இருந்து அவர்களை அமைதிப் படுததாதிருந்தால்' என்ன ஆகியிருக்குமோ?

அடுத்து, சேலம் மாவட்டம் ஆத்தூரில் திராவிடர் கழக மாநாடு நடந்தது. தந்தை பெரியார் ஆலோசனைப்படி, திராவிடர் கழகத்தவர்கள், தற்காப்பின் பொருட்டு, சட்ட வரம்பிற்குட் பட்ட சிறு கத்தியை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அதைப் பயன்படுத்த, பெரியார், விடவில்லை.

'சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டு அடி', என்று முழங்க வைத்த பெரியார், என்றும வன்முறைக்கு இடங்கொடுத்ததே கிடையாது. அமமுறையும் இடங்கொடுக்கவில்லை. ஊர் ஊராகச் சென்று, குலக்கல்வித் திட்டததிற்கு எதிரான கருத்தை வளர்ப்பதில் மட்டுமே முழுமூச்சுடன் ஈடுபட்டார்.

மக்கள் எதிர்ப்பு பெருகப் பெருக, குலக்கல்வித் திட்டத்தைக் கைவிட்டால்தான் தமிழ்நாட்டில் காங்கிரசு கட்சி தன் செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்பது, காங்கிர சாருக்குப் புலப்பட்டது. ஆச்சாரியாரோ அடம்பிடித்தார்.

'இராமானுசரும் மாதவரும் சீடர்களைக் கேட்டா, இயங்கினார்கள்?' என்று கேட்கத் தலைப்பட்டார்.

குலக் கல்வியைத் தொடர்ந்து நடத்துவதற்கு இடமளித்தால் மட்டுமே, தான் முதலமைச்சராக இருக்க இசைவதாகவும் இல்லாவிட்டால், வேறு முதல்வரைத் தேடிக் கொள்ளும்படியும் கூறிவிட்டார்.

தன் சார்பில், திரு. சி. சுப்ரமணியத்தைச் சட்டமன்றக் கட்சித் தலைமைக்கு நிறுத்த முடிவு செய்திருப்பதாக இராஜாஜி அறிவித்தார். அப்படியென்றால் பொருள் என்ன?

தன்னால் நடைமுறைப் படுத்த முடியாத குலக்கல்வித் திட்டத்தைத் தனது தளபதி சி. சுப்ரமணியத்தைக் கொண்டு, செயல்படுத்த முயல்வது தெளிவாயிற்று. அத்திட்டத்தைக் கைவிட இசைகிற வேறு ஒருவரை தலைமைப் பதவிக்குத் தேடும் பொறுப்பு காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டது. இவர் பெயரும் அவர் பெயரும் அடிபட்டது. இவருக்கு எவ்வளவு பேர்கள் வாக்களிப்பார்கள்? அவருக்கு எவ்வளவு பேர்கள் வாக்களிப்பார்கள்? இப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தார்கள். டாக்டர் சுப்பராயன் போட்டியிட ஒப்புக் கொண்டால், வெற்றி வாய்ப்பு இருக்கலாமென்று தோன்றிற்று. டாக்டர் சுப்பராயனை வேண்டினார்கள். அவர் மறுத்துவிட்டார். ஏன்? இராஜாஜியை எதிர்த்து வெற்றி பெற்றாலும் அவரும் அவரைச் சார்ந்தவர்களும் ஆளவிட மாட்டார்கள் என்று அஞ்சினார்.

அந்நிலையில், காமராசர் போட்டியிட்டால்தான், இராஜாஜி குழுவை வென்று, குலக்கல்வித் திட்டத்தைத் தொலைக்க முடியும்; பொதுமக்களுடைய கல்விக்கு உதவமுடியும் என்பது புலனாயிற்று. காங்கிரசு அமைப்புப் பணிகளிலே மகிழ்ச்சி கொண்டிருந்த காமராசர், பதவிக் கால்கட்டுகளை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அக்கால கட்டத்தில், காமராசர் அய்ந்தாறு முறை குத்தூசி குருசாமியார் வீட்டிற்கு வந்து அவரோடு இரகசியமாகப் பேசி, யூகம் வகுத்தார்.

அவர்கள் இருவருக்கிடையே ஏற்பட்ட நல்லெண்ணம், ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டமை, பெரியார் ஈ.வெ. ராமசாமி காமராசரைக் கண்டு பேசத் துணையாயின.

காமராசர், காங்கிரசு சட்டமன்றக் கட்சியின் தலைவராக, பெரும்பான்மையான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப் பட்டார் வெற்றி வேளையிலும் காழ்ப்பு இல்லாது நடந்துகொண்ட

காமராசர், போட்டியிட்ட சி.சுப்பிரமணியத்தையும் அவரை முன் மொழிந்த மீ. பக்தவத்சலத்தையும் தனது அமைச்சர் அவையில் சேரும்படி அழைத்தார். அவர்களும் உடன்பட்டு உதவினார்கள்.

காமராசர் முதலமைச்சரானது, ஓரளவு எளிதாகவே இருந்தது. 'அவரால் தொடர்ந்து நீடிப்பது இயலாது; ஓராண்டின் முடிவிலாவது புதிய ஒருவரிடம் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்'' என்று காமராசரை வட்டமிட்டுக் கொண்டிருந்தவர்களே எண்ணினார்கள். இராஜாஜியைச் சேர்ந்தவர்களோ, காமராசரை வீட்டிற்கு அனுப்பி, பழி தீர்த்துக் கொள்ள ஓயாது முயன்றார்கள்.

காமராசரின் விவேகம், எல்லோருடனும் அன்பாகப் பழகும் எளிமை, நேர்மை தன்னலமின்மை, சாதி நலம் பாராது மக்கள் நலனுக்கானவற்றைத் துணிந்து செயல்படுத்தியவை, ஆகிய சிறப்புகள், காமராசர் பல்லாண்டுகள் ஆட்சி புரிய உதவிற்று. இவை அத்தனையும் உதவியதைக் காட்டிலும் அதிகமாகப் பெரியாரின் ஆதரவு உதவியது என்பது மிகையல்ல.

முதல் அமைச்சர் காமராசரின் சாதனைகளைக் காங்கிரசார் எடுத்துச் சொன்னதைவிட செம்மையாகப் பெரியாரும் அவரைச் சார்ந்தவர்களும் மக்களிடம் பரப்பி வந்தார்கள்.

முன்னர் முடியாதது எல்லாம், காமராசர் காலத்தில் முடிந்தது.

நாள்தோறும் எண்ணற்ற ஏழைகள், முதல் அமைச்சரைக் காண முடிந்தது; குறைகளைச் சொல்ல முடிந்தது. 'பார்க்கலாம்' என்பதற்குமேல் பிடி கொடுக்காமல் அனுப்பினாலும் போக்க வேண்டிய குறைகள் விரைவில் போக்கப்பட்டன. கட்சிக்காரர் களும் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது. கட்சிக்காரர் என்பதனால் எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்னும் நிலை ஏற்படவில்லை. கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரே தராசு. இப்படி நிர்வாகம் சீர்பட்டது.

நல்ல நிர்வாகமே போதுமென்றால் வெள்ளைக்காரனை விரட்டியிருக்க வேண்டாமே! தன்னாட்சி, எல்லோர்க்கும் வாழ்வளிக்க அல்லவா பயன்பட வேண்டும்?

எல்லோரும் புது வாழ்வும் நல்வாழ்வும் பெற ஒரே ஒரு வழி தான் உண்டு. அதுவே கல்வி வளர்ச்சி. அதில் காமராசர் புரிந்த சாதனை இணையற்றது.

காமராசர், முதல் அமைச்சர் ஆனதும் குலக் கல்வித் திட்டத்தை ஒழித்துவிட்டார். பழையபடி முழுநேரப் படிப்பிற்கு ஆணையிட்டார்; இல்லை ஆணையிட வைத்தார். கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியத்தைக் கொண்டு ஆணையிடச் செய்தார். அடுத்து? வளர்ச்சி.

வெள்ளைக்காரர்கள் வெளியேறியபோது, தமிழகப் பகுதியில் 14, 000 தொடக்கப் பள்ளிகளை விட்டுச் சென்றார்கள். ஆயிரம் மக்கள் கொண்ட ஊர்களில்கூட தொடக்கப் பள்ளி, தொடங் காமல் போய்ச் சேர்ந்தார்கள்.

அவர்களிடமிருந்து ஆட்சியைப் பெற்றவர்கள் சாதித்தது என்ன? ஏழு ஆண்டுகளில் எண்ணிக்கையைப் பதினாறு ஆயிரம் ஆக்கினார்கள். அதாவது, ஆண்டுக்கு சராசரி முன்னூறு புதிய தொடக்கப் பள்ளிகள் அவ்வளவே. காமராசர் திட்டம் என்ன? அய்ந்து வயதுக் குழந்தை போய்வர வசதியாக,எத்தனை பள்ளிகள் தேவைப் பட்டாலும், திறக்கச் செய்தார்கள். அவருடைய பொற்காலத்தில் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை முப்பதாயிரத்தைத் தாண்டிற்று. அதற்குமேல் பள்ளிக்குத் தேவை ஏற்படவில்லை.

# 33. கல்விப் புரட்சியில் காமராசரும் பெரியாரும்

'எல்லோர்க்கும் கல்வி' என்ற கொள்கையின் அடிப்படையில் கல்வி வளர்ப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முந்நூறு மக்கள் கொண்ட சிற்றூர் தோறும் தொடக்கப் பள்ளி திறந்தது அம்முயற்சிகளில் ஒன்று.

தொடக்கப் பள்ளி தோறும் ஏழை மாணாக்கர்களுக்கு—தெரு சுற்றும் ஏழைகளுக்கல்ல—பகல் உணவு போட்டது, மற்றோர் முயற்சி. அதைப்பற்றிச் சிறிது விவரமாகவே தெரிந்து கொள்ளுங்கள்.

கர்ம வீரர் காமராசர் முதல் அமைச்சர் ஆன ஆறு தினங்களில் சென்னை மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர் பதவி, திடீரென காலி யாக நேர்ந்தது. 'காலியாகப் போகிறது அதை தகுதியடிப்படையில் நிரப்ப வேண்டும்' என்று அப்போதைய தலைமைச் செயலர் திரு. ராமுன்னிமேனன் அவரிடம் தெரிவித்த உடனே, முடிவு செய்து விட்டார். என்ன முடிவு?

அதிகாரிகளில் எவருடைய இரகசியப் பேரெடுகள் சிறப்பாக இருக்கிறதோ அவருடைய பெயரைப் பரிந்துரையுங்கள் என்பதே அம்முடிவு. பேரேடுகளை ஆய்ந்தபோது என் பேரேடுகள் மற்றவரின் பேரேடுகளைவிட நன்றாக இருந்ததாம். எனவே, எதிர்பாராத வகையில், திடீரென நான் சென்னை மாகாணப் பொதுக்கல்வி இயக்குநர் ஆனேன்.

சில திங்களில், நான், அன்று நம்மோடு இருந்த மலையாளம் மாவட்டத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அங்கு, பெரிந்தல்—மண்ணா என்று ஒருர்; அங்கு ஓர் உயர்நிலைப் பள்ளி. அப்பள்ளி மாணாக்கரிடம் அழைக்கப்பட்டேன். அங்கே சென்றேன். கூட்டம் தொடங்கிய அய்ந்து மணித்துளிகளில், இரு மாணவர்கள், ஒருவர் பின் ஒருவராக, மயங்கி வீழ்ந்தார்கள். எதனால்? பட்டினி தாளாமல். பிற்பகலில் இப்படி அறுபது எழுபது பேர்கள் மயங்கித்

தவிப்பார்கள் என்று தலைமை ஆசிரியர் கூறினார். அது என்னை அதிர்ச்சி அடையச் செய்தது. அன்றிரவு முழுவதும் உறங்காமல் வேதனைப் பட்டேன்.

அடுத்த நாள் முற்பகல் பாலக்காட்டில் பெரிய ஆசிரியர் மன்ற ஆண்டு விழாவில் உரையாற்றினேன். 'ஈரமில்லாத மண்ணில் பயிர் வளர்ப்பது எப்படி? பட்டினியால் வாடும் மாணாக்கரிடம் கல்வி வளர்ப்பது எப்படி?' அதைக் கருப் பொருளாகக் கொண்டு விரிவுரை ஆற்றினேன்; முன்னால் கண்ட காட்சியை எடுத்துரைத் தேன், என் வேதனையைக் கொட்டினேன்.

நான், பாலக்காடு ஆசிரியர் மன்றத்தில் பேசிய .உரையை 'இந்து' நாளிதழ், நடுப்பக்கத்தில் தலையங்கத்திற்கு அடுத்த பத்தி யில் முக்கால் பத்தி யளவு வெளியிட்டது. எனவே, அது முதல் அமைச்சர் காமராசர் கவனத்தை ஈர்த்தது.

அடுத்த நாள், சென்னை, மெமோரியல் மண்டபத்தில் சென்னை மாநில தனியார் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் மாநாடு நடந்தது. முதல் அமைச்சருக்கு அடுத்து நான் அமர்ந்தேன். என்னோடு உரையாடினார்.

மாணாக்கரின் பசி பற்றிப் பேசினோம். சென்னை மாநகராட்சிப்பள்ளிகளில் பகல் உணவுபோடும் அய்ந்து நாட்களில் படிப்போர் வருகை நன்றாயிருக்கிறது.சோறு போடாத,சனியன்று வருகை குறைந்து விடுகிறது. இச்செய்தியை என்னிடம் கேட் டறிந்தார். நாட்டுப் புறங்களிலும் பள்ளியில் படிப்போருக்கு உணவளித்தால் வருகை பெருகும் என்னும் முடிவுக்கு வந்தார்.

சென்னை மாநகராட்சியில் எவ்வளவு பேர்களுக்கு அப்போது உணவளித்தார்கள்? படிப்போரில் ஐந்தில் ஒருவருக்கு. அது போத வில்லை. நால்வரில் ஒருவருக்காவது போடும்படி கோரிக்கை வந்த படி இருந்தது. அன்று தமிழ்நாட்டில் வறுமைப் பட்டிருந்தோர் நால்வரில் ஒருவரே, இருப்பினும் தாராளமாக, முப்பத்து மூன்று விழுக்காட்டினருக்குப் போடுவோம். அதற்கு எவ்வளவு செலவாகும் என்று மனக் கணக்குப் போட்டோம்.

பள்ளியில் சேரும் பிள்ளைகள் எவ்வளவு என்று கணக்கிடுவது? குடிக் கணக்கின்படி, படிக்கும் வயதுடையோரில் நூற்றுக்குத் தொன்னூறு பேர்களை சேர்த்து விடுவோமென்று அனுமானித் தோம். அவர்களில் மூன்றிலொரு பங்கினருக்குச் சாப்பாடு என்றார்.

ஆளுக்கு வேளைக்கு எவ்வளவு செலவு செய்வது? அன்றைய விலைவாசியில், மாநகராட்சி, வேளைக்கு ஒன்றரை அணா செலவு செய்தது. அதே அடிப்படையில் தனித்தனி கணக்கிட்டோம். இருவர் முடிவும் ஒன்றாக இருந்தது.

அடிப்படைகளை மறு பரிசீலனை செய்து விட்டு, திட்டத்தை, விவரமாக உருவாக்குவோம். தொடக்கப் பள்ளிகளில் பகல் உணவு திட்டத்தை நடத்துவது என்று இப்போதைக்கு முடிவு செய்வோம் என்றார்.

முதல் அமைச்சர் காமராசர் தனது உரையில் மேற்படி முடிவை அறிவித்து விட்டார். அதோடு நிற்கவில்லை.

அய்ந்து வயது முதல் பத்து வயதுக்குட்பட்ட மாணாக்கர் வயிறார உண்ண எவ்வளவு அரிசி தேவை என்பதைச் சிலரை விட்டுசோதித்தார். அப்போது அரிசி படிக்கணக்கில்தான் விற்றது. ஒருபடி அரிசியை சமைத்தால் பத்துப் பிள்ளைகள் வயிறார உண்ண முடிந்தது.

மாநகராட்சி அந்த அளவில் அரிசி கொடுத்தது குறைவல்ல என்பதை உறுதிப் படுத்திக் கொண்டார்.

வெறும் சோறும் நீருமா கொடுக்கத் திட்டமிட்டார். இல்லை. சாம்பார் சாதம், தயிர் சாதம் போட முடிவு செய்தார். அவற்றிற்கு மேற்செலவு எவ்வளவு ஆகும் என்பதை உணவு விடுதி நடத்துவோரை அழைத்துப்பேசி தெரிந்து கொண்டார். அன்றைய விலைவாசி நிலவரத்திற்குச் சாப்பாட்டிற்கு ஒன்றரை அணா தேவை என்று முடிவு செய்யப்பட்டது.

காமராசர் ஆணைப்படி, பள்ளிப் பகல் உணவுத் திட்டத்தைத் தீட்டினேன்; இரண்டாவது அய்ந்தாண்டுத் திட்ட நகலில் சேர்த்தேன்.

திட்டத்தை ஆய்ந்த மூன்று மூத்த அய். சி. எஸ். அலுவலர்களும் எதிர்த்தார்கள். எடுத்துவிட முடிவு செய்தார்கள். நான் அடம்பிடித்தேன். நான் ஒப்பவில்லை என்பதை குறிப்பில் காட்டச் சொன்னேன். உடனே மாறிவிட்டார்கள். அமைச்சர் அவை முடிவுக்கு விட்டுவிடுவதாக ஒருமனதாக முடிவு செய்தார்கள். அமைச்சர் அவையில் ஆலோசனைக்கு வந்தபோது வேறு இரு மூத்த அய். சி. எஸ். அலுவலர்கள், அதனால் பணம்

வீணாகுமே ஒழிய, பலன் இராது; அதைக் கைவிட்டு விடுங்கள் என்றார்கள். முதல் அமைச்சர் பொறுமையிழக்க வில்லை. பகல் உணவுத் திட்டம் அய்ந்தாண்டுத் திட்டத்தில் சேரட்டும் என்று ஆணையிட்டார். முடிந்ததா எதிர்ப்பு? இல்லை.

இந்தியத் திட்டக் குழுவின் ஆலோசனைக்குப் போனபோதும் நம் மூத்த அலுவலர்கள் அதை விட்டுவிடச் சொன்னார்கள்; காமராசர் இசையவில்லை. முதல் அமைச்சர் உறுதியாக இருந்ததால் அதை நீக்க முடிய வில்லை. அய்ந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றது. அந்த அடிப்படையில் அடுத்த ஆண்டிற்கான மாநில வரவு செலவுத் திட்டம் தீட்டப் பட்டது. சென்னைச் சட்ட மன்றம் பகல் உணவுக்கான நிதி ஒதுக்கீட்டை ஒப்புக்கொண்டது.

'சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்க வில்லை' என்பார்களே! அதைப் போல் சட்டமன்றம் ஒப்புக்கொண்ட பகல் உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆணையைக் கோட்டை அதிகாரிகள் வெளியிடவில்லை.

இதற்கிடையில் தூத்துக்குடி நகர ஆசிரியர் மன்ற ஆண்டு விழாவில் நான் பேசினேன்.

'நாட்டுப்புறக் குடியானவர்கள். ஒப்படையானதும் முதல் அளவையை 'சாமி'க்கும் இரண்டாம் அளவையை ஊர்க்காவலர் களுக்கும் அளந்துவைப்பது மரபு. இனி, மூன்றாவது அளவையை பள்ளிக்கூட அன்னதானத்திற்கு என்று ஒதுக்கிவைக்கும் பழக் கத்தை மேற்கொள்ளுங்கள்' என்று ஆலோசனை கூறினேன்.

இச்செய்தியைப் படித்தவர்கள் பலர். நடைமுறைப் படுத்த முதலில் முன்வந்தவர்கள் திருநெல்வேலி மாவட்ட நாகலா புரத்துப் பெரியோர்கள்.

அவர்கள் களத்துமேட்டு நன்கொடைகளைக் கொண்டு பகல் உணவுத் திட்டத்தை நடத்த முடிவு எடுத்தார்கள். அச்செய்தி பெரிய எழுத்தில் வெளியிடப்பட்டது. அதைப் பார்த்த அக்கம் பக்கத்து ஊர்க்காரர்கள் அதே வகையில் பகல் உணவைத் தொடங்க முடிவு செய்தார்கள்.

முழுக்க முழுக்க மக்கள் விருப்பப்படி, அவர்கள் நன்கொடை களைக் கொண்டே பள்ளிக்கூட பகல் உணவுத் திட்டம் 1956 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் தொடங்கிற்று. அது பல மாவட்டங் களுக்கும் பரவிற்று.

நூற்றுக்கணக்கான பகல் உணவுத் திட்டங்களை முதல் அமைச்சர் காமராசரே தொடங்கிவைத்து ஊக்கினார். இப்படியாக 4,200 பள்ளிகளுக்கு இது பரவிற்று. அப்பள்ளிகள் அனைத்திலுமாக ஒருஇலட்சத்து இருபது ஆயிரம் பேர்களுக்குச் சோறு போட்டார்கள். மக்கள் இயக்கமாக அவ்வளவு பரவியதைக்கண்டும் அரசாங்க இயந்திரம் இயங்கவில்லை.

இதற்கிடையில், பல பகல் உணவுத் திட்ட விழாக்களில் காமராசர் என்னைப்பாராட்டினார். பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கிய ஊர்களில் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அக்குழுக்கள் அரசிடம் எவ்வித நிதி உதவியும் பெறவில்லை. தாங்களாகவே நடத்திவந்த பகல் உணவுத் திட்டத்திற்கு வேண்டுகோள் அச்சிட்டு வழங்கியவர்கள் பலர். அவர்களில் சிலர் அத்திட்டத்தை 'நெ.து.சு. திட்டம்' என்று சொல்லி நிதி உதவி கோரினார்கள். காங்கிரசையோ காமராசரையோ பிடிக்காத செய்தி இதழ்கள் என்னை முன்னிலைப்படுத்தி இதுபற்றிய செய்திகளை வெளியிட்டன.

முதல் அமைச்சர் காமராசர் அழுக்காறு கொள்ளவில்லை. என்மேல் எரிச்சல் கொள்ளவில்லை. அத்தகைய வெளியீடுகளைப் பொறுத்துக் கொண்டதோடு என்னைத் தொடர்ந்து பாராட்டினார்.

வடாற்காடு மாவட்டம் வேலூர் பகல் உணவுக் குழு, 'நெ.து சு.வின் திட்டத்திற்கு உதவுங்கள்' என்று வெளியிட்ட துண்டு வெளியீட்டை அமைச்சர் ஒருவர் காமராசரிடம் கொடுத்து குறைபட்டார். அப்போது நிதி அமைச்சர் உடன் இருந்தார்.

'ஓராண்டுக்கு மேலாக பகல் உணவு நடக்கிறது, அதற்கு அரசின் ஒப்புதல் இன்னும் அனுப்பவில்லை அப்படியிருக்க இது வரை இயக்குநரை நம்பிதானே நடத்திவருகிறார்கள். அவரை நம்பி நடத்துகிறவர்கள் அவர் பெயரைச் சொல்லாமல் எவர் பெயரைச் சொல்லுவார்கள்? அரசு ஆணையிட்டிருந்தால், 'நெ.து சு. பெயரில் ஏன் விளம்பரம் செய்கிறீர்கள்' என்று கேட்கலாம்' என்றார்.

விடிவு வந்தது. உடனே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

1956 ஜூலை முதல் 1957 அக்டோபர் முடிய ஊரார் செலவில் நடத்திக் காட்டிய பிறகே சென்னை மாநில அரசு பகல் உணவுத் திட்டத்தைத் தனதாக்கி, பெருமை பெற்று, வளர்த்து, கற்போருக்கு அதிகமாக உதவிற்று.

1957 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் தொட்டு பள்ளிக்கூட பகல் உணவுத் திட்டம் அரசின் திட்டமாயிற்று. அதாவது நடைமுறைச் செலவில் நூற்றுக்கு அறுபது பங்கை அரசு மான்யமாக வழங்கிற்று.

ஆனால், சுருக்கமான காலவரை வகுத்துக்கொண்டு அந்தக் காலத்திற்குள் எல்லாப் பள்ளிகளிலும் பகல் உணவு போட்டாக வேண்டுமென்று கெடுபிடி செய்யவில்லை.

ஊர் நன்கொடையாளர்கூடி, விதிமுறைகளை முடிவு செய்து கொண்டு, அவற்றையொட்டி தலைவர், பொருளாளர் போன்ற நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆய்வாளருக்கு எழுதினால் அவர் உணவு மையத்தை ஏற்றுக்கொள்வார். கிடைத்த நன்கொடைக்கு ஏற்ப, எத்தனை பேருக்கு உணவு அளிப்பது என்பதை முடிவு செய்வார்.

முதலில் சிலருக்குப் போட்டு, பின்னர் வளர்ந்து, பலருக்கும் போட்ட பள்ளிகளே ஏராளம். மாவட்டம் முழுவதற்குமாக மாணாக்கர்களை மொத்தமாகக் கணக்கிட்டு அவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு உணவு போடப்பட்டது. பல ஊர்களில் அந்த அளவிற்குக்கூட ஏழைகள் இல்லை. அதனால், அக்கால வரம்பு பற்றி எந்த ஏழை மாணவனோ, மாணவியோ உணவு பெறாமல் போகவில்லை.

உள்ளூரிலேயே தொடக்கப் பள்ளி. அங்கு எல்லார்க்கும் இலவசக்கல்வி; அதோடு ஏழைகளுக்குப் பகல் உணவு ஆகியவை கல்விப் பயிரை வளர்த்தது. இருப்பினும் பெண்கள், ஆண்கள் அளவு சேரவில்லை. ஆடையில்லாக் குறையே அதற்குக் காரணம் என்று தெரிந்தது.

முதல் அமைச்சர் காமராசரின் அனுமதியையும் ஆதரவையும் ஊக்கத்தையும் பெற்று இலவசச் சீருடை இயக்கம் தொடங்கப் பட்டது. சிறுமிகளோடு சிறுவர்களுக்கும் இலவசச் சீருடை கொடுக்கப்பட்டது, ஊருக்கு ஊர் போட்டி போட்டுக்கொண்டு

சீருடை வழங்கினார்கள். இது முழுக்கமுழுக்க மக்கள் செலவில் நடந்தது. வசதி படைத்தவர்கள் அதே சீருடையைத் தங்கள் செலவில் தைத்துக் கொண்டார்கள்.

பல சாதியினரும் ஒன்றாக அமர்ந்து உண்டது, சாதி முறையை முறித்தது. சீருடை சாதி வேற்றுமைகளையும், ஏழை பணக்காரர் என்ற தோற்றத்தையும் மாற்றிற்று.

'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம், என்ற மனப்போக்கை வளர்க்கவே இரண்டு சுமைகளும் என்பதை ஆசிரியர்களும், பொதுமக்களும், அலுவலர்களும், அமைச்சர்களும் நாடறியக் கூறினார்கள்.

நூறாண்டு காலமாக நடந்துவந்த எண்ணிக்கைக்குச் சரியாக ஏழெட்டு ஆண்டுகளில் புதிய பள்ளிகள் திறக்கப்பட்டன. முந்திய பள்ளிகளில்கூட இடம், தளவாடங்கள், பாடக் கருவிகள் போன்றவை பற்றாக்குறையாக இருந்தன. அவற்றோடு புதிய ப்ள்ளிகளுக்கு அத்தனையும் புதிதாகத் தேடவேண்டும். ஏறத்தாழ பதினைந்தாயிரம் புதிய பள்ளிகளுக்குத் தேடவேண்டும். அரசு அப்பெரும் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்தது' அந்தந்த ஊர் மக்களே தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஊர்ப்பள்ளியின் தேவைகளை நிறைவு செய்தார்கள். 'பள்ளிச் சீரமைப்பு இயக்கம்' என்னும் பெயரில் நடந்த அந்த மாநிலம் தழுவிய மக்கள் உதவி கல்வியின்பால் கவனத்தைத் திருப்பியது.

தன்மான இயக்கத்தின் தொடக்க காலத்தில் கலப்புத் திருமணம் பற்றியே பேச்சாக இருந்ததுபோல், காமராசர் காலத்தில் கல்வி பற்றியே எங்கும் பேச்சு.

தொடக்க, உயர்நிலைப் பள்ளிக் கல்வி வளர்ந்தது போலவே பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்கல்வியும் வளர்க்கப் பட்டது. தாழ்த்தப்பட்டோருக்கும், பின் தங்கியோருக்கும் தொழிற்கல்வி தாராளமாகக் கிடைக்க வழி செய்யப்பட்டது.

தந்தை பெரியாரின் மகிழ்ச்சிக்கு எல்லை ஏது! காமராசரைக் கல்விக் கண் கொடுத்த வள்ளல் என்று போற்றத் தலைப்பட்டார். காமராசர் தொடர்ந்து ஆட்சியில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளும் பொறுப்பு பெரியாரின் தோள்களில் விழுந்தது.

பத்தாண்டுகாலம் பெரியாரின் தொண்டும் இயக்கமும் ஏழை களுக்கு ஆதரவான காமராசரின் ஆட்சியைக் காப்பதிலேயே செலவழிந்தது.

இதற்கிடையில் அனைத்திந்திய கல்விக் கொள்கை என்னும் சாக்கில் இந்தி மொழி எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் கட்டாய பாடமாகுமோ, எனும் அச்சத்திற்கு இடமேற்பட்டது. அதைத் தடுத்து நிறுத்த, பெரியாரைத் தவிர நாதி ஏது?

பெரியார் மூன்றாம் முறை இந்தி எதிர்ப்பில் முனைய நேரிட்டது. அப்போராட்டத்தின் ஒரு கூறாக, தேசியக்கொடியை எரிக்கப் போவதாக பெரியார் அறிவித்தார். இந்திய நாடு முழு வதும் அது பற்றியே பேச்சு.

பிரதமர் நேரு, அதிர்ச்சி அடைந்தார். முதல் அமைச்சர் காமராசரோடு படபடப்பாகப் பேசினார், காமராசரோ பொறு மையாகப் பதில் கூறினார்.

'நாட்டு விடுதலைக்காக—பெரியார் எவ்வளவு பாடுபட்டிருக் கிறார்? அவருடைய மதிப்பு என்ன? இவற்றை உங்கள் தந்தை மோதிலால் நேருவே, நேரில் அறிந்தவர், பெரியார் காங்கிரசில் இல்லாததால் நான் முதல் அமைச்சராக இருக்கிறேன். அவர்ஏன் இவ்வளவு தீவிர நடவடிக்கைக்குப் போகிறார் என்று தெரிந்து கொள்வது நல்லது' என்று காமராசர் கூறினார்.

இருவரும் ஆலோசித்து பின் காமராசர் 'இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை இந்தி ஆட்சி மொழியாகவோ, கட்டாயப் பாட மாகவோ திணிக்கப் படாது, என்று அறிக்கைவிட்டார். இந்திப் பாடத் தேர்வில் ஓரளவாவது மதிப்பெண் பெறவேண்டுமென்று கூட கட்டாயப்படுத்த வில்லை.

'தமிழர்களுக்குக் கல்வியும் பதவிகளுமே இரு கண்கள்' என்ற முடிவில் வாழ்நாள் முழுதும் பாடுபட்ட பெரியார், காமராசரை அடுத்தடுத்து ஆதரித்து, பதவியில் இருக்கச் செய்தது, எத்தகைய விளைவைக் கொடுத்தது?

முதல் அமைச்சர் அண்ணா, முதன்முறை அமெரிக்கா சென்று விட்டுத் திரும்பியதும் இக்கட்டுரையாளராகிய எனக்கு அவரைப் புதுதில்லியில் கண்டு உரையாட வாய்ப்பு கிட்டியது.

தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், உடன் இருக்க அண்ணா எனக்குப் பேட்டி கொடுத்தார். என்னைக் கண்டதும்,

'நீங்களும் காமராசரும் அரும்பாடு பட்டு வளர்த்த கல்வியின் வளம், நான் அமெரிக்காவில் இருக்கையில் தெளிவாகத்தெரிந்தது.

'முன்பெல்லாம், அமெரிக்காவிற்கு அலுவல் பார்க்கச் சென்றவர்கள், சில நகரங்களைச் சேர்ந்தவர்கள்; சில மேட்டுக் குடிகள்.

'இப்போது தமிழ்நாட்டின் சிற்றூர்களைச் சேர்ந்தவர்கள் பலர், அங்கே அலுவல் பார்க்கிறார்கள்; அநேகமாக எல்லாச் சாதி யாரும் இருக்கிறார்கள். எவரும் தாக்குப் பிடிக்க முடியாமல் திரும்பி ஓடிவரும் நிலையில் இல்லை.

'கல்விப் பெருக்கோடு அவர்கள் தன்னம்பிக்கைப் பெருக்கும் பெற்றுவிட்டதால், சிறந்து விளங்குகிறார்கள்.

'இன்னும் ஒரு பத்தாண்டு காலம், தமிழ் நாட்டு மாணவ மாணவியரை, ஊர் வம்புகளை மறந்து கல்வியின்பால் நாட்டமாக இருக்குபடிச் செய்துவிட்டால், தமிழ்நாட்டுச் சமுதாய நிலை எளிதாக மாறிவிடும், என்று கூறினார்.

'அண்ணா காட்டிய அவ்வழியையாவது பின் பற்றுங்கள்' என்று சொல்லவும் ஆள் இல்லையே! இப்படியா, தமிழகம் தாழ்ந்து போக வேண்டும்?

# 34. பெரியாரின் இறுதி இலட்சியம் சமதர்மமே

இந்திய மக்களின் ஏழ்மைக்கும் வறுமைக்கும் கல்லாமைக்கும் காரணம் அன்னிய ஆட்சி மட்டுமே என்று நம்பிய காலத்தில் ஈ. வெ ராமசாமி இந்திய தேசிய காங்கிரசிலே சேர்ந்து தமிழ் நாட்டில் அக்கட்சியை வளர்ப்பதில் அரும்பணியாற்றினார்; தியாகம் பல புரிந்தார்; காங்கிரசுக் கட்சியை வளர்க்க அவர் ஏற்றுக் கொண்ட இழிவும் பெரிது.

ஈ. வெ. ராமசாமியும் திரு. எஸ். சீனிவாச (அய்யங்காரும்) சேர்ந்து காங்கிரசுப் பிரசாரத்திற்காகத் திண்டுக்கல் சென்றார்கள். அங்கே ஒரு பார்ப்பன வக்கீல் வீட்டில் தங்க நேர்ந்தது ஈ. வெ. ராமசாமியைத் தனியாக உட்கார வைத்து, உணவு பரிமாறினார்கள்; பொறுத்துக் கொண்டார். பெரியார்.

மற்றோர் முறை ஈ. வெ. ரா. பெரியகுளம் சென்றார். அங்கேயும் ஒரு பார்ப்பன வீட்டில் தனியே உட்காரவைத்து, உணவு போட்டார்கள். பொறுத்துக் கொண்டார், தன்மான இயக்கத் தந்தை ஈ. வெ. ராமசாமி.

இஸ்லாமியர்களுக்கு வகுப்புரிமை கொடுக்கச் சித்தமாயிருந்த காங்கிரசு அதை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டுமென்றும் தமிழ்நாடு காங்கிரசு மாநாடுகளில் தீர்மானம் கொண்டு வந்தார், ஈ. வெ. ரா; ஆறுமுறை முயன்றும் பலன் இல்லை. ஆறாம் முறை அப்பேச்சையே எடுக்க விடவில்லை.

வெகுண்டு வெளியேறிய ஈ. வெ. ரா. தன்மான இயக்கங் கண்டார். சூறாவளிப் பயணங்களை மேற்கொண்டார். மூவாயிரம் ஆண்டுகளாக, ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, விம்மி யழவும் வலிவிழந்து கிடந்த மக்கள் விடிவெள்ளி கண்டதுபோல் மகிழ்ந்தார்கள். சாதிக் கலைப்புப் பணி சூடேறிற்று.

சிந்தனை வானில், மேலும் மேலும் உயர் சாதனைகளைக் கண்டு வந்த பெரியார், வகுப்புரிமை, நோயை மறக்க வைக்கும்

தூக்க மாத்திரை; நோய் போக்கும் மருந்தல்ல, என்பதை உணர்ந்தார். சோவியத் நாட்டிற்குச் செல்வதற்கு முன்பே, சமதர்மக் கொள்கையும் பொதுஉடைமைக் கோட்பாடுமே தன்மான இயக்கத்தின் குறிக்கோள் என்று மாநில மாநாட்டின் முதல் முடிவாக முரசு கொட்டச் செய்தார். பெரியார் சமதர்மத் திற்குப் பாடுபட்ட அளவு வேறு எதற்கும் பாடுபடவில்லை என்பது உண்மை.

சுயமரியாதைச் சமதர்மத் திட்டத்தை அறிவித்து, அதைப் பரப்புவதில் முனைப்பைக் காட்டி, வெற்றிபெறத் தொடங் கினார். அதன் வீச்சைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய ஆட்சி, தந்தை பெரியாரைத் தண்டித்துச் சிறைக்கு அனுப்பியது.

சில ஆண்டுகளுக்குப் பின் பெரியார் சமதர்மப் பணியைப் பின்னுக்குத் தள்ளி சாதியொழிப்புப் பணியில் ஈடுபட நேர்ந் தாலும், நீதிக் கட்சி சுயமரியாதை—சமதர்மத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையை உருவாக்கி விட்டார். 'ஏழைகளைப் பற்றியே சிந்திக்கிற ஒரே செல்வருமான பெரியார் காலத்திலேயே சமதர்மத்தைக் காண' த் துடித்தார்கள், சிந்தனையாளர்கள்.

வடஇந்திய சமதர்ம சக்திகளும் தென்னிந்திய சமதர்மவாதி களும் ஒன்றிணைந்து விட்டால், சாதிமுறையும் தனியுடைமை முறையும் இடிந்து வீழ்வது உறுதியென அஞ்சிய, இராசகோபாலாச் சாரியார் 1938-இல் கட்டாய இந்தியைத் திணித்தார். பிறர் முன் வந்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடாததால், பெரியாரும் அவரது இயக்கமும் ஈடுபட நேர்ந்தது. மீண்டும் 1948இல் இந்தித் திணிப்பு வந்தது. அப்போதும் பெரியார் இயக்கமே போராட வேண்டியதாயிற்று. இப்படி யிருமுறை சமதர்மப் பயணம் தடைப்பட்டது. 1949இல் ஏற்பட்ட கட்சிப் பிரிவினை பயணத்தைப் பாழாக்கிற்று.

பெரியார் திராவிட நாடு பிரிவினைக்குப் போராடியது ஏன்? பெரிய இந்தியாவில் சமதர்மத்தைக் கொண்டு வருவதைவிட விரைவாகவும் எளிதாகவும் திராவிட நாட்டில் கொண்டுவர முடியும் என்று நம்பியதால். இந்தியா முழுவதும் சமதர்ம முறையின் கீழ் வரக்கூடுமானால், திராவிட நாடு தேவை இல்லை என்றே பெரியார் அறிவித்தார்.

குலக்கல்வி முறை என்னும் திசை திருப்பும் முயற்சியில் இராசகோபாலாச்சாரியார் வென்றார். பெரியார் போராடி, அப்பீடையைத் தொலைத்தாலும் அம்முயற்சி, நம் உழைப்பையும் சிந்தனையையும் விழுங்கி விட்டது.

காமராசர் காலத்தில் மீண்டும் இந்தியைத் திணிக்க, தில்லியிலிருந்து தூண்டுதல் வந்தது. அதைத் தடுக்க மறுபடியும் அதிர்ச்சி மருத்துவம் செய்தார், பெரியார். தேசியக் கொடியை எரிக்கப் போவதாக அறிவித்தார். அம்மருத்துவம் பலித்தது. கட்டாய இந்தி நுழைய வில்லை

இராசகோபாலாச்சாரியார், குலக் கல்வியைக் கொண்டு வந்து பல கட்சியினர்களின் பெருமித எதிர்ப்பை வரவழைத்துக் கொண்டபோது, வலிமை கொண்ட கட்சியான பொது உடைமைக் கட்சி, அவருக்கு மறைமுகமாக உதவி விட்டது என்ற தோற்றம் ஏற்பட்டது. அதனால், திராவிடர் கழகத்திற்கும் பொது உடைமைக் கட்சிக்குமிடையில் ஏற்பட்டிருந்த நெருக்கமான தோழமை முறிந்தது. அதற்கு மருத்துவம் செய்து, பொருத்திக் கொள்வதற்குப் பதில், இரு கட்சியினரும் 'ஆகாத பெண்டாட்டி, கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம்' என்னும் பாணியில் செயல்படத் தொடங்கினார்கள். இரு தரப்பிலும் தியாகத்திற்குக் குறைவில்லை. பொதுக் குறிக்கோளை அடைவதற்குப் பயன்பட வேண்டிய தெளிவு, உழைப்பு, தியாகம் ஆகியவை ஒன்றிற்கு ஒன்று தடைக் கல்லாக இருப்பதற்குப் பயன்பட்டன. வேதனை தரும் நிலை.

சாதிக் கலைப்பு, சாதிகளை வளர்க்கும் சமய நம்பிக்கை ஒழிப்பு, ஆகியவை புரட்சிக்கு முன்னணி வேலைகள் ஆகும். அவற்றில் முனைப்பு காட்டாவிட்டாலும் குறுக்கே நிற்காமலாவது விலகியிருந்தால் சமதர்மக் கொள்கையின் வெற்றிக்கு வாய்ப்பு நெருங்கியிருக்கும். சமதர்ம வாய்ப்பு விரைந்து விலகிக்கொண்டே இருக்கிறது.

முப்பதுகளில் தந்தை பெரியார், சமதர்மக் கொள்கையைப் பரப்புவதில் பெற்ற சாதனைகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினார்கள். அடக்குமுறை காலத்தில் பெரியாரும் அவரது தளபதியாம் குத்தூசி குருசாமியும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன்

தலைவர்கள் சிலருக்கும் பாதுகாவலர்களாகச் செயல்பட்டதையும் மறந்தது போகட்டும். பொதுத் தொண்டில் நன்றியைவிட, அடுத்து நடக்கவேண்டியதே முக்கியம்.

'கடவுளையே கேள்விக் குறியாக்கும் துணிச்சல் பெற்று விட்டால், அச்சமுதாயம் சமதர்ம வார்ப்புக்கு, ஆயத்தமாகி விடும்என்பதை உணர முடியாத குழந்தைகளா கம்யூனிஸ்ட் கட்சிகளை நடத்துபவர்கள்? சமதர்ம வெற்றியை நினைத்தாகிலும் வம்புகளை, வலியத் தேடும் போக்கைக் கைவிட்டிருக்கலாம். மாறாக, தொடர்ந்து 'கோப அரசியல்' நடத்தி, உடைந்து எங்கெங்கோ அண்டவேண்டிய நிலைக்கு ஆளாக்கிக் கொண்டே இருக்கிறார்களே? கூர்த்தமதி—வியத்தகு தியாகம்—நாடு தழுவிய அமைப்பு—அனைத்தும் வீணாகிக் கொண்டே இருக்கிறதே!

கிடைக்கும் வாய்ப்பு ஒவ்வொன்றையும் பொதுஉடைமைக்கு ஆதரவு தேடும் அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் மூன்றாம் தர பொது ஊழியர்கள் போல், காற்றோடு போக வேண்டிய நிகழ்ச்சிகளை, செய்திகளைப் பெரிதாக்கிக் கொண்டிருக் கிறார்கள்.

பாரதி நூற்றாண்டு விழா, கடைசியாகக் கிடைத்த பெரு வாய்ப்பு. புரட்சி இயக்கத்தை வளர்க்க ஓராண்டில் எவ்வளவு ஆட்களை—நேரத்தை—முயற்சிகளைச் செலவிட வேண்டுமோ அவ்வளவை தோழர்கள் இவ்விழாவில் செலவிட்டார்கள். அதைக் கொண்டு சமதர்ம உணர்வைப் பொது மக்களிடம் வளர்த்துக் கொண்டார்களா? பொதுஉடைமை ஆதரவாளர்களைப் பெருக்கிக் கொண்டார்களா? இல்லை; இல்லை.

அரசும் பிற அமைப்புகளும் பாரதி நூற்றாண்டு விழாவை விழலுக்கிறைத்த நீராக்கியது போலவே கம்யூனிஸ்ட் கட்சியின் ஊக்குதலால் நடத்தப்பட்ட பாரதி விழாக்கள் 'ஆரியர்' என்பதை நியாயப்படுத்தவும் அதற்கு வலிந்து பொருள் கூறவும், பாரதியின் பக்திப் பாடல்களைப் பரப்புவதிலும் பாழாகிவிட்டன.

பக்திப் பாடல்கள் எத்தனையோ கவிஞர்களிடம் பெறலாம்! பாரதியின் தனித் தன்மைக்கு அடையாளம் பக்திப் பாடலா? சம தர்மப் பாடலா? சாதி மறுப்புப் பாடலா? ஆரியர் சிறப்புப் பாடலா? சமத்துவப் பாடலா?

காலட்சேபஞ் செய்து பிழைப்பு நடத்துகிறவர்களைப் போல பாரதியின் பக்திப் பாடல்களை உச்சிமேல் வைத்துப் போற்றி 'பண்பாடு பண்பாடு' என்று முழங்கி சத்தியம் செய்வதில் போட்டி போடும் அறிஞர்களை நம்பி வாழும் பாழ் வழிக்கு ஆளாகிக் கொள்கிறார்கள் அருமைத் தோழர்கள்.

பெரியாரும் அவரது இயக்கமும் பொது உடைமை இயக்கத்தைப்போல் தன்னேரில்லாத வரலாறும், தொண்டும், தியாகமும், துணிவும், உறுதியும் உடையது. இரண்டாவது உலகப் போரின் இறுதியில் அமெரிக்காவிற்கு அணுகுண்டு கிடைத்தது போல பொது உடைமைக் கொள்கைக்கு பெரியார் கிடைத்தார். அதனால், அடக்குமுறையை வெல்ல முடிந்ததோடு 1952 தேர்தலில் முன்பின் அறியாத வெற்றியைப் பெற முடிந்தது. கம்யூனிஸ்ட்டுகள் இராசகோபாலாச்சாரியாரை ஆதரித்து உதவிய தாகப் பெரியார் கணக்குப் போட்டது தவறாக இருந்தால், அவரைக் கண்டு பேசி விளக்கியிருந்தால் அது சமதர்மக் கொள்கைக்கு உதவியிருக்கும்.

தேவையற்ற இந்தித்திணிப்பு, இந்தி எதிர்ப்பு என்பது இந்திய சமதர்மவாதிகள் உண்மையாக இணைய முடியாதபடி செய்திருப்பதைப் போல உப்புக்குதவாத தப்பெண்ணம் சென்ற முப்பது ஆண்டுகளில் பெருமரமாக வளர்ந்தது; திராவிடர் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் விலகிக்கொண்டே போகின்றன. பரஸ்பர பரிவுகாட்ட வேண்டிய வேளைகளில் சில்லறை வீரங்களைக் காட்டி சவடால் அடிக்கின்றன.

'ஆரியர்' என்னும் எருக்கந்தழைகளையும் 'திராவிடர்' என்னும் ஒதியந்தழைகளையும் உரமாக்கிப் போட்டு, மனிதர் என்கிற மனநிலையை உருவாக்க வேண்டிய கால கட்டத்தில் ஆரியத்திற்கு முட்டுக் கொடுக்க முயலும் மூத்த கம்யூனிஸ்டுகளைக் கண்டு வெருளுவதற்குப் பதில் 'அந்தோ! அவலம்' என்று கண்ணீர் வடிக்கிறேன்.

சட்டமன்றத்திலும், நாடாளு மன்றத்திலும் சிலருக்கு இடம் பிடிப்பதற்கு இன்றைய போக்கு போதும். வீட்டைவிட்டு ஓடிவந்து விட்ட சிறுவன், எவர் எவருக்கோ சிற்றாளாக இருக்கவேண்டிய தாகிவிடுகிறது. அந்நிலைமைக்கு நம் இருதரப்பு முற்போக்கு வாதிகள், தியாகிகள் தாழ்த்திக்கொள்ள வேண்டுமா? சமதர்மக் குறிக்கோள் நிறைவேற பதவி வேட்டைக்காரர்களின் ஆதரவு

எப்படிப் பயன்படும்? முப்பது ஆண்டுகளில் எல்லாக் கட்சிகளையும் ஆதரித்துப் பார்த்த பிறகும் தொண்டை வீணாக்கலாமா?

சமதர்மம் என்பது எவருடைய 'வாணிக முத்திரை'யும் அல்ல; அதற்குப் பாடுபடும் பொறுப்பு எல்லார்க்கும் உண்டு. தொன்று தொட்டுத் தொடர்ந்துவரும் பிறவி இழிவு என்னும் என்புருக்கி நோயும், ஏழை பணக்காரத் தன்மை என்னும் நச்சுக் காய்ச்சலும் சேர்ந்து நம் மக்களை வாட்டுகின்றன. இரண்டிற்குமே ஒரே நேரத்தில் மருத்துவம் பார்க்க வேண்டும். கடும் நோய்க்குப் பத்தியம்போல் சிந்தனை நோய்க்குப் பத்தியம் கடவுள் மறுப்பு. அதுவே மருந்து அல்ல. எனவேதான் தந்தை பெரியார் கடவுள் மறுப்போடு நிற்கவில்லை. அதற்குமேலும் சென்று சுயமரியாதை சமதர்மத் திட்டத்தைக் கடைசிக் காலம் வரை பரப்பினார்.

தந்தை பெரியார் மறைவதற்கு 76 நாட்களுக்கு முன்னர் 9-10-1973 நாளைய விடுலை தலையங்கம் கூறுவதைக் கவனித்து நடப்போம்.

'தனிமனிதச் சொத்துரிமை ஒழியவேண்டும்; பிறர் உழைப்பில் படாடோப வாழ்க்கை நடத்துவதும், அதிகப்படியான பொருள் களுக்கு அதிபதியாய் இருப்பதும் பெருமையான வாழ்க்கை என்று கருதப்படுகின்ற மூடநம்பிக்கை ஒழியவேண்டும். இதில் கவுரமும் மரியாதையும் இல்லை என்பது தெளிவாக்கப்பட வேண்டும், என்பது பெரியார் கட்டளை.

பெரியாரைப் பின்பற்றுவோர் கடவுள் மறுப்பாளராக இருப்பது போதாது; சாதிக் கலைப்பாளராகச் செயல்பட வேண்டும். வகுப்புரிமைக்குப் போராடுவதோடு நிறைவு கொள்ளக்கூடாது; சமதர்ம முறையைக் கொண்டுவருவதில் முனைப்பாயிருக்க வேண்டும். அதுவே, எல்லா ஆதிக்கங்களையும ஆணவங்களையும் தூக்கி எறியும்.

முடிவுற்றது

# இவர்தான் நெ. து. சு.

1912-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டம் நெய்யாடு பாக்கம் கிராமத்தில் நெ. ச. துரைசாமி-சாரதாம்பாள் வாழ்க்கைத் துணைவர்களுக்குப் பிறந்தவர். 1929-ஆம் ஆண்டில் செங்கற் பட்டில் பெரியார் நடத்திய முதலாவது சுயமரியாதை மாநாட் டுக்கு நேரில் சென்று கண்டு-கேட்டு உணர்வு பெற்றவர்.

சுயமரியாதை இயக்கத்துடன் அன்று நெ. து. சு. அவர்கள் தொடங்கிய பயணம் இன்றும் தொடர்கிறது. இடைப்பட்ட காலத்தில் ..

கல்லூரிக் கல்வியை ஒழுங்காக முடித்து எம்.ஏ., எல்.டி., பட்டங்களைப் பெற்றார். அரசுப் பணியில் சேர்ந்தார். கலப்புத் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினார். சுயமரியாதைச் சமதர்மக்காரராக வாழ்ந்து கொண்டே அரசுப் பணிகளில் உயர் பதவிகளைப் பெற்றார்.

தமிழ்நாடு பொதுக் கல்வி மற்றும் பொது நூலக இயக்கு நராக—இந்திய அரசின் இணை கல்வி ஆலோசகராக—தமிழ் நாட்டின் தலைமைக் கல்வி ஆலோசகராக மற்றும் கூடுதல் செயலாளராக—சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக—இவ்வாறாகப் பல பெரிய பொறுப்புகளில் இருந்து பணியாற்றினார்.

இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற இவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளது.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும்-இன்றும்-தம் 75-ஆம் வயதிலும் இந்திய-சோவியத் பண்பாட்டுக் கழகத்தின் (**ISCUS**) தமிழ் மாநிலக் குழுவின் தலைவராகவும் அறிவு வழி ஏட்டின் சிறப்பாசிரியராகவும் செயல்படும் தோழர் நெ. து. சு. அவர்கள் சுயமரியாதை-சமதர்மக் கொள்கை பரப்பலுக்கு நாள்தோறும் எழுதியும் பேசியும் தொண்டாற்றி வருகிறார்.

புரட்சியாளர் பெரியார், கல்வி வள்ளல் காமராசர், லெனின் வாழ்கிறார், நஞ்சுண்டவர் ஆகிய நூல்களின் ஆசிரியர். பயண நூல்கள் எழுதுவதில் வல்லவர். 'நினைவு அலைகள்' என்ற பெயரில் இவர் எழுதிய தன் வரலாற்று நூல் இரண்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. மூன்றாவது தொகுதி வெளிவர உள்ளது. நாற்பதுக்கும் மேலான நூல்களை இதுவரை எழுதியுள்ளார்.

— **கலசம்**

**புதுவாழ்வுப் பதிப்பகம்**
**23, நான்காவது முதன்மைச் சாலை,**
**கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை-600 020.**

**மக்கள் நெஞ்சம்**
4 (11), சி. என். கே. சந்து,
சேப்பாக்கம், சென்னை-600 005.